73
10. 5. 1950
14805
7. 6. 1968

# இலங்கையின்

## சுருக்க வரலாறு


ஆக்கியோன்
எச். டபிள்யூ. கொடிறின்றன்

1960

942.1
கொடி
PK

...மொழி வெளியீட்டுக்கிளையால் மொழிபெயர்த்து
...அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது

இலங்கையின் சுருக்க வரலாறு



உருவம் 1.—மாபெரும் புத்தர், ஔகனே 10-12 நூறு.

9421 54/PR
உசாத்துணை நூல்கள்
இரவல் எடுப்பதற்கன்று

# இலங்கையின்

## சுருக்க வரலாறு

ஆக்கியோன்

**எச். டபிள்யு. கொடிறின்றன்**

முன்னை இலங்கைக் குடிச்சேவையினர்

முன்னை இலங்கைத் தொல்பொருளியல் ஆணையாளர்

**ஏ. எம். ஒகாது அவர்கள் எழுதிய**

தொல்பொருளியல் பற்றிய அதிகாரம் கொண்டது

நாட்டுப்படங்கள் விளக்கப்படங்கள் இணைக்கப்பெற்றது

திருத்தப் பதிப்பு 1939

தமிழாக்கம்

**இ. இரத்தினம்**

VIJAYALUCKSHMI BOOK DEPOT
Book Seller & Stationers
246, GALLE ROAD
WELLAWATTE, COLOMBO-6.

4706.

இலண்டன், சென் மாட்டின் வீதி, வரையறுக்கப்பட்ட மாக்குமிலனும் கம்பனியும் என்பார் இசைவுடன்

அரசகருமமொழி வெளியீட்டுக் கிளையால் மொழிபெயர்த்து

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது

மொழிபெயர்ப்புரிமை அரசினர்க்குரியது

# உள்ளுறை


பக்கம்

இலங்கையின் காலவியல் பற்றிய குறிப்பு .. ix

இலங்கையின் மன்னர் வரிசை .. .. xi

போத்துக்கேய மன்னரும் தலைமைத் தளபதிகளும் .. xv

இலங்கையின் இடச்சு ஆள்வார் .. xvi

இலங்கையின் பிரிட்டிசு ஆள்வார் .. xvi

சுருக்கங்கள் .. xviii

அதிகாரம்

I. தொடக்கம் : இலங்கை பௌத்தத்தைத் தழுவல் .. 1

II. துட்டகாமனியிலிருந்து சீகிரிய காசபன் வரை கி.மு. 3 ஆம் நூறிலிருந்து கி.பி. 6 ஆம் நூறு வரை .. .. .. 15

III. பதினோராம் நூற்றாண்டில் நடந்த சோழர் வெற்றிவரை உள்ள நடுக்கால அரசாட்சி .. .. .. 32

IV. பொலனறுவை மன்னர், 1070–1215 .. .. .. 51

V. தம்பதெனி, கம்பளை மன்னர்கள் 1215–1412 .. .. 70

VI. கோட்டைக் குலமுறையும் அதன் போத்துக்கேய நேயரும், 1412–1551 .. 84

VII. சீதாவகையினதும் போத்துக்கலினதும் எழுச்சி, 1551–1635 .. 95

VIII. போத்துக்கேயர் ஆணையின் வீழ்ச்சி, 1635–1656 .. .. 109

IX. இடச்சுக்காரர் வெற்றி, 1656–1796 .. .. .. 126

X. பிரிட்டிசார் பாலனம், 1796–1805 .. .. .. 147

XI. பிரிட்டிசார் பாலனம், 1805–1833 .. .. .. 161

XII. தொல்பொருளியல் .. .. .. 173

1833 இன் பின் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் .. .. 180

# படவரிசை


| உரு. | | பக்கம் |
|---|---|---|
| 1. | மாபெரும் புத்தர், ஔகனே 10–12 நூறு | முற்பக்கம் |
| 2. | சிங்களர் வருகை : யோன் கிரிபிது அவர்கள் இயற்றிய நூல் **அசந்தாவில் உள்ள பௌத்தக் குகைக் கோயிலில் ஓவியங்கள்** ; 1896. ப. 38 இலிருந்து. இந்திய அரசுச் செயலாளர் இசைவுடன் | 2 |
| 3. | ஒரு போர். வெலனடமனே, விலச்சிக்கோரளே வ.ம.மா. | 17 |
| 4. | ஆதி நாணயம் மேலுறையிற் காட்டப்பட்டுள்ள சுவத்திகாவின் வடிவு இலங்கைக்கே சிறப்பாக உரியது | 20 |
| 5. | இந்திய–உரோம பொன் நாணயம் | 21 |
| 6. | பாரசிகச் சிலுவை, அனுராதபுரம் | 24 |
| 7. | சீகிரியாச் சுவரோவம் | 28 |
| 8. | குளத்திற்கு மேலாகத் தென்கிழக்கிலிருந்து பார்க்கும்பொழுது சீகிரியாவின் தோற்றம் | 31 |
| 9. | அரங்கெலிக் குகைக்கோயில், 6 ஆம் நூறு | 33 |
| 10. | நடுக்காலப் பொன்னுணயம், 9 ஆம் நூறு | 34 |
| 11. | திங்கட்கல், மணிமாளிகை வெளிவட்டவீதி, அனுராதபுரம். 10 ஆம் நூறு | 40 |
| 12. | வட்ட–தா–கே, மெதிரிகிரியா (சின்னஞ்சூழ்மனே) | 46 |
| 13. | சிவன் தேவாலயம், எண் 2, பொலனறுவை, கிழக்கிலிருந்து, 11 ஆம் நூறு .. | 52 |
| 14. | பராக்கிரமபாகுவின் சிலை எனப்படுவது, பொற்குல்விகாரை, பொலனறுவை. 12 ஆம் நூறு அல்லது முந்திய காலம் | 56 |
| 15. | இலங்காதிலகை விகாரை, பொலனறுவை, கிழக்கிலிருந்து. 12 ஆம் நூறு | 58 |
| 16. | கிரிவெகரை தாகபை, பொலனறுவை. 12 ஆம் நூறு | 61 |
| 17. | நிசங்கமல்லனின் அரியணே, பொலனறுவை கழகமனேயிலிருந்து, 12 ஆம் நூறு | 64 |
| 18. | யாப்பகு. 13 ஆம் நூறு | 73 |
| 19. | இலங்காதிலகை விகாரை, கண்டி மாவட்டம், தெற்கிலிருந்து. 14 ஆம் நூறு | 77 |
| 20. | யாழ்ப்பாண நாணயம், 14 ஆம் நூறு | 86 |
| 21. | போர்த்துக்கேயர் படை இலச்சினே, கொழும்பு | 89 |

படவரிசை


உரு. பக்கம்

22. போத்துக்கேயரின் இலங்கை நாட்டுப்படம், 1627 வரையில் .. .. 97
எக்கிலுள்ள இரிசிக்கு தொல்லேட்டகம், இந்தியநாட்டுப் படங்கள் நிரல்கள் வரிசை, பகுதி 1, எண் 928

23. போத்துக்கேயரின் இலங்கைத் "தங்க" நாணயம் .. .. 108

24. கண்டியர் வெள்ளிப் பணமும் இலரினும் .. .. .. 110

25. யாழ்ப்பாணத்து வாளுேக்கு, 1656 வரையில் .. .. .. 115
இரிசிக்கு தொல்லேட்டகம், இந்திய நாட்டுப்படங்கள், நிரல்கள் வரிசை, பகுதி 129, எண் 61 ..

26. கொழும்பின் வாளுேக்கு, 1656 வரையில் .. .. .. 119
இரிசிக்கு தொல்லேட்டகம், அந்நூல் பகுதி, 131, எண் 115

27. கொழும்பு நாட்டுப்படம், 1656 வரையில் .. .. .. 120
இரிசிக்கு தொல்லேட்டகம், பகுதி 1, எண் 941 .. ..

28. மாத்துறை, 1717 இல் .. .. .. .. 131
ஆன்வான் உறும்புவின் சுற்றுப்பிரயாணத்து நாட்குறிப்பில் வரைந்துள்ளவாறு 1717. இரிசிக்கு தொல்லேட்டகம் .. .. ..

29. கண்டித் தூதுக்குழுவினை ஆள்வான் பல்கு வரவேற்றல், 1772. .. 137
அமித்தடாமிலுள்ள இரிசிக்கு அரும்பொருளகத்தில் உள்ள படத்திலிருந்து. கண்டியத் தலேயோர், எகலப்பொலே, உடபலாததிசாவை, தொடன்வலே அடப்பட்டு இலேகம், எகலேப்பொலே வெடிக்கார இலேகம் ஆகியோர் ..

30. இடச்சுச் சுதுரய்வர், 1783 .. .. .. .. 139

31. கொழும்பு நாட்டுப்படம், 1785 .. .. .. 142
இரிசிக்கு தொல்லேட்டகம், இந்திய நாட்டுப்படங்கள், நிரல்கள் வரிசை, பகுதி 1, எண் 954

32. தளபதி மத்தவலும் பிலமத்தலாவையும் சந்தித்தல், தெனனின் இலங்கையில் இருந்து .. .. .. 157

33. பிரிட்டிசுச் சுதுரய்வர், 1801 .. .. .. 160

34. சிறீ விக்கிரம இராசசிங்கன் .. .. .. 164
உவிலியம் தலியலின் ஓவத்தில் இருந்து செதுக்கியது, கொழும்பு நூதனசாலே


எண்கள் 1, 3, 6, 7, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, ஆகியவை தொல்பொருளியல் அலுவலகத்தாரால் உதவப்பட்டவை. இலங்கை அரசாங்கத்து இசைவுடன் இங்கு சேர்க்கப்பட்டன.

# நாட்டுப் படங்களும் மாதிரிப் படங்களும்


பக்கம்

I. தொலமியின் தப்பிரபானே .. .. .. 4

II. மன்னன் நாட்டிலுள்ள முக்கிய குளங்கள் வாய்க்கால்களேக் காட்டும் வரிப்படம்.. .. 23

III அனுராதபுரத்து மாதிரிப்படம் .. .. .. 38

IV. பொலனறுவையின் மாதிரிப்படம் .. .. .. 66

V. இலங்கையின் பண்டைப்பிரிவுகள் .. .. .. 75

VI. போத்துக்கேயர் இலங்கை .. .. .. 124

VII. இலங்கை, 1796. கண்டியர் திசாவணிகளேக் காட்டுவது .. .. 144

# இலங்கையின் காலவியல்பற்றிய குறிப்பு

உறுதியுடன் முதலாவதாக வரையறுக்கப்பட்ட தேதி கி. பி. 1200 இல் சாகசமல்லன் முடிசூடிய தேதியேயாம். முதலாம் விசயபாகு வரை ஆண்ட அரசர்களின் ஆட்சிகளை ஏறக்குறைய ஓராண்டு இடையீட்டுடன் திருத்தமாக வரையறுக்கலாம். முதலாம் சேனனுக்கும் 11 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்த சோழர் வெற்றிக்கு மிடையில் உள்ள காலவரையறை அண்ணளவாகக் கொண்டதாகும். சேனன் அரசுகட்டிலேறும் முன்னருள்ள ஒருகால நிகழ்ச்சிகளும் புத்தர் ஊழியுடன் இணைந்த தேதிகளும் ஆகச் சிலவே நமக்கு உதவக்கூடியவாயுள்ளன. இவற்றை நூலினகத்துக் காட்டியுள்ளோம்; தேவானம்பிய தீசனின் ஆட்சியைத் தவிர்ந்த மற்றையவற்றில் உள்ளவற்றைநாம் திண்ணமாக ஏற்றுக்கொள்ளல் முடியாது. பல வாய்ப்புக்களையும் கருதி கைகரின் மகாவமிசம் பக்கம் **xxxiii** இல் கொடுக்கப்பட்ட தேதியையே (கி. மு. 247) தீசனின் முடிசூட்டுத் தேதியாக நான் கொண்டுள்ளேன். இவ்வரையறை புத்தரின் காலவரையறைக் கொள்கையினின்றும் புறம்பானதொன்றாகும்; இது அசோகனுடன் இணைந்ததாயும் முடிவில் ஒத்த காலத்துக் கிரேக்க மன்னருடன் இணைந்ததாயுமுள்ளது. பன்னிரண்டாம் நூற்றாண்டிலுள்ள முதலாம் பராக்கிரமபாகுவிற்கு முன், புத்தர் ஊழியையோ வேறு ஊழியையோ பயன்படுத்தியதற்கு நல்ல சான்றுகள் இல்லை. பத்திரங்களில் காலவரையறையளவும் ஆட்சி ஆண்டுகளாலானவையாம். பாளி, சிங்கள நூல்களிற் காணப்படும் தேவானம்பிய தீசனுக்குப் பிந்திய காலத்துப் புத்தர் ஊழித் தேதிகள் வெவ்வேறு ஆசிரியர்களின் கணிப்புக்களாகும். ஒத்த பதிலாட்சி, கலகம் ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளாது ஆட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக வைத்துக் கூட்டியே இக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

வட்டகாமனி அபயகிரி விகாரையைக் கட்ட அடிகோலியது சமய மாற்றத்திலிருந்து 217 ஆண்டுகள் 10 திங்கள் 10 நாட்களின் பின்னர் என்ற கணிப்பு, இக்கணிப்புக்களுக்கு ஓர் உதாரணமாகும். இது ஆட்சிக்காலங்களைக் கொண்டாகியதேயாம்; இது சேனனுக்கும் குத்திகனுக்குமாக 22 ஆண்டு கொடுத்துக் கூட்டின் 218 ஆகும்; எனினும் சமய மாற்றத்தின்பின் 136 ஆண்டு கழிந்து துட்டகாமனி அரசடைவான் என்ற முற்கூற்றானது இரு தமிழரும் 12 ஆண்டுகளே அரசாள்வார் என்பதை எதிர்பார்க்கின்றது (ம. கா. xxvii 6, 7). சோழருடைய வெற்றிக்கு முந்திய காலத்தைப் பற்றிய நிச்சயமான குறிப்புக்கள் கிடையாமையால் நூற்றாண்டை மட்டுமே நான் குறித்துள்ளேன்; எனினும் கால ஒருமைப்பாடுகளை அவை நிகழ்ந்தவிடத்துக் குறித்துள்ளேன். இம்முறையினால் முன்னிருந்ததைப் போன்ற

தாக, பிறிதொரு காலவரையறையை வகுத்து நான் குழப்பத்தை உண்டாக்கவில்லை. இக்காலப் பொருத்தத்தில் உள்ள இடர்ப்பாடு யாதோ ஒரு கால ஒருமைப்பாட்டினுல் கி. பி. 527 என்று நிச்சயிக்கப்பட்ட முதலாம் காசபன் என்பானின் ஆட்சிக்காலத்திற்கும் ஏறக்குறைய கி. பி. 819 இல் அரசெய்திய முதலாம் சேனனின் ஆட்சிக் காலத்திற்கும் இடையிலே உள்ளதாகும். இரண்டாம் அக்கபோதியும் மானவர்மனும் சாளுக்கிய அரசன் இரண்டாம் புலகேசி என்பானேடு ஒத்த காலத்தினராம். கி. பி. 527 இற்கும் மானவர்மன் அரசெய்திய காலத்திற்கும் இடையுள்ள காலம் அரசாட்சிக் காலங்களைக் கூட்டிவந்த காலத்திலும் சிறிதாயிருக்கலாம் எனத் தோன்றுகின்றது. ஏனெனில் அது விவாதத்திற்கு உரிய அரசாட்சிக் காலங்களைக் கொண்டுள்ளதாயிருப்பதால் என்க. முதலாம் விசயபாகு தொடக்கம், அண்மையில் உறுதியாக்கப்பட்ட தேதிகளையே நான் கைக்கொண்டுள்ளேன். இவ்வாட்சிக்கு முன்னரிருந்த அரசர்களின் வரிசையில், எளிமை கருதி, மகாவமிச பதிப்பாளர் கொண்டுள்ள தேதிகளையே கொடுத்துள்ளேன்.

இரண்டாம் தப்புலன் என்னும் அரசன் உண்மையில் முதலாம் உதயனேயாம். இவ்வழு நெடுங்காலமாக உள்ளதாகும்; எனவே தப்புலன், உதயன் ஆகியோரின் எண்ணை மாற்றினுல் மலைவு உண்டாகும். இக்கூற்று ஏழாம் விசயபாகு என்பானுக்கும் ஒக்கும்.

# இலங்கையின் மன்னர் வரிசை

| | | | |
|---|---|---|---|
| விசயன் | கி.மு. | 543 | தம்பபண்ணி |
| இடைக்காலம் | .. | 505 | |
| பந்துவாசுதேவன் | .. | 504 | விசிதபுரம் |
| அபயன் | .. | 474 | |
| இடைக்காலம் | .. | 454 | |
| பந்துகாபயன் | .. | 437 | அனுராதபுரம் |
| முத்தசிவன் | .. | 367 | |
| தேவானம்பியதீசன் | .. | 307 | கி.மு. 247 |
| உத்தியன் | .. | 267 | |
| மகாசிவன் | .. | 257 | |
| சூரதீசன் | .. | 247 | |
| சேனனும் குத்திகனும் | .. | 237 | |
| அசேலன் | .. | 215 | |
| எல்லாளன் | .. | 205 | |
| துட்டகாமனி | .. | 161 | |
| சத்தாதீசன் | .. | 137 | |
| தூலத்தனன் | .. | 119 | |
| இலஞ்சதீசன் | .. | 119 | |
| கலாட்டநாகன் | .. | 109 | |
| வட்டகாமனி | .. | 104 | |
| ஐந்து தமிழர் | .. | 103 | |
| வட்டகாமனி (மீண்டும்) | .. | 88 | |
| மகாசூளி மகாதீசன் | .. | 76 | |
| சோரநாகன் | .. | 62 | |
| தீசன் | .. | 50 | |
| சிவன் | | | |
| வடுகன் | | | |
| தாருபாதிகதீசன் | | 47 | |
| நிலியன் | | | |
| அனுலா | | | |
| குடகன்னதீசன் | .. | 42 | |
| பாதிகாபயன் | .. | 20 | |
| மகாதாதிக மகாநாகன் | கி.பி. | 9 | |
| ஆமந்தகாமனி | .. | 21 | |
| கனிரசானுதீசன் | .. | 30 | |
| சூலாபயன் | .. | 33 | |
| சீவலீ | .. | 35 | |
| மூன்றுண்டு இடைக்காலம் | .. | — | |
| இளநாகன் | .. | 38 | |
| சந்தமுகசிவன் | .. | 44 | |
| யசலாளகதீசன் | .. | 52 | |
| சுப்பராசன் | .. | 60 | |

| | | |
|---|---|---|
| வசபன் | இ.பி. 66 | |
| வங்கனசிகதீசன் | 110 | |
| கசபாகு, I ஆம் | 113 | |
| மகல்லநாகன் | 135 | |
| பாதிகதீசன் | 141 | |
| கனிட்டதீசன் | 165 | |
| குச்சநாகன் | 193 | |
| குஞ்சநாகன் | 195 | |
| சிறீநாகன், I ஆம் | 196 | |
| வோகாரிக்கதீசன் | 215 | |
| அபயநாகன் | 237 | |
| சிறீநாகன், II ஆம் | 245 | |
| விசயகுமாரன் | 247 | |
| சங்கதீசன் | 248 | |
| சங்கபோதி (சிறீ சங்கபோ) | 252 | |
| கோதகாபயன் | 254 | |
| சேட்டதீசன், I ஆம் | 267 | |
| மகாசேனன் | 277 | |
| சிறீ மேகவண்ணன் | 304 | இ.பி. 340 வ. |
| சேட்டதீசன், II ஆம் | 332 | |
| புத்ததாசன் | 341 | |
| உபதீசன் | 370 | |
| மகாநாமன் | 412 | இ.பி. 428 வ. |
| சோதிசேனன் | 434 | |
| சத்தகாகன் | 434 | |
| மித்தசேனன் | 435 | |
| ஆறு தமிழர் | 436 | |
| தாதுசேனன் | 463 | |
| காசபன், I ஆம் | 479 | இ.பி. 527, வ. சிகிரியா |
| மொகலானு, I ஆம் | 497 | அனுராதபுரம் |
| குமார தாதுசேனன் | 515 | |
| கித்திசேனன் | 524 | |
| சிவன் | 524 | |
| உபதீசன் | 525 | |
| அம்பசாமநேர சிலாகால | 526 | |
| தாதாப்பபூதி | 539 | |
| மொகலானு, II ஆம் | 540 | |
| கித்தி சிறீ மேகவண்ணன் | 560 | |
| மகாநாகன் | 561 | |
| அக்கபோதி, I ஆம் | 564 | |
| அக்கபோதி, II ஆம் | 598 | இ.பி. 609 வ. |
| சங்கதீசன் | 608 | |
| தல்லமொகலானு | 608 | |
| சிலாமேகவண்ணன் | 614 | |
| அக்கபோதி, III ஆம் | 623 | |
| சேட்டதீசன், III ஆம் | 623 | |
| அக்கபோதி, III ஆம் (மீண்டும்) | 624 | |



| | | |
|---|---|---|
| தாதோபதீசன் | இ.பி. 640 | |
| காசபன், II ஆம் | 652 | |
| தப்புலன், I ஆம் | 661 | |
| தாதோபதீசன், II ஆம் | 664 | |
| அக்கபோதி, IV ஆம் | 673 | |
| நத்தன் | 689 | |
| உன்னுகர அத்ததாத | 691 | |
| மானவம்மன் | 691 | |
| அக்கபோதி, V ஆம் | 726 | |
| காசபன், III ஆம் | 732 | |
| மகிந்தன், I ஆம் | 738 | |
| அக்கபோதி, VI ஆம் | 741 | |
| அக்கபோதி, VII ஆம் | 781 | பொலனறுவை |
| மகிந்தன், II ஆம் | 787 | அனுராதபுரம் |
| தப்புலன், II ஆம் (உதயன்) | 807 | |
| மகிந்தன், III ஆம் | 812 | |
| அக்கபோதி, VIII ஆம் | 816 | |
| தப்புலன், III ஆம் | 827 | |
| அக்கபோதி, IX ஆம் | 843 | |
| சேனன், I ஆம் | 846 | ? இ.பி. 819/20 பொலனறுவை |
| சேனன், II ஆம் | 866 | |
| உதயன், I ஆம் | 901 | |
| காசபன், IV ஆம் | 912 | |
| காசபன், V ஆம் | 929 | |
| தப்புலன், IV ஆம் | 939 | ? இ.பி. 918/9 வ. |
| தப்புலன், V ஆம் | 940 | |
| உதயன், II ஆம் | 952 | |
| சேனன், III ஆம் | 955 | |
| உதயன், III ஆம் | 964 | ? இ.பி. 942/3 வ. |
| சேனன், IV ஆம் | 972 | |
| மகிந்தன், IV ஆம் | 975 | |
| சேனன், V ஆம் | 991 | |
| மகிந்தன், V ஆம் | 1001 | வெளியேற்றப்பட்டது இ.பி. 1017 வ. அனுராதபுரம் |
| காசபன் அல்லது விக்கிரமபாகு | 1037 | உறுகுணை (1037–1059) |
| கீர்த்தி | 1049 | |
| மகாலான கீர்த்தி | 1049 | |
| விக்கிரமபாண்டியன் | 1052 | |
| சகதிபாலன் | 1053 | |
| பராக்கிரமன் | 1057 | |
| லோகீசுவரன் | 1059 | |
| விசயபாகு, I ஆம் | 1056-1111 | பொலனறுவை |
| சயபாகு, I ஆம் | 1108-1145/6+ | பொலனறுவையும் உறுகுணையும் |
| (விக்கிரமபாகு, I ஆம்) | 1111-1132 | பொலனறுவை |
| கசபாகு, II ஆம் | 1131-1153 | |

| | | |
|---|---|---|
| பராக்கிரமபாகு, I ஆம் .. | கி.பி. 1153-1186 | |
| விசயபாகு, II ஆம் .. | .. 1186-1187 | |
| மகிந்தன், VI ஆம் .. | .. 1187 | |
| நிசங்கமல்லன் .. | .. 1187-1196 | |
| வீரபாகு .. | .. 1196 | |
| விக்கிரமபாகு, II ஆம் .. | .. 1196 | |
| சோடகங்கன் .. | .. 1196-1197 | |
| இலீலாவதி (1) .. | .. 1197-1200 | |
| சாகசமல்லன் .. | .. 1200-1202 | |
| கல்யாணவதி .. | .. 1202-1208 | |
| தர்மாசோகன் .. | .. 1208-1209 | |
| அனிகங்கன் .. | .. 1209 | |
| இலீலாவதி (2) .. | .. 1209-1210 | |
| உலோகீசுவரன் .. | .. 1210-1211 | |
| இலீலாவதி (3) .. | .. 1211-1212 | |
| பராக்கிரம பாண்டியன் .. | .. 1212-1215 | |
| மாகன் .. | .. 1215-1236+ | |
| விசயபாகு, III ஆம் .. | 1220 வ.-1224 | தம்பதெனியா |
| பராக்கிரமபாகு, II ஆம் .. | .. 1234-1269 | |
| விசயபாகு, IV ஆம் .. | 1267/8-1270 | |
| புவனேகபாகு, I ஆம் .. | .. 1271-1283 | தம்பதெனியாவும் யாப்பகுவும் |
| இடைக்காலம் .. | .. 1283-1302 | |
| பராக்கிரமபாகு, III ஆம் .. | 1302 வ.-1310+ | பொலனறுவை |
| புவனேகபாகு, II ஆம் .. | .. ?1310-1325/6 | குருநாகல் |
| பராக்கிரமபாகு, IV ஆம் .. | .. 1325/6- | |
| புவனேகபாகு, III ஆம்' .. | .. | |
| விசய (சய) பாகு, V ஆம் .. | .. | |
| புவனேகபாகு, IV ஆம் .. | .. 1344/5-1353/4+ | கம்பளை |
| பராக்கிரமபாகு, V ஆம் .. | .. 1344/5-1359 | +தெடிகமையும் கம்பளையும் |
| விக்கிரமபாகு, III ஆம் .. | 1357 வ.-1374 | +கம்பளை |
| புவனேகபாகு, V ஆம் .. | .. 1372/3-1405/6 அல்லது 1407/8 | +கம்பளை |
| வீரபாகு .. | .. 1391/2-1396/7 | +இறைகாமம் |
| வீர அழகேசுவரன் .. ("விசயபாகு, VI ஆம்") | 1397 வ.-1409 | இறைகாமம் |
| பராக்கிரமபாகு, VI ஆம் .. | .. 1412-1467 வ. | கோட்டை |
| பராக்கிரமபாகு எபா .. | .. 1409-?1412 | |
| சயபாகு, II ஆம் .. .. | 1467 வ.-1472/3 | |
| புவனேகபாகு, VI ஆம் .. | .. 1472/3-1480/1+ | |
| பராக்கிரமபாகு, VII ஆம் .. | .. 1480/1-1484 வ. | |
| பராக்கிரமபாகு, VIII ஆம் .. | 1484 வ.-1513 அல்லது 1518 | |
| பராக்கிரமபாகு, IX ஆம் .. | .. 1509-1528+ | ?களனி |
| விசயபாகு, VII ஆம் .. | .. 1509-1521 | கோட்டை |
| புவனேகபாகு, VII ஆம் .. | .. 1521-1551 | |
| தர்மபாலன் .. | .. 1551-1597 | |



**சீதாவகை அரசர்**

| | | | |
|---|---|---|---|
| மாயாதுன்னை | — | .. | கி.பி. 1521-1581 |
| இராசசிங்கன் I | .. | .. | .. 1554-1593 |
| இராசசூரியன் | .. | .. | .. 1593-1594 |

**கண்டி அரசர்**

| | | |
|---|---|---|
| விமலதருமசூரியன், I ஆம் | .. | .. 1591-1604 |
| செனரத்து .. | .. | .. 1604-1635 |
| இராசசிங்கன் II ஆம் | .. | 1629 வ.-1687 |
| விமலதருமசூரியன், II ஆம் | .. | .. 1687-1707 |
| நரேந்திரசிங்கன் .. | .. | .. 1707-1739 |
| விசய இராசசிங்கன் .. | .. | .. 1739-1747 |
| கீர்த்தி சிறீ .. | .. | .. 1747-1782 |
| இராசாதி இராசசிங்கன் | .. | .. 1782-1798 |
| சிறீ விக்கிரம இராசசிங்கன் | .. | .. 1798-1815 |

**போத்துக்கேய மன்னரும் தலைமைத் தளபதிகளும்**

| | | |
|---|---|---|
| பிலிப்பு I ஆம் 1580-1598 | | |
| பிலிப்பு II ஆம் 1598-1621 | | |
| பேதுருலொபெசு த சௌசா .. | .. 1594 | |
| டி. செரனிமோ த அசிவெடோ .. | .. 1594-1613 | |
| டி. பிராங்கிசுகோ த மெனசெசு .. | .. 1613-1614 | |
| மனுவல் மசுகரனாசு ஓமம் .. | .. 1614-1616 | |
| நுனோ அல்வாரசு பெரீரா .. | .. 1616-1618 | |
| கொன்சுதாந்தினோ தச த நொரனா | .. 1618-1622 | |
| பிலிப்பு III ஆம் 1621-1640 | | |
| யோச்சு த அல்புகேக்கி .. | .. 1622-1623 | |
| கொன்சுதாந்தினோ த ச த நொரனா | .. 1623-1630 | |
| டி. பிலிப்பே மசுகரனாசு .. | .. 1630-1631 | |
| டி. யோச்சு த அல்மேடா .. | .. 1631-1633 | |
| தியோகோ த மெல்லோ த கசுரோ .. | .. 1633-1635 | |
| டி. யோச்சு த அல்மேடா .. | .. 1635-1636 | |
| தியோகோ த மெல்லோ த கசுரோ | .. 1636-1638 | |
| டி. அந்தோனியோ மசுகரனாசு .. | .. 1638-1640 | |
| புரகன்சாவின் நாலாம் யோன் 1640-1656 | | |
| டி. பிலிப்பே மசுகரனாசு .. | .. 1640-1645 | |
| மனுவல் மசுகரனாசு ஓமம் .. | .. 1645-1653 | |
| பிராங்கிசுகோ த மெல்லோ த கசுரோ | .. 1653-1655 | |
| அந்தோனியோ த சூசா கூட்டினோ | .. 1655-1656 | |
| அந்தோனியோ த அமரல் த மெனசெசு | .. 1656-1658 | யாழ்ப்பாணம் |

### இலங்கையின் இடச்சு ஆள்வார்

| | |
|---|---|
| உவில்லியம் சே. கோசுதர் | கி.பி. 1640 |
| யன் தைசூன் பாயாட்டு | 1640-1646 |
| யோன் மற் சுயிகர் | 1646-1650 |
| சேக்கபு வான் கிற்றென்செயின் | 1650-1653 |
| அதிரியாண் வான் தர் மெய்தன் | 1653-1660,1661-1663 |
| இரிக்குலோவு வான் கோயன் | 1660-1661, 1663 |
| சேக்கபு அசுதாத்து | 1663-1664 |
| இரிகுளோ வான் கோயன் | 1664-1675 |
| இரிக்குலோவு வான் கோயன் (இளையோன்) | 1675-1679 |
| உலோரன்சு பில் | 1679-1692 |
| தோமசு வான்றீ | 1692-1697 |
| கெறிற்று த ஈறே | 1697-1702 |
| கோணெலிசு யன் சைமன்சு | 1702-1706 |
| எந்திரிக்கு பெக்கர் | 1706-1716 |
| ஐசாக்கு ஒகசின் உறும்பு | 1716-1723 |
| யோகனசு எட்டன்பேக்கு | 1723-1726 |
| பெற்றசு வியுசு | 1726-1729 |
| சிதிபனுசு வேசுலிசு | 1729-1732 |
| சேக்கபு கிறித்தியன் பியலற்று | 1732-1734 |
| தீதெரிக்கு வான் தொம்பேக்கு | 1734-1736 |
| குத்தாவு விலம் பரன் வான் இமோவு | 1736-1739 |
| விலம் மொறிற்சு புறுயினின் | 1939-1742 |
| தனியல் ஓவபீக்கு | 1742-1743 |
| யுலியசு வி. எச். வான் கொலனெசி | 1743-1751 |
| செராடு யோன் விறிலன் | 1751-1752 |
| யோகன் கிடியன் உலோட்டன் | 1752-1757 |
| யான் சுறூடர் | 1757-1762 |
| எல். சே. பரன் வான் எக்கு | 1762-1765 |
| இமன் விலம் பல்கு | 1765-1785 |
| விலம் யே. வான் த கிராவு | 1785-1794 |
| யே. சி. வான் அங்கிள்பீக்கு | 1794-1796 |

### இலங்கையின் பிரிட்டிசு ஆள்வார்

| | |
|---|---|
| கழகஞ்சார் சென்னை ஆள்வார் | கி.பி. 1796 |
| மதி. பிரடெரிக்கு நோது | 1798 |
| சேர். தோமசு மேதிலந்து | 1805 |
| சேர். உரபெட்டு பிரவுன்றிக்கு, பாட்டு | 1812 |
| மதி. சேர். எட்டுவேட்டு பசற்று | 1822 |
| சேர். எட்டுவேட்டு பாண்சு | 1824 |
| சேர். உரபெட்டு டபிள்யு. ஓட்டன், பாட்டு | 1831 |
| யே. ஏ. எசு. மக்கன்சி | 1837 |
| சேர். கொலின் கமல் | 1841 |
| வைகவுண் தொறின்றன் | 1847 |
| சேர். சி. டபிள்யு. அண்டேசன் | 1850 |



| | |
|---|---|
| சேர். என்றி சி. வாட்டு | கி.பி. 1855 |
| சேர். சாள்சு யசின் மக்காதி | 1860 |
| சேர். ஏக்கியூள்சு. சி. ஆர். உரொபின்சன் | 1865 |
| சேர். உவில்லியம் எச். கிரகரி | 1872 |
| சேர். சேமிசு ஆர். உலோண்டன் | 1877 |
| மதி. சேர். ஆதர் எச். கோடன் | 1883 |
| சேர். ஆதர் ஈ. அவலொக்கு | 1890 |
| சேர். யே. வெசு இரிச்சுவே | 1896 |
| சேர். என்றி ஆதர் பிளேக்கு | 1903 |
| சேர். என்றி ஈ. மக்கலம் | 1907 |
| சேர். உரபெட்டு சாமேசு | 1913 |
| சேர். யோன் அண்டேசன் | 1916 |
| சேர். உவில்லியம் எச். மனின் | 1918 |
| சேர். இயூ கிளிபோட்டு | 1925 |
| சேர். ஏபேட்டு யே. சுதானிலி | 1927 |
| சேர். கிரைம் தொம்சன் | 1931 |
| சேர். எட்டுவேட்டு சுதபு | 1933 |
| சேர். அந்துரு களிக்கோடு | 1937 |
| சேர். என்றி மங்கு மேசன் மூஅர் | 1944 |

## சுருக்கங்கள்

| | | |
|---|---|---|
| ப.இ.பொ. | 1. | பண்டை இலங்கைப் பொறிப்புக்கள், இ. முல்லர், 1883. |
| இ.வா.ப.நி. | 2. | இலங்கை வாரியும் பண்டை நில ஆட்சியும், எச். டபிள்யு. கொடிறின்றன், கொழும்பு, 1938. |
| ஆ.க.அ. | 3. | ஆண்டுக் கல்வரைவு அறிக்கை, தென்வட்டம், சென்னை அரசாங்கம். |
| இ.தொ.அ. | 4. | இலங்கைத் தொல்பொருளியல் அளவை, இலங்கைத் தவணைத் தாள்கள். |
| இ.தொ. | 5. | இலங்கைத் தொல்பொருளாய்வான். |
| தகு. | 6. | த குயிரோசு, இலங்கையின் வெற்றி, கொழும்பு, 1916 ; வண. எசு. சி. பெரேரா, எசு. சே. அவர்களின் மொழி பெயர்ப்பு, கொழும்பு, 1930. இந்நூலிலுள்ள குறிப்புக்கள் போத்துக் கேயப் பதிப்பினைக் குறிக்கும். |
| தீப. | 7. | தீபவமிசம், எச். ஓடன்பேக்கு, 1879. |
| எ.சி. | 8. | எபிகிராபியா சிலனிக்கா. |
| வே.ஆ.ச.ச. | 9. | வேத்தியல் ஆசிய சங்க சஞ்சிகை. |
| வே.ஆ.ச.ச.,இ.கி. | 10. | வேத்தியல் ஆசிய சங்க சஞ்சிகை, இலங்கைக் கிளை. |
| மகா. | 11. | மகாவமிசம், எல். சி. விசயசிங்க, 1889 ; டபிள்யு. கைகர், 1912. |
| நி.ச. | 12. | நிகாய சங்கிரக, கொழும்பு, 1908. |
| பூசா. | 13. | பூசாவலி ; பதிப்பு, மபோபிட்டிய தேரோ, கொழும்பு, 1932. |
| இரா. | 14. | இராசாவலி, கொழும்பு 1900. |
| சத்த. | 15. | சத்தர்மரத்திநகரய, கொழும்பு, 1912. |

இந்நூல்கள் ஆங்கிலத்தில் வருமாறு :

1. Ancient Inscriptions of Ceylon, E. Muller, 1883.
2. Ancient Land Tenure and Revenue in Ceylon, H. W. Codrington, Colombo, 1938.
3. Annual Report of Epigraphy, Southern Circle, Madras Government.
4. Archaeological Survey of Ceylon, Ceylon Sessional Papers.
5. Ceylon Antiquary.
6. De Queyroz, Conquista Temporal e Espiritual de Ceylao, Colombo, 1916: translation by Fr. S. G. Perera, S. J., Colombo, 1930. In the following pages the references are to the Portuguese edition.
7. Dipavamsa, H. Oldenberg, 1879.
8. Epigraphia Zeylanica.
9. Journal of the Royal Asiatic Society.
10. C. B. Journal of the Royal Asiatic Society, Ceylon Branch.
11. Mahavansa, L. C. Wijesinha, 1889; W. Geiger, 1912.
12. Nikaya Sangraha, Colombo, 1908.
13. Pujavaliya, ed. Mabopitiya Thero, Colombo, 1932.
14. Rajavaliya, Colombo, 1900.
15. Saddharmaratnakarya, Colombo, 1912.



*அதிகாரம் 1*

# தொடக்கம் : இலங்கை பௌத்தத்தைத் தழுவல்

இலங்கை என அறியக்கிடப்பதும் மேற்கு நாட்டார்க்கு சிலோன் என அறியக்கிடப்பதுமான இத்தீவானது இவ்வூழியிலிருந்த முந்தை மூன்று புத்தர் காலத்தில் முறையே **ஓசதீப, வரதீப, மந்ததீப** எனச் சொல்லப்பட்டுள்ளது என வரலாறு கூறும். கிரேக்கர், உரோமர் ஆகியோருக்கு இது **தப்பிரபானே** ஆகும் ; பாளியில் இது **தம்பபண்ணியாகும்.** இது வடமேற்குக் கரையோரத்திலுள்ள ஒரு மாவட்டத்தின் பெயராகும். பண்டைக் காலத்தில் கடலோடும் வணிகர் இதை நன்கு அறிந்திருந்தனர். இந்தியாவுக்கும் ஆசியாவுக்கும் நடந்தது போன்றே இங்கும் பகுதியின் பெயர் முழுமைக்கும் இடப்பட்டது. **பெரிப்புளுசுவில்** அதன் பழம்பெயர் **தப்பிரபானே** எனவும் புதுப்பெயர் **பளசிமுண்டு** எனவும் கொடுக்கப்பட்டுள்ளது. சிங்களவர் குடியேறியபின் இது சங்கதத்தில் **சிங்கள துவீப** எனவும் பாளியில் **சீலக தீப** எனவும் குறிக்கப்பட்டது. இப்பெயர் காலகதியில் அராபி மொழியில் " சரண்டிப் " எனவும் **சிங்கள** அல்லது **சீகள** எனவும் மாறியது. **சிங்களே** என்ற வழக்கு பொதுப்பேச்சு வழக்கில் இலங்கையில் நீண்ட காலத்திற்குச் சுதந்திரம் கொண்டிருந்த கண்டி மாவட்டங்களின் பெயராக வழங்கி வருகின்றது ; இதுவே எங்கள் சிலோன் என்பதற்கும் மூலமாயுள்ளது. இச்சொல் அராபி, போத்துக்கேயம் ஆகிய மொழிகளுக்கூடாகவே வந்தது ; இது தமிழில் **ஈழம்** எனக் குறிக்கப்படும். சிங்களத்தில் "ஸ" "ஹ" என்ற எழுத்துக்கள் இடம் மாறிக்கொள்வதுண்டு ; சங்கதம், தமிழ் ஆகியவற்றால் தீண்டப்படாத பழையமொழி " எலு " அல்லது " ஹெலு " எனப்படும். இவையும் சிங்கள என்ற சொல்லிலிருந்து ஆனவையேயாம்.

நடுக்காலத்தில் இத்தீவானது கைசர் காலத்தில் " கால் " இருந்தவாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்பகுதிகளாவன : **பிகிற்றி** அல்லது **இராசரட்டை** அல்லது அரசன் நாடு, **மாயாரட்டை** அல்லது கீழ் வேந்தர் நாடு (மகயா, மாபா), **உறுகுணை** என்பனவாம். மாயாவுக்கு வடக்கில் எல்லையாயுள்ளது தெதுறு ஓயா ; இது சிலாபத்துக்கு அருகில் கடலில் விழுகின்றது. தெற்கில் எல்லையாய் உள்ளது களுகங்கை ; இது இப்பகுதியை உறுகுணையிலிருந்து பிரிக்கின்றது. இறுதியில் குறிக்கப்பட்ட பகுதியானது இத்தீவின் கிழக்கு, மேற்கு ஆகிய பாகங்கள் எல்லாவற்றிலும் பரந்துளது ; மற்றைப் பகுதிகளிலிருந்தும் மகாவலி கங்கை, களுகங்கை ஆகியவற்றால் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வெல்லைகள் கொள்கையளவில் உள்ளவையே ; மாற்றத்துக்கும் உரியவையே. பதினாலாம் நூற்றாண்டு மாயா இப்பொழுதுள்ள இரத்தினபுரி, களுத்துறை மாவட்டங்களையே கொண்டிருந்தது.




உருவம் 2.—சிங்களர் வருகை.



முற்காலங்களில் நாம் உறுகுணையையும் மலைநாடு எனும் மலயத்தையுமே கேள்விப்படுகின்றோம். இவற்றுள் உறுகுணை, களுகங்கை வரையும், சில காலங்களில் இன்னும் வடக்கேயும், சென்றிருந்தது. இக்காலங்களில் வடநாடு, தென்னாடு, கீழ்நாடு, மேனாடு ஆகியவற்றையும் பற்றிக் கேள்விப்படுகின்றோம். இவை தீவினுள்ள தம் நிலைக்கேற்பப் பெயர் கொண்டனவல்ல; ஆனால் தலைநகர் அனுராதபுரத்தோடு கொண்டுள்ள நிலை குறித்துப் பெற்றவையேயாம். இப்பொழுதுள்ள வடமத்திய மாகாணத்தின் தென் பாகத்தில் உண்டாய தென்னாடு என்பது மாயாரட்டை என வளர்ந்து ஒரு இளவரசனின் பகுதியாகியது. இது பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் மாத்தளையின் மேற்குப்பரப்பு, வடமேற்கு மாகாணம் முழுவதும், மேல் மாகாணம், சபரகமுவா மாகாணம் ஆகியவற்றின் பெரும்பகுதி முதலியவற்றையும் கொண்டிருந்தது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் உறுகுணையும் தற்காலிகமாக இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது; அவையாவன: **தொளதகாவும் அட்டதகாவுமாம்.** தொளதகா தெற்கையும் தென்மேற்கையும் கொண்டிருந்தது. மற்றையது எஞ்சியவற்றைக் கொண்டிருந்தது. தீவின் வடபகுதி அரசன் நாடாக இருந்தது. அதன் மையம் முதல் அனுராதபுரத்திலும் பின்னர் பொலன்னறுவையிலும் இருந்தது; இப்பகுதி அரசனின் நேரான ஆட்சியில் அடங்கியிருந்தது.

இப்பொழுது இலங்கையைப் பற்றி நாம் கொண்டுள்ள மிகப் பழைய நாட்டுப்படம் **தொலமியினுடையதாகும்.** இவர் கிறித்துவுக்குப்பின் முதலாம் நூற்றாண்டில் இருந்தவர் ஆவர். இப்படத்தில் கங்கை நதி (மகாவலி கங்கை) கடலில் விழும் இடத்தோடுள்ள கீழ்க் கரையோரம் மிக்க தெளிவாக அறியக்கிடக்கின்றது; ஆனால் "வடமுனை" என்பது இப்பொழுதுள்ள **தலை மன்னர்** ஆகும். இதிலிருந்து **தலகோரி** என்னும் வணிகப்பட்டினம் அதிக தூரத்திலில்லை. இது பிற்காலத்தில் **மகாதித்த** அல்லது **மாந் தோட்டை** எனப் பெயர் கொண்டது. **மலய** அல்லது **மலைநாடு** அப் பெயராலேயே காட்டப்பட்டுள்ளது; அங்குள்ள இரு முக்கிய நகரங்கள் **அனுராக்கிரமன்** அல்லது **அனுராதபுரம்** எனப்படும் இராச நகரம் என்பதும் மகாவலிகங்கையிலுள்ள தலைநகர் **மாக்கிரமன்** (சங்கதம், மகாக்கிராமம்) என்பதுமாகும். பின்னர் கூறப்பட்ட நகரத்தை இப்பொழுது **அளுத்து நுவரை** எனப்படும் **மகியங்கனே** என்பர் சிலர்; ஆனால் இது ஆற்றோட்ட வழியில் பொலன்னறுவை வழி **மாகந்தோட்டைக்குப்** போகும்பொழுது அண்மையில் உள்ளதாயிருந்திருக்கலாம். "புரம்", "நகரம்" என்னும் சொல்முடிபுக்குப் பதிலாக "கிராமன்", "கிராமம்" என்னும் முடிபு கவனத்துக்குரியவை. தொலமியின் காலத்துக்கு முன்னர் இலங்கையின் மேற்குக் கடற்கரையோரம் ஆபிரிக்கா வரை பரந்திருந்தது எனக் கருதப்பட்டது. இதற்குக் காரணம் யாதெனில் சன்சிபார்க்கு அருகாமையில் உள்ள கண்டத்தின் கிழக்குக் கரையோரம் கிரேக்கருக்கு **அசானியா** என அறியக் கிடந்ததாலும் தொலமியின் கூற்றின்படி இலங்கையின் மேற்குக் கடற்கரையோரத்திலுள்ள ஓர் ஆற்றின் பெயர் **அசனாசு** என்றிருந்ததாலும் என்க.




தொலமியின் தப்பிரபானே

நாட்டுப்படம் 1.



**சந்திரகுத்தனின்** (கி. மு. 321—297), அரசில் கிரேக்க தூதராயிருந்த **மகதனிசு** என்பார் இலங்கையைப் பற்றி ஒரு சிறிதளவு அறிந்திருந்தார். அவர் அந்நாட்டு மக்களை பலயகொனி என்று அழைக்கின்றார். குளோடியசு (கி. பி. 41-54) என்பாரின் ஆட்சிக்காலத்தில், செங்கடலின் சுங்கத்தைக் குத்தகைக்கு எடுத்திருந்த **அனியசு புகலமுசு** என்னும் இடத்திலுள்ள ஒருவன், அரேபியாவைச் சுற்றிக் கடலோடுகின்றபொழுது வட காற்றுக்களில் சிக்கி காமனியா (மேகிரன்) கடற்கரையோரத்தைக் கடந்து இலங்கை சேர்ந்தான் என்றும், அங்கு பதினைந்தாம் நாள் இப்புரசு என்னும் துறைமுகத்தில் இறங்கினான் என்றும் **பிளினி** என்பார் எழுதியுள்ளார்; **இப்புரசு** என்னும் இத்துறைமுகம் தீவின் தென்மேற்குக் கடற்கரையோரத்தில் உள்ளதாயிருக்கலாம். பின்னர் இவன் அரசன்முன் கொண்டுசெல்லப்பட்டு அங்கு அரசனால் ஆறு மாதங்கள் வரை உபசரிக்கப் பட்டான்; பின்னர் அரசன் உரோமுக்குத் தூதுக்குழுவொன்றை அனுப்பினான். இத்துறைமுகமானது தெற்கு நோக்கியதாய் பலசிமுண்டு என்னும் பெயருடையதாய், மூன்று முகங்களை உடைய ஆற்றிலுள்ள **பலசிமுண்டு** என்னும் முக்கிய நகருக்கு அணித்தாய் உள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறும் இந்தியாவை நோக்கி வடதிசையாய் ஓடும் "**சிதரா**" எனப் பெயருள்ள இன்னொன்றும் உள்நாட்டிலுள்ள பெரியவொரு குளம் "**மெகிசபா**" என்பதிலிருந்து ஓடுவனவாகக் கூறப்பட்டுள்ளது. இந்தியாவிலே இந்நாட்டிற்கு மிக அண்ணிதாயுள்ள முனையானது நான்கு நாள் கப்பல் பிரயாண தூரத்திலுள்ள சோழ நிலப் பரப்பிலுள்ள இராமேசுவரம் ஆகும். இதைத் "தொலமி சோறை" என்பார். இவ்வரலாற்றிற்றுப்போலும் பெரிப்புளுசு என்பார் இத்தீவுக்கு **பலசிமுண்டு** என்னும் பெயரினைக் கொண்டார்.

இலங்கையின் **பழங்காலச் சரித்திரம் இராமாயணத்துடன்** தொடங்குகின்றது. இக்காவியம், இலங்கைக்கு அரசனான **இராவணன், சீதையைக்** கவர்ந்தானெனவும் **அனுமந்தன்** துணைகொண்டு அவளின் கணவனான இராமன் அவளை மீட்டானெனவும் கூறுகின்றது. இலங்கையிலுள்ள "நுவர எலிய" "நகரின் (இராவணனின்) வெளி", "சீதா எலிய", "சீதையின் வெளி" **சீதாவக்க** என்பனபோன்ற இலங்கையிலுள்ள சில பெயர்களும் இக்கதையைக் குறிக்கின்றன எனினும் இக்காவியமானது சிங்கள மக்களின் நாட்டுக் கதைகளில் சிறியவோர் இடத்தையே கொண்டுள்ளதாகும்.

இவர்களுக்கு, இலங்கைக்குப் புத்தர் வந்தமையே மிக்க முக்கியம் உடையதாக உள்ளது. இவ்வரவுகளில் முதலாவது **மகியங்கனைக்கு** வந்ததாகும். அவர் இங்குள்ள நாட்டுவாசிகளான இயக்கரை வெளியேற்றித் தம் மயிர்க் கற்றையொன்றைச் சமன் என்னும் தெய்வத்துக்குக் கொடுத்தார்; அத் தெய்வமானது இம்மயிர்க்கற்றையை நீலமணிக்கிண்ணம் ஒன்றில் பதித்து வைத்தது. இரண்டாவது வருகை யாழ்ப்பாணக் குடாக்கடலிலுள்ள நாக தீபத்துக்காகும். இங்கு அவர், மணிபதித்த ஓர் அரசுகட்டிலைப்பற்றி **மகோ**

**தரன், சுலோதரன்** என்னும் இரு நாகவிளவரசர்களுக்கிடையில் எழுந்த பிணக்கினைத் தீர்த்தார். மூன்றாவது வருகை **கழனிக்காகும்**. இங்கு அவர் பிற்காலத்தில் எழுந்த தாகபை உள்ள இடத்தில் தங்கியிருந்தார். பின்னர் அவர் **சிவனொளிபாதம்** என்னும் சமந்த கூடத்துக்குச் சென்றார். அங்கு அவர் தம் காலின் அடிச்சுவட்டைப் பதித்தார். அங்கிருந்து அவர் கீழ்மாகாணத்திலுள்ள **தீகவாபி** என்னும் இடத்துக்குச் சென்று பின் அனுராதபுரத்துக்குச் சென்றார். அங்கு அவர், அரசமரம், உருவன்வலி தாகபை ஆகியவை இப்பொழுதிருக்கும் இடங்களைத் தம் சமுகத்தால் புனிதமாக்கினார். அனுராதபுரமானது பழங்கதைகளின்படி இவ்வூழிக்குரிய முந்திய **மூன்று புத்தர்களின்** வருகைகளால் புனிதமாக்கப்பட்டுள்ளது. அவர்கள் காலத்தில் அனுராதபுரம் ஆனது **அபயபுரம், வத்தமானம், விசாலநகரம்** என அழைக்கப்பட்டது. கௌதமபுத்தர் வருகை அல்லது அவருக்கு முந்திய புத்தர்களின் வருகைகளைப் பற்றி வரலாற்றுச் சான்றுகள் கிடையா. பழங்கதைகளின்படி இந்நாட்டின் பழங்குடிமக்கள் **இயக்கர், நாகர், தேவர்** ஆகியோரேயாவர். இப்பெயர்களில் யாதாயினும் உண்மை மறைந்திருக்கலாம்.

மரபுரைகளிற்கியைய இலங்கையின் முதல் அரசன் **விசயன்** ஆவன். பழங்கதைகளிற்கியைய அவனின் பாட்டியான சுபதேவி என்பாள் வங்கத்து அரசனுக்கும் கலிங்கத்து (ஒரிசா) அரசிளங்குமரிக்கும் பிறந்த மகள் ஆவள். அவள் தன் அகத்தைவிட்டு ஓடி இப்பொழுது குசராடம் எனப்படும் "**லாலா**" அல்லது "இலாட" என்னும் நாட்டில் ஒரு சிங்கத்தைக் கூடினாள். அதனாலேயே அவள் பிள்ளைகளின் பெயர்களும் அவ்வாறாயின. இறுதியில் இலங்கையின் பெயரான "சிம்மள" என்பதும் "சிங்களர்" என்பதும் தோன்றின. அவளின் மகனான சிங்கபாகு என்பான் தன் பதினாறாம் வயதில் தன் தாயாரையும் தன் உடன்பிறந்த சகோதரியையும் மனிதர்வாழ் இடத்துக்குத் தூக்கிச் சென்றான். சிங்கமானது தன் குடும்பத்தினரைத் தேடும் முயற்சியில் நாட்டை அழித்தது. பின்னர் வங்கத்து அரசன் அளிப்பதாகக் கூறிய பரிசின் பொருட்டு சிங்கபாகு இச்சிங்கத்தைக் கொன்றான். அக்காலத்தில் அரசன் இறக்கவே சிங்கபாகு அவன் பின் அரசனாக்கப்பட்டான். ஆனால் அவன் வங்கத்தைவிட்டுத் தன் சொந்த நாடான இலாடாவில் சிங்கபுரம் என்னும் நகரத்தினை நிறுவினான். அவனின் மகனான அரசிளங்குமரன் விசயனும் அவன் தோழரும் அரசனின் தலைநகரத்திலே பொல்லாக் குழப்பங்கள் உண்டாக்கியமையால், அரசன், மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களை வெளியேற்ற வேண்டியதாயிற்று. அவர்கள் கப்பல் எறி, இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரத்திலுள்ள புகழ்பெற்ற துறைமுகமான **சுபாரக** (பம்பாய்க்கருகிலுள்ள சோபாரா) என்னும் இடத்தை அணைந்து இறுதியில் **தம்பபண்ணியை** அடைந்தனர். இங்கு அவர்கள் இந்நாட்டில் இயக்கர் வாழ்வதைக் கண்டார்கள். அவர்களுள் ஒருத்தியான குவேனி என்பாள் விசயனின் நண்பர்களைக் கவர்ந்தாள்; ஆனால் விசயன்



அவர்களை மீட்டுக் கொண்டான். அவள் பின்னர் விசயனின் காமக்கிழத்தியாகி அவளின் துணைவரான இயக்கரை அழிப்பதற்கு அவனுக்கு உதவி செய்தாள். இவ்வியக்கர்களின் முக்கிய இடங்கள் **சிறீவத்து, இலங்காபுரம்** ஆகியவையாம். பின்னர் இவை "லொக்கலை", "லக்கலை" என்னும் குன்றுகளேயாம் எனக் கருதப்பட்டன. ஆயினும் கதையிலிருந்து தெளிவாக அறியக்கிடப்பது யாதெனில் சிறீவத்து என்பது விசயன் இறங்கிய இடத்துக்கு அண்மையில் இருந்தது என்பதாகும். ஏனெனில் அங்கு நடந்த திருமண விளையாட்டுக்களின் ஓசையை அவன் கேட்டு அச்செவ்வியைப் பயன்படுத்தி அங்கிருந்த இயக்கரைத் தாக்கினான் என்க. பின்னர் விசயன் தம்பபண்ணி என்னும் துறைமுகத்தில் உறைவிடம் கொண்டான். இது ஓர் ஆற்றுக்குத் தெற்கில் இருந்தது. அவ்வாறு மல்வத்து ஓயாவாக இருக்கலாம். அவனோடு வந்த நண்பர்கள் அடுத்துள பகுதிகளில் பல கிராமங்களை அமைத்து வாழ்ந்தனர். இக்கிராமங்களாவன: மல்வத்து ஓயாவின் கரையிலுள்ள **அனுராதபுரம்**; வடக்கே எழு அல்லது எட்டு மைலிலுள்ள **உபத்திசா**, அனுராதபுரத்திற்கு மேற்கேயுள்ள ஒரு கடற்றுறை; **உருவேல** (ஒருவேளை இது மறிச்சுக்கட்டியாக இருத்தல் கூடும்), **உச்சேனி, விசிதா** என்பவையாம். விசயனின் துணைவர்கள் இப்பொழுது விசயனை முடிசூட வேண்டினர். அதன்பொருட்டு **மதுரையிலிருந்த** பாண்டிய அரசனுக்கு அரசியொன்றைத் தருமாறு தூது ஒன்றை அனுப்பினர். இளவரசியும் அவள் பரிவாரமும் **மகாதித்த** (மாந்தோட்டை) என்னும் இடத்தில் கரை சேர்ந்தனர். அவள் விசயனை மணக்க அவள் தோழிகள் அவன் தோழரை மணந்தனர். ஒதுக்கப்பட்ட குவேனி தன் இரு பிள்ளைகளுடன் **இலங்காபுரத்தை** அடைந்தாள். அங்கு, கோபங்கொண்ட அவளின் உறவினரால் அவள் கொல்லப்பட்டாள். அவள் பிள்ளைகள் சிவனொளி பாதத்துக்கு ஓடியொளித்தனர். அங்கு அவர்கள் **புளிந்தர்** (மலைவாழுநர் அல்லது வேடர்) என்பார்க்குக் குலமுதல்வர் ஆயினர்.

இலங்கையில் பெற்ற கதை இதுவேயாம். எனினும் நாம் இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் பழைய வரலாற்று நூலாகிய **தீபவமிசத்தில்** குவேனியைப் பற்றிய செய்தி ஒன்றும் குறிக்கப்படவில்லை என்பதாகும். இலங்கையின் குடியேற்றத்தைப் பற்றிப் பிறிதொரு இந்தியக் கதை கூறுவதாவது: சிங்கமும் இளவரசியும் இருந்தனர்; மகன் விலங்கினைக் கொல்வதற்காகப் பரிசு அளிக்கப்பட்டான் எனினும் தந்தையின் கொலைக்காக நாடு கடத்தப்பட்டான்; நாடு கடத்தப்பட்ட அவன் இரத்தினத் துவீபத்துக்குச் சென்றான்; பின்னர் மணிக்கற்கள் வேண்டி இந்நாட்டுக்கு வந்த வணிகரை இச்சிங்கத்தின் மகன் கொன்று அவர் குடும்பத்தினரைத் தீவில் மறித்து வைத்தான். நாளடைவில் அவன் வழித்தோன்றல்கள் எண்ணிக்கையிற் பெருக அரசன் ஒருவன் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசொன்று நிறுவப்பட்டது. பின்னர் இதை நிறுவிய முதல் தலைவனின் பெயரைக்கொண்டு நாடு **சிங்களம்** எனப் பெயர் கொண்டது. மூன்றாவ

3——J. N. R 23294 (1/60)

தொரு கதை, இரத்தினத் துவீபத்திலுள்ள இரும்பு நகர் ஒன்றில் வாழ்ந்த இயக்கப் பெண்கள் கடலோடிகளை எவ்வாறு கரைக்கு வசப்படுத்தி அழைத்தனர் என்பதைக் கூறுகின்றது. இந்தியாவிலிருந்த சிங்கன் என்னும் அரசனின் மகன் சிங்களன் என்பான் ஐந்நூறு வணிகருடன் இந்நாட்டுக்கு மணிக்கற்கள் தேடி வருகிறான். வந்தவர் இயக்கர் பெண்களை மணக்கின்றனர். பின்னர் சிங்களன் என்னும் தலைவன் அவர்களின் உண்மையான இயல்பை அறிந்து பறக்கும் குதிரையொன்றின் துணைகொண்டு தன் துணைவர்களை வெளிக்கொண்டு சென்றுவிடுகின்றான். பெண்கள் அவர்களைத் தொடர்ந்து திரும்பிவருமாறு வேண்டுகின்றனர். ஆனால் சிங்களன் அதற்கு இணங்கவில்ல. அவனின் மனைவியான இயக்கப் பெண்களின் அரசியானவள் அவனைப் பின்தொடர்ந்து இந்தியாவுக்குச் செல்கின்றாள். அங்கு அவனால் ஒதுக்கப்பட்ட அவள், தகப்பனின் பாதுகாப்பைப் பெறுகின்றாள். அங்கு அவள் தன் ஆட்களை அழைத்து அவ்வரண்மனையில் உள்ள யாவரையும் கொன்றுவிடுகின்றாள். பின்னர் சிங்களன் அங்கு தன் தந்தையாரின் இடத்தில் அரசனாக நியமிக்கப்படுகின்றான். பின்னர் அவன் இரத்தினத் துவீபத்துக்குப் படையெடுத்துச் சென்று தன் ஆட்களை மீட்கிறான். பின்னர் குடியேறிகளை அங்கு ஏற்றி சிங்கள அரசை நிறுவுகின்றான். இக்கதையானது முகிற்குதிரை பிறந்த கதை (வளாக சாதக) என்பதிலிருந்து தோன்றியதாகும். இக்கதை கூறுவது : இலங்கையிலுள்ள சிறீசவத்து என்னும் இயக்கர் நகர் இயக்கிகளால் நிரம்பியிருந்தது ; அவர்கள் கப்பல் உடைந்து கதியிழந்த கடலோடிகளைப் பிடித்து வந்தனர் ; கல்யாணி (களனி) யிலிருந்து நாகதீபம் வரைக்கும் உள்ள கடற்கரையை இவர்கள் சூறையாடுவது வழக்கம் ; ஒருமுறை ஐந்நூறு வணிகர் கப்பல் உடைந்து தவித்தபொழுது இயக்கர்களால் ஆதரிக்கப்பட்டனர் ; வணிகர் தலைவன் தம்மை ஆதரித்தவர் இயக்கர் என அறிந்ததும் பறக்கும் குதிரையொன்றின் துணைகொண்டு தன் துணைவர்களுள் இருநூற்றைம்பது பேருடன் தப்பியோடினான் ; இப்பறக்கும் குதிரை முற்பிறப்பில் ஒரு புத்தர் ஆகும். எஞ்சியவர் இயக்கர்களால் கொன்றுண்ணப்பட்டனர். இதிலிருந்து அறியக் கிடப்பது யாதெனில் விசயனின் கதை பழைய கட்டுக்கதைகளைச் சேர்ந்த தொன்றாகும் என்பதே.

விசயன் தான் இறப்பதற்குச் சில காலத்துக்கு முன்னர் தன் உரிமை பேணுவதற்கு ஒருவரும் இல்லாததனால் தன் அரசைப் பின்னர் ஆள்வதற்காகத் தன் தம்பி சுமித்தனை அனுப்புமாறு சிங்கபுரத்துக்கு ஒரு முடங்கல் அனுப்பினான். இக்காலத்தில் சுமித்தன் தன் தந்தையின் இடத்தில் அரசனாய் அமர்ந் திருந்தமையால் தன் இளைய மகனான **பந்துவாசனை** அனுப்பினான். இவன் இலங்கை சேர்ந்து விசிதபுரத்திலிருந்து அரசாண்டான். இவ்வரசனைப் பற்றி பின்னர் எழுந்த ஒரு கதை உண்டு. அது, விசயன் குவேனியைத் துரத்தினமையால் வந்த பாவம் அவன் உடன்பிறந்தார் மகனான பந்துவாசனைப் பீடித்தது என்றும், இலங்கையின் காவல் பொறுப்பை ஏற்ற தேவனான



**சகரன்** அவனைப் பாதுகாத்தான் என்றும் கூறும். சகரன் ஆணையை ஏற்றுக்கொண்ட ஈசுவரன் இராகுவுக்குக் கட்டளையிட, இராகு பன்றி வேடந்தாங்கி மலராசனின் பூம்பொழிலை அழித்தான். மலராசன் தன் ஆட்களை அழைத்துப் பூம்பொழிலைச் சூழ்ந்து அதைத் துருவி ஆராயுமாறு கட்டளையிட்டான் ; பன்றி தப்பியோடியதும் மலராசன் அதைத் தொடர்ந்தான். பன்றி தூத்துக்குடிக்கு அருகாமையில் கடலில் குதித்து இலங்கையிலுள்ள ஊறுதோட்ட (பன்றி இறங்கியவிடம் அல்லது ஊர்காவற்றுறை) என்னும் இடம் வரைக்கும் நீந்திச் சென்றது. மலராசன் தொடர்ந்து வந்தான். இவ்வாறு இராகு ஆனவன் மலராசனை நாட்டின் நடுவண் வரை இழுத்துவந்த பின் மறைந்து போயினன். அவன் மறைந்தவிடத்தில் ஒரு குன்றானது நின்றது. அதைக் கண்ட மலராசன் ஆச்சரியமுற்றான். சகரன் இப்பொழுது அவன் முன் தோன்றி அரசனின் பிணி நீக்குமாறு பணித்தான். அவனும் அவ்வாறே செய்தான். பந்துவாசன் புத்தரின் உறவினனான **சாக்கியபந்து** என்பானின் மகளை மணந்தான். அவளுடன் சேர்ந்து அவளின் உடன்பிறந்தாரும் இலங்கைக்கு வந்தனர். அனுராதபுரம், உருவேலை, விசிதபுரம், தீகாயு, உரோகணை (இது பின்னர் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள **மாகமை** எனப்படும்) ஆயகி இடங்களின் தோற்றமும் இவர்களாலாயது என்றும் சிலர் கூறுவர். பந்துவாசனின் பின் **அபயன்** அரசாண்டான். அதன் பின்னர் கழிந்த பதினேழு ஆண்டு இடைக்காலத்தின் பின் **பந்துகாபயன்** அரசாண்டான். இவன் அனுராதபுரத்தைத் தன் தலைநகராகக் கொண்டான். இங்கு அவன், இப்பொழுது வசபகுளம் எனப்படும் **அபயவாவியைக்** கட்டினான். அவன் இரண்டு இயக்க அரசிளங் குமரரையும் அரசளித்துப் பேணினன். அவர்களுள் ஒருவன், அரசனின் அரசுகட்டிலை உயர்வில் ஒத்த பிறிதொன்றில் அமர்ந்து அரசாண்டான். இதிலிருந்து இயக்கர் அல்லது முன்னிருந்த குடிமக்கள் ஆகியோர் வெல்லப்பட்ட இனத்தவராகக் கருதப்படவில்லை என நாம் அறியலாம். விசயனின் தோழர் பாண்டியப் பெண்களை மணந்தனர். நாளடைவில் இவர்களின் வழித்தோன்றல்கள் நாட்டுமக்களை மணந்து தங்கள் ஆரிய மொழியை அம்மக்கள் மேற்கொள்ளச் செய்தனர். பிற்காலங்களில் முன்னிருந்த ஆரிய இரத்தம் உண்மையாகவே ஐதாக்கப்பட்டு வந்தது. அதனால் சிங்கள மொழி வடஇந்திய மூலத்தைக் கொண்டிருந்தது எனினும் சமூக முறைகள் தென்னிந்திய முறையில் அமைந்தன. பந்துகாபயன் தன் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் இலங்கையின் எல்லாக் கோணங்களிலுமுள்ள கிராமங்களின் எல்லைகளைக் குறித்தான். அவனின் பின் அவன் மகனான **முத்தசீவன்** அரசெய்தினான்.

ஆரம்பகாலத்திலுமமழ ஆட்சியைப் பற்றிய கதைகளுட் பல கட்டுக்கதைகளாய் இருத்தல் கூடும். எனினும் இரு பொருள்களைப் பற்றி நாம் கூறுதல் வேண்டும். முதலாவதாக, விசயனின் முன்னோர்பற்றிய வரலாற்றில் யாதாயினும் உண்மையிருக்குமானால் இந்திய கண்டத்தின்

ஈர் எதிர்ப்பக்கங்களில் இருப்பவையான வங்காளம், குசராடம் ஆகியவற்றிலிருக்கும் ஈர் அரசர்களுக்கிடையில் யாதாயினும் ஒரு தொடர்பை நாம் கருத்தில் கொள்ளுதல் இயலாததொன்றாகும். எல்லாச் சான்றுகளையும் நோக்கும்பொழுது விசயன் மேற்குக் கடற்கரையோரத்திலிருந்து வந்திருக்கின்றான் என்பது தெரிகின்றது. அவனுடைய குலப் பிறப்புக்கு இரு நாட்டினரை இணைப்பதன் நோக்கம் இலங்கைக்கு வந்து குடியேறிய மக்கள் இந்தியாவின் கிழக்கு, மேற்குப் பக்கங்கள் இரண்டிலும் இருந்து வந்தமையாலாகும். அனுராதபுரம் போன்ற சில இடங்களின் தோற்றங்களைப் பற்றிக் கூறும் இரு வேறுபாடான கதைகளை நாம் ஆராயுமிடத்து, அவை அம்முடிவுக்கே நம்மை இட்டுச் செல்கின்றன. மேற்கூறியவாறு நாம் கருதாதவிடத்து, இலங்கையின் தென்கிழக்குக் கடற்கரைகளில் உள்ள மாகமையிலும் அதற்கு அருகாமையிலுமுள்ள குடியேற்றங்களைப்பற்றியும் விளக்கம் கூறுதல் கடினமாகும். ஒருவேளை விசயன் (வென்றவன்) என்பவனே இருமருங்கிலும் வெற்றி கண்டவனாய் இருத்தல்கூடும். இரண்டாவது நாம் குறிக்க வேண்டிய பொருளாவது, இலங்கையின் ஆரம்ப வடலாற்றினைப் புத்தரோடு இணைக்கவேண்டும் என்ற ஓர் அவாவாகும். புத்தர் இறந்த நாள் அன்றே விசயன் தம்பபண்ணியில் இறங்கினான் எனக் கூறப்பட்டுள்ளது. இதற்காக விசயன், அவன் பின் அரசாண்ட நால்வர் ஆகியோருடைய ஆட்சிக் காலத்தை நீண்ட அளவு கொண்ட 236 ஆண்டுகளுக்கு நீட்டியுள்ளார்கள். இவற்றுள் பந்துகாபயனுக்கும் அவன் மகன் முத்தசிவனுக்கும் 130 ஆண்டுகளை விதிக்க வேண்டியிருக்கின்றது. அவனைப் பின் தொடர்ந்தான் கிறித்துவிற்கு முன் 247 இல் அரசுகட்டில் ஏறினான் என நாம் அறிகின்றோம். எனவே இலங்கைக்கு விசயன் வந்த காலத்தைக் கிறித்துவிற்கு முன் ஐந்தாம் நூற்றாண்டின் பிற்காலத்தில் நடந்தது எனக் கொள்வது ஏற்புடைத்தாகும்.

உண்மையில் வரலாறானது **தேவானம்பியதீசனின்** (தேவநபே திசா, கி.மு. 247–207) ஆட்சியுடனும் இலங்கையைப் பௌத்தசமயத்துக்கு மாற்றிக் கொண்ட காலத்துடனும் ஆரம்பிக்கின்றது எனினும், இவ்வரலாற்று நூல்களில் குறிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் கற்பனையானவை என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். தீசன், முத்தசிவனின் இரண்டாம் மகனாகும். அவன் முடிசூடிய அன்று பல பொருட்குவைகள் தோன்றின என்றும் அரசன் தன்னுடன் நட்பினால் பலகாலம் பிணிக்கப்பட்டிருந்த இந்தியப் பேரரசன் **தர்மாசோகன்** என்பானுக்கு அவற்றை அளிக்க உளங்கொண்டான் என்றும் மகாவமிசம் கூறும். அதற்கேற்பப் பாடலிபுத்திரத்துக்கு (பட்னா) தூதுக்குழு ஒன்று அனுப்பப்பட்டது. அப்பேரரசன் அதற்குப் பதிலாக அத்தூதுக் குழுவினரிடம் முடிசூடுவதற்கு வேண்டிய பொருள்கள் யாவும் அளித்துச் சிங்கள அரசனின் முடிசூட்டலுக்கு வேண்டிய அறிவுரைகளையும் கூறி அனுப்பினான். அவர்கள் மூலமாக அரசனைப் பௌத்த சமயத்தில் சேருமாறும் அவன் கேட்டுக்கொண்டான். தூதர் இலங்கை வந்தபின் அரசன் இரண்டாம் முறையாக முடிசூடினான்.



**அசோகன்** எனப்படும் இந்தத் **தருமாசோகன்** (கி.மு. 268–231[1]) மௌரியப் பேரரசை நிறுவினவனும் **அலகுசாந்தரின்** ஒத்த காலத்தினனுமான சந்திரகுத்தனின் பேரனாகும். கலிங்கத்துப் போரில் கண்ட துன்பங்களால் மனங்கவன்ற அவன் பௌத்தசமயத்தில் ஆறுதலைப் பெற்றான். இந்தியாவின் பெரும் பகுதிக்கு அவன் அரசனாய் இருந்தான். இப் புதிய மதத்தைப் பரப்ப அவன் தன் ஆற்றலைப் பயன்படுத்தினான். பல நாடுகளுக்கும் அவன் தூதுக்குழுக்களை இதற்காக அனுப்பினான். ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமிருந்த கிரேக்க அரசர்களுக்கும் அனுப்பினான்.

தேவானம்பியதீசன் என்ன காரணத்திற்காக அசோகனிடமிருந்து தன் தலைமை உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கேள்வி இங்கு எழுதல் கூடும். அசோகனின் பேரரசாட்சி இந்திய நாட்டின் தென் பாகத்துக் கோடிவரை அகன்றிராவிட்டாலும் அசோகனுடைய ஆணையின் உயர்ந்த நிலையை அவன் நோக்கி அவ்வாறு செய்திருத்தல் கூடும். இன்றேல் குலத் தொடர்புகள் நோக்கியேனும் அவ்வாறு செய்திருத்தல் கூடும். அசோகன் **மோரியக்கிளை** ஒன்றின் தலையானவனாயிருந்தான். பின்னர் இலங்கையிலும் அரசகுடும்பத்தினரின் ஒரு பகுதியாக **மோரியரை** நாங்கள் காண்கின்றோம். பந்துவாசனின் மாமனாரான **சாக்கியபண்டு** போர் காரணமாகத் தன் நாட்டை விட்டகன்று கங்கையின் வடகரை சென்றிருந்தான் என மகாவமிசம் கூறும். பிற்காலத்தெழுந்த நூல்கள் அப்பொழுது நிறுவப்பட்ட நகர் **மோரியா** என அழைக்கப்பட்டது எனக் கூறும்; இந்தியா முழுவதும் மோரியர் என அறியப்பட்ட ஆளும் குலமான சாக்கியரிலிருந்து சந்திரகுத்தன் தோன்றினான் என்றும் அசோகன் சாக்கிய அரசிளங்குமரி ஒருத்தியை மணந்தான் என்றும் அவளின் எட்டு உடன்பிறந்தார் அரசமரத்துடன் இலங்கை வந்தனர் என்றும் கூறும். அவ்வெண்மருள் இருவரான **போதிகுத்தர்**, **சுமித்தர்** என்போர் “லக்மகாலே” (இலங்கைத் தலைமை எழுதுநர்), “சய மகாலே” (வெற்றியரசின் தலைமை எழுதுநர்) என்னும் பதவிகளை ஏற்றனர். அவர்களிலிருந்தும் “மெகனவர”, “கனவசி” என்னும் சிங்கள அரச குலக்கிளைகள் தோன்றின. தீவிலுள்ள மோரிய மாவட்டத்தைப் பெற்ற இன்னொருவர் மோரியர் என்று அழைக்கப்படும் சாக்கிய இனத்தைச் சேர்ந்தவராவர். பந்துவாசனின் அரசியின் உடன்பிறந்தான் பிள்ளையான சாக்கிய இளவரசனின் மகனே பந்துகாபயன் ஆதலின் அவனின் பேரனான தேவானம்பியதீசன் ஒரு சாக்கியனே ஆவன். இவ்வரலாற்றில் யாதாயினும் உண்மையிருந்தால், தேவானம்பியதீசன் அசோகனின் உறவினனேயாவன். மோரியரையும் பந்துவாசனின் மனைவியின் உடன்பிறந்தாரையும் சாக்கியருடன் இணைப்பதன் நோக்கம், இலங்கை அரசகுலமான பௌத்த கொன்சுறன்றைனைப் புத்தரின் இனத்தோடு சேர்ப்பதேயாகும்.

[1] கேம்பிரிட்சின் இந்திய வரலாற்றின்படி கி.மு. 274–237 ஆகும்.

அசோகனின் ஆட்சியில் சிறப்பான நிகழ்ச்சி, புத்தர் நெறியைப் பரப்புவதற்கு தூதுக்குழுக்களை அனுப்பியது என்பதை நாம் முன்னர்க் கண்டோம். இவர்களுள் அவனின் மகனான **மூத்த மகிந்தனும்** ஒருவனாவான். இவன் தேவானம்பியதீசனின் இரண்டாம் முடிசூட்டாண்டில் இலங்கை சேர்ந்தான். அவன் அனுராதபுரத்திலிருந்து எட்டு மைல்களுக்கு அப்பாலுள்ள (இப்பொழுது **மிகிந்தலை** எனப்படும்) ஒரு குன்றில் வேட்டையாடிக் கொண்டிருந்த அரசனைச் சந்தித்தான். அசோகனால் பௌத்த மதத்தைப்பற்றி ஏற்கனவே அறிந்திருந்த அரசன் புதிய மதத்தை உடனே மேற்கொண்டான். அவனுடன் அவன் குடிமக்கள் பலர் சேர்ந்தனர். அவனுடைய முதற் சமயம் என்னவென்று ஒருவரும் அறியார். **பந்துகாபயன், நிகண்டன்** ஒருவனுக்கு ஒரு கோயிலைக் கட்டினான் என்பதிலிருந்து அச்சமயம் சைன சமயமாயிருக்கலாம் என நாம் ஊகிக்கலாம். எனினும் இந்து சமய சந்நியாசிகளைப்பற்றியும் வரலாறு கூறுகின்றது. தேவானம்பியதீசன் இப்பொழுது நகரின் தென்பாகத்திலிருந்த நந்தன, மகாமேக என்னும் அரச உல்லாச நந்தவனங்களை மதக்குருக்கள்மாருக்கு அளித்தான். அங்கு புகழ் பெற்றதும் பல நூற்றாண்டுகளுக்கு இலங்கைப் பழஞ்சமயத்தின் மையமாக விளங்கியதுமான மகாவிகாரையை அவன் கட்டினான். இந்நிகழ்ச்சி அசோகன் முடிசூடியபின் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்தது. இதைப் புத்தர் இறந்தபின் 236 ஆண்டுகளின் பின்னர் எனவும், இன்றேல் இவ்விறப்பு கி. மு. 483 இல் நடந்தது எனக் கொண்டால் கி. மு. 247 இல் நடந்தது எனவும் கொள்ளலாம். அரசனின் மதப்பற்றினால் செய்த தொண்டு மிகிந்தலையில் விகாரையொன்றை நிறுவியதாம். அக்குன்றில் இன்றும் மகிந்தனின் படுக்கையை நாம் காணலாம். இதன்பின்னர் சக்கர தேவனிடமிருந்து பெற்ற புத்தரின் காறையெலும்பு **தூபாராமையில்** அடக்கஞ் செய்யப்பட்டது. தூபாராமையே அனுராதபுரத்தில் முதன்முதல் நிறுவப்பட்ட தாகபையாகும். புத்தரின் ஐயக்கலமும் அத்தருணத்தில் அசோகனால் அரசனுக்கு அளிக்கப்பட்டது. இது அரண்மனையில் வைக்கப்பட்டது.

அரசிளங்குமரி **அனுலா** இக்காலத்தில் தன் தோழிகளுடன் இரண்டாம் துறவுக்குழு, அதாவது துறவிப்பெண்கள் குழுவில் சேர விரும்பினாள். இதையறிந்த மன்னன் அத்துறவிக் குழுவிலுள்ள மகிந்தனின் உடன் பிறந்தாளான **சங்கமித்தையை** அனுப்புமாறு அசோகனுக்கு ஒரு தூது அனுப்பினான். அவளுடன், புத்தர் எவ்வரசின் கீழிருந்து ஞானோதயம் பெற்றாரோ அம்மரத்தின் வலக்கிளையிலிருந்து ஒரு பகுதியைக் கொண்டு வருமாறும் கேட்டுக்கொண்டான். தாய் மரத்திலிருந்து அற்புதமான முறையில் தானே பிரிந்த கிளையொன்று சங்கமித்தையினால் கங்கைவழி கொண்டுவரப்பட்டு இலங்கையில் சம்புக்கோளை (யாழ்ப்பாணக் குடாநாட்டில் சம்பில் துறை) என்னும் துறைமுகத்தை வந்தடைந்தது. இங்கு அது தேவானம்பியதீசனால் நன்மதிப்புடன் வரவேற்கப்பட்டது. இது அனுராதபுரத்துக்குக் கொண்டுவரப்பட்டு **மகாமேக நந்தவனத்தில்** நடப்பட்டது. இன்றும் அது அங்கே உள்ளது. இதுவே உலகத்தில் உறுதியாய் அறியப்பெற்ற மிகப் பழைய மரமாகும். தேவானம்பியதீசனால் நிறுவப்பட்ட மற்றைச் சமயக் கட்டிடங்கள் வருமாறு: **மகியங்கனை தாகபை**—இங்கு அவனின் இளைய தம்பியால் புத்தரின் காறையெலும்பு அடக்கஞ் செய்யப்பட்டது; தலை நகரிலுள்ள **ஈசுறுமுனி விகாரை**; **வெசகிரி விகாரை**. அனுராதபுரத்திலுள்ள **திசாவாவி** என்னும் குளத்தையும் அவன் கட்டினான். நாற்பது ஆண்டு ஆட்சிக்காலத்தின் பின் அவன் இறந்தான். மகிந்தன், இவனின் பின் **உத்தியனின்** எட்டாம் ஆட்சிக் காலம்வரை வாழ்ந்தான்.



மீண்டும் நாம் காலவரையறையில் இடர் எழுவதைக் காண்கின்றோம். தேவானம்பியதீசனின் பின் அவனின் நான்கு உடன்பிறந்தார் அரசாண்டனர். அவர் ஒவ்வொருவரும் பத்து ஆண்டுகள் அரசாண்டனர் என்று வரலாறு கூறும். இது ஐயத்துக்குரிய ஒப்புமையாய் உள்ளது. பிந்திய இருவரின் ஆட்சிக்காலம் **சேனன், குத்திகன்** என்னும் இரு தமிழரின் ஆட்சியால் இடையறுக்கப்பட்டுள்ளது. சேனன், குத்திகன் ஆனோர் அவர்களைப் போன்று பின்னர் பன்னிரண்டு அல்லது இருபத்து நாலு ஆண்டுகள் வலிந்து புகுந்து ஆண்டோருள் முதல்வராவர். இவ்வுடன்பிறந்தாருள் அசேலன் என்பான் எல்லாளன் என்னும் ஒரு தமிழன் பின் ஆண்டான். இவன் நாற்பத்து நாலு ஆண்டுகள் அரசாண்டான். இவ்வழி நோக்கின் அவ்வைந்து உடன்பிறந்தாரும் இரு தமிழருமாகச் சேர்ந்து 92 ஆண்டுகள் அல்லது 102 ஆண்டுகள் ஆண்டனர் என அறிகின்றோம். இது ஓர் இயலாத காலவெல்லையாகும். ஏனெனில் **எல்லாளனுடன்** ஒரு காலத்தவனான மாகமையிலிருந்த **காகவண்ணதீசன்** என்பான் தேவானம்பியதீசனின் ஓர் உடன் பிறந்தானான **மகாநாகனின்** கொள்ளுப் பேரனாவான்.

இவ்வதிகாரத்தில், வடக்கிலிருந்து குடியேறிகள் வந்ததையும் சிங்கள மன்னர் ஆட்சி நிறுவப்பட்டதையும் யாவற்றிலும் முக்கியமாக நாடு பௌத்த சமயத்தை மேற்கொண்டதையும் நாம் கண்டோம். இச்சமயத்தை மேற்கொண்டதால் பிற்காலங்களில் இலங்கை தன் நெருங்கிய அயலாரிலிருந்து நன்கு பிரிக்கப்பட்டது. இச்சமயம் நாட்டின் இயல்பில் மிகுந்த ஒரு செல்வாக்கைக் கொண்டிருந்தது. எனினும் பாலி இலக்கியம், பழஞ்சமயச் சார்பு ஆகியவற்றிற்காக இலங்கை உலகெங்கும் புகழ் கொண்டது, ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த **புத்தகோசர்** என்பாராலும் அவர் கல்வியாலும் ஆகும்.

வரலாற்றுக் காலம் முழுவதும் இத்தீவானது அடுத்துள்ள நிலப்பரப்போடு அமைதியான முறையிலோ, அற்றமுறையிலோ இடையறாத் தொடர்பு கொண்டிருந்தமையால் தென்னிந்தியாவின் அரசியற் பிரிவுகள் இங்கு குறிக்கப்பட்டுள்ளன. தமிழ் பேசும் முக்கிய அரசுகள் வருமாறு: (1) மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்டுள்ள **பாண்டிய அரசு**; இதன்

தலைநகர் முதல் கொற்கையிலும் பின்னர் மதுரையிலும் இருந்தது. (2) **சோழ அரசு ;** இது " கொரோமண்டல "க் கடற்கரை வழி " பெண்ணர் " (பெண்ணை) ஆறுவரை வடக்கு நோக்கிப் பரந்திருந்தது. இதன் தலைநகர் ஒருகால் உறையூராக (அல்லது பழந்திருச்சினப்பள்ளியாக) இருந்தது. (3) **சேர அல்லது கேரள அரசு ;** இது தென்மேற்குக் கடற்கரையிலிருந்தது. இங்கு மொழி நாளடைவில் மலையாளமாக மாறியது. (4) இதனுடன் இணைக்கப்பட்ட **கொங்குநாடு ;** இது ஒருகால் சுதந்திரநாடாக இருந்தது. இது கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களைக் கொண்டுள்ளது. அரச சின்னங்களாவன : பாண்டியர்க்கு ஒரு சோடி **மீன் ;** சோழருக்கு இருக்கும் நிலையிலுள்ள **புலி ;** சேரருக்கு **வில்.** பின்னர் தோன்றிய சிங்கள மன்னர்க்குச் சிங்கம் அரச சின்னமாயிருந்தது.

### 1 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பழைய புதிய கற்காலங்களின் கருவிகள் பற்றியறிய **இலங்கைக் கற் கருவிகள்,** யோன் போல், கல்கத்தா, 1913, பார்க்க. இலங்கையின் பழம் பெயர்களுக்கு **தீப.** i. 73 ; ix. 20 ; xvii. 5, 6 ; **மகா.** xv. 59, 92, 127 ; **பெரிபுளுசு,** பதி. இடபிளியு. எச். சுகொவு, 1912. " தென்னுடு " எது என்பது இலங்கையின் இடவிளக்க அறிவு பற்றிய குறிப்புக்கள், வே. ஆ. ச. ச., இ. கி. xxix எண் 75, ப. 62 இல் ஆராயப்பட்டுள்ளது. தொலமிக்கு **பண்டை இந்தியா,** சே. டபிளியு. மக்கிறைண்டில், 1885, பார்க்க. இப்புரசு என்பது குதிரைமலை எனக் கருதப்படுகின்றது. இது புத்தளத்திலிருந்து வடக்கேயுள்ள முனையாகும். இந்த ஒரு பெயர் மட்டும் ஏன் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்று தெரியவில்லை. காற்று கப்பல்களை நூலில் கூறியவாறு துரத்தியிருக்கலாம். நாலு புத்தர்களின் வருகையும் விவரமாக **தீப.** ii, 66-69 ; xv 25, 37, 47, 48, 54, 59 ; xvii 30 ; **மகா.** i. 20-84 ஆகியவற்றில் ஆராயப் பட்டுள்ளது. விசயனின் வெற்றி பற்றிக் கூறும்போது இரு பகுதிகளில் குடியிறங்கியிருக்க வேண்டுமென்ற கூற்று **கேம்பிரிச்சின் இந்திய வர லாறு,** ப. 606 இல் உள்ளது. தம்பபண்ணிக்கு **த. கு.,** ப. 4 பார்க்க. அது இலங்கையின் வடக்கிலுள்ளது என்னும் பாக்கரின் கருத்து ஆற்றைக் குறித்து " தெற்கே " என்பதின் பிழையான மொழிபெயர்ப்பாகும். **தீப.** ix. 33. ஆனல் ஏற்கெனவே கதைகளில் கூறப்பட்ட வேறு ஈரிடங்களைத் தவிர வளவையில் விசயன் கரையிறங்கினுன் என்ற ஒரு மரபுரையையும் **த.கு.** கூறும்.

சிங்களத்தைப் பற்றிய இருகதைகளும் **சி.—பு.—கி.** என்பதில் கூறப் பட்டுள்ளன. இதன் ஆசிரியர் இயுன் சியான். இதை " **மேல் நாட்டின் புத்த சமயப் பதிவேடுகள்** " என்பதில் எசு. பீல் என்பார் மொழிபெயர்த் துள்ளார். சாதகத்திலுள்ள சிறீசவத்து என்பது சிங்கள மொழியில் " தம்மென்ன " எனக் கூறப்பட்டுள்ளது. இக்கதைகள் ஏ. எம். குண சேகரா எழுதிய " **வரலாற்றுக்கு முந்திய இலங்கை** " யில் ஆங்கிலத்தில் உள்ளன. (இலங்கை நாட்டின் ஆய்விதழ், 1906, ப-ள் 149......) சிறீசவத்து என்பது மகாவமிசத்திலுள்ள சிறீவத்தாய் இருக்கலாம். சிங்கள மொழியில் உள்ள தம்மென்ன என்பது விசயன் கரைசேர்ந்த இடமாகிய புத்தளத்திற் கருகாமையிலுள்ள இடத்தின் பெயராகும். சங்கத மொழியில் " சிங்கள " என்பது " பட்டை ", " கறுவாப்பட்டை " என்ற கருத்தில் உள்ளது.



தேவானம்பியதீசனுக்கு **தீப., மகா., பூசா.** பார்க்க. உறவின்முறை யாலேயே அசோகனுக்குத் தூதுக்குழு அனுப்பப்பட்டது என்பது தொல் பொருளியல் ஆணையாளர் திரு. ஏ. எம். ஒகாது என்பாரின் குறிப்பாகும். இதுபற்றிய விவரங்கள் பிறரால் கூறப்பட்டன. சாக்கியர் பற்றியும் அவர் களே மௌரியர் என்பது பற்றியும் **மகா. தீக.,** ப-ள். 119.... **சத்த.** ப-ள் 265, 295, 296, 325 பார்க்க.

## அதிகாரம் 2

# துட்டகாமனியிலிருந்து சீகிரியாக் காசபன்வரை

### கி. மு. மூன்றும் நூற்றுண்டு—கி. பி. ஆறும் நூற்றுண்டு

**எல்லாளன்** என்பான் சோழநாட்டுத் தமிழன் ஆவான். பண்டை நாட் களில் சோழநாட்டின் தலை நகர் தஞ்சாவூராகும். எல்லாளன் இலங்கை மீது படையெடுத்து அசேலனைக் கொன்றுன். அவன் இந்துவாயிருந்தும் அவனின் நீதியை அவனின் சிங்களக் குடிமக்கள் போற்றினர். அவன் தன் அமளியின் அருகில் ஒரு மணியைக் கட்டி வைத்திருந்தான் என்றும் அவனிடம் நியாயம் வேண்டும் யாரும் அம்மணியை அடித்து எப்பொழுது யும் அவன் ஆய்விற்குக் கொண்டு வரலாமென்றும் மகாவமிசம் கூறும். ஒருமுறை அவன் மகன் சென்ற தேர் அவனின் அறிவின்றித் தவறுதலாக ஒரு பசுக் கன்றின் மேலூர்ந்து அதைக் கொன்றுவிடக் கன்றையிழந்த தாய்ப்பசு அரசனின் மணியை அடித்து நீதி வேண்டிய தென்றும் அதற்கீடாக அரசன் தன் மகனைத் தேர்க்காலின் கீழ்க் கிடத்தித் தேரை ஊரச்செய்து தலையைத் துணித்தான் என்றும் மகா வமிசம் தொடர்ந்து கூறும். இதைப்போன்ற ஒரு கதை மனுநீதி கண்ட சோழனைப் பற்றித் தமிழ் இலக்கியத்தில் உள்ளது.

இக்காலத்தில் கழனியிலும் இப்பொழுது அம்பாந்தோட்டை எனப்படும் மாவட்டத்திலுள்ள மாகமையிலும் அரசகுலக்கிளைகள் தோன்றி நிலை பெற்றன. தேவாநம்பியதீசனின் அரசியானவள் அரசனின் தம்பியும் துணைவேந்தனுமான **மகாநாகனை** நஞ்சூட்டிக் கொல்ல முயன்றாள். இதையறிந்த மகாநாகன் உறுகுணைக்கு ஓடி ஒளித்தான். அவன் போகும் வழியில் அவன் மனைவி **யத்தலை** விகாரையில் ஒரு மகனைப் பெற்றாள். இம்மகனின் பெயர் தீசனாகும். உறுகுணைக்குச் சென்ற மகாநாகன் மாகமையில் ஓரரசை நிறுவினான். காலிச்கருகிலுள்ள ஒரு கோயிலிலேயே தீசன் பிறந்தான் என்று சிலர் கூறுவர். ஆனால் அது உறுகுணையில் நடைபெறவில்லையென்பது தெளிவாக அறியக் கிடக்கின்றது. ஒருவேளை அது கேகாலை மாவட்டத்தில் அதே பெயர் கொண்ட விகாரையில் நடந்திருக்கலாம்.

கழனி தாகபையைத் தீசன் கட்டினான் என்று **பூசாவலி** கூறுகின்றது. **அவன்,** அவன் மகன் **கோதாபயன்,** அவனின் பேரன் **காகவண்ணதீசன்** (காவன்தீசன், காகத்தின் வண்ணமுடைய தீசன்) ஆகியோர் மாகமை அரசின் ஆட்சியை ஒருவர்பின் ஒருவராக மேற்கொண்டனர். இறுதியிற் கூறிய அரசனின் மனைவி கழனி அரசன் தீசனின் மகளாவள். இத்தீசனின் மனைவி தீசனின் உடன்பிறந்தானுடன் கள்ளக் காதல் கொண்டிருந்தாள். இது வெளியாயதும் அவன் நகரைவிட்டு வெளியேறினான். வெளியேறிய இவன், பிக்குவின் வேடந்தரித்த தூதன் மூலம் அவளுடன் முடங்கல் தொடர்பு கொண்டிருந்தான். இத்தூதன் தலைமைப் பிக்குவின் பணியாளர்களுள் ஒருவனைச் சேர்ந்து பிக்குவின் கூட்டத்தாருடன் அரண்மனைக்குப் போகும் பொழுது அரசியின் கண்ணைக் கவரும் வகையில் தன் தலைவனின் முடங்கலைக் கீழே போட்டான். அவப்பேறாக, ஓலையில் எழுதிய முடங்கலாதலின், அது விழும்பொழுது ஓசை உண்டாக்கியது. முடங்கல் தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டது. அரசன் சினங்கொண்டு தூதனைக் கொன்றதன்றியும் தலைமைப் பிக்குவையும் ஐயங்கொண்டு கொன்றான். அப்பொழுது கடல் பொங்கிக் கரையை அழித்தது. அக்காலத்தில் கடலானது கழனியிலிருந்து பதினைந்து மைல் தூரத்திலிருந்தது என **இராசாவலி** என்னும் நூல் கூறும். கடலின் கொந்தளிப்பை அடக்கி அமைவுபடுத்த அரசன் பொன்னாலாய கலம் ஒன்றில் தன் மகள் **தேவியை** இருத்திக் கடலில் விட்டான். கடல் அவளைத் தென்திசை கொண்டுசென்று ஒரு கோயிற் (விகாரைக்) கருகாமையில் கரைசேர்த்தது. அதன்பின்னர் அவள் **விகாரதேவி** என்னும் பெயருடன் காகவண்ணதீசனின் பட்டத்தரசியாகினாள். அவர்களின் மக்களே, பிற்காலத்து வீரர்களாகப் புகழ்பெற்ற **காமனி அபயனும் தீசனும்.**





உருவம் 3.—ஒரு போர்.

காமனி அபயன் இள வயதிலே துணிவுடையியல்பினனாய் விளங்கினான். சிறப்பாக மகாவலி கங்கையை எல்லையாகக் கொண்ட தன் தந்தையின் குறுகிய பரப்புடை அரசினை வெறுத்தான். மகாவலி கங்கையின் மற்றைக் கரையில் தமிழர் ஆண்டனர் ; இதனாலேயே இவன் இந்நிலையை வெறுத்தனன். இவ்விளவரசன் தன்னைச் சூழ ஒரு துணைவர் குழாத்தை

அமைத்தனன். பின்னர் தமிழரோடு போர் தொடுக்கத் தந்தையின் இசைவினைக் கோரினன். தந்தையார் மறுக்கவே வெகுண்டு மலைப்பகுதிகளுக்குச் சென்று மறைந்தனன். இந்நடத்தையால் இவன் **துட்டன்** என்னும் துணைப்பெயர் பெற்றனன். தந்தையிறந்ததும் **துட்டகாமனி**, இவனை இப்பெயராலேயே நாம் இனி அழைப்போம், அரசனாயினன். அரசனாகுமுன் தன் தம்பியுடன் போர்புரிந்தே அரசெய்த வேண்டியிருந்தது. இறுதியில் இவன் தன் தம்பியுடன் இணக்கங் கொண்டனன்.

துட்டகாமனி இப்பொழுது எல்லாளனுடன் போர் புரியக்கூடிய சுதந்திரம் உடையவனாயிருந்தான். தன் பட்டத்து யானையான "கந்துல" **(கடொல்)** மீது ஏறி மலைநாடுவழி சென்று மயியங்கானையில் போரைத் தொடங்கினான். மெல்ல மெல்ல மகாவலிகங்கைக் கரைவழி தன் படையை இட்டுச் சென்றான். தமிழர் இறுதியில் விசிதபுரத்தில் ஒருங்கு சேர்ந்தனர். இங்கு முற்றுகை நாலுமாதம் நடந்தது. இப்பொழுது கலாவேவாவிற்கண்மையில் அதே பெயர் கொண்ட ஓரிடத்தை அந்நகரமாயிருக்கலாம் எனச் சிலர் கூறுவர். ஆனால் "கொலையினின்றும் ஆற்றின் கரைவழி தப்பியோடிய தமிழரால்" அது காக்கப்பட்டிருந்ததாகலின் அந்நகர் பிற்காலத்தில் பொலனறுவையாய் விளங்கிய இடத்திற்கு அருகில் இருந்திருக்கலாம். இந்நகரின் ஒரு புறம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் "விசித" என்ற பெயராலேயே விளங்கியது. இவ்விடம் அடுத்த போர் நிகழ்ச்சிக்குக் **கலாவாவி**யினும் ஏற்ற இடத்தில் அமைந்ததாய் இருக்கிறது. அடுத்த நிகழ்ச்சி **கிரிலகை**யில் நடந்ததாகக் கூறப்படுகின்றது. கிரிலகையென்பது கிரித்தலையாயின் நம் கூற்றுப் பொருத்தமானதாகும். பின்னர் துட்டகாமனி **கசமலை** அல்லது **காகலை** எனப்படும் இடத்திற்கு முன்னேறினான். இது அனுராதபுரத்திலிருந்து தென்மேற்கே பதினைந்து மைல் தொலைவிலிருந்தது. இங்கு அவன் எல்லாளனின் மோதுதலை எதிர்பார்த்திருந்தான். அங்கு நடந்த போரில் எல்லாளன் தலைநகரை நோக்கி ஓடினான். ஆனால் அவனைத் துட்டகாமனி தொடர்ந்து நகரின் தென் வாயிற் கருகில் நடந்த தனிப்போரிற் கொன்றான். அவன் உடல் அரச மதிப்புடன் எரியிடப்பட்டது. அவனை யாவரும் மிக்க மரியாதையுடன் போற்றினராதலின் அவன் நடு கல்லிற்கு அருகால் பவனி செல்லும் அரசர்கள் தங்கள் இசைக் கருவிகளை நிறுத்தியே சென்றனர். அனுராதபுரத்தில் உள்ள **எல்லாள சொகொனா** அல்லது **எல்லாளனின் நடுகல்** எனப்படுவது அவனின் தகனவிடத்தைக் குறிக்கவில்லை; ஆனால் அது **தக்கிண தூபை** ஆகும்.


துட்டகாமனி (கி. மு. இரண்டாம் அல்லது முதலாம் நூற்றாண்டு) எல்லாளனின் உடன்பிறந்தார் மகனின் தலைமையில் இந்தியாவிலிருந்து வந்த புதுப்படையை அழித்து இலங்கையின் தனி அரசனானான். **தன் முடிசூட்டு** விழாவையும் கொண்டாடினான். அதன்பின் ஏழாம் நாள் **திசாவாவி**யில் அவன் ஒரு நீர் விளையாட்டுக் கொண்டாடினான். அதன் முடிவில் அவன் தன் ஈட்டியை எடுக்க முடியாமற் போய்விட்டது. அதற்குள் நிலத்திலிருந்து ஒரு சின்னம் புகுத்தப்பட்டிருந்தது. இந்த அற்புதத்தைக் கண்டு வியந்த அவன் அவ்விடத்தில் **மிரிசவெட்டி தாகபை**யைக் கட்டத் தொடங்கினான். பிக்குக்களுடன் பழுத்த மிளகாய் சேர்ந்த உணவைப் பங்குகொள்ளத் தவறிய பாபத்திற்காகவே இவ்வாறு நிகழ்ந்தது என அவன் எண்ணினான். **பித்தளை மாளிகை**யையும் அவன் கட்டி எழுப்பினான். அம்மாளிகையின் ஓடுகள் பித்தளையாலானவையாதலால் அது அப்பெயர் பெற்றது. இதைக் கட்டியவன் தேவானம்பியதிசன் எனவும் சிலர் கூறுவர். அவன் சமயப் பற்றுடன் செய்த முக்கியமான வேலை **உறுவன்வலி** தாகபை, "மகாதூபை" என்பதாகும். இது இலங்கைக்கு மூன்றாவது முறையாகப் புத்தர் பெருமான் வந்தபொழுது தங்கிய இடத்தில் எழுப்பப்பட்டது. இக்கட்டிடத்தின் பெரும்பகுதி கட்டப்பெற்று முடிவடையாமலிருக்கின்ற தருணத்தில் துட்டகாமனி நோயுற்றான். அவனின் இளையதம்பியான **சத்தாதிசன்** என்பான் தாகபையை வெண் துணியினால் மூடி மூங்கிலாலான முடியொன்று வைத்துப் பின் அரசனை வெளிக்கொண்டு வந்து தாகபையைக் காட்டினான். அரசன் தன் அரும் பணியில் கண்வைத்தவாறே உயிர் நீத்தான். அவன் இருபத்து நாலு ஆண்டுகள் அரசாண்டான். திராவிட வெற்றியாளருடன் நன்கு பழகிய துட்டகாமனி, பிற்காலத்து வந்தோர்க்கு சிங்கள வரலாற்றிலே திறமை மிக்க ஒரு வீரனாகவும் அன்னியரை வெளியோட்டியவனாகவும், நாட்டினத்தாரின் சமயத்தை நிலைநாட்டியவனாகவும் திகழ்ந்தான்.



புதிதாக வந்த அரசனான சத்தாதீசனானவன் எரிந்து விழுந்த பித்தளை மாளிகையைப் புதுக்கக் கட்டினான். வடமத்திய மாநிலத்தில் **பாடிக்குளம் (பதவியா)** என்பதையும் அமைத்தான். தம்பளையிலுள்ள பெரும் குகைக்குமேலிருக்கும் ஒழுகுவரைக்கு மேலுள்ள கல்வெட்டினை இவன் அமைத்தானெனச் சிலர் கூறுவர். எனினும் இவ்வாலயத்தை **வட்டகாமனி** அமைத்தானென வரன்முறை கூறும்.

சத்தாதீசனின் மக்களுள் மூவர் அரசாண்டபின் வட்டகாமனி என்னும் பெயருடைய நாலாமொருவன் **(வலகம் அபா,** கி. மு. முதல் நூற்றாண்டு**)** அரசுகட்டில் ஏறினான்; ஆனால் அவன் ஆட்சியின் ஐந்தாவது மாதத்தில் தமிழர் படையெடுத்து அவனை அகற்றினர். அவன் மலை நாட்டில் ஓடி ஒளிந்தான். **ஐந்து தமிழர்,** இவர்கள் பாண்டியராய் இருக்கலாம், பதினாலு ஆண்டுகட்குத் தலைநகரில் ஆட்சிசெலுத்தினர். இவர்களுட் கடையவனை வட்டகாமனி கொன்று அரசாட்சியைக் கைப்பற்றினன். இவ்வரசன் அனுராதபுரத்திலிருந்து தப்பியோடியபொழுது **பந்துகாபயனால்** நிறுவப்பட்ட சமணர் துறவு நிலையத்திலுள்ள ஒரு துறவியால் ஏளனம் செய்யப்பட்டான். அப்பொழுதே அரசன் தான் போரில் வெற்றி பெறின் அவ்விடத்தில் ஒரு விகாரை கட்டுவதெனச் சூள்கொண்டான். இச்சூளினை நிறைவேற்றுவதற்கு அவன் இப்பொழுது துணிந்து, புகழ்பெற்ற **அபயகிரி**

தாகபையைக் கட்டினான். இது மகாவிகாரை நிறுவிய 218 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது என்பர். இக்கட்டிடம் இப்பொழுது அப்பெயரினால் வழங்கப்படுவதொன்றன்று. ஆனால் இப்பொழுது **சேதவனாராமை** என அழைக்கப்படும் ஒன்றாகும். உறுவன்வலி தாகபைக்கு வடக்கே **சிலா சோபகந்தக தாகபை** என்பதையும் இவ்வரசன் கட்டினான். இது இப்பொழுது **இலங்காராமை** என்று அழைக்கப்படும். அவனின் போர் வீரனான **உதியன்** தக்கிண விகாரை என்பதைக் கட்டினான். இது இப்பொழுது **எல்லாளன் கல்லறை** எனப்படும்.



உருவம் 4.—ஆதி நாணயம்.

இவ்வாட்சியில் துறவியர் குழாத்திலுள்ள முதற் பிளவைப்பற்றி அறிய வருகின்றோம். அபயகிரிக் கிளையினர் மகாவிகாரையிலிருந்து தம்மைப் பிரித்துத் **தருமருசி** கிளை என்ற பெயருடன் விளங்கினர். இக்காலத்திலேயே பொய்யான கொள்கை தலையெடுத்ததனால் பௌத்த மத நூல்களான திரிபீடகங்களும் அவற்றின் உரைகளும், இதுவரை வாய்முறை வாய்முறையாக வந்தவை, நூல்வடிவில் எழுதப்பெற்றன. இப்பணிக்காகக் கூடிய பேரவை மாத்தளைக்கு அண்மையிலுள்ள **அலுவிகாரையில்** கூடியது என வரன்முறையால் அறிகிறோம்.

வட்டகாமனியைத் தொடர்ந்து ஆண்டவருள் மிக இழிந்த இராணியான **அனுலாவும்** ஒருத்தி. அவள் முதன் முதலாக இரு கணவரை நஞ்சூட்டிக் கொன்றாள். பின்னர் தொடர்ந்து அடுத்தடுத்து நான்கு கள்ளக் காதலர்களைக் கொன்று அரசாண்டாள். இறுதியில் அவர்கள் யாவரையும் நஞ்சூட்டித் தொலைத்துத் தானே வெளிப்படையாக அரசாண்டாள். ஆனால், விரைவில் (கிறித்துவ ஊழி தொடங்கும் கால அளவில்) **குடக்கன்னதீசன்** என்பான் அவளை ஒழித்து அரசைக் கைப்பற்றினான். இவ்வரசன் அனுராதபுரத்தைச் சுற்றி ஏழுமுழ உயரம் கொண்ட ஒரு சுவரைக் கட்டினான். இவன் பேரனான **ஆமந்தகாமனி** என்பான் குருநாகல் மாவட்டத்திலுள்ள மிக்க புகழ்வாய்ந்த **இருடிவிகாரையைக்** கட்டியவனாவான். உறுவன்வலி தாகபையைக் கட்டுவதற்கு உபயோகித்த வெள்ளி இவ்விடத்தில் அதி அற்புதமான வழியிற் கண்டெடுக்கப்பட்டமையால் இவ்வாலயம் இப்பெயரைப் பெறு



கின்றது. **இளநாகன்** (கி. பி. முதல் நூற்றாண்டு) **திசைமாராமை**யிலுள்ள பெரிய தாகபையைக் கட்டினான்; இது அக்காலத்தில் **நாகமகாவிகாரை** எனப் பெயர்கொண்டு விளங்கியது. இவனுக்கு நாலாவதாய் ஆண்ட **வசபன்** என்பான் தலைநகரைச்சுற்றியிருந்த குடக்கன்னதீசனின் மதிலினை உயர்த்தினான். பிற்காலத்தெழுந்த காலவேட்டினை நாம் நம்பினால் இம்மதில் பதினாறு அல்லது முப்பத்தைந்து மைல்களுக்கு மேற்பட்ட பரிதியைக் கொண்டிருந்ததெனக் கொளல் வேண்டும். வசபன் பதினொரு குளங்களைக் கட்டினான். கட்டி நீர்ப் பாய்ச்சலுக்கு அரிய தொண்டு செய்தான். **கவுடுலுவாவிக்கு** நீர்கொண்டு சென்ற எலகேர கால்வாயைப்பற்றி அவன் ஆட்சிக் காலத்திற் குறிக்கப்பட்டுள்ளது.



உருவம் 5.—இந்திய உரோம பொன் நாணயம்.

கொலையும் மதப்பற்றும் தொடர்ந்து வந்த காலவொழுக்கிற்கு **கசபாகு** அல்லது யானைக்கை என்ற பட்டப் பெயர் பெற்ற காமனி (கி.பி. 2 ஆம் நூற்றாண்டு) மாற்றத்தை அளிக்கக் கூடியவனாயிருந்தான். பண்டைக் காலவேட்டில் அதிக இடம் பெறாத இவ்வரசன், மக்கள் வழிவந்த கதைகளிற் புகழ் பெற்றுள்ளான். நடுக்கால வரலாற்றின்படி இவன் தந்தையார் காலத்தில் **சோழமண்டலக்** கரையோரத்தில் **காவிரிக்** கரையில் வேலை செய்வதன் பொருட்டு 12,000 மக்கள் அனுப்பப்பட்டனர் என்று தெரியவருகின்றது. இக்காலத்தெழுந்த **இராசாவலியில்** இக்குறிப்பு சோழ அரசனின் படையெழுச்சியாக மாறிவிட்டது. ஒருநாள் இரவு தன் தலைநகரில், கசபாகு உலாவிவரும்பொழுது, தன் மக்களை யாரோ கவர்ந்து சென்றமை குறித்து அழுத ஒரு விதவையின் ஓலத்தைக் கேட்டனன். தன் தந்தை காலத்தில் நடந்ததை அறியாத இம்மன்னன் தன் படைவீரரைக் கூட்டினன். எனினும் துணையின்றித் தானேதனித்துத் தான் எண்ணியது முடிக்க உறுதி கொண்டனன். இராசாவலி இக்கதையைப் பின்வருமாறு கூறும்.

'இவ்வரசன் **நீலன்** என்னும் **சூரன்** ஒருவனைத் தன்னோடு கொண்டு சென்று கடலினை ஒரு இரும்புக் கதையினாலடித்து நீரினை இரண்டாகப் பிளந்து அது விட்ட வழியே ஆறுதலாக நடந்து சோழித்தலைநகரை அடைந்து சோழிமன்னனைப் பயந்து நடுங்குறச் செய்து சகமன்னனைப்போல அவன் அரசு கட்டிலில் வீற்றிருந்தனன். இவ்வமயத்தில் சூரனான நீலன் நகரிலுள்ள யானைகளைப் பிடித்து ஒன்றுடன் ஒன்றை அடித்து அவற்றைக் கொன்றழித்தனன்.'


'நகரில் இவ்வாறு நடைபெற்ற பேரழிவினை அமைச்சர் சோழிமன்னருக்கு எடுத்துரைத்தனர். இதைக்கேட்ட அரசன் கசபாகுவை நோக்கிச் சிங்கள விருந்தினர் நகரை அழிக்கவா வந்தனர் என்று உசாவினன். "என்னுடன் ஒரு சிறு பையன் வந்துளன், படை வந்திலது" என்று அவன் பதி

விறுத்து நீலனைக் கூட்டிவந்து தன் அருகே நிற்க வைத்தனன். அப்பொழுது சோழிமன்னன், "அரசே! படையின்றி நீங்கள் வந்தது என்" என்று கேட்டனன். "என்னுடைய தந்தையார் காலத்து உன் தந்தையார் சிறையினராக இங்கு கொண்டுவந்த 12,000 மக்களையும் கொண்டு செல்வதற்காக நான் இங்கு வந்துளேன்" எனக் கசபாகு மொழி கூறினன். இதற்கு சோழிமன்னன் "பண்டைநாளிலே எங்கள் குலத்து மன்னன் ஒருவன் விண்ணவர் நகரம் சென்று அசுரரோடு நடந்த போரில் வெற்றி கொண்டவன்" என்று கூறி அம்மக்களை அரசனுடன் சேர்த்தனுப்புவதற்கு மறுத்தனன். அது கேட்ட கசபாகு மன்னன் சினங்கொண்டு "என்னுடைய 12,000 மக்களையும் அவருடன் சேர்த்து இன்னும் 12,000 மக்களையும் உடனே தருக. இல்லையேல் இந்நகரை அழித்து சாம்பராக்குவேன்" என்றனன். இவ்வாறு கூறிய மன்னன் மண்ணைப் பிழிந்து நீரெடுத்துக் காட்டினன்; தன் இரும்புக் கதையையும் பிழிந்து நீரெடுத்துக் காட்டினன். இவ்வாறு சோழிமன்னனைப் பயப்படுத்திய பின் முன்னருள்ள எண்ணிக்கையுடன் வட்டியாக அவ்வளவு எண்ணிக்கையுள்ள மக்களையும் சேர்த்து எல்லாமாக 24,000 பேரை அரசன் பெற்றான். அவன் பத்தினித் தெய்வத்தின் அணி பூண்ட சிலம்புகளையும் நாலு தேவாலயங்களுக்குள்ள கடவுளர்களின் சின்னங்களையும் வலகம்பா மன்னனின் காலத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட ஐயக்கலச் சின்னத்தையும் எடுத்துச் சென்றனன். இனி இவ்வாறு நடத்தல் கூடாதெனை அரசனுக்கு எச்சரிக்கை செய்து நாட்டை விட்டகன்றனன்.'

இவ் 24,000 மக்களும் அரசனால் வெவ்வேறு மாவட்டங்களில் பகுத்துக் குடிவைக்கப்பட்டனர். **சாரசியப்பட்டு–400 பட்டு**–என்பன போன்ற பெயர்களிலிருந்து இதை நாம் அறியலாம். இத்தகைய மாவட்டங்களின் பெயர்கள் இந்தியாவிலுமுள்ளன. பத்தினித்தெய்வத்தைப் பற்றிய வரன்முறை உண்மை நிகழ்ச்சியாயுமிருக்கலாம்; ஏனெனில் சேரமன்னன் **செங்குட்டுவனால் வஞ்சியில்** பத்தினித் தெய்வத்திற்கு கோயில் எடுத்தபொழுது இலங்கைக் கயவாகு மன்னன் சென்றிருந்தானெனப் பண்டைத் தமிழ்க் காவியம் ஒன்று கூறுதலின் என்க. இம்மன்னனின் தாய்வழிவந்த பேரனை சோழன் **கரிகாலன்** என்பவனே காவிரி ஆற்றின் கரை இருமருங்கிலும் அணைகட்டினான் என்று வரலாறு கூறும்.


**வோகாரிக்கதிசன்** (கி. பி. 3 ஆம் நூற்றாண்டு) அபயகிரியில் தோன்றிய வைதுலியக் கோட்பாடு என்பதனை அடக்கி ஒழித்தான். இவனுக்கு வோகாரிக்கதிசன் என்னும் பெயர், உறுப்புக் குறைத்தல், வதைத்தல் ஆகிய தண்டனைகளை நீதிமுறைமைகளினின்றும் அகற்றியதினாலும் அவனின் சட்ட ஞானத்தினாலும் கிடைத்தது என்பர். வைதுலியக் கோட்பாடு மகாயானம் என்று சொல்லப்படும் வடநாட்டிலிருந்து வந்த ஒருவகைப் பௌத்தமாகும். புத்தர்பிரான் இறந்து 752 ஆண்டுகள் கழிந்து இவன் அரசுகட்டில் ஏறினான் என்பர்.






நாட்டுப்படம் II.

முப்பத்து மூன்று ஆண்டுகள் கழிந்தபின்னர், அரசகுலத்தின் ஒரு கிளையான **இலம்பகன்ன** (லெமெனி, நீண்டதுளை பொருந்திய காதினை உடைய) கிளையினரைச் சார்ந்த மூவர் அப்போது ஆண்ட அரசனான விசயனைக் கொன்று மூத்தோனான **சங்கதீசனை** அரசுகட்டில் ஏற்றினர். இவனுக்குப்பின்



உருவம் 6.—பாரசிகச் சிலுவை, அனுராதபுரம்.

**சிறீ சங்கபோதி** (சிறீ சங்கபோ, கி. பி. மூன்றாம் நூற்றாண்டு அல்லது நாலாம் நூற்றாண்டின் முற்பகுதி) என்னும் அரசன் அரசாண்டான். மக்களிடை வழங்கும் வரலாற்றிலே இவன் ஒரு விழுமியோனாக விளங்குகின்றான். கடுமையான வறட்சிக் காலத்தில் ஒரு நாள், உறுவன்வலி தாகபைக்கு முன் அவன் வீழ்ந்து தன்னை மண்ணிலிருந்து உயர்த்தும் அளவிற்கு மழை பொழிந்தால் அன்றி தான் அவ்விடத்தை விட்டு எழுவதில்லை என அவன் சூள்கொண்டான் என வரலாறு கூறும். உடனே மழை பொழிந்



தது. ஆயினும் அவன் நீரில் மிதவாமையால் அவன் நிலத்திலிருந்து எழ மறுத்தனன். இதை அறிந்த அவன் அரண்மனை அலுவலாளர் கான்களை அடைத்து அவன் ஆணையை நிறைவேற்ற உதவினர். மீண்டும் ஒருமுறை நடந்த ஒரு கொள்ளை நோய் காலத்து அதற்குக் காரணனாயிருந் தானெனக் கருதப்பட்ட ஒரு செங்கண் இயக்கனைத் தன் முன் தோன்றச் செய்து அவன் பசிக்குத் தன்னை ஏற்குமாறு அரசன் கூறினன். அதற்கு இயக்கன் இணங்க மறுத்தனன். அதற்குப் பதிலாகவே இலங்கை முழுவதும் பலிப்படை கொடுக்கும் வழக்கம் ஏற்படலாயிற்று. **கோதகாபயன்** (கொழுஆபா) என்னும் மூன்றாம் இலம்பகன்னன், அரசனுக்கு எதிராகக் கலகம் செய்தான்; எனவே பிறர் மரணத்திற்குக் காரணனாயிருத்தலை வெறுத்த சிறீ சங்கபோதி தலைநகரை விட்டுத் தென்திசை நோக்கி ஓடி ஒளித்தனன். அவன் இடத்தைக் கவர்ந்தோன், அரசன் தலை கொண்டு வருவோர்க்கு ஒரு பரிசு அளிக்க முன்வந்தனன். அக்காலத்தில் அரசனைக் கண்ணுற்ற வழிப்போக்கன் ஒருவன் அரசனை யாரென அறியாது அரசனுக்கு வலிந்து உணவளித்தனன். அரசன் உணவை ஏற்று அருந்தினன். உணவளித்த அவனுக்குப் பரிசளிக்க நினைத்த அரசன், அவனுக்குத் தன்னை யாரெனப் புலப்படுத்தி தன் தலையைப் பரிசாகக் கொள்ளுமாறு கூறினன். வழிப்போக்கன் இணங்க மறுக்கவே சிறீ சங்கபோதி தன் தலையைத் துணித்தான். வழிப்போக்கன் வேறு செயலிலாதவனாய் அதைக் கோதகாபயனிடம் இட்டுச் சென்றனன். நாளடைவில் இக்கதை பல்வேறு வகைகளில் வளர்ந்தது. அரசினைக் கவர்ந்தோன் தன் பகைவனின் தலையைக் கண்டும், அது அவனுடையதென ஏற்றுக்கொள்ள மறுக்கவே, கடவுளர் வலிமையால் அத்தலை மூன்றுமுறை துள்ளி எழுந்து " நானே சிறீ சங்கபோ அரசன் " எனக் கூறியதாகப் பின்வந்த மாறல்கள் கூறும். அத்தனகலையில் உள்ள அரசனைப் புதைத்த இடத்திலே, திருமனை ஒன்றைக்கட்டிக் கோதகாபயன் தன் தீவினைக்கு ஈடு செய்தான்.

கோதகாபயன் ஆட்சியின் நாலாவது ஆண்டில் மீண்டும் அபயகிரிப் பிக்குமார் வைதுலியக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கினர். இதனால் ஒரு பிளவு ஏற்பட்டு, **தகுணுகிரி விகாரை** என்பது தோன்றியது. இங்கு **சாகலியர்** எனும் ஒரு புதுப்பகுதியினர் தோன்றினர். இவர் தோன்றியது புத்தர்பிரான் மறைந்து 794 ஆண்டுகள் கழிந்த பின்னர். இக் கொள்கையினரை அரசன் அடக்கி விட்டான். இவன் மகன் **சேட்டதீசன்** தான் அரசெய்தியபொழுது தன் தந்தையின் ஈமத்தைச் சுற்றித் துரோகம் செய்த **அறுபது மந்திரிகளைக்** கொளுத்தினான். இவன் இதனால் "கொடியோன்" என்னும் பெயர் பெற்றான். இவன் ஆறு குளங்களைக் கட்டினான். அம்பாந் தோட்டை மாவட்டத்தில் **முல்கிரிகலை விகாரையையும்** இவன் கட்டினான். பதுளையில் தேவானம்பியதீசனால் கட்டப்பட்டதென்று சொல்லப்படும் **முடியங்கனை விகாரை** என்பதையும் இவன் புதுப்பித்தான். அடுத்த மகனான **மகாசேனன்** (மகசென், கி. பி. நாலாம் நூற்றாண்டு) மகாவிகாரையினரைத்

துன்புறுத்தி அபயகிரியிலுள்ள தருமருசித் துறவிகளை ஆதரித்தான். பின்னர் அவன் பழைய கொள்கையோருடன் நட்புரிமை பூண்டனன்; ஆயினும் அவர்கள் விகாரை நிலத்திலேயே சாகலியப் பகுதியினர்க்கென **சேதவனாராமைத் தாகபையைக்** கட்டினன். இதே இப்பொழுது தவறாக அபயகிரி தாகபை என அழைக்கப்படுகிறது. இரந்திசை அல்லது **கௌடுலுவாவி, மின்னேரிக் குளம்** ஆகியவை உட்படப் **பதினேழு குளங்களை** அவன் கட்டினான். மின்னேரிக்குளத்திற்கு அம்பகங்கையிலிருந்து ஒரு கால்வாய் வெட்டி அவன் நீர் கொணர்ந்தான். **பதவியாவையும்** அவனே கட்டினான் என அவ்விடத்தில் வழங்கும் வரன்முறை கூறும். அதையவன் பெருப்பித்திருக்கலாம். மகாசேனன் தன்னுடைய நீர்ப்பாய்ச்சல் வேலைகளால் நாட்டிலே தன் புகழை நிறுவியுள்ளான். எனினும், காலவேட்டின் ஆசிரியர் அவனுக்குரிய இடத்தை அளிக்கவில்லை. இவன் ஒறுத்த மகாவிகாரையில் அவர் இருந்தார் என்பதனால் இது நடந்திருக்கலாம். இருபத்தேழு ஆண்டுகள் அரசாண்ட பின் (புத்தர் பிரான் நிருவாணமடைந்து 844 ஆண்டுகள் கழிந்து) இவன் மரணமடைந்தான். இவன் மரணத்துடன் மகாவமிசக் காலவேடு முடிவுறுகின்றது. இது ஒருவேளை மகாவிகாரையில் நடந்த குழப்பங்களின்பின் துறவோர் தொல்லேட்டகத்தில் வேண்டிய மூலங்கள் இல்லாமையால் நிகழ்ந்திருக்கலாம். பழைய பதிவு முடிவுற்றதே அரசரைப் பெருமரபினர், சிற்றரபினர் என்று பிரித்த பாகுபாட்டிற்குக் காரணமாயிருந்திருக்கலாம். பேரினத்தார் என்று சொல்லப்படுவோருள் மூன்றிலொரு பங்கிற்கு மேலானோர் இன்னுவால் இறந்தாராவர்.

மகாசேனனின் மகன் **சிறீ மேகவண்ணன்** (இத் சிறி மேவன்) என்பானின் ஆட்சி அவன் ஒன்பதாவது ஆட்சியாண்டிலே பற்சின்னம் நாட்டிற்கு வந்ததால் புகழ் பெற்றது. பகைவேந்தன் ஒருவனின் கைக்கு அகப்படாமலிருப்பதற்காகவே இது கலிங்கத்திலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டது. சீனர் நூல்களிற்கிணங்க, சிறி மேகவண்ணன் என்பான் இந்திய மன்னன் சமுத்திரகுத்தன் என்பானுக்கு ஒத்த காலத்தவனாவான் (கி.பி. 340 வரையில்). இம்மன்னனுக்குச் சிறி மேகவண்ணன் பரிசுகள் அனுப்பியுள்ளான்.

இம்மரபிற்குரிய **புத்ததாசன்** (புசசு கி.பி. நாலாம் நூற்றாண்டு) என்பான் நாடு முழுவதும் மருத்தகங்கள் நிறுவினான். நிறுவி, ஒவ்வொரு பத்துக் கிராமங்களுக்கும் பரிகாரிகள் இருக்க வேண்டுமென்றும் விதித்தான். இப்பழைய தொகுப்பினைப் **(கந்தகாய)** பற்றிய முதற் குறிப்பு சில மாவட்டங்களில் பெயரளவில் இன்றும் நிலவுகின்றது. இவ்வரசன் சங்கத மொழியில் **சாரார்த்த சங்கிரகம்** என்னும் ஓர் மருத்துவ நூலையும் இயற்றினன். அவன் செய்த வெட்டு வைத்தியங்களைப் பற்றிய—நம்ப முடியா ஆனால் நடைபெறமுடியாக்—கதைகள் பல பதிவில் உள்ளன. அவன் மகன் **உபதிசன், தோபாவாவியைக்** கட்டினன்.



அவனின் இரண்டாம் மகனான **மகாநாமனின்** (கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு) ஆட்சியில் புகழ் பெற்ற உரையாசிரியரான **புத்தகோசர்** இலங்கைக்கு வந்து பௌத்தமத நூல்கட்குச் சிங்களத்திலிருந்த உரைகளைப் பாளிமொழியில் திருப்பி எழுதினார்; **விசுத்திமார்க்கம்** என்னும் தத்துவ ஞான நூலையும் இயற்றினார். சமயக் கருத்துக்களை மீண்டும் அவர் எடுத்துரைத்த வண்ணத்தினால் பிற்காலத்தெழுந்த பௌத்தரை அவர் ஒப்பற்ற முறையில் ஊக்கினார். கி. பி. 428 இல் இவ்வரசனிடமிருந்து அனுப்பப்பட்ட ஒரு முடங்கல் சீன அரசவையில் கிடைக்கப்பெற்றது. இவ்வாறு நேர்ந்த காலவொற்றுமை, வழக்கமாக இவ்வரசாட்சி எக்காலத்தில் நேர்ந்தது என்று கூறப்படுமோ அதனினும் முந்திய ஒருகாலத்தில் நேர்ந்தது என எடுத்துக் காட்டுகின்றது.

மகாநாமனுடன் இலம்பகன்ன மரபு மறைந்து விடுகின்றது. பாண்டியர் படை எழுச்சி ஒன்று அனுராதபுரத்தில் அன்னியர் ஆட்சி ஒன்றை நிறுவியது. இது இருபத்தேழு ஆண்டு நிலைபெற்றது என்பர். இன்னும் கூடிய காலம் அது நிலைபெற்றிருக்கலாம். முக்கிய சிங்களர் உறுகுணைக்கு ஓடி ஒளித்தனர்; இங்கு அவர் **தாதுசேனனைத்** (தாசென்கெலி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுப் பிற்கடை) தம் தலைவனாய்க் கொண்டனர். இவன் மௌரிய அரசகுலத்தினனாவன். இவன் தமிழரை வெளியகற்றி நாட்டை ஒரு குடைக்கீழ் ஒற்றுமை ஆக்கினன். **கலாவாவி** என்னும் பெரிய குளத்தைக் கட்டியதே இவனின் முக்கிய பணியாகும். இவனின் உறவினரான பிக்கு **மகாநாமன்** என்பவனே **மகாவமிசத்தின்** ஆசிரியனாவான். இவனுக்கு மக்கள் இருந்தனர். **மொகலானா** என்பான் ஒருவன். குறைக்குல மனைவியால் பிறந்தவனான **காசபன்** என்பான் மற்றையவன். (காசியப, அல்லது கசுப், கி.பி. ஆறாம் நூற்றாண்டு) காசபன் கலகம் செய்து தன் தந்தையின் நிதியைக் கைப்பற்றலாம் என்ற எண்ணத்தில் தந்தையைச் சிறைப்படுத்தினன். தன் நோக்கத்தில் ஏமாறிய இவன் தந்தையை உயிருடன் புதைத்தான். பின்னர் மொகலானனைக் கொலை செய்யத் தவறியதால் சீகிரிய மலையில் ஒடி ஒழித்தான். மொகலானா இந்தியாவுக்கு ஓடினான். சீகிரிய மலையானது சூழ்ந்துள ஊர்களினின்றும் செங்குத்தாக எழுந்து உட்புகுவதறகரிய ஒரு கோட்டையாக விளங்குகின்றது. காசபன் மலையின் உச்சியில் தன்னுடைய அரண்மனையைக் கட்டினான். குன்றினைச் சுற்றி மேடைவரை செல்லும் ஒரு சரிந்த வழியையும் கட்டினான். இங்கு ஒரு பெரும் சிங்கமும் அமைக்கப்பட்டது. அதன் பாதங்களுக்கூடாகவே மலையின் உச்சிக்குச் செல்லல் வேண்டும். அதனாலேயே அக்குன்றிற்குச் **சீகிரியா** (சிங்கிரி) என்னும் பெயர் உண்டாயது. அக்கோட்டையில் இருந்து அரசன் பதினெட்டு ஆண்டுகள் ஆண்டனன். பின்னர் அவன் உடன்பிறந்தானால் தோற்கடிக்கப்பட்டான். எனவே அவன் தற்கொலை செய்தனன். சீன அரசவையில் அவனிடமிருந்து பெறப்பட்ட ஒரு முடங்கலினால் அண்ணளவாக அவனுடைய காலம் கி.பி. 527 என வரையறுக்கப்பட்டுள்ளது.

**மொகலான** பதினெட்டு ஆண்டுகளுக்கு அரசாண்டான். அவனை அவன் மகனான **குமார தாதுசேனன்** என்பான் பின்தொடர்ந்தாண்டான். இந்நாட்டு வரன் முறையால், குமாரதாதுசேனன் என்பான் **காளிதாசனோடு** ஒத்த காலத்தவன் என்றும் புலவன் இறந்தபொழுது அவன் ஈமத்தில் தானும் வீழ்ந்திறந்தானென்றும் அறியக்கிடக்கின்றது. இங்கு கூறப்பட்ட காளிதாசன் என்ற புலவன் புகழ்பெற்ற இந்தியப் புலவன் எனின் காலவொப்புப் பொருந்தாததொன்றாகும். ஏனெனில் இப்புலவன் ஐந்தாம் நூற்றாண்டு நடுப்பகுதிக்கு முன்னரே வாழ்ந்தான் என்க.



உருவம் 7.—சீகிரியாச் சுவரோவம்.

இவ்விடத்தில் இந்த ஊழியிலுள்ள முதல் ஐந்து நூற்றாண்டுகளிலும் இலங்கை எவ்வாறு இருந்ததென்பதை ஆராய்வது நன்று. அளவற்ற நீர்ப்பாய்ச்சல் வேலைகள் எம் கருத்தைக் கவர்வனவே. புதுப்பித்த நீர்ப்பாய்ச்சல் வேலைகளைப் புதிய வேலைகளாக நூலைப்படிப்போர் கருதிவிடல் ஆகாது. காலவேடு இந்த வேறுபாட்டினை எடுத்துக் காட்டுவதில்லை. இப்பருவத்தில் எல்லா நீர்ப்பாய்ச்சல் வேலைகளும் தொழிற்படு நிலையில் இருக்கவில்லை என்பதையும் நாம் கவனித்தல் வேண்டும். எனினும் ஒரே காலத்தில் உண்மையில் பயன்தரக்கூடியவையாய் இருந்தவை அளவற்றவையாயிருக்கலாம். அவற்றிற் பெரும்பான்மை சிற்றளவினவே.



மண்ணில் நீர் வற்றியதும் பல கைவிடப்பட்டிருக்கலாம். பின்னர் அவ்விடங்களில் புதியன அமைக்கப்பட்டிருக்கலாம். இலங்கையின் மக்கள் தொகை இப்பொழுது இருந்ததிலும் கூடியதாக இருந்ததெனக் கொள்வதற்குக் காரணம் இல்லை. நாட்டின் பெரும்பகுதி காடாயிருந்திருத்தல் வேண்டும் ; மக்கள் மிக நிரம்பிய பகுதிகள் தீவின் வடக்கு, தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளாய் இருந்திருத்தல் வேண்டும். பண்டைநாட்களில் இந்நாட்டினின்றும் நெல் அனுப்பப்பட்டதெனத் தமிழ் இலக்கியம் கூறுகின்றது. ஆனால் இத்துடன் நாட்டில் நடந்த பல பஞ்சங்களையும் இணைத்து நோக்கல் வேண்டும். இப்பஞ்சங்களைப் பற்றி காலவேடுகள் கூறுகின்றன. அனுராதபுரத்தைவிட நகர்கள் பல இருந்தனவெனின் இப்பொழுது நகரெனும் சொல்லின் கருத்துக்கியைந்த நகர்கள் பல இருக்கவில்லையென்றே சொல்லல் வேண்டும். தலைநகர் பெரும் பரப்பினைக் கொண்டிருந்தது ; ஆயினும் அது பல நந்தவனங்களையும் திறந்த வெளிகளையும் துறவகங்களையும் கொண்டிருந்தது. பிறநாட்டு வணிகர்க்கென ஒதுக்கிய ஒரு பகுதியையும் அது கொண்டிருந்தது. பிறநாட்டு வணிகர் கையிலேயே வணிகத்தின் பெரும்பகுதி இருந்தது. கி.பி. 500 வரையில் பாரசிகக் கிறித்துவக் குடியேற்றம் ஒன்று இருந்ததாக நாம் அறிகிறோம். இச்சமுதாயத்தினர்க்கு உரித்தாய நெற்ரோறியன் சிலுவை ஒன்று அனுராதபுரத்து அரும்பொருளகத்தில் இருப்பதை நாம் காணலாம் (உரு 6). உரோமப் பேரரசின் குடிமக்களான எகித்துவணிகர் நாட்டை வந்து பார்த்தனர். ஒரு காலத்தில் நாலாம் நூற்றாண்டுக்குரிய சிறிய உரோமச் செப்பு நாணயங்கள் நாட்டின் நாணயத்தின் ஒரு பெரும் பகுதியாக விளங்கின. ஒவ்வொரு சிறு துறைமுகத்திலும்தான் அவை ஏராளமாகக் காணப்படுகின்றனவல்ல. சீகிரியாவிலுமே அவை காணப்படுகின்றன. தீவின் முக்கிய துறைமுகம் வடமேற்கில் **மகாதித்த** அல்லது **மாந்தோட்டை** என்னும் இடத்தில் இருந்தது. கொழும்பு எவ்வாறு பதினாலாம் நூற்றாண்டில் ஒரு சுதந்திர இளவரசனின் கீழ் இருந்ததோ அவ்வாறு மாந்தோட்டையும் கி.பி. 500 வரையில் சுதந்திர அரசன் ஒருவனின் கீழ் இருந்தது.

மிகப்பழைய நெடுங்கணக்கு இந்நாட்டிற்குரிய ஒரு மாற்றத்தைக் கொண்டிருந்த **பிரம்மலிபி**யாகும். இப்பிரம்மலிபி அசோகன் கல்வெட்டுக்களில் காணப்படுவதே. இது செமிற்றிக்கு வரிவடிவில் இருந்து தோன்றியதாகும். இலங்கையின் மிகப்பழைய பதிவுகள் குகைகளிற் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை பிக்குமாரின் குழாத்திற்கு அளித்த கொடைகளைப் பற்றியவையே. சில பதிவுகளிலுள்ள கதைகள் செமிற்றிக்கு மொழியில் உள்ளவாறு வலப்பக்கத்தில் இருந்து இடப்பக்கத்திற்குப் படிக்க வேண்டியுள்ளனவாகும். பல நூற்றாண்டுக் கணக்காக நெடுங்கணக்கானது மெள்ள மெள்ளமாகப் பழம் மரபிலேயே வளர்ந்து வந்தது. ஆனால் சீகிரியாப்பருவத்தின் பின் எழுத்து மிகவும் இழிவுற்றதனால்

எழுத்துக்களைப் பிரித்தறிதல் இயலாததொன்றாயிற்று. இப்பொழுதுள்ள வரிவடிவத்திற்குரிய வளர்ச்சி எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டில் தொடங்கி யிருத்தல் கூடும்.

### 2 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பொதுச் சரித்திரத்திற்கு **தீப. மகா.** பார்க்க.

**எல்லாளன்.** சோழமன்னன் மனுவின் வரலாற்றிற்கு உற்சுவின் " சிங்க ளர் கால வரையறைக்கு உதவுவ " பார்க்க. வே. ஆ. ச. ச. 1913 ப. 530.

**துட்டகாமனி.** விசிதபுர பொலனறுவைக் கருகாமையிலுள்ளது என்னும் கொள்கையை பாக்கர் விரித்துள்ளார். **பண்டை இலங்கை,** ப—ள். 237, 238. இ. தொ. X. ப. 52 ஐயும் பார்க்க.


பதவியா அமைத்தது **சத்தநிசன்** எனக் கூறப்பட்டுள்ளது. **பூசா.** ப. 680. தம்பனைப் பொறிப்பிற்கு **எ. சி. i.** ப—ள், 141, 142 பார்க்க. ஆனல் தம் பனையை வட்டகாமனியோடிணைப்பது **பூசா.**

**வட்டகாமனி.** தமிழ்ப் படையெடுப்பாளர் பாண்டியர் எனக் கருதப்படு கின்றது. ஏனெனில் அவர்கள் பெயர் மாற என்று முடிவதாலும் பாண்டியர் பெயர் மாறன் என்று முடிந்து வழங்குவதாலும். அபய கிரியை இப்பொழுது சேதவனராமை என்று அழைக்கப்படும் தாகபை யோடு இணைத்தவர் திரு நெவில் ஆவர் (**இலங்கைத் தவணைத்தாள்கள்** 1914, ப. 486, குறிப்பு).

**இளநாகன்.** திசமாறாமையிலுள்ள பெரிய தாகபையைச் சுட்டும் கல் வெட்டிற்கு **ப. இ. பொ. 4** என்பதையும் **இ. தொ.** v. 139 ஐயும் பார்க்க.

**வசபன்.** அனுராதபுரத்தின் பருமன் **பூசா.** ப. 682 இல் கொடுக்கப் பட்டுள்ளது. மிகச் சிறியதாய் இருந்த " உள்நகர் " பற்றி இது ஒன்றும் குறிக்கவில்லை. திசவத்தமானகவை (**மகா.** xxxv. 84; xxxvii. 48) இரன்திசாக்குளத்துடன் **பூசா.** ப. 683 பொருத்துகின்றது; இதை இப்போதைய கௌடுலுவாவியுடன் மெதிரிகிரியப் பொறிப்பு (**எ. சி. ii** எண் 6) பொருத்துகின்றது. மெதிரிகிரியா கௌடுலுவாவியி லிருந்து மிகு தொலைவிலில்லை. எல்கேர (ஆலிசார. **மகா.** xxxv. 84) கால்வாய் மின்னேரி, கௌடுலுவேவா, ஆகியவை வழி கந்தளாயுட் பாய்கின்றது. **மகா.** xliv.ப. 90, 101, 102, li. 131 ஆகியவற்றில் உள்ள. மயெற்றி என்பது வசபன் ஆட்சியின் மயந்தி, அல்லது வசந்தி என்ப தொடு பொருந்துவதால் இருக்கலாம் (**மகா.** xxxv. 94). இது நாசதுவா குளம் அல்லது உடைந்த எருவாவியாய் இருக்கலாம்.





உருவம் 8.—குளத்திற்கு மேலாகத் தென்கிழக்கிலிருந்து பார்க்கும்பொழுது சீகிரியாவின் தோற்றம்.


**கசபாகு. பூசா.** வையும் அதன் வழிநூல் **இரா.** வையும் பார்க்க. பத்தினி வணக்கத்துடன் அரசன் கொண்ட தொடர்பிற்கு "**பண்டை இந்தியா**" எச். கிருட்டிணசாமி ஐயங்கார் பார்க்க, 1911. ப. 363. **வே. ஆ. ச. ச., இ. கி. xiii,** எண் 44, ப. 81; எண் 45, ப. 144 ஆகியவற்றையும் பார்த்தல் வேண்டும்.

வின்சென் சிமிதின் கூற்றின்படி சமுத்திரகுத்தனின் தென்னாட்டுப் படையெடுப்பு கி. பி. 350 வரையில் நடந்தது. ஆனால் யோவோ துபிறயிலின் "**தக்கணத்தின் பண்டை வரலாறு**" 1920, 340 அல்லது 335 ஐக் குறிப்பிடுகின்றது. இவ்வரசன் காலம் சிறீ மேகவண்ணனுடன் பொருந்துவதற்கும் சீனரின் **மகாவமிசத்தின்** காலம், **காசபனின்** காலம் ஆகியவற்றிற்கும் **வே. ஆ. ச. ச., இ. கி. xxiv.** எண் 68 பார்க்க. இவ்விரு அரசர்க்கும் கொடுக்கப்பட்ட காலம் திருத்தமானது எனின் பாண்டியராட்சிக்கு நீண்ட காலத்தை மேற்கொள்ளல் வேண்டும். ஆனால் "சீனர் மூலத்திலிருந்து இலங்கையின் புத்ததாசனின் காலம்". இ. ஆர். அயிட்டன் **வே. ஆ. ச. ச.** 1911, ப. 1142 பார்க்க. தோபாலேவாவை **உபதிசனுடன்** இணைப்பது **பூசா.** காளிதாசனின் இறப்பிற்கு "**இந்தியப் பேரரசுக் கசற்றீர்**" முகவுரை ப. 333 பார்க்க. பாரசிகர் குடியேற்றம் இருந்தமைக்கும் முக்கிய துறை நகரின் சுதந்திரத்திற்கும் கொதமசு இண்டிகோ புளூதசுவின் **கிறித்த நாட்டின் இடவிளக்கம்** சான்று கூறுகின்றது. அனுராதபுரத்தில் புறநாட்டார் குடியேற்றம் பற்றி **இலங்கைக் கேள்விகள், குறிப்புக்கள், 1913,** பகு. i. ப. viii., 1914, பகு. iv. ப. lxii பார்க்க. உள்ளுறையில் கூறப்படும் சிறுவை உண்ணகரில் காணப்பட்டது.

அதிகாரம் 3

# பதினோராம் நூற்றுண்டில் நடந்த சோழர் வெற்றி வரை உள்ள நடுக்கால அரசாட்சி

ஆறும், எழாம், எட்டாம் நூற்றுண்டுகளின் வரலாறு மிகவும் சுவையற்றதாகும். கொலையும் புரட்சியும் உள்நாட்டுச் சண்டையும் கவனிக்கத்தக்க முக்கியமான அலுவல்களாக இருக்கின்றன. ஆயினும், **முதலாம் அக்கபோதியின்** ஆட்சியில் (கி. பி. ஆறும் எழாம் நூற்றுண்டு) பன்னிரண்டு புலவர்கள் வாழ்ந்தார்களெனப் பின் வந்த காலவேடுகள் கூறுகின்றன. இந்த அரசன், சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் சேதவனாராமைப் பிக்குக்களினல் மீண்டும் கைக்கொண்ட, வைதுலியக் கொள்கையான மாறுபாட்டுச் சமயக் கொள்கையைப் பரவாமற் செய்தான்; குருந்து வாவியையும் இவன் கட்டினன்; இது **பதவியாவிற்கு** வடக்கே இருக்கும் **குருந்தநூர் மலைக்கு** அண்மையில் இருக்கலாம் போலும். இன்னும் மகாசேனன் மின்னேரியிலிருந்து கட்டிய கால்வாயைப் புதுப்பித்தான். இது **எலகெரா** கால்வாய் என்று அறியப்படும். அவனின் மறுமகனை **இரண்டாம் அக்கபோதி** கந்தளாய், கிரிதலை ஆகியவை உட்படப் **பதினொரு** ஏரிகளைக் கட்டினன். அவனுடைய காலத்தில் கலிங்கத்து அரசன் போரில் வெறுப்புக் கொண்டு இலங்கைக்கு வந்து பிக்கு ஆனன். அவன் சாளுக்கிய அரசன் **இரண்டாம் புலகேசியால்** (கி. பி. 609வ.–655) கி. பி. 609 ஆம் ஆண்டில் தனது நாட்டிலிருந்து விரட்டப்பட்டான் போலும்.



உருவம் 9.—அரங்கெலிக் குகைக் கோயில்.

எழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஆண்ட அரசன் **மானவம்மன்** முக்கியமானவன்; நீதி நெறிகளில் சிறந்தவன். எல்லாக் குலங்களுக்கும் ஊற்றானதும், அக்கபோதி இளவரசனும் அவன் மக்கள் பேரன்மார் தோன்றிய வழியானதுமான, ஒரு கலப்பற்ற குலத்திலிருந்து வந்த அவன் வழியிலிருந்து இலங்கையை ஆண்ட பதினறு அரசர்கள் தோன்றினர். அதன்றியும் அதே காலத்தில் நிகழ்ந்த இந்திய சரித்திர சம்பவங்களிலும் அவன் முக்கியமானவனுகின்றான். அவன் **இரண்டாம் காசபனின்** புதல்வன். **இரண்டாம் தாதோபதீசன்** அவனது குடும்பத்தைச் சீர் குலைத்ததும், அவன் மணஞ் செய்த சிறிது காலத்துள் இந்தியாவுக்குப் போய்ப் பல்லவ அரசன் முதலாம் நரசிம்மவர்மனை (கி. பி. 630-668) அடைந்தான். அப்

பல்லவன் " வல்லப அரசன் " என்னும் முன்னர் சொல்லப்பட்ட இரண்டாவது புலகேசியை வென்ற போரில் அவன் கலந்துகொண்டான். இந்தச் சம்பவம் கி. பி. 642 இல் நிகழ்ந்தது. மானவம்மன் இதன்பின் பல்லவ அரசனின் உதவியோடு இலங்கை இராச்சியத்தைத் தாதோபதீசனிடமிருந்து கைப்பற்றினான்; அனுராதபுரத்தைக் கைப்பற்றுவதில் வெற்றிபெற்ற போதிலும் அவன் மீண்டும் இந்தியாவுக்குப் போக வேண்டியதாயிற்று; அங்கே அவன் அடுத்த மூன்று ஆட்சிக்காலத்திலும் தங்கியிருந்தான். நரசிம்மவர்மன் தானே இலங்கையை வெற்றிகொண்டதாகக் கூறுகின்றான்; அவனுடைய பாட்டன் சிம்ம விட்டுணுவும் சிங்கள அரசனை வென்றதாகச் சொல்லப்படுகிறது (ஏறக்குறைய கி. பி. 575-600).

790 ஆம் ஆண்டில் தாபுலு செனின் ஆட்சிக் காலத்தில் செஞ்சந்தனக் கட்டையாலாய விட்டுணு உருவம் ஒன்று தெய்வந்துறை முனைக்குக் கடலால் கரை சேர்க்கப்பட்டதென்றும் அது பின்னர் கேகாலைப் பகுதியில் இருக்கும் அளுத்துநுவரவிற்கு எடுத்துச் செல்லப்பட்டதென்றும் பின்னர் கண்டியில் இருக்கும் மகாதேவாலயத்தில் வைக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இன்னுமொரு வரன்முறையின்படி, தெய்வந்துறை முனைக்கோவில் **நாலாம் அக்கபோதி**யால் கட்டப்பட்டதாகும் (ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி). இந்த ஆட்சிக் காலத்திற்றான் பொலனறுவை முதன் முதலாக அரசர்க்குரிய இருப்பிடமாகக் கூறப்படுகிறது.

முக்கியத்துவம் பெற்ற அடுத்த அரசன் **முதலாம் சேனன்** ஆவன். பின்வந்த காலவேடு ஒன்றின்படி அவன் புத்தருக்குப்பின் 1362 ஆம் ஆண்டில், அதாவது கி. பி. 819 அல்லது 820 ஆம் ஆண்டில் அரியாசனத்திற்கு வந்தான். பூசாவலியில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆட்சிக் காலங்களைப் **பெரிய பராக்கிரமபாகு**வின் காலத்திலிருந்து பின்னோக்கிக் கணித்துப் பார்த்தே இக்காலம் பெறப்பட்டது. இந்த அரசனின் காலத்தில் பாண்டியர் இலங்கைமீது படையெடுத்தனர். நாட்டிலுள்ள தமிழர் அவருடன் சேர்ந்தனர். அனுராதபுரமே சூறையாடப்பட்டது. பற் சின்னமும் கிண்ணமும் கவர்ந்து செல்லப்பட்டதாகப் பின் வந்த காலவேடுகள் கூறுகின்றன;



உருவம் 10.—நடுக்காலப் பொன் நாணயம்.

ஆனால் இதற்குச் சான்று இல்லை. பாண்டியருடன் சமாதானம் செய்ததும் சேனன் அனுராதபுரத்திற்குத் திரும்பினான்; ஆனால் பின்னர் அவன் அதைவிட்டுப் பொலனறுவைக்குப் போய், எல்லாமாக இருபது ஆண்டுகள் அரசாண்ட பின் அங்கேயே இறந்தான். காலஞ்சென்ற அரசனின் மறுமகனை **இரண்டாம் சேனன்** (ஒன்பதாம் நூற்றாண்டு) அவனுக்குப்பின்



ஆண்டான்; அவன் ஆண்ட ஒன்பதாம் வருடம் அவனது தளபதி பாண்டி நாட்டின் மீது படையெடுத்தான்; அப்போரில் தமிழ் அரசன், போரில் உண்டான காயங்களினால் மாண்டான். தளபதி மதுரையைக் கைப்பற்றி ஒரு போலி உரித்தாளனை அரசுகட்டிலில் அமர்த்தினான். தனக்குமுன் அரசாண்டவரின் காலத்தில் தோன்றிய பழமைக் கொள்கைக்கு மாறான கொள்கை உள்ள மதக் கட்சிகளைச் சேனன் அடக்கினான். அந்த மதக் கட்சிகளைத் தழுவுவோரை வராமல் தடுப்பதற்குக் கரையைச் சுற்றிக் காவல் வைத்தான். அவன் **முதலாம் உதயன்** என்னும் தன் தம்பிக்கு அரசை அளித்துத் தனது முப்பத்தைந்தாம் ஆண்டில் இறந்தான். உதயனின் பின் **நாலாம் காசபன்** அரசாண்டான்.

இருமுறை முடிசூடிய **சங்கை** அரசிக்குப் பிறந்தவனாகிய **ஐந்தாம் காசபன்** (ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டு) **இரண்டாம் சேனனின்** மகனாவன். பிறந்த உடனேயே அவன் இளவரசனாக்கப்பட்டான். அவன் கல்வியறிவுள்ளவன். அவன் **தம்மபதத்திற்குச்** சிங்களத்தில் எழுதிய பொழிப்புரை இன்றும் வழங்கப்படுகிறது. அவன் காலத்தில் பாண்டிய அரசனான **இராசசிங்கன்** புத்தியீனமாகச் சோழரைப் போருக்கிழுத்து நிலைகுலைந்து போனமையால் காசபனின் உதவியை நாடினான். ஆகவே சிங்கள மன்னன் ஒரு படையை அனுப்பினான். ஆனால் பாண்டிய அரசன் போரில் மாண்டு போக அப்படை தோல்வியுடன் இலங்கை திரும்பியது. அவனுக்குப் பின் ஆண்ட **நாலாம் தப்புலன்** ஒரு சில மாதங்களுக்கே அரசாண்டான். **ஐந்தாம் தப்புலன்** (பத்தாம் நூற்றாண்டின் தொடக்கம்) சிம்மாசனத்திற்கு வரவே பாண்டிய நாட்டின் புது மன்னன் சோழரிடமிருந்து தப்பி இலங்கைக்கு வந்து சேர்ந்தான். சிங்கள மன்னன் அவனுக்கு உதவிபுரிய ஆயத்தம் செய்யும்போது திடீரெனத் தீவிலுள்ள சிற்றரசர்களிடையே கலகம் எழுந்தது. ஆகவே பாண்டியன் தனது முடியையும் அரச அணிகலன்களையும் இலங்கை அரசனிடம் விட்டுவிட்டு ஏமாற்றத்துடன் மலையாளத்திற்குப் போக வேண்டியதாயிற்று. பாண்டியருக்கும் சோழருக்குமிடையில் நடந்த யுத்தம் **ஐந்தாம் காசபனின்** ஆட்சியின் இறுதியிலும் ஐந்தாம் தப்புலனின் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்திலும் நடந்திருக்கக்கூடும். இராசசிங்கனதும் இலங்கை அரசனதும் படையெடுப்பைப் பற்றிச் சோழ அரசன் **முதலாம் பராந்தகனது** (கி. பி. 907-953) ஆட்சியின் பன்னிரண்டாம் வருடத்தில் (அல்லது கி. பி. 918/9 இல்) எழுதப்பட்ட குறிப்பில் கூறப்படுகின்றது. இங்குதான் அந்தப் பெரும் சோழப் பேரரசு எழுவதைக் காண்கிறோம். அது இலங்கை அரசை முதல் மங்கச் செய்து ஈற்றில் அடிமை கொண்டது.

**இரண்டாம் உதயனுக்கும் மூன்றாம் சேனனுக்கும்** பின்னர் சிங்கள அரசுகட்டிலில் **மூன்றாம் உதயன்** அமர்ந்தான். அவன் ஒரு கட்குடியனும் சோம்பேறியாயுமிருந்தான். பராந்தகன் இவனுடைய இந்தக் குணத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஐந்தாம் தப்புலனின் காலத்தில்

இலங்கையில் விடப்பட்டிருந்த பாண்டியனின் அரசணிகளைத் தரும்படி தூது அனுப்பினான். அவன் வேண்டுகோள் மறுக்கப்பட்டமையால் அவன் இலங்கைத் தீவின்மேல் படையெடுத்தான். உதயன், போருக்குக் காரணமாயிருந்த அணிகளுடன் உறுகுணைக்கு ஓடினான். பகைவர் அங்கு போக முடியாமற் போகவே தீவை மிகுந்த பயத்துடன் விட்டகன்று தங்கள் சொந்த நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தனர். உதயன் பழிவாங்குமுகமாகச் சோழப் பேரரசின் எல்லைகளை அழித்தான். பராந்தகனுடைய அதிகாரம் இராட்டிரகூட மன்னன் **மூன்றாம் கிருட்டினனால்** சுமார் கி. பி. 942/3 ஆம் ஆண்டில் அடக்கப்பட்டமைதான் சோழர் பின்வாங்கியதற்கும் சிங்களவர் திருப்பித் தாக்கியதற்கும் காரணமாயிருக்கலாம். உதயன் தனது ஆட்சியின் எட்டாவது ஆண்டில் சோழரால் எரிக்கப்பட்ட ஒரு மாளிகையை மீண்டும் கட்டுவிக்கும்போது இறந்தான்.

உதயனுக்கு இரண்டாவதாக ஆண்ட அரசன் அவனுடைய மருமகனான **நாலாம் மகிந்தன்** ஆவன் (பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதி). அவன் பழைய வழக்கத்திற்கு மாறாகக் கலிங்கத்து அரச குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளவரசியை மணந்து பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒரு புதிய குலத்தை இலங்கையில் தோற்றுவித்தான். அவனது ஒன்பதாம் ஆண்டிற்கு முன் "வல்லப அரசன்"—இவன் சோழ அரசன் இரண்டாவது பராந்தகனாயிருக்கலாம்—இலங்கையைத் தாக்கினான். அவன் தளபதி கி. பி. 959 இல் இலங்கையில் கொல்லப்பட்டனன். பகைவரின் படைகள் ஊருதோட்டவில் (ஊர்காவற்றுறை) இறங்கின. இதுதான் பல காலங்களுக்குச் சிங்களவரின் கடைசி வெற்றியாக இருந்தது. ஏனெனில் மகிந்தனுடைய மகன் **ஐந்தாம் சேனன்** மடைத்தனமாகத் தன் தளபதியின் சகோதரனைக் கொலை செய்தமையால் கோபங்கொண்ட அத்தலைவன் பழிவாங்குமாறு இலங்கையிலிருந்த தமிழரை ஒன்று சேர்த்து நாட்டையே அவர் வசமாக்கினான் என்க. இது அவனது ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் நிகழ்ந்தது. தமிழர் மக்களை எவ்வளவோ துன்புறுத்தியதனால் சேனன் தன் தளபதியுடன் சமாதானம் செய்துகொண்டு பொலனறுவைக்கு மீண்டான். ஆயினும் அவன் இங்கு ஓர் அறிவிழந்த புலிக்கு அடிமையானவாறு கடும் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி இளம் வயதிலேயே தனது ஆட்சியின் பத்தாவது ஆண்டில் இறந்தான். அவனுக்குப் பின் அவன் தம்பி **ஐந்தாம் மகிந்தன் (உதயன்)** (பத்தாம் பதினோராம் நூற்றாண்டு) அரசாண்டான்.


புது அரசன் அனுராதபுரியில் அரசாண்டான் எனினும் காலஞ்சென்ற தன் தமையனுடைய தளபதி புகுத்திய அன்னியரால் பட்டினம் நிரம்பப் பெற்றதாய் இருந்தமையால் இடருடனேயே ஆட்சி செலுத்தினான். அவனது பன்னிரண்டாவது ஆட்சி ஆண்டில் அரசாங்கத்தின் வருமானம் மலையாளக்கூலிப்பட்டாளத்தினர்க்குச் சம்பளம் கொடுக்கப் போதாதுபோகவே அவர்கள் கலகஞ் செய்தனர். ஆகவே மகிந்தன், நாட்டை மலையாளத்தவர், சிங்களவர், கன்னட மக்கள் ஆகியோருக்கு விட்டுவிட்டு உறுகுணைக்கு ஓடித் தப்பினான். இந்த அரிய தருணத்தைக் கைவிடக்கூடாதென்று கி. பி. 1001/2 இற்கும் கி. பி. 1004/5 இற்குமிடையில், பெரும் சோழப் பேரரசனான **முதலாம் இராசராசன்** (கி. பி. 985-1012) தொலைவில் சிங்களவர் ஆட்சியில் இருந்த சில பகுதிகளைத் தவிர முழு நாட்டையும் கைப்பற்றினான். கி. பி. 1017 ஆம் ஆண்டில் ஐந்தாம் மகிந்தனை அவனுடைய அரசணிகளுடனும் இராசசிங்கனால் விடப்பட்டிருந்த பாண்டிய அரசணிகளுடனும் கைப்பற்றியதுடன் படையெடுப்பு முற்றிற்று. இலங்கை, சோழ சக்கராதிபத்தியத்தின் ஒரு மாநிலம் ஆயிற்று. பொலனறுவை **சனநாதபுரமாக** மாறியது. இந்தக் காலத்திலே நகரிலுள்ள பல இந்துத் தலங்கள் நிறுவப்பட்டன. ஐந்தாம் மகிந்தன் இந்தியாவில் சிறையில் மாண்டான்.



ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் எழுந்த பல பொறிப்புக்கள் அவற்றைச் சிறப்புறச் செய்கின்றன. இவற்றுள், பின்வந்தவற்றுள் கட்டுரை எழுதும் அழகு சிறிது உண்டு. ஆயினும் பொதுவாக இவற்றில் சரித்திரச் சான்று சிறிதே உள்ளது. இவ்விடயத்தில் தென்னிந்தியாவில் உள்ளவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை பயனிலவாயே இருக்கின்றன. ஒன்பதாம் நூற்றாண்டிலும் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் எழுத்துவடிவங்கள் தற்காலத்து எழுத்துக்களின் வடிவை நோக்கி விரைவாக மாறுவதைக் கவனிக்கலாம். அபராதப் பணம் தங்கக் கட்டிகளாகவே கொடுக்கப்பட்டன. பணம் குறைவாகவே இருந்தது. ஆனால் இந்தக் காலத்தில் தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டது கவனிக்கத்தக்கது. ஆயினும், இவற்றிற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகம் வெகு விரைவில் தரம் குறைந்து போயிற்று. கிராமங்களில் வைத்திய நிலையங்கள் இருந்தன. பொதுவாக ஒருவர் மனத்தில் அக்காலத்தைப் பற்றி உண்டாகும் அபிப்பிராயம் உயர்வானதுதான். **முதலாம் பராக்கிரமபாகு**வினுடைய, பேரளவில் வளம் மிக்க அரசாட்சியிலும் இது உறுதியுடையதென்று ஒருவாறு சொல்லலாம். தென்னிந்தியாவில் இருந்தவாறு, இங்கும் அரியணையமர்ந்த அரசர்கள் மாறி மாறி இரண்டு பெயர்களை வைத்துக்கொண்டனர். உதாரணமாக, **சிறீ சங்கபோ**வையும் **அபாசலமேவ**னையும் (அபய சிலா மேகவர்ண) கூறலாம். இவ்வழக்கம் ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் இருந்ததாகத் தெரிகிறது.

## பாலனம்

காலத்தைப் பற்றியுள்ள குறிப்புக்கள், முக்கியமாகக் கோயில்களைப் பற்றியவை ஆகையால் இராச்சியத்தின் சட்ட அமைப்பைப் பற்றி நமக்கு அதிகம் அறிவதற்கில்லை. கண்டி இராச்சியத்தின் இறுதிக்காலத்தில் இருந்த ஆலோசனை அவை போன்ற ஒன்று சந்தேகமின்றி அக்காலத்தில் இருந்ததுண்டு; ஆனால், அதன் கடமைகளைப் பற்றிய விபரம் நாமே





நாட்டுப்படம் III.



ஊகித்து அறியவேண்டியதே. பரம்பரையாக வந்த வழக்கத்திற்குத்தான் முழு அதிகாரமுமிருந்தது என்பதில் சந்தேகமில்லை. பட்டத்திற்கு உரியவன் தகப்பனுக்குப் பின் மகனல்லன் ; தமையனுக்குப் பின் தம்பி ஆவன், அதன் பின் மூத்த தமையனின் பிள்ளைகளுக்கும் அவன் தம்பிமாருக்கும் உரிமையுண்டு. அரசனுக்கு அடுத்தாற்போல் இருந்த **யுவராசன்** (அல்லது **மாபா** அல்லது **மகாயா**) வழக்கமாகத் "தென்னுட்டை" தனது இராச்சியமாகக் கொண்டு ஆட்சி செலுத்தினன். உறுகுணை "ஏபா" வினுல் ஆளப்பட்டது. இந்தப் பட்டத்தை அரச குடும்பத்தில் பலர் தரித்துக் கொள்வர். "தென்னுடும்" உறுகுணையும் பெரும்பான்மையும் தன்னுட்சிப் பகுதிகளாயிருந்தன. **செனிவிரத்து** என்னும் அரச குடும்பத்தைச் சேர்ந்த சேனுதிபதியைப் பற்றியும் "தண்டநாயக" என்னும் படைத்தலைவர்களைப் பற்றியும் நாம் அறிகிறோம். படையில் அன்னியர்கள், பெரும்பாலும் தமிழர்கள் இருந்தனர். அனுராதபுரம், "நுவர-லத்தா" என்னும் தலைவனின் பொறுப்பில் இருந்தது. கிராமத்திலுள்ள வெவ்வேறு சமூகத்தினரும், தென்னிந்தியாவில் இருந்தவாறு, மிகுந்த சுதந்திரம் பெற்று இருந்தனர் என்பதற்கு ஐயமில்லை. வருடந்தோறும் சுற்றுப் பயணம் செய்து வரும் ஓர் உத்தியோகத்தன் ஓர் அளவுக்கு ஆங்கில நாட்டு நீதிமன்றங்கள் போல நீதி வழங்கியும் அரசனின் வரிகளைச் சேர்த்தும் அரச கட்டளையைச் செலுத்தி வந்தான். இது வெகுகாலங் கழித்துப் பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதியிலேயே நடைபெற்றது.

அக்காலத்தின் ஒரு பெரும் பண்பு பெரும்பகுதியான கோயிற் சொத்துக்களே. கோயில் ஆட்சியைப் பொதுமக்களான சில தலைவர்கள் மூலமாயும் ஒரு தொகை உத்தியோகத்தர் மூலமாயும் சமய குருமார் கவனித்தனர். கிராமங்களிலுள்ளோருக்கு நியாயமான பாதுகாப்புச் சட்டங்கள் இருந்தன. இவற்றின்படி ஓர் அரசாங்க உத்தியோகத்தனும் தொழிலாளிகளேயோ மாட்டுவண்டிகளேயோ தொண்டாற்றுமாறு வற்புறுத்தல் முடியாது. மரங்கள் வெட்டவோ அங்கு அடைக்கலம் புகுந்த குற்றவாளிகளைப் பிடிக்கவோ முடியாது. கொலையாளிகளுக்கு வெவ்வேறு விதமான சட்டங்கள் இருந்தன. சில சமயங்களில் அவர்கள் கிராமத்தின் எல்லைக்கு வெளியே துரத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். வேறு சில வேளைகளில் அவர்கள் விசாரணை செய்து நாடு கடத்தப்பட்டனர். ஒருகால், பொது உத்தியோகத்தர்கள் கிராமத்துள் புகுந்து குற்றவாளியைச் சரணடையக் கேட்குமளவிற்கே சட்டம் இடமளித்தது. இரண்டாண்டுகள் முடியும்தோறும் சுற்றுப் பயணம் செய்யும் அரசாங்க உத்தியோகத்தர் "ஐந்து பெரும் பாவங்கள்" செய்தோரை மட்டுமே சிறையாக்கச் சட்டம் இருந்தது. ஆனுல் மற்றவர்களைச் சிறைசெய்ய இவர்கட்கு உரிமையில்லை. சிறிய குற்றங்களைச் செய்த குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பான ஒதுக்கிடங் கிடைத்ததுபோல் தோன்றுகிறது. வற்புறுத்திச் சேவை செய்விப்பது பற்றியும் காய்க்கும் மரங்களை ஒரிடத்துக் குறிப்பிட்டிருந்ததுபோல் பனை, தென்னை ஆகியவற்றைத்

தறிப்பது பற்றியுமுள்ள, மேலே குறிப்பிட்ட, தனியுரிமைகளைக் கொண்டு கோயில் நிலங்களைத் தவிர்ந்த மற்றை நிலங்களிலிருந்த நிலைமையை நாம் நன்கு விளங்கிக் கொள்ளலாம்.



உருவம் 11.—திங்கட்கல் "மணிமாளிகை" வெளிவட்ட வீதி, அனுராதபுரம்.

ஆனல், கோயில் கிராமங்களிலோ சட்டம் மீறிய செயல்களைக் கட்டுப் படுத்தக் கடும் விதிகள் இருந்தன. கொலை விடயத்தில் விதிப்படி விசாரணை செய்து, சாட்சிகளைப் பதிவு செய்து கொலையாளியைக் கொல்லல் வேண்டும். களவு விடயத்தில் களவுபோன பொருட்களை உரிமையாளனிடம் சேர்ப்பித் துக் கள்வரைத் தூக்கிலிட வேண்டும். அந்தக் கிராமம் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து நாற்பத்தைந்து நாட்களுள் அவர்களுக்குத் தண்டனை விதிக்கத் தவறினல் 125 "களஞ்சு" தங்கம்—அதாவது $1\frac{1}{2}$ திரோய் இருத்தல் தங்கப் பவுண்—அபராதம் கொடுத்தல் வேண்டும். இது அக் காலத்தில் பெருந் தொகையே. கொலை சம்பந்தப்படாத பெரும் சண்டை களிலும் கிராமம் குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டனை விதிக்கத் தவறினல் 50 "களஞ்சு" அபராதம் கொடுத்தல் வேண்டும். காளை யாடு களைக் கொல்லுவதற்குத் தண்டனை மரணம். பசு நிரைத் திருடருக்கு அக்குளின் கீழ் குறி சுடப்பட்டது. உரிமையை நிறுவிப் பாதுகாப்பும் ஏற்படுத்தினல்தான் பசு நிரைகளைக் கிராமத்திற்குக் கொண்டுவர முடியும். அதே சமயத்தில் குறிகளை அழித்தவன் பழுக்கக் காய்ந்த மிதியடிகளில் கட்டாயமாக நிறுத்தப்படுவான். உரிமை நிறுவலும் பாதுகாப்பும் வெளியே இருந்துவரும் கிராமத்தாரைப் பொறுத்த வரையில் மிகவும் வற்புறுத்தப்பட்டன. இவ்வலுவல்களில் கிராமம் தவறிழைத்தால் ஆண்டுதோறும் சுற்றுப்பிரயாணம் செய்யும் அரசாங்க உத்தியோகத்தர் அதைக் கவனித்து ஆவன செய்வர்.



இனி நாம் ஒன்பதாம் பத்தாம் நூற்றுண்டுகளில் காணிநில ஆட்சி முறைகளை ஆராய்வோம். கல்வெட்டுக்களிலுள்ள கலைச் சொற்கள், அவை களோடு ஒப்பிடக்கூடிய சொற்கள் தென்னிந்தியாவில், முக்கியமாய் மலையா ளத்தில் இடைக்காவிட்டால் விளக்கமற்றவையாகவே இருந்திருக்கும். முழுப் பொருளும் "இ. வா. ப. நி." இல் ஆராயப்பட்டிருக்கிறது. இந்திய முறை யில் பரம்பரை வழக்கப்படி இரண்டே இரண்டு கட்சிகள்தான் சம்பந்தப் பட்டவையாயிருந்தன. இக்கட்சிகளாவன அரசனும் குடியும். ஒரு குடியான வன் ஒரு நிலத்தை வைத்திருந்தானுகில் அரசனிடமிருந்து அவன் பெறக் கூடிய பாதுகாப்புக்குப் பதிலாகத் தனது வருமானத்தில் ஒரு பகுதியை அவனுக்குக் கொடுத்தல்வேண்டும்[1]. இத்துடன் கிராமத்தார் பொதுவாக அரசனுடைய சேவைக்குப் பதிலாக ஓர் அளவிற்குச் சம்பளமில்லாத் தொண்டு (ஊழியம்) செய்து வந்தனர். மேலும், குறிப்பிட்ட சில கிராமங்களிலிருந்தோ நிலங்களிலிருந்தோ கிடைக்கும் வருமானத்தைக் கோயில்களுக்கோ தரும தாபனங்களுக்கோ தனி ஒருவனுக்கோ கொடை யாகக் கொடுப்பதுமுண்டு. பெரும்பாலும் இப்படியான கொடைகள் நெடுங் காலம் நிலைத்திருக்குமெனக் கருதப்படும் மொழிகளிற் கூறப்பட்டிருப்பினும் நடைமுறையில் அவ்வப்போது அரசாளுபவனுடைய விருப்பப்படி எந்த வேளையிலும் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும். இந்நாட்டு மன்னர் ஆட்சியில் பழைய கொடைகளை மீட்டு எடுத்துக்கொள்வதும் புதுக் கொடைகளை அளிப்பதும் இடைவிடாது நடைபெற்று வந்தன.[2]

பத்தாம் நூற்றுண்டிலுள்ள முறைமை நாட்டின் பெரும்பகுதியிலிருந்த முறைமையிலிருந்தும் எவ்விதத்திலும் வேறுபட்டிருந்ததாகத் தோன்ற வில்லை. மிகிந்தலையில் தலைமைக்கார், கிராமத்துக் கம்மியர்கள், சிறப்புச் சேவையாளர் ஆகியவர்களிலிருந்து வேருன ஒரு நிலவாட்சியாளர் குழு (குடின்) தங்கள் பயிரில் ஒரு பகுதியைக் கோயிலுக்குக் கொடுத்ததாகத் தெரிகிறது. அண்மையில் இந்தியாவில் கொள்கையளவில் மட்டும் இருந்தது போல், இந்நிலவாட்சியாளர் சுயேச்சையில் குத்தகைக்கு நிலங்களை வைத் திருந்தனர். மிகிந்தலைக் கல்வெட்டுக்கள் "பயிரிடுவோர் பரம்பரையில்" ஆட்சிபண்ணி வந்த பயிரிடுவோரை வயல்களினின்றும் விலக்குவதைத் தடைசெய்கின்றன. இவ்வாருகவே குத்தகைக்காரரிடையில் நிலங்களுக்குப் பரம்பரை உரிமை பாராட்டுதல் தொடங்கியது எனலாம். பிரபுக்களின் கவனத்தில் படாத கமக்காரரிடத்தில்தான் பரம்பரை உரிமைகளில் தலையிடாக் கொள்கை முதலில் ஆரம்பமாகிறது. இது நாம் எதிர்பார்க்கக் கூடியதே. இந்தச் செயல் படிப்படியாகவே நடந்தது. இடச்சுக்காரர் காலத்தின் கடைப் பகுதியிலும் சேவைக்காகக் கொடுக்கப்பட்டிருந்த நிலங் களில் முக்கியமானவை பரம்பரைச் சொத்தாகவில்லை. ஆனல் கிராமத்துச்

[1]அருபர் இறந்த காலத்து இந்தியா டபிளியு. எச். மோஸ்ரு, 1920 ப. 96.

[2]பன்னுடுகளிலுமுள்ள காணியாட்சிமுறை கொபுடென் கிளப்பு, 1870 ப. 148.

சேவகர்கள் நிலங்கள் பரம்பரைப் பொருட்களாயின. சேவை செய்தார் வகையிலேயே அவ்வாறு நடந்தது. பத்தாம் நூற்றுண்டில் பிரபுவின் உத்தியோகத்தருக்கும் கிராமத் தலைவருக்கும் (கெமியன்) சேவைக்குப் பதிலாகப் "பிழைப்பு" நிலங்கள் கொடுக்கப்பட்டன. அவ்வாறே கோயில் தொண்டு செய்வோருக்கும் கிராமத்துச் சேவகருக்கும் கொடுக்கப்பட்டது. இத்தகைய ஒரு கிராமத்தில் ஒரு கொற்றன் சாதாரணமாய்ப் பெறுவது ஒன்றரை கிரியை (சுமார் 25 ஏக்கர்) நெல்வயலும் குடியிருப்பதற்கு ஒரு தோட்டமும் மேட்டு நிலத்தில் ஒரு சிறு பகுதியுமாகும். "கெபெலி" (பகுதிகள்) என்னும் பெயரை அடிக்கடி கேள்விப்படுகிறோம். கிராமத்தை அல்லது பிரபுவின் நிலத்தைப் பிரிப்பதனுல் உண்டாகும் பகுதிகளுக்கு இப்பெயர் உரியதாகும். கோயில்களை இப்படிப் பிரிப்பதைக் கொடைகளிலுள்ள கட்டுமைகள் அனுமதிப்பதில்லை.

இந்த நில உரிமை நிபந்தனைகளை விட நாம் "பாட்ட" அல்லது "கம்பாட்ட" என்பதையும் காண்கிறோம். இதைப் பற்றி விவரங்கள் இல்லை ; ஆனுல் நிலத்தை உடையவர்களே, கல்வெட்டுக்களில் கூறப்படும் "கம்–லத்தன்" என்பவராய் இருந்தால், அவர்கள் உயர்ந்த நிலைமையிலேயே இருந்தனர் என்பது தோன்றும். இது மலையாளத்தில் உள்ள "கான-பாட்டம்" என்ற சொல்லை ஒத்திருப்பதைக் கொண்டு, இத்தகைக் குத்தகைக்காரர் தாம் பெற்ற நிலத்திற்கு வரி கட்டினுர்கள் என்றுலும் பல வருடங்களுக்கு அந்நிலத்தைச் சொந்தமாய் வைத்திருந்தார்கள் என்றும் குத்தகையைப் புதுப்பிக்கவும் அவர்களால் முடிந்தது என்றும் நாம் முடிவு செய்யலாம்.

உயர்ந்த வகையான காணி உரிமை நிபந்தனைகள் **பமுனு** (பெற்றுக் கொள்வது), **உகசு** (ஈடு) என்பனவே. பமுனு அரசனுலும் தனது ஆட்சிக்குட்பட்ட இடத்திலென்றுல் யுவராசனுலும் முத்திரை இடப்பட்டுக் கொடுக்கப்படும். இதில் கோயிலுக்கும் அற நிலையங்கட்கும் முக்கியமான தலைவர்களுக்கும் உரிய கொடைகள் அடங்கின. தலைவர்களைப் பொறுத்த வரையில், பெரும்பாலும், ஒரு சிறு வாடகை பல்லுச் சின்னக் கோயிலுக்கோ வேறு யாதாயினும் ஒரு கோயிலுக்கோ எண்ணெய் கொடுப்பதன் மூலம் வழங்கல் வேண்டும். அக்காலத்தில் "பமுனு" என்ற நிபந்தனைப்படி நிலம் பெற்றேர் அதற்கு உரியவராகவும் கருதப்பட்டனர். இந்திய வழக்கில், கொடுக்கப்படும் நிலம் பிறருக்கு மாற்றத்தக்கதோ அல்லது பரம்பரைச் சொத்தோ அல்லது இரண்டு பண்புமுடையதோ என்பது கொடைகளுக்குரிய நிபந்தனையிலுள்ள சொல் நடையில் தங்கியிருக்கும். **உகசு** என்பதை மலையாளத்தில் உள்ள **ஒற்றியுடன்** ஒப்பிடலாம். முழுமையும் விற்றல் அவமதிப்புக்கிடமாகும். அதனுலேயே ஈடு வைக்கும் முறை வந்தது. இதன்படி பணம் கொடுப்பவன் காணியைப் பயன்படுத்துகிறுன். ஆனுல் கடனைத் திருப்பிக் கொடுத்துக் காணியை மீட்டுக்கொள்ள உரிமை பழைய உரிமையாளனுக்கு என்றும் உள்ளது. கோயில் கிராமங்களையும் அவற்றைப்போன்ற



பிறருக்குரிமையாகிய கிராமங்களையும் தவிர திருவாங்கூரில் இன்றும் அரசாங்கமே ஈடு கொண்டவர்போல் உரிமை கொண்டாடும் காணிகள் இருக்கின்றன. இவ்வழக்கம் தமிழ்ப் பகுதிகள் சிலவற்றில் இருந்ததே தவிர சிங்கள நாட்டிலிருந்து மறைந்துவிட்டது. கோயில் கிராமங்களைத் தவிர்ந்த மற்றை நிலங்களின் உரிமை நிபந்தனைகளைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. ஆனுல் முக்கிய பண்புகளில் ஒரு வித்தியாசமும் இல்லை. சமய குருமார் தாங்கிய தலைமை இடத்தை அரசனே சாதாரண மக்களோ எடுத்தனர் ; அவ்வளவே வித்தியாசம்.

இவ்விடத்தில் காணி ஆட்சி பற்றிய ஆய்வினை முடிப்பது நல்லது. பன்னிரண்டாம் நூற்றுண்டில் மேட்டு நிலம், சதுப்பான நிலம் இரண்டிற்குமே வரி போடப்பட்டது. நெல் வயல்களுக்குப் போடப்பட்ட வரிக்குச் சிங்களத்தில் **கெத்வத்–அய**, "வயல் வரி" அல்லது "அய வரி" என்று சொல்லப்பட்டது. நிசங்கமல்லன் தனக்கு முன் அரசாண்டவர்களின் மிதமிஞ்சிய வேண்டுகோள்களைக் குறைத்துத் திறமான நெல் வயல்களில் ஓர் அமுனம் விதைக்கும் நிலத்துக்கு $1\frac{3}{4}$ அமுனம் வீதமும் நடுத்தரமான வயலில் $1\frac{1}{2}$ அமுனம் வீதமும் மிகக் கழிவான வயலில் $1\frac{1}{4}$ அமுனம் வீதமும் ஆக வரிகளைத் தான் குறைத்ததாகக் கூறுகிறுன். இத்துடன் ஒவ்வொன்றுக்கும் பணமாகக் கொடுக்கப்பட்ட தொகையும் முறையே 6 "அக" காசுகள், 4 "அக" காசுகள், 3 "அக" காசுகள் என விதிக்கப்பட்டது. இந்து சமயச் சட்ட நூல்கள், $\frac{1}{6}$ அல்லது $\frac{1}{12}$ ஆக வரிபோடுவது தான் நியாயம் என்றும் ஏதாவது அவசரமான நிலைமையில் தான் $\frac{1}{4}$ வரி அனுமதிக்கப்படலாம் என்றும் கூறுகின்றன. பெரிய ஏரிகளினின்று நீர் பாய்ச்சப்படுகிற வயல்களைத் தவிர்ந்த மற்றைத் திறமான நெல் வயல்களின் சராசரி வருமானம் பதினைந்து மடங்கு என்று வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்தால் நிசங்கனிற்கு அவ்வயலில் கிடைத்த வரி நூற்றுக்கு 11 சதவீதம் என அறிவோம். காட்டை எரித்துப் பயிரிடப்பட்ட நிலமாகிய "சேனை" க்கு வரியை நீக்கிய பெருமை இவ்வரசனுக்கே உரியது. இக்கருத்து கல்வெட்டுக்களைப் பிழையாகப் பொருள் கொண்டதாலாயது. பதினேழாம் நூற்றுண்டில் சேனைக் காணிக்கு உரிய வரி போடப்பட்டது. நிசங்கன் கொடுத்த இந்தப் பேறு, நெல் வயல்களுக்காகத் திருத்தப்பட்ட காடுகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டது. இவ்வாறு காடழித்து வயலாக்குதற்கு இசைவு தேவையாயிருந்தது (**இ. வா. ப. நி.**, ப. 43).

கோயில்களுக்குக் கொடுக்கப்படும் மற்றை இயங்கத்தக்க பொருள்களுடன் ஆண், பெண் அடிமைகளைக் கோயில்களுக்குக் கொடையாகக் கொடுப்பதையும் வரலாறு கூறுகின்றது. பதினைந்தாம் நூற்றுண்டில் பெப்பிலியானை விகாரைக்கு அளிக்கப்பட்ட ஒரு காணியோடு சம்பந்தப்பட்ட பத்திரங்கள் இந்த அடிமைகளுட் பலர் சிற்பிகளாயும் கொல்லர்களாயும் குயவர்களாயும் சுண்ணும்பு நீற்றுவோராயும் இன்னும் இவர் போன்றவராயும்

இருந்தனர் என்று கூறுகின்றன. மேலே குறிப்பிட்ட பத்தாம் நூற்றாண்டு அடிமைகளும் இத்தகைத் தொழில்களைச் செய்தவராய் இருக்கக் கூடுமென்பதற்கு ஐயமில்லை. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசனின் கிராமங்களில் வாடகைக்குக் குடியிருந்த மக்கள் உண்மையில் அடிமைகளாயிருந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இது மறந்து போன ஓர் அலுவலாயினும் அரசனுடைய கிராமங்களிலும் கோயிற் கிராமங்களிலும் குடியிருப்போருக்கு இன்று உள்ள மதிப்புக் குறைவிலிருந்து இதை நாம் ஊகிக்கலாம்.

போத்துக்கேயரின் ஆட்சி தொடங்கியதும் சிங்களவரின் காணி முறைகள் விவரமாய் அறியக் கிடக்கின்றன. கமத் தலைவர்களும் கொல்லர், குயவர் போன்ற கிராமத்துச் சேவகரும் வைத்திருக்கும் நிலங்களைக் (வெடவசம, திவெல்) கொண்டதுதான் கிராமம். இந்த நிலங்கள் பிரிக்கப்பட முடியாதன. சில வேளைகளில் ஆண் வழியாக மட்டும் பரம்பரைச் சொத்தாகக் கூடியன. தொண்டு செய்வதில் ஏதாவது தவறு நேர்ந்தால் அரசாங்கத்தால் அல்லது பிரபுவினால் இவை பறிமுதலாக்கப்படும். கிராமத்தின் எஞ்சிய பகுதி மற்றைக் குடிமக்களுட் பங்கிடப்பட்டது. அவர்கள் இடத்திற்குத் தகுந்தாற்போல விதைக்கப்பட்ட ஓர் அமுனத்திற்கு ஒன்று அல்லது இரண்டு அமுனம் என்று, தங்கள் வயலின் வரும்படியிலிருந்து ஒரு பகுதி (ஒடு) கொடுத்து வந்தனர். தோம்பில் குறிக்கப்பட்ட மிக அதிகமான விளைச்சல் பன்னிரண்டு மடங்காகும். இந்த நிலங்கள் பரம்பரைச் சொத்தாகவும் பிறருக்கு உரிமை மாற்றத் தக்கனவாகவும் இருந்தன. ஆண் வழி, பெண் வழி இரண்டாலும் பரம்பரைச் சொத்தாகவும் இருந்துவந்தன போல் தெரிகின்றது. இன்னும் பல கிராமங்களில் அரசனுடைய அல்லது பிரபுவினுடைய சொந்த ஊர்ப்பிரதேசங்களும் (முத்தெட்டு) இருந்தன. இவை குடியிருப்போர் சிலராற் கட்டின்றிப் பயிரிடப்பட்டன. பல கிராமங்கள் தனிப்பட்ட மனிதருக்கு ஆயுள் காலம் முழுவதற்கும் அல்லது குறிப்பிட்ட ஒரு தவணைக்குமட்டும் கொடுக்கப்பட்டன. அவ்வப்போது அக் கிராமத்துக்கு உரிமையாளனான பிரபு தம் நிலத்திலிருந்து வரும் உற்பத்தியைத் துய்த்தார். மக்களிடமிருந்து சேவை பெறவும் அவருக்கு உரிமை இருந்தது. வெவ்வேறு முறையில் சம்பளமும் அவர்கள் கையிலிருந்து அவருக்குக் கிடைத்தது. இத்துடன் " ஒடு " என்ற பங்கும் கிடைத்தது. கிராமத்தின் உரிமையாளன் அரசாங்கத்துக்கு ஒரு வாடகை கட்டவேண்டியிருந்தது. இது வருமானத்தில் பன்னிரண்டு சதவீதமாகக் கணக்கிடப்பட்டது. தற்காலிகமாகப் பிரபுவாயிருப்பவரின் நிலங்களும் " ஒடு " என்கிற வரி கொடுப்பவர் அல்லாதாரின் நிலங்களும் போத்துக்கேய மொழியில் " கொமீடியா " (" பராமரிப்பு ") எனப்படும். தோட்டங்களுக்கு, சில வேளைகளில், பத்துத் தென்னை மரங்களுக்கு ஒரு வெள்ளிப் " பணம் " விகிதம் வரி போடப்பட்டது. இது உற்பத்தியில் பத்தில் ஒரு பங்குக்குச் சமனாகக் கருதப்பட்டது. " ஒடு " கொடுக்கும் மக்களின் ஒரு பகுதியாக இத்தோட்டங்கள் இருந்தன என்றும், ஒன்றும் கொடாத நிலங்களை முறையாகச் சேவைக்காகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் என்றும் நாம் வைத்துக் கொள்ளலாம். சேனைகளும் தங்கள் உரிய பங்கு வரியைக் கொடுத்தன. இந்தியாவில் உள்ளதுபோல் எல்லா நிலங்களும் பொருளையோ சேவையையோ அளித்தன.




யாழ்ப்பாணத்தில் பழைய வழக்கம்தான் கையாளப்பட்டது. அங்கு மக்கள் உற்பத்தியில் ஒரு பகுதியும் கொடுத்துத் தொண்டும் செய்து ஒரு தலைவரியும் கட்டினர். சில காணிகள் அரசனால் ஆயுட்காலத்திற்கெனக் கொடுக்கப்பட்டன. இந்த நிலங்களும் வேறு சில நிலங்களும் உரிமையாளர் இல்லாமல் அரசனைச் சேர்ந்துவிட்டால் அவற்றில் " மராள " எனப்படும் ஓர் இறப்புவரி கட்டாயமாக்கப்பட்டது. இந்த வரி, ஒவ்வொரு சந்ததியிலும் உரிமையாளனாயிருப்பவனுக்கு நிலம் கொடுக்கப்படும்போது கட்டாயமாக வாங்கப்படும். இறந்தவரின் அசையும் பொருட்களில் மூன்றிலொரு பங்குக்குச் சமனான ஆண் உரிமை இல்லாவிடத்து, முழுப்பங்குக்கும் சமனான, " மராள " சிங்களநாட்டில் எல்லாத் தோட்டங்களிலும் அறவாக்கப்பட்டது. இந்த வழக்கம் இலங்கைக்கு மட்டும் சிறப்பானதாயிருக்கவில்லை ; இந்தியாவில் இவ்வழக்கத்தால் பெரிய குடும்பத்து மனிதர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்கள் இறந்தபோது அவர்களுடைய பொருட்களை அரசன் வழக்கமாய்ப் பறிமுதல் செய்து கொள்வான். இந்த வரி போடுவதின் அடிப்படைக் கொள்கை என்னவென்றால் அரசுரிமையை மண்ணிலும் செலுத்த வேண்டுமென்பதேயாம். இந்த உரிமையைச் சிங்கள நாட்டிலும் தமிழ் நாட்டிலும் பிணத்தைச் சுடும் முன்னர் வாங்கப்படும் " பிம் புலுது " என்னும் " மண் எரிக்கும் " வரியை அறவாக்கியதிலிருந்து அறியலாம். இந்த வரி தொடக்கத்தில் மலையாளத்தில் உள்ள "பாட்டம்" குத்தகைகளைப் புதுப்பிக்கும்போது வாங்கப்படும் ஊதியத்தை ஒத்திருத்தல் கூடும். எனினும் இது இலங்கையில் ஒவ்வொரு சந்ததிக்கும் போடப்படும் வரியாயிற்று. கண்டி நாட்டில் அது பெண்கள் மேல் விதிக்கப்படவில்லை. பதினெட்டாம் ஆண்டின் நடுப்பகுதியில் அது ஒழிக்கப்பட்டது. ஆயினும் கடைசி அரசன், ஒரு தலைவன் இறந்தபோது அந்த வரியை மீண்டும் மிகவும் கடுமையான முறையில் அறவிட்டிருந்தான்.

சிங்களக் காணியாட்சி முறையில், ஈற்றில் உருவான இரண்டு பண்புகளில் முதலாவது, சேவை நிபந்தனை முறைப்படி விளைச்சலில் ஒரு பகுதியைக் கொடுக்கும் நிலங்களை ஒன்றுசேர்த்தல் ; இரண்டாவது, படிப்படியாகச் சொத்துக்களிற் பெரும்பான்மையானவற்றைப் பரம்பரைச் (பரவணி) சொத்துக்கள் ஆக்கல். இவை தொண்டுகள் செய்வதற்கும் பின்னுரிமை கொள்வரி கொடுப்பதற்கும் கட்டுப்பட்டு இருந்தன. இந்த நிலங்களிற் பலவற்றைப் பிறர்க்குக் கொடுப்பதிலும் விற்பதிலும் பல தடைகள் இருந்தன. அரசனுக்குரிய விளைச்சல் வரி முற்றிலும் இல்லாமையைக்கொண்ட இத்

தன்மையினாலேயே பிந்திய கண்டி அரசு எஞ்சிய கிழக்கு நாடுகளினின்றும் வேறுபட்டிருந்தது.

தீவின் வட பகுதி, கீழ்ப் பகுதிகளில் இந்துத் தமிழரின் குடியேற்றம் எவ்வளவிற்குப் போரினால் ஏற்பட்டதோ அவ்வளவிற்கு அமைதியான உட் புகுதலாலும் ஏற்பட்டதாகும். சில இடங்களில், சிங்களப் பெயர்கள் உருச் சிதையா அளவிற்கு மிகப் பிந்திய காலத்திலேயே இவ்வுட்புகுதல் ஏற்பட்டது. இச்சிங்களப் பெயர்களின் உருவம் மத்திய காலத்துக்கு முந்தியவையாக இருக்காது. பிற்காலத்தில் நிகழ்ந்ததுபோலவே வணிகம் இக்காலத்திலும்,



உருவம் 12.—வட்ட-தா-கே, பொலன்னறுவை.

இவர்கள் கையிலும் "மூர்" என்று போத்துக்கேயரால் அழைக்கப்பட்ட முசிலிங்கள் கையிலுமிருந்தது. இலங்கையில் இசிலாமியரைப்பற்றி நாம் முதன்முதலாக எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கேள்விப்படுகிறோம். அக்காலம் தொடக்கமுள்ள எகித்திய குலமுறை களினதும் அயல் ஆசிய நாடுகளின் குல முறைகளினதும் தங்க நாண யங்கள், முக்கியமாகப் பன்னிரண்டாம் பதின்மூன்றாம் நூற்றாண்டு களுக்குரிய தங்க நாணயங்கள், தீவின் மேற்குப் பகுதியில் காணப்படுகின்றன. இவ்விரண்டு நூற்றாண்டுகளிலேயே முசிலிங்கள் தென்னிந்தியாவில், வணிகச் செழிப்பிலும் அரசியல் ஆதிக்கத்திலும் மிகவுயர்ந்த நிலையை அடைந்தனர். சீன வணிகர் இருந்தமையைப்



பத்தாம் நூற்றாண்டுக்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குமிடையி லுள்ள காலத்துக்குரிய நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வதிகாரத்தின் முடிவில், இடைக்கிடை தலையெடுத்துப் பெருமளவில் அபயகிரிக் குழுவினரைப் பீடித்த "மகாயான" என்னும் பௌத்தப்பிரிவைப் பற்றி நாம் குறித்துக்கொள்ளல் வேண்டும். தற்காலத்தில் பொதுமக்க ளிடை விளங்கும் புத்த மதத்திற் காணப்படும் இந்துக் கடவுள் வழி பாட்டுக்குக் காரணமாயிருப்பது இந்தச் சமயாசாரத்தின் செல்வாக்கே.

### 3 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பொது வரலாற்றுக்கு "**மகா.**" "**பூசா.**" பார்க்க.

**முதலாம் அக்கபோதி.** புலவரின் பட்டியல் **பூசாவலியி**லும் அதிலி ருந்து தோன்றிய நூல்களிலும் காணப்படுகிறது. ஆனால் குறுந்து வெவ "பெரிய ஏரி" அல்லது "அகத்திமுறிப்பு" என இருக்கலாம்; ஏனெ னில் "மல்வத்து ஒய" வின் பதிந்த பாகம் "குறுந்து ஒய" எனப்பட்டது. (நொட்சு **இலங்கையின் தொடர்பு** பகுதி iv. அத்தியாயம் x.), குறுந்து நாடு இதன் அண்மையில் இருந்ததுபோல் தெரிகிறது. **இ. தொ. x.** பக்கம் 94 பார்க்க.

**இரண்டாம் அக்கபோதி.** இரண்டாம் புலகேசியைப்பற்றியும் கலிங்கத் துடன் அவனுக்கிருந்த தொடர்பைப்பற்றியும் யோவோதுபிறயிலின் முன் னூல் பக்கம் 93 இல் காண்க. இவ்வாசிரியர் இந்த வெற்றியை 609 இல் நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறார்.

**மானவம்மன்.** இவனுக்கு முதலாம் நரசிம்மவர்மனுடன் இருந்த தொடர்பை உற்சுவின் முன்னூல் பக்கம் 527 இல் காண்க. அந்தப் பல்லவ அரசனை இரண்டாவது நரசிம்மவர்மன் (630–668) என்று கொள்ளுதல் அநேகமாய்ப் பிழையாக இருக்கும். ஏனெனில் அது மானவம்மனிற்கும் முதலாம் சேனனிற்கும் இடையிலுள்ள காலத்தை மிகவும் குறைத்து விடும். சிம்மவிட்டுணுவின் கூற்றுக்கு **தெ. இ. பொ. ii.** 356 பார்க்க. வடமொழி சுலோகம் ஒன்றைத் திருத்தஞ் செய்ததும், தாபுலுசேனனால் தீவாந்திரமுனை நிலைநாட்டப்பட்ட காலம் துலக்கமாகத் தெரிகிறது.

மத்திய காலத்துக் கட்டிடம் ஒன்றைத் தவிர வேறு ஒரு அரண்மனையும் அனுராதபுரத்தில் பாழடைந்ததாய்த் தெரியவில்லை; பொலனறுவையை அரச இருப்பிடமாக்கியதன் காரணம் சமய குருமார்களின் மிதமிஞ்சிய அதி காரத்தினின்றும் அரசன் விடுதலைபெற விரும்பியதே. இப்படி வைத்துக் கொண்டால், தொலமி "அனுரோக்ரமன்" என்பதை "அரச நகரம்" ஆகவும் "மாக்ரமன்" என்பதை "தலைநகரம்" ஆகவும் வருணித்தற்குக்

காரணம் அறிந்து கொள்ளலாம். "மாக்ரமன்" என்னும் பெயர் தற்காலத்து "மகாநுவர" அதாவது "தலைநகரம்" என்பதற்கு இசைய இருக்கிறது. "மாக்ரமன்" பிந்திய பொலனறுவையின் அண்மையில் இருந்திருக்கக்கூடும் என்று நான் ஏற்கெனவே ஒரு உத்தேசம் கூறியுள்ளேன். ஆனால் நிலம்பே, அங்குராங்கேத, குண்டசாலை என்பன எப்படிக் கண்டிக்கு இருந்தனவோ அதேபோல் மாக்ரமனும் பொலனறுவையும் அனுராதபுரத்துக்கு இருந்திருக்கக்கூடும்.

**முதலாம் சேனன்** ஆட்சிப்பீடத்துக்கு ஏறியகாலம் "நிகாய சங்கிரக"த்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் சேனனின் ஒன்பதாம் ஆண்டிற்கு எல்லவாவியிலுள்ள பொறிப்புக்கள் காண்க; **ப. இ. பொ.** 116; பிலிவாவி, **எ. சி. ii.** எண் 8; எட்டாவிரகொல்லேவா, அந்நூல் எண் 9.

வரகுணவர்மன், சிறீ வல்லபனின் மகன், முதலாம் சேனனின் கீழிருந்து இலங்கைமீது படையெடுத்த பாண்டிய மன்னனாக இருக்கலாம். இவன் கி. பி. 862 நவம்பருக்கும் மாச்சுக்குமிடையில் அரசுகட்டில் ஏறியிருக்கலாம். இது இரண்டாம் சேனனின் ஒன்பதாம் ஆண்டைக் குறிக்கவில்லை. ஏனெனில் மதுரையின் அரசுகட்டிலில் அவன் தளபதியால் அமர்த்தப்பட்ட இளவரசன், இறந்த மன்னனின் மகனல்லனாயிருத்தல்கூடும். மரபுவழிக்கும் குறிக்கப்பட்ட தேதிக்கும் சின்னமனூர் செப்பேடுகள் காண்க. (**ஆ. க. அ.** 1907, பந்தி 6 தொடர்), வேள்விக்குடிக்கொடை (அந்நூல் 1908, பந்தி 15 தொடர்), **எபிகிராபியா இந்திகா, xi.** எண் 24, ப. 253. என்பவற்றையும் காண்க.

**ஐந்தாம் காசபனும் ஐந்தாம் தப்புலனும்.** இராசசிங்கனுக்கும் பராந்தகனுக்கும் **ஆ. க. அ.** 1907, பக்கங்கள் 72, 73, உதேந்திரம் செப்பேடுகள் **தெ. இ. பொ. ii. 387.** மூன்றாம் கிருட்டினனுக்கு **எபி. இன் iv** எண் 40, எபிகிராபிய சீலனிகா பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்கள் **இ. தொ. iv.** பகுதி i. ப. 35.

**நான்காம் மகிந்தன்.** ஒன்பதாம் ஆண்டிற்கு **எ. சி. i.** எண் 2 வெசகிரிப் பொறிப்புக் காண்க. வல்லப என்பது சோழர் பட்டம். இப்பெயரை III ஆம் கிருட்டினனுடன் ஒன்றுபடுத்துவதைவிட வாசகத்தில் உள்ள மாதிரிப் பொருத்துவது செவ்விதென எனக்குத் தோன்றுகிறது. கிருட்டினனுடன் ஒன்று படுத்துவது. **இ. தொ. iv.** பகுதி i. ப. 35 இல் உள்ளது. II ஆம் பராந்தகனின் தளபதிக்கு **ஆ. க. அ.** 1914, ப. 90 பார்க்க.

**ஐந்தாம் சேனன்.** இவனின் இரண்டாம் ஆட்சி ஆண்டின் துருது பூரணையின் ஆறும் நாளிலிருந்து தமிழர் ஆட்சியின் ஆரம்பத்தை **பூசா.** குறிக்கின்றது.



**ஐந்தாம் மகிந்தன்.** இவனே **மகா** liv. 58 இல் குறிப்பிடப்பட்ட உதயனாயிருக்கலாம். சோழனின் வெற்றிக்கு **தெ. இ. பொ. iii.** 6 உம் 52 உம் காண்க; முதலாம் இராசராசனின் இருபத்தேழாம் ஆண்டின் பொறிப்பொன்று பதவியாவில் உள்ளது. இலங்கையில் சோழர் பதிவுகட்கு **இ. தொ. அ.** 1907, 1909 பார்க்க. பொலனறுவையின் சோழப் பெயர்க்கு அந்நூல் 1906, ப. 27; 1909, ப. 27 பார்க்க.

அரசுகட்டிலுக்குரிய வரிசை ஒழுங்கு **மகா.** இலிருந்து உய்த்தறியப்பட்டது. வழக்கத்தில் யுவராசன் ஆளரசனின் அடுத்த உடன்பிறப்பாளனாயிருப்பான்; தவறின் அடுத்த சந்ததியின் மூத்த மகனாயிருப்பான். நுவர—லத்தாவிற்கு II ஆம் சேனனின் பத்தொன்பதாம் ஆண்டின் பசவக்குளம் பொறிப்புக் காண்க; இது இப்பொழுது கொழும்பு நூதனசாலையில் உள்ளது. பருவ மன்றுகட்கும் கோயிற் காப்புக்கட்டுகட்கும் **எ. சி. i.** ப-ள் 244—53 யாண்டும் பார்க்கலாம். ஒரு கோயிலிற்கு ஒரு விருப்பு வாடகை கொடுத்து இத்தகைய காப்புக்கட்டுகள் பெற்றதுபற்றி ஒருவனுக்குக் கொடுத்த கொடையில் காணப்பட்டுள்ளது (**எ.சி. ii.** எண் 4). பழமரங்கள்பற்றி கப்புறுவெடு ஓயா பொறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது **வே.ஆ.ச.ச., இ.கி. xxvi.** எண் 71, பகுதி i. ப. 53 இல் வெளியாகியுள்ளது. பழைய கிராம அமைப்பின் குலைவு படிப்படியாய் நடந்திருத்தல் வேண்டும். உலர்வலயத்திலிருந்து ஈரவலயத்திற்கு மக்கள் சென்றதினால் தனியியல்பு வளர்ந்திருக்கலாம். உலர்வலயத்து மக்களின் கிராமம் குளக்கட்டிற்கருகில் மண்டிக் கிடக்கும் வீடுகளின் கூட்டமே; ஈரவலயத்து மனிதன் ஒவ்வொருவனும் தன் சொந்த மரத்தின்கீழே இருந்தான். ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சமுதாயப்பொறுப்பு சில வகைகளில் நிலைத்து நின்றது. இதனாலேயே ஒருவன் ஒரு கிராமத்தில் தற்கொலை செய்தால் அக்கிராமம் முழுவதும் தண்டிக்கப்படும்; ஆனால் அவன் காட்டில் அவ்வாறு செய்யின் தண்டனை இல்லை.

**காணியாட்சி.** மௌரியப் பேரரசுபற்றி **கேம்பிரிச்சின் இந்தியா வரலாறு** (ப. 475) கூறுவதாவது: வேத்தியல் ஆட்சிப்பகுதிகளைத் தவிர நாட்டிலுள்ள இறுதியுடைமை இதுகாறும் வழங்கிவந்தவாறே, அரசனுக்குச் செல்லும். அதாவது அங்கிருந்தும் அரசன் தனக்குரிய வருவாயைப் பெற்றுக்கொள்ளலாம். வருவாய் கொடுக்கத் தவறுபவனை அரசன் நீக்கலாம். இது காணியைப் பிரித்தலையோ பிறர்க்காக்குதலையோ தவிர்க்காது; ஆனால் வேந்தன் உரிமை எல்லா மாற்றங்களிலும் நீடித்து நிற்கும்.

கொடைகளை மீண்டும் பெறும் வழக்கு இலங்கையில் உண்டு. கிலிமலையில் ஒன்றுண்டு; இது I ஆம் விசயபாகுவால் சமந்தமலை யாதிகர்க்கு உணவளிப்பதற்காகக் கொடையளிக்கப்பட்டது. கெந்தங்கமுவை பிறிதொன்று.

இது அரமனப்பொலை விகாரைக்கு VI ஆம் பராக்கிரமபாகுவால் கொடுக்கப்பட்டது. இவை இரண்டும் கண்டியர் ஆட்சியில் வேந்தன் கிராமங்களாயிருந்தன.

மலையாளத்திலும் இக்காலத்துத் தமிழிலும் "பாட்டம்" என்பது "வாடகை" யாகும். பழைய தமிழில் இது மதிப்புவரி என்றாகும். இது சிங்களச் சொல்லான "வத்தை" என்பதற்குச் செவ்வையாய் ஒப்பாகும். சிங்களச் சொல் இரண்டு கருத்தையும் கொண்டுள்ளது. இது அரசியல் கீழ்ப்படியிலிருந்து தனியுரிமைபற்றிய கருக்கோளைப் பிரித்துணரும் இடரைப் புலப்படுத்துகின்றது. இக்கீழ்ப்படிவோ கடைசி நூற்றாண்டில் மிக்க வளர்ச்சியடைந்துள்ளது. (மோலந்து முற்கூறிய நூல் ப. 96) கட்டிட வேலைக்காரனைப் பிடித்து வைத்ததுபற்றி **எ. சி. i.** எண் 1 பார்க்க. பொதுமக்கட்குக் கொடுத்த கொடைபற்றி **எ. சி. ii.** எண் 4, **வே. ஆ. ச. ச., இ. இ. xxix.** எண் 77 இலுள்ள தொறற்றியாவா துடபத (பன்னிரண்டாம் நூறு) பார்க்க. கலைச்சொற்களுக்கு **எ. சி. i.** எண் 7, 8 பார்க்க. நிசங்க மல்லனின் வரி **விதிப்பிற்கு எ. சி. i.** எண் 9 பார்க்க. உத்தே, மெந்த, பசே போன்ற சொற்களை நான் உயர், நடுத்தர, வறிய என்ற க த்தில் கொண்டுள்ளேன். இவை பெப்பிலியாலைப் பத்திரங்களில் உத்தே தரமின், மெத்தே தரமின், பசே தரமின் என்ற தொடர்களில் காணப்படுகின்றன. வெல்லசாவில் மத்தமா தரம என்ற தொடரை ஆள்வதிலிருந்து இத்தொடரை நாம் நீர்ப்பாய்ச்சல் வாய்ப்புக்களுடன் இணைத்தே நோக்கல் வேண்டும். வேத்துக் கிராமங்களிலுள்ள அடிமைகளைப்பற்றி 1636 இல் சிங்களர் கொடுத்த விண்ணப்பத்தில் காண்க. இது **த. கு.** ப. 834 இல் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பொலய என்னும் தோட்டவரிபற்றி போத்துகேயர் **தோம்பு** பார்க்க; வலென்றினின் **அவுட் அன் நியு ஊக இந்தியன்,** v. 268 பார்க்க. மாராளவிற்கு **த. கு.** ப-ள் 41, 42, 76, 80, 842 பார்க்க. **தொக்குமென்றகு தெமற்றிடோசு த இந்தியா, ii.** ப-ள் 82, 136 பார்க்க. வலென்றின் ப-ள் 10, 269, 270 பார்க்க. றொட்சு, **இலங்கை உண்ணாட்டுப் பகுதி,** பகுதி ii. அதி. iv. v. உம் பகுதி iii., அதி. vii. உம் பார்க்க. யாழ்ப்பாணத்திற்குப் புனோரால் பார்க்க. பொதுவாகக் கொமிடியாவிற்கு **த. கு.** ப. 80 பார்க்க. ஆட்சிக்காணிகளைப் போத்துக்கேய **தோம்பு** பரவணி எனக் குறிக்கின்றது. ஆனால் இவ்வழக்கு குறைவாகவே உள்ளது. ஆனால் அவற்றுள் பெரும்பகுதி இவ்வாட்சி முறையாலேயே உரிமை கொண்டாடப்படுகின்றன. இது இலிபீரோவின் **பற்றலிலாடே இசுற்றேறிக்கா** விலும் 1636 விண்ணப்பத்திலும் இச்சொல்லு பயன்படுத்தப்பட்டதிலிருந்து புலப்படுகின்றது. **ஆள்வார் நாயகத்தின் கற்பனைகளையும்** பார்க்க. அரசச்சகம் 1908, ப-ள் 40, 61. போத்துக்கேயர் **தோம்பில்** பரவணியெனும் சொல் கொள்விலைக் காணியிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. இ ஒயிலி கூறியவாறுள்ள கண்டியர் முறைமை, **கேகாலை மாவட்டத்தறிக்கைத் தவணைத் தாள்கள். xix.** 1892, ப-ள் 107 தொடரில் கொடுக்கப்பட்டுள்ளது. **தலதா சிறிதாவால்** பற்சின்னத்துக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று பணிக்கப்பட்ட **தலைவரி** யாழ்ப்பாணத் தலைவரியை ஒக்கும். பயிரின் ஒரு பங்கு அரசனுக்குப் பதிலாகக் கிராமத் தலைமையாளுக்குக் கொடுப்பது போத்துக்கேயர் வருகைக்கு முந்தியதாய் இருக்கலாம். இது பழைய வாரி முறைமை வழக்கழிந்ததால் நேர்ந்திருக்கலாம். இடச்சுக்காரர் ஆட்சியில் அரசாங்கம் மீண்டும் **ஒரு** பங்கை எடுத்தது.




மகாயான போதனைகட்கு **நி. ச.** மார்க்க எ. எம். ஒகாது "**அனுராதபுரத்து தூபாராமைக் கோயில் குறிப்புக்களும் கேள்விகளும். வே. ஆ. ச. ச., இ. இ. xxviii.** எண் 73, ப. 57 பார்க்க. வெலிகமையிலுள்ள குட்டராசசிலை அவலோகிதேசுரனைக் குறிக்கும் எனக் கருதப்படுகிறது.

அதிகாரம் 4

## பொலனறுவை மன்னர், 1070-1215

ஐந்தாம் மகிந்தனை நாடகற்றிய பின் தொடர்ந்த ஆண்டுகளில் சிங்களர் பலமின்றிக் கிளர்ந்தெழுதலும் சோழர் அவர்களை அடக்கியாளலும் மாறிமாறி நடைபெறலுற்றன. முதலாவதாக, சிறைப்பட்ட மன்னனின் மகனான காசபன் **(விக்கிரமபாகு)** என்பான் நாட்டினைத்தார் கொண்ட எதிர்ப்புக்குத் தலைமை வகித்தான். அவன் இறந்தபின் நாட்டில் அரசின்மை தலையெடுத்தது. புதுமை விரும்பும் சிங்களவரும் தம் உடைமை இழந்த பாண்டிய நாட்டு இந்தியச் சிற்றரசரும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் தத்தம் ஆணையை நிலைபெறச்செய்ய முயன்றனர். கன்னோசியில் இருந்து வந்த சகதிபாலன் என்பானும் அவ்வாறே முயன்றான். இறுதியில் சிங்களவருடைய நம்பிக்கை கி.பி. 1039 இல் பிறந்த அரசிளங்குமரனான **கித்தி** என்பானிலேயே அமைந்தது. அவன் தன் பதினைந்தாம் வயதிலேயே இறுதியாக வந்த போலியாளனான உலோகிசரன் என்பானைத் தோற்கடித்தான். பின்னர் தன் பதினேழாம் ஆண்டில் மூப்பு அடைந்ததும் **விசயபாகு** என்னும் பெயருடன் சிற்றரசன் பதவியை மேற்கொண்டான். தன்னாட்டின் விடுதலைக்காக அவன் தன் கவனம் முழுவதையுஞ் செலுத்தினான். கி. பி. 1066 இலோ அதற்கண்மையிலோ பொலனறுவையைக் கைப்பற்றுவதற்கு முதன்முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் இம்முயற்சி தோல்வியுற்றது. இதனால் விசயபாகு வாதகிரி (கேகாலை மாவட்டத்தில் உள்ள **உவாகிரிகலை**) என்னும் இடத்தில் தன்னை அரண் செய்ய வேண்டி நேர்ந்தது. கலகங்கள் வழக்கம்போலவே இவ்வரசிளங்குமரனின் முயற்சிக்கு இடையூறு விளைத்தன. ஆயினும் சோழப்போரசில் நேர்ந்த ஒரு கலகத்தினால் அரசனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. இக்கலகத்தின் பின்னரே கி. பி. 1069/70 இல் முதலாம் குலோத்துங்க சோழன் அரசெய்தினான்

இக்கலகம் நடக்கும்பொழுது விசயபாகு வளவை கங்கையின் கீழ்ப்பகுதியிலுள்ள **மகாநாககுளம்** எனும் இடத்தில் இருந்தான். அவன் அப்பொழுது இரு படைகளைப் போருக்கு அனுப்பி வைத்தனன். ஒன்று கிழக்கு மாநிலத்திற்கூடாகக் "கடல்மாநிலவழி" அனுப்பப்பட்டது. மற்றையது மலைத்தொடருக்கு மேற்குப் பக்கம் அனுப்பப்பட்டது. அத்தருணத்தில் அவனும் மகியங்



உருவம் 13.—சிவன் தேவாலயம், எண் 2, பொலனறுவை.

கனை வழி முன்னேறிச் சென்றான். பொலனறுவை வீழ்ந்தது. அரசனது ஆட்சியின் பதினைந்தாம் ஆண்டில் அவன் அனுராதபுரத்துள் புகுந்தனன் (கி.பி. 1070). இலங்கையின் மன்னனாக அவன் முடிசூடவேண்டியது கலகத்தால் தடையுற்றது. முடிசூட்டல் அவனது ஆட்சியின் பதினெட்டாம் ஆண்டிலேயே (கி.பி. 1072/3 ஆயுமிருக்கலாம்) நடைபெற்றது. இப்பொழுது பொலனறுவை சோழப்பெயரை இழந்து **விசயராசபுரம்** என்னும் பெயரைப் பெற்றது. விசயபாகு **கன்னோசி** நாட்டின் **சகதிபாலனுடைய** மகளை மணந்தனன். சகதிபாலனின் **இராணி** சோழநாட்டில் சிறை இருந்து தப்பி வெளிவந்தவளாவாள். விசயபாகு கலிங்கநாட்டு மன்னர் வழிவந்த **திரிலோகசுந்தரி** என்பாளையும் மணந்தனன். அரசனின் உடன்பிறந்தாளான **மித்தா** ஒரு பாண்டிய அரசிளங்குமரனை மணந்தனள்.



இப்பாண்டிய அரசிளங்குமரனே பெரும் பராக்கிரமபாகுவின் பேரனாவான். மன்னன் பௌத்த மதத்தைத் தழைக்கவைத்தனன். இராமண்ணை (பெகு) விலிருந்து வந்த பிக்குமார் மரபினைப் புதுப்பித்தான். தலைநகரிலே தன் தளபதி **நுவரகிரி**யைக் கொண்டு பற்சின்னத்துக்கு ஒரு கோயில் கட்டுவித்தான்.

மேலைச் சாளுக்கிய அரசனான **ஆறும் விக்கிரமாதித்தனுக்கு** விசயபாகு அனுப்பிய தூதரைச் சோழர் உறுப்புக் குறைத்தமையால் விசயபாகு போர் தொடர வேண்டி நேர்ந்தது. கி. பி. 1084/5 வரையில் போருக்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கின்றபொழுது வேளக்காரக் கூலிப் படையினர் தம் தமிழ் உறவினருடன் போரிட மறுத்துக் கலகம் செய்து அரசன் அரண்மனைக்குத் தீ வைத்தனர். அரசன் **உவாகிரிகலை**க்கு ஓடினன். எனினும் அவன் மீண்டும் வந்து கிளர்ச்சியை அடக்கிக் கலகக்காரர்களின் தலைவர்களை, அவர்கொன்ற அரசனின் தளபதிகளின் ஈமத்திலேயே வைத்துச் சுட்டனன். வேளக்காரப் படையினர் இதனால் நற்பாடம் படித்தனர். அரசனின் ஆட்சி இறுதிக் காலத்தில் இவர்கள் அருந் தமிழ்க் கல்வெட்டொன்றினை நிறுவினர். இக்கல்வெட்டிலே பற்சின்னக் கோயிலைப் பாதுகாப்பதற்குரிய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இன்றும் பொலனறுவையில் உள்ளது.

சமந்தகூடத்துக்குச் செல்லும் வீதி வழியே தங்கும் இடங்களைக் கட்டுவித்ததும், இரத்தினபுரி மாவட்டத்தில் கிலிமலைக் கிராமத்தை அங்கு போவோர்க்கு உணவு கொடுப்பதற்காக அளித்ததும் இவன் செய்த இறுதிப் பணிகளாகும். நாவலப்பிட்டியிலிருந்து அதிகம் சேய்மையில் இல்லாத அம்பகமுவாவில் உள்ள ஒரு பெருங்கற்பாறையில் இக்கொடைப் பணி பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசன் தனி மன்னனாக முடிசூடிய பின் முப்பத்தெட்டாம் ஆண்டு இது பதிவுசெய்யப்பட்டது. விசயபாகு ஐம்பத்தைந்து ஆண்டுகள் அரசாண்டான். கி.பி. 1111 வரையில் எழுபத்திரண்டாம் வயதில் இறந்தான்.

இவ்வரசனைப் பின்தொடர்ந்தவன், **இளவரசனான சயபாகு** (1108-1145/6) அவன். இவன் தன் மூத்தானான **வீரபாகு** இறந்தபின் இப்பதவிக்கு, இளவாசன் பதவிக்கு, உயர்த்தப்பட்டவனாவன். இது விசயபாகுவின் ஆட்சியின் இறுதிக்காலத்தில் நடந்திருக்கலாம். பொலனறுவையில் உள்ள தமிழ்ப் பொறிப்பொன்று சயபாகுவின் முப்பத்தெட்டாம் ஆண்டினை கசபாகுவின் பதினைந்தாம் ஆண்டுக காலத்தது ஆக்குகின்றது. ஆதலால் இவ்வரசன் விசயனின் உடன் பிறப்பாளன் முறையில் அமைந்தவனாய் இருக்கலாம். சயபாகுவின் முடி சூட்டல் அரசகுலத்திலுள்ள பாண்டியக் கிளையினரால் செய்து முடிக்கப்பட்டதாகும். இப்பாண்டியக் கிளையினர் கலிங்கப் பகுதியினரைச் சார்ந்த **விக்கிரமபாகு** உறுகுணையின் ஆள்வானாகச் சென்றிருந்ததை ஓர் அனுகூலமாகக் கொண்டனர். கொண்டு இளவரசனின் பதவியை, பாண்டிய அரசிளங்குமரனுக்கும் விசயபாகுவின் உடன்பிறந்தாளான **மித்தாவுக்குப்**

பிறந்த மூன்று மக்களுள் ஒருவனான **மானாபரணன்** அல்லது **வீரபாகு** என்பானுக்கும் அளித்தனர். இதனால் அவர்கள், அரசுரிமை அரசனின் சொந்த உடன்பிறந்தானுக்கு அல்லது கடைசி அரசனின் மகனுக்குச் சேரவேண்டுமென்ற பழைய வழக்கத்திற்கு மாறாக நடந்து கொண்டனர். சயபாகுவின் அரசுரிமை சட்டப்படி உறுதியானதாய் இருந்ததுபோல் தோன்றுகின்றது. ஏனெனில் விக்கிரமபாகு, சயபாகுவை அதிகாரத்தில் நின்றும் விலக்கினானாகிலும் தானே முடிசூடிக் கொள்ளவில்லை. பத்திரங்கள் பொலனறுவையிலும் சயபாகுவின் ஆட்சி ஆண்டுகளைக் கொண்டே தேதி பொறிக்கப்பட்டன. பாண்டியர் கட்சியினர் விக்கிரமபாகுவைத் தாக்க முயன்றனர். ஆனால் அவர்கள் தோல்வியுற்றனர். இதன்பின் அரசிளங்குமரன் தலைநகருக்குப் போனான். சயபாகு உறுகுணைக்குச் சென்று வாழ்ந்தான். அங்கு இவன் பேரளவில் மன்னனாக வாழ்ந்து மறைவிலேயே மாண்டான்.

இப்பொழுது நாடு நாலு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பொலனறுவையைத் தன் தலைநகராகக் கொண்ட "மன்னன் நாட்டை" விக்கிரமபாகு ஆண்டான் (**1111–1132**). இவன் புத்தபிரானுக்கென உரிமையாக்கப்பட்ட நிலங்களைக் கைப்பற்றி மதகுருமாரை வருத்தினன். இவர்கள் பற் சின்னத்தையும் கிண்ணச் சின்னத்தையும் உறுகுணைக்கு எடுத்துச் சென்றனர். தென்னாடு மானாபரணனால் ஆளப்பட்டுவந்தது. உறுகுணை மற்றை இரு உடன்பிறப்பாளர்க்குமிடையே பிரிக்கப்பட்டது. ஏறக்குறைய தென் மாநிலத்துக்கு ஒத்த தொளசுதகசுரட்டை என்பதை சிறீ வல்லபன் கொண்டான். இப்பொழுது உள்ள ஊவாவும் கீழ்மாகாணத்துப் பெரும் பகுதியும் சேர்ந்த ஒத்த அடதகசுரட்டை என்னும் பகுதியைக் **கித்தி சிறீமேகன்** கொண்டான்.

மானாபரணனின் புகழ்பெற்ற மகனான **பராக்கிரமபாகு** தென்னாட்டிலுள்ள **புங்ககாமத்தில்** பிறந்தான். இவன் தன் தந்தையார் இறந்தபின் தாயுடன் தன் மாமனான **சிறீ வல்லபனின்** ஆட்சிப்பகுதியான மகாநாககுளத்திற்குச் சென்று வாழ்ந்தான். சிறீ வல்லபனின் உடன்பிறந்தானானவன் மானாபரணனின் சிற்றரசைப்பெற சிறீ வல்லபன் உறுகுணை முழுவதையும் ஆண்டான். இருபத்தொரு ஆண்டுகள் ஆண்ட விக்கிரமபாகு இறந்து மகன் **இரண்டாம் கசபாகு (கி. பி. 1131-1153)** அரசெய்தியதும், சிறீ வல்லபனும் **கித்தி சிறீமேகனும்** "மன்னன் நாட்டைத்" தாக்கினர். ஆனால் முயற்சியில் தோல்வியுற்றனர். பராக்கிரமபாகு இப்பொழுது நன்கு வளர்ந்தபின் தான் பிறந்த நாட்டிற்குச் சென்றான். இங்கு அவன் தன் மாமனின் அரசவையில் வாழ்ந்து வந்தான். அவா நிறைந்த அவனுடைய ஆர்வம் சிறியதோர் அரசை ஆளவேண்டி நேர்ந்ததே என்று எண்ணி எண்ணி அமைவு இழந்தது. அதற்கேற்றவாறு ஒருநாள் இரவு அவன் அரசவையை விட்டு நீங்கிப் பற்றலகொடைக்குச் சென்றான். இங்கு அதிகாரம் கொண்டிருந்த தளபதி கொல்லப்பட்டான். பின்னர் கிரியாலைக்கூடாக புத்தகமைக்குச் (மாத்தளை மாவட்டத்தில் உள்ள மேனித்தென நுவர) சென்று கலாவாவியிலுள்ள கசபாகுவின் தளபதியுடன் சூழ்ச்சி செய்தான். அவன் மாமன் பொலனறுவை அரசவையுடன் பிணக்கு நேரும் என்று அஞ்சி அவனைத் திருப்பிக்கொண்டு வருமாறு படையொன்றையனுப்பினன். ஆனால், அரசிளங்குமரனோ போகம்பரை, மாத்தளை கிழக்கிலுள்ள இலக்கலை நாட்டின் இரணமுறை, அம்பனை ஆகிய இடங்களுக்கூடாகச் சுற்றுவழியாகச் சென்று இறுதியில் எல்லையைக் கடந்து பொலனறுவைக்கு வந்தனன். இங்கு அவன் கசபாகுவுடன் வாழ்ந்து நாடு முழுவதும் ஒற்றி அறிந்து, தனக்கு விருந்தளித்தானின் குடிமக்களுடன் சூழ்ச்சி செய்து தன் காலத்தைக் கழித்தனன். பின்னர் அவன் தன் மாமனாரிடம் சென்றான். மாமன் இறந்தபின் இவன் அரசாட்சியைப் பெற்றான். சிற்றரசனாய் ஆளுகின்றபொழுது நீர்ப்பாய்ச்சல் வேலைகள் பல நிறுவியும் (சிறப்பாக தெதுறுஓயாவில்) குடியரசாட்சி, படை ஆகியவற்றை நன்கு அமைத்தும் தன் ஆட்சிப் பகுதிகளைச் செம்மை ஆக்கினன். தன் நிலையை அரண் செய்துகொண்டு கசபாகுவைத் தாக்கினன். தாக்கி தும்பறையையும் அடுத்துள்ள மலைநாட்டையும் கைப்பற்றினன். இதைத் தொடர்ந்து நடந்த போராட்டங்களில் இப்பொழுதுள்ள மாத்தளை மாவட்டத்திலேயே போராட்டம் முழுதும் நடந்தது. இறுதியில் பொலனறுவை கடுமையாகத் தாக்கப்பட்டு கசபாகு சிறையாக்கப்பட்டான். உறுகுணையில் தன் தந்தையான சிறீ வல்லபனைப் பின்தொடர்ந்தாண்ட மானாபரணன், இப்பொழுது உறுதுணைபோல வந்து பராக்கிரமபாகுவின் படையைத் தோற்கடித்துக் கசபாகுவை விடுதலை செய்தான். ஆனால் அரசனோ மானாபரணன் ஒரு பொல்லாத் தலைவன் என உணர்ந்து பராக்கிரமபாகுவிடம் துணை கோரினன். இதனால் போர் நிகழ்ந்தது. மீண்டும் விடுதலைபெற்ற கசபாகு ஓடிமறைந்தனன். அவன் படைஞர்களோ அவனை மீட்டோனுடன் பொருதனர். இறுதியில் பராக்கிரமபாகு சார்பில் அவன் முடிதுறந்தனன். இவன் கந்தளாயில், இருபத்திரண்டு ஆண்டுகள் ஆண்டபின் இறந்தான். ஆயினும் அவன் அமைச்சர்களோ மானாபரணனை அழைக்க ஆட்களை அனுப்பினர். இதற்கிடையில் பராக்கிரமபாகு பொலனறுவைக்கு விரைந்து சென்று முடிசூடிக்கொண்டான். வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு முடிவுகள் கொண்ட ஒரு போராட்டம் இதன் பின் நிகழ்ந்தது. இறுதியில் மானாபரணன் தோல்வியுற்றான். பின்னர் இவன் தன் நாட்டிற்கு ஓடிமறைந்தனன். அங்கு அவன் இறந்தான். இதன் பின்னர் பராக்கிரமபாகு இரண்டாம் முறையாக முடிசூடினான்.

பெரும் பராக்கிரமபாகு (கி. பி. **1153-1186**) இப்பொழுது இலங்கையின் தனி மன்னனாகினான். ஆயினும் அவன் ஆட்சி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாய் இருக்கவில்லை. இவனது ஆட்சியின் நாலாவதாண்டில் (கி. பி. **1156/7**) மானாபரணனின் தாயாரான **சுகலாதேவி** உறுகுணையில் கலகக்கொடியைக் கிளப்பினள். கலகம் செய்தோருடன் நடந்த போராட்டம் நீடித்ததொன்றாய் இருந்தது. இதன் முதற்பருவத்தில் பற் சின்னமும் கிண்ணச் சின்னமும் கைப்பற்றப்பட்டுப் பொலனறுவைக்கு அனுப்பப்பட்டன. ஊவாவில் செயல் புரிந்த அரசுப்படைகள் கலகக்காரரைப்



உருவம் 14.—" பராக்கிரமபாகு " வின் சிலை, பொலன்னறுவை.


படிப்படியாகத் தீவின் தென்பகுதிக்குக் கலைத்துவிட்டன. இதன் பின்னர் சபரகமுவாவிலும் மேற்குக் கடற்கரையிலும் இருந்து படைகள் வந்து சேர்ந்ததும் கலகக்காரரின் தோல்வி உறுதியாயிற்று. சுகலாதேவியே சிறையாக்கப்பட்டனள். கலகமும் வீழ்ந்தது. ஒரு சிறுபொழுது உ[illegible] அமைதியாய் இருந்தது. ஆயினும் அரசன் ஆட்சியின் எட்டாம் ஆண்டில் (கி. பி. 1160/1 இல்) கலகம் மீண்டும் எழுந்தது.



பராக்கிரமபாகு தனது ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டில் (கி.பி. 1164/5) யானை வியாபாரத்தினாலும் சிங்கள அரசத் தூதுவர்களை நடத்திய தன்மையாலும் எழுந்த பிணக்குக்களினால் இராமண்ணா (பெகு)வின் அரசனுடன் போரிட்டான்.

இவ்வரசன் செய்த மிகப் பெரிய பொல்லாக் குற்றம் இலங்கையிலிருந்து கம்போடியாவிற்கு அனுப்பப்பட்ட ஓர் அரசிளங்குமரியைக் கைப்பற்றியதாகும். பழுவத்தோட்டை என்னும் துறைமுகத்தில் கடற்படை ஒன்று திரட்டப்பட்டது. இப்பழுவத்தோட்டை என்பது திருக்குணமலைக்கு வடக்கே கடற்கரையிலுள்ள பல்லவக்கியாயிருக்கலாம். தென்மேற்குப் பருவக் காற்றுக் காலத்தில் இப்படை கடலோடியது. இக்கடலோடிகள் குசுமிய நகரைத் (பெகு ஆற்றிலுள்ள கொசுமின்) தாக்கினர். இங்கு இப்படை ஐந்து மாதம் தங்கி நின்றது. பின்னர் இராமண்ணாவின் அரசன் கொலை செய்யப்பட்டபின் அமைதி நிலவியது. தளபதி **கிற்று நுவரகிரி** (கிற்ற நகரகிரி) என்பானுக்கு நிலம் கொடுக்கப்பட்டமை கேகாலை மாவட்டத்திலுள்ள தெவனகலையிலுள்ள ஒரு கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்படை எழுச்சியின் பின்னர், கி.பி. 1167/8 இற்கு முன்னர், பாண்டிய மன்னன் பராக்கிரமன் தன் எதிரியான குலசேகரனாலும் சோழராலும் நெருக்கப்பட்டான். அவன் அப்பொழுது இலங்கையின் துணையை நாடினன். அப்பொழுது சிங்கள மன்னன் தன் தளபதி **இலங்காபுரன்** என்பவனின் தலைமையில் ஒரு படையை அனுப்பினன். இதற்கிடையில் பாண்டிய மன்னன் கொல்லப்பட்டு அவன் தலைநகரான மதுரையும் கொள்ளப்பட்டது. எனினும் சிங்களப்படை எதிர்க்கரையில் இறங்கி இராமனாதபுரத்து அயலில் அரியணை கவர்ந்தானுடன் போரைத் தொடர்ந்து நடாத்தியது. இப்படையினர் இராமனாதபுரத்தில் பராக்கிரமபுரம் என்னும் ஒரு கோட்டையினைக் கட்டினர். இப்போராட்டத்தின் பயனாய் குலசேகரன் தோல்வியுறப் பாண்டிய மன்னனின் மகனான **வீரபாண்டியன்** தன் பழைய தலைநகரில் முடிசூடினன். எனினும் குலசேகரன் தொடர்ந்து போர் நடாத்தினன். ஆனால் இறுதியில் இவன் சோழரிடம் புகலிடம் தேடி அவர்கள் துணையை நாடவேண்டியதாயிற்று. மகாவமிசத்தில் கூறியவாறு வெற்றிகொண்டனரோ என்பது ஐயத்திற்குரியது. இலங்காபுரன் வெற்றிகொள்ளப்பட்டு அவனின் தலையும் அவன் தளபதிகளின் தலைகளும் மதுரைநகர் வாயில்களில் ஆணியால் அடித்திருக்கப்பட்டன வென்றும் குலசேகரன் தன் அரியணையைப் பெற்றான் என்றும் சோழப் பதிவுகள் கூறுகின்றன. பாண்டியர் அரசுரிமைப் போர் இத்துடன் நின்றுவிடவில்லை. சோழமன்னன் **இரண்டாம் இராசாதிராசன்** (கி.பி. 1175/6) என்பானது ஆட்சியின் பதின்மூன்றாம் ஆண்டில் சிங்களர் வெற்றிகளைப்பற்றி நாம் மீண்டும் கேள்விப்படுகின்றோம். பின்னர் **மூன்றாம் குலோத்துங்க சோழன்** (1181/2) என்பானின் நாலாவது ஆண்டில் மீண்டும் வீரபாண்டி



உருவம் 15.—இலங்காதிலகை விகாரை, பொலனறுவை.

யன் வெளியகற்றப்பட்டான். சிங்களப் படையினரும் கடலுள் தூத்தப் பட்டனர். ஆயினும் சிங்களர் சிறு காலத்துக்கு இராமேசுவரத்தைக் கொண் டிருந்தனர். எனெனில் **நிசங்கமல்லன், நிசங்கேசுவர** ஆலயத்தைக் கட்டி முடித்ததாக உரிமை கொண்டாடுகின்றான் ஆதலின் என்க.



பு. பி. 1708 இல் (கி. பி. 1165/6) பராக்கிரமபாகு அமைதிதரும் வழிகளில் உழைத்தான். மதகுருக்கள்மாரிடை இருந்த மூன்று பிரிவையும் சிறிது இடர்ப்பட்டு ஒற்றுமை ஆக்கினன். பௌத்தத்தைத் தூய்மைப் படுத்தினன். வைதுலிய முரண்கோள் இலங்கையிலிருந்தும் அறவே மறைந்தது. இவற்றுடன் அரசன் அமைவுறுமல் மதகுருமார் பொருட்டுப் பொலனறுவையில் **சேதவனராமை** என்னும் ஆலயத்தையும் அரண் மனைக்கயலில் வட்டவடிவினதாய **பற்சின்னக் கோயில்** ஒன்றையும் கட்டினன். இன்னும் வடக்கே **ஆலாகன பரிவேண** (சுடுகாட்டுக் கல்லூரி) என்பதையும் **இலங்காதிலகை விகாரை** என்பதையும் கட்டினன். இவ் விலங்காதிலகை விகாரையை இன்றுவரை மக்கள் சேதவனராமை என்று அழைத்தனர். இவற்றுடன் **பத்தசிமா பாசாதம்** – இதைத் துறவோர் இல்லம் என்பர் – என்பதையும் இவன் கட்டினன். இதற்கு அடுத்தாற் போல மகாதூபைக்கு (உண்மையான தெமள மகாசேயா, ஆனல் இன்று இது உலகைலாவெகரை என அழைக்கப்படுகின்றது) அண்மையில் **உத்தராராமை** அல்லது **வடதிசைத் துறவோர் அகம்** என்பதை இவன் நிறுவினன். இது இப்பொழுது **கல்விகாரை** எனப்படுகின்றது. இவற்றேடு **கிளைநகரங்கள்** எனப்படும் நகர்ப்புறங்களில் **இசிப்பட்டண விகாரை, குசினரு விகாரை, வேலு வனவிகாரை** என்பவற்றைக் கட்டினன். அனுராதபுரத்திலுள்ள திரு மனைகளையும் புதுப்பித்தான்.

அரசன் பொலனறுவையை இன்னும் பெருப்பித்து அரண்படுத்தினன். பல அரண்மனைகள், நந்தவனங்கள் ஆகியவற்றை நிறுவி அலங்கரித்தான். அவன் நீர்ப்பாய்ச்சல் வேலைகளிலும் கவனம் செலுத்தினன். அம்பகங் கையிலிருந்து இப்பொழுது **அங்கமிதில்ல எல** எனப்படும் **ஆகாசகங்கைக்** கால்வாயைத் திறந்து **தோபாவாவி** என்பதையும் உள்ளடங்கிய **பராக்கிரம கடல்** என்பதையும் அமைத்தான். இதை அவன் புதுப்பித்துமிருக்கலாம். நாடு முழுவதும் பல குளங்களையும் நிறுவினன். இதன் பின்னர் நீர்ப் பாய்ச்சலைப்பற்றி நாம் அதிகம் கேள்விப்படவில்லை. பழைய நீர்ப்பாய்ச்சல் வேலைகள் அழிவதற்குப் பிறநாட்டாரால் வந்த குழப்பங்களும் பெரும் பாலும் மலேரியா நோய் நாட்டில் தோன்றியதும் காரணங்களாகும்.


இவ்வரசின் உண்ணாட்டமைதி பராக்கிரமனின் பதினாறும் ஆண்டில் (கி.பி 1168/9) **மகாதிட்ட** (மாந்தோட்டம்) என்பதற் கருகாமையில் நடந்த கலகத் தால் குழப்பமுற்றது. கி. பி. 1186 வரையில் முப்பத்து மூன்று ஆண்டுகள் அரசாண்டபின் அரசன் இறந்தான். இவன் ஆட்சி சிங்களர் பெருமையின் உச்சிக்காலத்தைக் காட்டுகின்றதெனக் கருதப்படுகின்றது. உண்மையில் இவ்வாட்சிக் காலம் மிக்க உயர்வானதே. ஆனல் இடையருப் போர்களும், (சிறப்பாகப் பாண்டிய அரசுரிமைப் போர்) அளவற்ற கட்டிடங்களும் நாட்டினை வறுமைப் படுத்திவிட்டன. நாடு இவ்வறுமையில் இருந்து ஒருபொழுதும் மீட்சியுறவில்லை. இவ்வரசன் இறந்து சில ஆண்டுகளின் பின்னர் இவன் பின்

அரசெய்திய **நிசங்கமல்லன்** தனக்கு முன்னிருந்த அரசனால் மக்கள்மேல் விதிக்கப்பட்ட பெரும் வரிப்பழுவினைக் குறைத்துவிட்டதாகத் தெரிகின்றது. இக்காலத்திலிருந்த வறுமைக்கு அக்காலத்து வழக்கிலிருந்த பெரும் பொன் நாணயம் முற்றாக மறைந்துவிட்டமையே சான்றாகும். பராக்கிரம பாகு வல்லவனாயிருந்தும் தமிழ்ப் படைஞரையும் பணிக்கமர்த்தினன் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பராக்கிரமனின் பின் அவனின் உடன் பிறந்தான் மகனான **பண்டித விசய பாகு** அரசெய்தினான். இவன் ஒரு கற்றோனாவன். இவன் இராமண்ணா வின் மன்னனுக்குப் பாளிமொழியில் ஒரு முடங்கல் வரைந்தனன். இவன் ஓராண்டு அரசாட்சி செய்தபின் மாட்டிடையன் ஒருவனின் மகளோடு கொண்டிருந்த ஒரு தொடர்பினால் **மகிந்தன்** என்பான் ஒருவனால் கொல்லப் பட்டான். இம்மகிந்தனும் உடனேயே விசயபாகுவின் இளவரசனான **நிசங்க மல்லனால்** கொல்லப்பட்டான்.

**நிசங்கமல்லன்** (கி. பி. 1187–1196) ஒன்பது ஆண்டுகள் அரசாண்டான். அவன் கி. பி. 1157/8 இல் கலிங்கத்தில் உள்ள சிங்க புரத்தில் பிறந் தான். இவன் முதலாம் பராக்கிரமபாகுவிற்கு மாப்பிள்ளையாய் அல்லது மருமகனாய் இருக்கலாம். பராக்கிரமபாகுவே, அவன் சொந்த நாட்டி லிருந்து அவனை இலங்கைக்குக் கொண்டுவந்தவன். தூய கலிங்க குலத் தாருள் இவனே முதல்வன் ஆவான். பொலனறுவையிற் பல்கிக்கிடக்கும் அவன் பொறிப்புக்களில் இலங்கையின் முதன்மன்னனாம் விசயனின் பழங்குலத்தோடு உரிமைபூண்டு இலங்கை அரசுகட்டிலுக்குக் கலிங்க குலத் தவரே உரிமையாளர் என்பதை நன்கு உள்ளுறுத்தியுள்ளான். அவனு டைய பதிவுகள் அளவுக்குமீறிய புகழ்ச்சி கொண்டிருக்கின்றன. பராக் கிரமபாகு கட்டிய பல கட்டிடங்களைத்தானே கட்டியதாகவும் அவன் பெருமையாகக் கூறிக்கொள்வான். பௌத்தமதக் குருக்கள்மாருள் இருந்த மூன்று பிரிவினர்களையும் தானே ஒற்றுமைப்படுத்தியதாகவும் பாண்டிய நாட்டின் மீது மூன்று முறை படையெடுத்ததாகவும் அவன் பெருமை கூறிக்கொண்டான். பொலனறுவையில் **உறுவன்வெலி தாகபை** (இப்பொழுது இரங்கொட்டுவெகரை) என்பதையும் ஒரு புதிய **பற்சின்னக் கோவிலையும்** அவன் கட்டினன் என்பது உண்மையே. அப்பற்சின்னக் கோயிலைக் கட்ட அறுபது மணி நேரம் சென்றது எனக் கூறப்படுகின்றது. தம்பளையிலுள்ள **குகைக்கோயிலை** இவன் அழகுபடுத்தினான். இவனாற் கட்டப்பட்டதென்று சொல்லப்படும் **வட்டச்சின்னமனை** (வட்டதாகே) என்பது உண்மையில் வேறு நோக்கத்திற்காக இவனால் மாற்றி அமைக்கப்பெற்ற பராக்கிரமனின் பற்சின்னத் திருமனையே ஆகும். இவன் பின் அரசு பெற்றவன் இவன் மகன் **வீரபாகு** ஆவன். இவன் ஓர் இரவே இருந்தான்.





உருவம் 16.—கிரிவெகரை தாகபை, பொலனறுவை.

இதன் பின்னர் ஒரு படை ஆட்சிப் பருவம் தோன்றுகின்றது. பிறரால் ஏற்படுத்தப்பட்ட பொம்மை அரசர் யாவரும் கலிங்க இனத்தவரேயாவர். இவருட் குறிப்பிடத்தக்கவன் நிசங்கனின் ஒருவழி உடன்பிறந்தா*னான

*half-brother

**சாகசமல்லன்** என்பானாகும். இவன் முடிசூடிய நாளாகிய கி.பி. 1200 ஓகஸ்ட் இருபத்து மூன்று ஆகிய நாளே இலங்கை வரலாற்றில் உறுதியாக வரையறுக்கப்பட்ட முதல் நாளாகும். இதனாலேயே சாகசமல்லன் ஆட்சி குறிப்பிடத்தக்கதாயது. சிறு குழந்தையாய் இருந்த **தருமாசோகனின்** தந்தையான **அனிகங்கன்** என்பான் சோழநாட்டில் இருந்து ஒரு படையுடன் இலங்கைக்கு வந்து தன் மகனையும் உண்மையில் அரசாண்ட தளபதியையும் கொன்றான். இவன் பதினேழு நாட்களுக்கே ஆணை செலுத்தினன். அதன்பின்னர் பிறிதொரு தளபதி பராக்கிரமபாகுவின் கைம்பெண்ணை **இலீலாவதியை** அரசியாக அமர்த்தினன். முன்னொருமுறை இவள் பெயரளவில் ஆண்டுவந்தாள். இவளின் இரண்டாவது ஆட்சி **உலோகிசரன்** என்பான் ஒருவனாற் குழப்பப்பட்டது. இவன் தமிழன் ஒருவன் துணையோடு பொலனறுவையைக் கைப்பற்றி ஒன்பது திங்கள் வைத்திருந்தான். அரசி இப்பொழுது பிறிதொரு தளபதியின் துணைகொண்டு அரசினைக் கைப்பற்றினாள். ஆனால் மிக்க விரைவாகப் பராக்கிரமபாண்டியனால் வெளியகற்றப்பட்டான். இவன் சிங்கள அரச குலத்துப் பாண்டியக் கிளையினருள் ஒருவனாய் இருக்கலாம். இவன் உறுதியான ஓர் அரசனெனத் தோன்றுகின்றது. மூன்றாண்டுகள் இவன் அரசாண்ட பின் கி.பி. 1215 அளவில் இவன் **மாகன்** என்பவனால் பதவி நீக்கப்பட்டுக் குருடாக்கப்பட்டான். மாகன் என்பான் கலிங்க இனத்தோன்றலாவான். இதற்கு முன்னர் அரசாண்ட தன் இனத்தாரின் வழிவந்த உரிமைகோரி, கேரளர் பலர் சேர்ந்த ஒரு பெரும் படையுடன், இவன் இலங்கைக்கு வந்தனன். இவன் மூட நம்பிக்கை கொண்ட இந்து மதத்தினனாய் இருந்து, பௌத்த மதத்தினரைத் துன்புறுத்தி ஆலயங்களை அழித்து நிலங்களைத் தன்னவர்க்குக் கொடாதிருந்திருப்பானேல் மக்கள் அவன் ஆட்சியை ஏற்றிருப்பர். இதற்கு முன் இருந்த அரசின்மைக் காலத்தில் பற் சின்னமும் கிண்ணச் சின்னமும் கொத்துமலைக்கு எடுத்துச் சென்று ஒளிக்கப்பட்டன. மதகுருமார் வெவ்வேறு திசைகளில் சென்றனர். பலர் சோழ பாண்டிய நாடுகளுக்குச் சென்றனர். மாகன் இருபத்தொரு ஆண்டுகளுக்கு (கி.பி. 1215–1236) அரசாண்டான்.

## பாலனம்

முதலாம் பராக்கிரமபாகு வந்த பின் நாட்டின் அரசாட்சியைப் பற்றி நாம் மீண்டும் நன்கு அறிந்துகொள்ளக்கூடியதாய் இருக்கிறது. தென்னாட்டு ஆட்சியாளனாய் இருக்கின்ற காலத்திலேயே இவன் தன் சிற்றரசின் பாலன முறையைத் திருத்தி அமைத்தான். தன் சிற்றரசில் புகுத்திய சீர்திருத்தங்களையே முழு நாடாளும் முடியேற்றபின், முழு நாட்டாட்சியிலும் இவன் பின்னர்ப் புகுத்தினன். இவனுடைய காலத்துக்கு முன்னர் இளவரசனின் நாடு இலங்கையின் அதிகார்கள் எனப்படும் ஈர் அமைச்சர்களால் ஆளப்பட்டு வந்தது. இவர்கள் பிற்காலத்துக் கண்டியர் ஆட்சியில்



இருந்தவாறு, ஆளும் நிலத்து மேற்பார்வையைத் தங்கள் இருவர்க்கிடையிலும் பிரித்துக் கொண்டனர். நல்ல வருவாயைப் பெறும் நோக்கத்தோடு பராக்கிரமன் உயர் பெறுமானமுள்ள எல்லா நிலங்களையும் பிரித்து ஒன்றாக்கி மூன்றாவது ஓர் அமைச்சனின் தலைமையில் வைத்தனன். இந் நிலங்கள் அரசிற்குரிய ஊர்களாய் இருந்திருக்கலாம். இவை பிற்காலத்தில் என்றும் நல்வளமுள்ள நிலங்களைக் கொண்டிருந்தன. இந்த மூன்றாம் அமைச்சனே பதினாலாம் நூற்றாண்டில் அரண்மனைக்குப் பொறுப்புள்ள **அதிகார்** என்று அழைக்கப்பட்டவனாவன். இக்காலத்துக்குரிய பன்னிரண்டு **ஆள்வார்**, எண்பத்து நாலு சிறுமாவட்ட ஆட்சியாளர், எல்லைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் என்பவரைப்பற்றியும் நாம் அறிகிறோம். இவர்கள் யாவரும் படை ஆணை பெற்றிருந்தனர். சிலவேளைகளில் குடிக் குழு ஆணையும் இவர்கள் பெற்றிருந்தனர். அரசின் பெரும் அலுவலகங்களையும் நாடு முழுவதும் இருந்த ஊராட்சியோடு தொடர்புடைய எல்லா அலுவல் பகுதிகளையும் பராக்கிரமன் நிறுவியிருக்கலாம் அல்லது திருத்தி அமைத்திருக்கலாம் என **நிகாயசங்கிரகம்** கூறும். இவன், இளவரசன் நாடு, உறுகுணை ஆகியவற்றில் செயன்முறையில் இருந்த தன்னாண்மையை ஒழித்துத் தீவு முழுவதற்கும் மையப்பட்ட அரசாங்கத்தை நிறுவி இருக்கலாம்.

சென்ற அதிகாரத்தில் கழகம் என்பதைப்பற்றி நாம் அறிந்தோம். பொலனறுவையிலுள்ள நிசங்கமல்லனின் கழகக் கூடத்துத் தூண்களிலுள்ள பொறிப்புக்கள் நல்ல காலமாக, இக்கழகத்தில் அடங்கிய உறுப்பினர் பற்றித் தெளிவான செய்திகள் தருகின்றன. இவர்கள் பின்வருவோராவர்: யுவராசா, இவன் **மாபா** அல்லது இளவரசன் எனப்படுவன்; **ஏபாக்கள்** அல்லது அரசிளங்குமரர்; "**செனிவிரத்**" அல்லது தலைமை ஆணையன், எப்பொழுதும் இவன் அரசகுலத்தவனாய் இருப்பன்; **அதிகார்கள்** அல்லது முக்கிய தலையோர்; **தலைமைச் செயலாளர், அவர் கீழ் அலுவலாளர்,** இவர்கள் யாவரும் அரசனின் வலப்பக்கத்தில் இருப்பர்; மாநிலம் ஆள்வார்; மாவட்டத் தலைமையோர்; வணிகத்துறைத் தலைவரான "சிதுன" என்பார் தலைமையிலமைந்த முக்கிய வணிகர்; இவர்கள் எல்லோரும் அரசனின் இடப்பக்கத்திலிருப்பர். இவ்வளவு அறிந்தும் இச்சபையோரின் அதிகாரத்தைப் பற்றி நாம் ஒன்றும் அறியோம்.

இந்தியாவில் வரன்முறையாகவந்த நாற்படையானது **யானை, குதிரை,** தேர், **காலாட்படை** ஆகியோரைக் கொண்டிருந்தது. இலங்கையில் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு, முந்திய காலத்தில் போரிடும் மன்னன் வழக்கமாக யானைமேல் இருந்தானெனப் புலப்படுகின்றது. அவனின் அரசு கொற்றக் குடையே படையினரை ஈர்த்து ஒன்றுசேர்க்கும் மையமாக விளங்கியது. தென்னிந்தியாவிலுள்ள வழக்கத்தைப்போல், அரசன் புறமுதுகிட்டு ஓடினால் அல்லது இறந்தால் அவன் படை புறமுதுகிட்டு ஓடியதாகக் கருதப்படும்.

இதற்கு எடுத்துக்காட்டாக முதலாம் காசபனை அவன் உடன்பிறந்தான் வென்ற வரலாற்றைக் கூறலாம். சிலவேளைகளில் அரசர்கள் குதிரைமீது அமர்ந்து வருவதும் உண்டு. ஆனால் இவை பெருவிலை கொடுத்து இறக்குமதி செய்யப்படுவதால் தென்னாட்டில் இவை போகப் பொருள்களாகக் கருதப்பட்டன. பன்னிரண்டாம் நூற்றாண்டில், இலங்கையில் யானைகள், தேர்கள், காலாட்படைகள் ஆகியவற்றைக் கொண்டு அமைத்த படை அலகுகள் இருந்ததாகத் தெரியவில்லை. உண்மையில் நாட்டின் பலபகுதிகளில் அடர்ந்து வளர்ந்த மரங்கள் செறிந்திருந்தனவாதலாலும் இவற்றிற்கூடாகவே போர் நடந்ததாலும் இத்



உருவம் 17.—நிசங்கமல்லனின் அரியணை.


தகைய படையலகுகளை அரசர் பயன்படுத்தி இருப்பார்கள் என்பது ஐயத்திற்குரியது. ஆனால் போத்துக்கேயர் காலத்தில் கீழ் நாட்டில் முற்றுகையிடுவதற்கும் படையில் முன் செல்வதற்கும் யானைகள் பயன்படுத்தப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இப்பொழுது நாம் ஆராயுங் காலத்தில் ஒரு படைப் பகுதி, காலாட்படையையும் பொருள் ஏற்றிச் சென்ற வண்டிகளையும் கொண்டிருந்தது. தளபதிகள் பல்லக்கில் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் சின்னமான குடை அவர்களை எடுத்துக் காட்டியது. படையின் பெரும் பகுதி பிற்காலத்தைப்போலவே முற்காலத்திலும்



அவ்வவ்விடங்களில் திரட்டப்பட்ட மக்களைக்கொண்டிருந்தது. இவர்களுக்குப் பக்கபலமாக வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு தானைகள் சேர்க்கப்பட்டன. இத்தானைகளுள் இரவு வேலைக்காகச் சேர்க்கப்பட்ட நிலாவில்லிகள், கதை பூண்ட பட்டாளத்தார் ஆகியோர் போன்றவர்கள் இருந்தனர். இவர்கள் முதலாம் பராக்கிரமபாகுவால் அமைக்கப்பெற்ற திறலுடைக் காலாட்படையினரின் எட்டுப் பகுதியினராய் இருக்கலாம். அயலாரின் கருத்திற்கிணங்க இப்படைகளின் ஆற்றல் மிகக் குறைவாய் இருந்தது. மாக்கோப்போலோ தம்முடைய காலத்தில், அதாவது பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சியாளர் சரசன்களை, முகமதியக் கூலிப்பட்டாளத்தினரை, சேவைக்கமர்த்தினர் எனக் கூறுகின்றார் (நூல் iii. தலை 14). முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இலங்கைப் பதிவுகள் கன்னடர், கேரளர், தமிழர் ஆகியோரைப் பெயர்கொண்டு குறிக்கின்றன. முதலாம் விசயபாகு காலம் தொட்டே வேளக்காரப் படையினர் இருந்துளர். பதின்மூன்றும் நூற்றாண்டில் இராசபுத்திரரைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

படைக்குப் பயன்படுத்தப்பட்ட கலங்கள், வாள்கள், ஈட்டிகள், வேல்கள், அம்பு வில்லுகள் ஆகியனவாம். வில்லுகள் சில வேளைகளில் நஞ்சூட்டப்பட்டிருந்தன. காப்புக்காகப் படைஞர் பரிசையைப் பயன்படுத்தினர். மகாவமிசம் ஓர் இடத்தில் படைஞன் ஒருவனின் கவசம் எருமைத் தோலால் ஆயது என்று கூறுகின்றது. தோலாலாய மெய்ப்பைகளும் நிலாவில்லிகளுக்குக் கொடுக்கப்பட்டன. பின்னர் மேற்சட்டைகளைப்பற்றியும் குறிக்கப்பட்டுள்ளது. பதினாலாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துப் படைகளின் கவசம்பல நிறங்களையும் கொண்டிருந்தது. ஒருவேளை ஒவ்வொரு படையும் தனித்தனி நிறத்தைக் கொண்டிருந்திருக்கலாம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடந்த உள்நாட்டுக் கலகங்களில் ஒருவேளைய கோட்டைகள் பெரும் பங்கெடுத்தன. இத்தகைய அரண்கள் "யானைகளாலும் அசைக்க முடியாதவை." இவை கம்பக்கோட்டைகளையும், ஒரு வாயிலையும், சுற்றிலும் முட்கள் நிறைந்த ஒரு அகழியையும் கொண்டிருக்கும். சூழ்ந்துள்ள காட்டிலிருந்து வரும் அணுகுவழிகள் எல்லாம் மரங்களால் இடைமறிக்கப்பட்டிருக்கும். ஒருமுறை, கூரிய மான்கொம்புகளைக்கொண்ட விடுடை உள்வர்கள் இத்தகைய அரண் ஒன்றைத் துளைத்துப் புகுமாறு ஏவப்பட்டனர். மகாவமிசம் பெருமளவில் ஒரு கோட்டையைப்பற்றிக் கூறியுள்ளது. அளவிலா வலிமை கொண்ட ஓர் அரணில் நான்மாடங்கொண்ட ஒரு நடுக்கோபுரத்தைச் சுற்றி ஒருமைய வேலியரண்கள் இரண்டு இருந்தன. இவற்றிற்கிடையே இருபதிலிருந்து முப்பது முழவகலமுள்ள பெரும் அகழி இருந்தது. இவ்வகழி முட்களும் ஈட்டிகளும் நிரப்பப்பெற்றிருந்தது. இவ்வகழி 700 அடிச் சுற்றுடையதாய் இருந்தது. வெளிப்புறத்து வேலியரணுக்கு அப்பால் இதைப்போன்ற பிறிதோர் அகழி இருந்தது. இதற்கப்பால் ஓர் ஈட்டி வரிசையும் ஓர் முள் வேலியும்




நாட்டுப்படம் IV.



இருந்தன. இதற்கு வெளிப்புறத்தே இன்னும் ஆழமான ஓர் அகழி இருந்தது. இவை யாவற்றையும் சுற்றிக் காட்டை அழித்து வெளியாக்கிய இடம் இருந்தது. இதற்கு வரும் வழிகள் எல்லாம் ஆங்காங்கு அகழப்பெற்ற குழிகளில் மறைந்திருந்த வில்லிகளால் பாதுசாக்கப்பட்டிருந்தன. இத்தகைய கோட்டைகளில் எந்திரங்களில் இருந்து வீசப்பட்ட கற்களைப்பற்றியும் நெருப்பூட்டப்பட்டுப் பகைவர்மீது எறியப்பட்ட கற்றைகளைப் பற்றியும், எரியெறி படைகளைப்பற்றியும் நாம் அறிய வருகின்றோம்.

நகர்களிலே நிலையான அரண்கள் காணப்பட்டன. பன்னிரண்டாம் நூற்றுண்டில் பொலனறுவையிலும் பதின்மூன்றும் நூற்றுண்டில் குருநாகல், வாடகிரி ஆகிய இடங்களிலும், இருந்த மதிலரண்கள், காவற்சிகரங்கள், வாயில்கள், வாயிற்சிறைகள் ஆகியவற்றைப்பற்றி அறிகிறோம். அடுத்த நூற்றுண்டில் கோட்டை (தலைநகர்) பெரும் அரண்கள், மதில் அரண்கள், காவல் சிகரங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இவை ஈட்டிகள், ஈட்டிப்பந்துகள் ஆகியவற்றுல் காவல் செய்யப்பட்டன. இத்தகைய அரண்களுக்கு எதிராகப் போரிடவரும் தமிழ்ப் படைஞர் நஞ்சு தோய்ந்த அம்புகளுக்கு எதிராகத் தம்மைப் பாதுகாக்கும் பொருட்டுப் பின்னல் தடுப்புகளும் கவசச் சட்டைகளும் அளிக்கப்படுவர். இவை ஒரு வேளை தொடர்ந்து நடைபெறும் முற்றுகை வேலைகளுக்காக இருக்கலாம். பெரும் பாதைகளிலே சூழ்ச்சிக்கு உதவும் நிலைகளில் உள்ள காவல் நிலையங்களே, நிலையான சிறு பாதுகாப்புக்களாகும். இவை முள்வேலி, கதவுநிலையில் தூக்கப்பட்ட இயங்கும் தடுப்பு ஆகியவற்றை வழியில் அமைக்கப் பெற்றவையாய் இருக்கும். இவை சில வேளைகளில் பக்கங்களில் சுவர்களைக் கொண்டிருக்கும். இக்காவல் நிலையங்கள் 1815 ஆம் ஆண்டு வரை வழக்கில் இருந்துவந்தன.

### 4 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பொதுச் சரித்திரத்திற்கு **மகா. பூசா.** பார்க்க. சோழர் இருப்பிற்கிடையுள்ள காலத்திற்கு **தெ. இ. பொ. ii.** எண் 9; **iii. i.** எண் 28, 29 ; **வே. ஆ. ச. ச.** 1913, ப. 519. தொடர்.

**முதலாம் விசயபாகு.** அம்பகமுவைப் பொறிப்பு (**எ. சி. ii.** எண் 35). அவன் தந்தையை அரசன் அபாசலமேவன் ஆக்குகின்றது. மொகலானு பெயரளவில் அரசனுயிருத்தல்கூடும் ; ஏனெனில் ஐந்தாம் மகிந்தனுக்கும் (சிறீ சங்கபோ) விசயபாகுவிற்கும் (இவனும் சிறீ சங்கபோ) இடையில் ஒரு அபாசலமேவன் தேவைப்படுகிறதாதலாலும் விக்கிரமபாகு முடியை ஏற்க மறுத்ததாலும் என்க. இது இவ்வாறுயின் விசயபாகுவின் யுவராசாப் பட்டம் விளக்கமுறும். மொகலானு தன் மகன் முடிசூடமுன் இறந்திருக்கலாம். வளவையில் உள்ள மகாநாககுளத்திற்கு **மானுவுலு சந்தேசய** (**வே. ஆ. ச. ச.** 1905) பார்க்க. விசயராசபுரத்திற்கு வேளக்

காரப் பொறிப்பு பார்க்க (**இ. தொ. அ. 1911–12, ப. 111 ; வே. ஆ. ச. ச., இ. கி. xxix.** எண் **77.** ப. **266**), கப்புறு வெடு ஓயா பதிவேடு (ப. பா. **53**). இங்கு முதற்குறிக்கப்பட்ட பதிவேடு அரசனின் வயது, அவன் பிறந்த உண்மையான நாளின் முதல் நட்சத்திரம் யாவையும் அறிவிக்கின்றது. கந்தவுரத்தில் அதாவது பொலனறுவையில் பற்சின்னமனை கட்டப்பட்டது, **தலதா பூசாவலியில்** உள்ளது.

**சயபாகு.** திம்புலகல, எச். சி. பி. பெல், **இ. தொ. x.** பகுதி. **i.** ப. **10** தொடர் பார்க்க. அவனின் ஆட்சியில் தமிழ்ப் பதிவேடுகட்கு **இ. தொ. அ. 1911–12.** ப. **113** தொடர் பார்க்க.

**முதலாம் பராக்கிரமபாகு.** அரசுகட்டிலேறுமுன் அவன் நடாத்திய போர்களுக்கு இலங்கை இடவிளக்கம் பற்றிய குறிப்புக்கள் (ப. பா. 15) பார்க்க. கசபாகுவோடு கொண்ட இணங்கருக்கு (**மகா. lxxi. 1–5**) **எ. சி. iv.** எண் **l** பார்க்க. **மகா. lxviii.** இல் கூறப்பட்ட நீர்ப்பாய்ச்சல் வேலைசன் தெதுரு ஓயாவிலும் அதன் அயலிலும் ; விசயசிங்க கருதியவாறு சபாகமுவாவிலன்று. அரசனின் நாலாம் ஆட்சியாண்டுக் காலத்தில் பற்சின்னம் பெற்றதற்கும் சுகலா தேவியின் கலகத்திற்கும் **தலதா பூசாவலி, வே. ஆ. ச. ச., இ. கி. xxx.** எண் 78 ப–ள். 70 தொடர் பார்க்க. உறுகுணையில் பற்சின்னம் வைக்கப்பட்டிருந்தபொழுது உடுந்தொரை அமரகிரியில் வைக்கப்பட்டிருந்தது ; இது பழைய காலத்து ஒரு சிங்களக் கவியால் மொனரகலையின் பெயரென அறியக் கிடக்கின்றது. **மகா. lxxiv., lxxix.** ஆகியவற்றில் உள்ள பாளிப் பெயர் உருவேலை **பூசா.**வால் எருமலவாவி எனக் கூறப்பட்டுளது ; இதுவே இப்போதுள்ள எடிமோலை. குசுமியாவிற்கு ஒபுசன் யோன்சன் கோதமின் என்ற பெயரின்கீழ் பார்க்க. வெற்றிபெற்ற தளபதிக்கு அளித்த கொடை **கேகாலை மாவட்டத்து அறிக்கை** ப. 75 இல் கொடுக்கப்பட்டுள்ளது. பாண்டிய அரசுரிமைப் போர் பற்றி சோழர் பொறிப்புப் பார்க்க, **ஆ. க. அ.** எண் 20, 1899, அந்நூல் 1899–1900 பந்தி 38, அந்நூல் 1905–6, ப. 70. **தெ. இ. பொ. iii.i.** எண் 86, 87, 88. **எபி. இந். vii.** ப. 169. இலங்காபுரனிற்கு நடந்ததறிய பல்லவராயன் பேட்டை பொறிப்பு 8, இரண்டாம் இராசாதிராசன் தேதிகொண்டது (**1170–1**) **ஆ. க. அ. 1924,** எண் **433** பார்க்க. நிசங்கேசுவரக் கோயில் பற்றி **எ. சி. i.** எண் **9 ; ii.** எண் **17** கூறுகின்றன. பு. பி. **1708** பெருங் கூட்டத்தைப்பற்றி **தலதா பூசாவலியில்** குறிக்கப்பட்டுள்ளது. பொலனறுவையில் உள்ள பராக்கிரமபாகுவின் கட்டிடங்கள் பற்றி **மகா. lxxviii.** வில் உள்ள ஒழுங்கு இடவிளக்கம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்வது. இத்தகைய ஒழுங்கான முறையில் **அதி. lxxix.** பாடல் **14–60** மன்னன்நாடு பற்றியும் பாடல் **61–70** யுவராசன் நாடு பற்றியும் பாடல் **71–85** உறுகுணை பற்றியும் கூறுகின்றன. அங்கமெடில எலா வழி உள்ள குளங்களின் சுட்டத்தை நான் பராக்கிரமக் கடல் என நினைக்கிறேன். கரையோரங்களில்



குளங்களின் நீளங்களை அறிவிக்கும் தூண்கள் இன்றும் உள்ளன ; பாடி (பதவியா), கனடியதோரா (மகா கனடரவா), கலே (காலவேவாக்குளம்) என்பன அவை. பராக்கிரமன் அரசனுகுமுன் யுவராசன் நாட்டில் இன்னொரு பராக்கிரமக் கடல் (பாண்டிவவ) இருந்தது. (**மகா. lxviii.**) பெயர் பெரும் அளவைக் குறிப்பதில்லை. ஏனெனில் கண்டிவாவி அனுலவன்முறையில் கிரிமுகுட (பாற் கடல்) என அழைக்கப்பட்டது. உரு. **15,** சிலை அகத்திய முனியினதாகும். **IV** ஆம் நாட்டுப் படத்தில் உள்ள இடங்கள் பிணக்கின்றி ஒத்துக்கொள்ளப்பட்டவையல்ல.

மலேரியா நாட்டில் தோன்றியது பற்றி **1592** ஆம் ஆண்டு **பிளான்கியசு** தேசப்படத்திலிருந்து அறியலாம். அங்கு போத்துக்கேய மொழியில் பின்வருமாறுள்ள குறிப்பொன்று காணப்படுகின்றது. யல அரசின் உடலைக் குறைவு மிகுந்தமையால் 300 ஆண்டுகட்கு மனிதர் அங்கிருந்தும் வெளியேறினர். இது இலங்கையின் தென் கிழக்கில் உள்ள யாலையாகும்.

**நிசங்க மல்லன்.** இவனின் பிறப்பு பு. பி. **1700,** கல்பொத்தைப் பொறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது (**எ. சி. ii.** எண் **17**). இத்தேதியே அவன் இலங்கை வந்த நாள் என்று எடுத்தால் குருமாரை அமைவுபடுத்தினதாக அவன் கூறிக்கொள்வது பொருந்தக் கூடியதாக இருக்கின்றது. இது **1708** இல் நடந்தது. இவன் தான் விசயனின் வழித்தோன்றல் என்று உரிமை பாராட்டுவது கலிங்கத்திலுள்ள சிங்கபுரத்தோடு சிங்கபாகுவின் தலைநகரை மயங்க வைத்தலாலும் விசயனின் அடிமரபில் கலிங்கத்தைப் புகுத்தியதாலுமாகும்.

**சாகச மல்லன்.** இவன் அரசெய்திய தேதிக்கு **எ. சி. ii.** எண் **98,** பிளீற்று – புத்தவருசம், **வே. ஆ. ச. ச. 1909,** ப. **323** பார்க்க. இப்பருவத்துக் காலவியலுக்கு **இ. தொ. iv.** ப–ள். 33,35, **x.** ப. 98 பார்க்க. அரசுமுறைமைக்கு **மகா.** lxxix. **இ. தொ. அ.** 1900, ப. 9 (**இ. ப. பொ. 146**), **வே. ஆ. ச. ச., இ. கி.** xxix. எண் 77. ப. 304 பார்க்க.

படைஇயல் வியனங்களில் **மகா.**வில் பின்வரும் குறிப்புக்கள் உதவும். xxxix. 25 தொடர் ; xliv. 19 ; 1.25 ; lxix ; lxx. 82, 100, 159, 168–169 ; lxxii. 266 தொடர் ; lxxiv. 32, 73 ; lxxv. 33 ; lxxvi. 48. கைதேர்ந்த காலாட்படைக்கு **நி. ச.** ப. 20 பார்க்க. **மகா.**வில் மூன்று பந்திகளில் ஒருபடைப்பகுதி சயோக – பல – வாகன என்று கூறப்பட்டுள்ளது. கடவுளர்க்கு வாகனம் என்பது விலங்கும் தேருமாகும். இங்கு வண்டிவிலங்கு, மனிதர் என்பவற்றை புடை பெயர்ச்சி, ஊர்தி ஆகியவற்றிற்குரியவென மொழிபெயர்க்கலாம். “யானை” என்பதை விசயசிங்க தேர் “வண்டி” எனமொழி பெயர்த்துள்ளார். **மகா.** lxx. 85, 122, ஆனால், அதி. XC. 5–8 இல் வருவது மக்களை ஏற்றிச் சென்ற பொருள் பல்லக்கு எனத் தெளிவாய் அறியக்கிடக்கின்றது. **மகா.** lxix. தோல்

மெய்ப்பை "சம்ம வம்ம" எனப்பட்டது. காப்புமேலாடை கவசம் எனப்பட்டது. (சிங். கவட); சங்கிலிக் கவசத்திற்கு சிங்களப்பெயர் (தெலுசங்கதம், யாலக.) 15 ஆம் நூற்றாண்டின் **உருவன்மாலை**யில் தோன்றுகின்றது. இது மகுடத்தையும் பற்றிக் கூறுகின்றது. பலநிறக் கவசத்திற்கு **நி. ச. ப.** 26 பார்க்க. நடுக்காலக் கூலிப்படையினர்க்கு அதுபற்றி **இலங்கை இலக்கியப் பதிவேட்டில்** வந்த கட்டுரை பார்க்க. பதிவேடு iii. (1934), ப. 385.

பெரிய கோட்டையைப் பற்றி **மகா.** lxxii. 266 தொடர் கூறுகின்றது. பொலனறுவை அரண்களுக்கு **மகா.** lxx. 190; lxxiii. 57 தொடர் பார்க்க. குருநாகல், வாடகிரி ஆகியவற்றிற்கு **பூசா.** (பதி. 1932); கோட்டைக்கு, **நி. ச. ப.** 25. முன் வாயிலுக்கு "கண்டக துவார வாடக" என்னும் பெயரை **மகா.** lxxiv. 85 பார்க்க. நொட்சு, நூல் ii. அதி. iv. "கிரவெற" என்னும் சொல் போத்துக்கேயத்திலிருந்து வருகின்றது. இதே சிங்களச் சொல் "கடவத்த" என்பதிலிருந்து வந்தது.

*அதிகாரம் 5*

# தம்பதெனி, கம்பளை மன்னர்கள், 1215 – 1412

பொலனறுவையில் கலிங்கநாட்டு மாகன் அரசாள்கின்றபொழுது **மூன்றும் விசயபாகு** (கி. பி. 1220வ.–1224) என்னும் சிங்கள அரசிளங்குமரன் ஒருவன் மெள்ள மெள்ளமாகத் தன்கையில் அதிகாரங்களைச் சேர்த்துக்கொண்டு மாயா நாட்டில் இருந்து அந்நியரை வெளியகற்றுவதில் வெற்றி பெற்றனன். அக்காலத்துக்குரிய பதிவுகள் அவன் சிறீ சங்கபோ குலத்தவன் என்று கூறுகின்றன. சில இன்னும் விரிவாக அரசமரத்தை இந்நாட்டுக்குக்கொண்டு வந்த அரசர்வழி உதித்த **விசயமல்லனின்** மகன் என்றும் கூறுகின்றன. எனினும் இவன் மகன் தான் யாத்த 'கவிசிருமின' என்னும் கவிதையில் தாங்கள் திங்கள் இனத்தவர் என்றும் பாண்டுமன்னன் வழிவந்தவர் என்றும் உரிமை இவ்வாறாக, விசயபாகு கொள்கின்றான். அரசகுலத்துப் பாண்டியன் இளையனாய் இருக்கலாம் அல்லது அக்குலத்தாருள் ஒருத்தியை மணந்தவனாய் இருக்கலாம். இதன் பின்னர் இடைக்காலத்து மன்னர் யாவரும் தங்கட்குச் **சிறீ சங்கபோ** என்ற **பட்டத்தைச்** சூட்டிக்கொண்டனர்.

இவ்வாறு தன் வாழ்வின் இறுதியில் மேலாண்மையைப் பெற்றுக் கொண்ட சிங்கள மன்னன், குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதெனியைத் தன் தலைநகர் ஆக்கினான். பின்னர் இந்தியாவிலிருந்தும் ஓடிப்போன குருமார்களை அழைத்துக் கொத்துமலையில் மறைத்து வைக்கப்பட்ட



பல், கிண்ணச் சின்னங்களை அரசிருப்பிடத்திற்கு எடுத்துச் சென்றனன். பின்னர் கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகலைக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டன. இங்கு அவை பாதுகாப்பின் பொருட்டு வைக்கப்பட்டிருந்தன. அவன் திருமறைகளைப் புதிதாய் எழுதுவித்தான். தலைநகரில் விசய சுந்தராராமை எனும் தன் பெயர் கொண்ட ஒரு கோயிலைக் கட்டுவித்தான். இவன் பல கோயில்களையும் புதுப்பித்தான். குருமார்களின் ஒழுக்கத்தைப்பற்றி அவன் நிகழ்த்திய பேரவை 1222ஆம் ஆண்டில் நடந்ததுபோல் தோன்றுகின்றது. இவன் நான்கு ஆண்டுகளே அரசாண்டான். தான் இறக்குமுன் சிறுகுழந்தைகளாய் இருந்த தன் மக்கள் **பராக்கிரமபாகு, புவனேகபாகு** ஆகிய இருவரையும் குருமார் காப்பில் விட்டனன். கொழும்பு மாவட்டத்திலுள்ள அத்தனகலையில் இவன் உடல் எரியிடப்பட்டது.

இரண்டாம் பண்டித பராக்கிரமபாகுவின் (1234–1269) ஆட்சிக்காலம் அக்காலத்துப் **பூசாவலியில்** கி. பி. 1234 இல் இருந்தும் அவனின் தந்தையார் இறந்து ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் பிற்பட்ட காலத்தில் இருந்தும் கணிக்கப்படுகின்றது. இப்பராக்கிரமபாகு தம்பதெனிக்கு அண்மையிலுள்ள **சிறிவர்த்தனபுரத்**தில் பிறந்தான். அக்காலத்தில் அரசிளங்குமரன் **வட்டிமி** (வத்திமி) என்பான் ஒருவன் அரசினை முறை தவறிக் கவர்ந்து ஆண்டான் என மக்களிடை வழங்கும் ஒரு கதை கூறுகின்றது. வட்டிமி என்பான் ஓர் அரசனுக்கும் அவன் முகமதியக் காமக் கிழத்திக்கும் பிறந்தவன் ஆவான். இம்மக்கள் கதையில் சிறு உண்மை இருக்கலாம். இவனின் ஆட்சியில் மக்கள் வெறுப்புக்கொண்டனர். அக்காலத்திருந்த தலையோர் சூழ்ச்சிசெய்து இவனைக் குருநாகலிலுள்ள ஓர் உயர்வான இடத்திற்கு அழைத்துச்சென்று அங்குள்ள ஒரு செங்குத்தான பாறையில் இருந்து அவனைத் தள்ளிவிட்டனர். இவனின் கல்லறை இப்பொழுது முகமதியர் கையில் இருக்கிறது. சிங்களரும் இதைப் போற்றுகின்றனர். சிங்களர் இவனைக் **கலே பண்டார** என அறிவர். அரசுக்கு உண்மையில் உரிமையானவன் மறைவில் இருந்தான். இவனைப் பட்டத்து யானையே கண்டழைத்து வந்தது. கதைகளில் இருந்து அறியவரும் குறிப்புக்களினால் இவனே **இரண்டாம் பராக்கிரமபாகு** ஆவன். ஆனால் ஆணை ஒன்றும் இல்லா **குருநாகல் வித்தாரய** எனும் நூல் ஒன்று அரசுரிமைக்குரியவன் தம்பதெனியின் **பண்டித பராக்கிரமபாகு** எனக் கூறினும், அவனின் தந்தை **வன்னி புவனேகபாகு**வென்றும் கூறுகின்றது.

பராக்கிரமபாகுவின் முடிசூட்டல் 1236 இல் நடைபெற்றது. பற்சின்னத்தைக் கொணர்ந்து தலைநகரில் வைத்தது அவன் முதல் வேலையாய் இருந்தது. பின்னர் தமிழரிடம் இருந்து பொலனறுவையை மீட்டலில் அவன் கருத்துக்கொண்டு, அதை 1244 இல் செய்து முடித்தனன். இவ்வலுவலோடு ஈரரசர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அவர் **மாகனும் சய**


5——J. N. R 23294 (1/60)

**பாகுவும்** ஆவர். இவர்கள் நாற்பது ஆண்டு அதிகாரம் கொண்டிருந்தனர். சாகசமல்லனிற்குப் பின் ஏற்பட்ட படை ஆட்சிக்காலத்தில் இருந்து இக் காலம் கணிக்கப்பட்டதாய் இருக்கலாம். அக்காலத்துக் காலவேடுகள் "தமிழர் போர்" "மலல போர்" என்பவற்றைச் சிறப்பாகக் குறிக்கின்றமையால் இவ்விரு மன்னர்களும் நாட்டின் வெவ்வேறு பாகங்களை ஆண்டிருக்கலாம். அரசனின் பதினோராம் ஆண்டில் (1244/5) மலாயாக் குடாநாட்டிலுள்ள கம்பலிங்க (அல்லது இலிகோர்) என்னும் இடத்திலிருந்து **சந்திரபானு** என்னும் ஒரு **மலாய்க்காரன்** (யாவகன்) இலங்கைமீது படையெடுத்து வந்தான். இவன் படைகள் ஊதுகுழலுடன் நச்சம்புகள் கொண்டிருந்தன. அப்பொழுது அவன்படை துரத்தப்பட்டது எனினும் பின்னர் அவன் நாட்டில் இறங்கினான்.

அக்காலத்து ஏடுகளில் இருந்து மிகுதி ஆட்சிக்காலம் புண்ணிய வேலைகளிற் கழிந்ததெனத் தெரிகின்றது. குருமார்களின் ஒழுக்கம் தமிழ் ஆட்சிக் காலத்தில் குன்றி இருந்ததால் அவர்களைச் சீர்ப்படுத்தும் பொருட்டு அரசன் ஒரு பேரவை கூட்டினான். 1254 இற்கும் 1256 இற்கும் இடையில் பாண்டிய நாட்டில் இருந்துவந்த ஒரு படை எடுப்பையும் இலங்கை அரசருள் ஒருவன் கொல்லப்பட்டு மற்றையவன் சிறையாக்கப்பட்டதையும் பற்றிக் காலவேடுகள் ஒன்றும் கூறவில்லை. இதிலிருந்து பராக்கிரமபாகு தன் பெயருடைய பெரியோனால் ஆளப்பட்ட வடபகுதியில் ஆட்சி செலுத்தவில்லை என்பது நன்கு தெளிவாகின்றது.

முப்பத்து மூன்று ஆண்டுகள் அவன் அரசாண்டபின் கி. பி. 1267/8 வரையில் அவன் தன் மூத்த மகனான **போசத்து நாலாம் விசயபாகு** என்பான் பொருட்டு அரசு துறந்தான். புதிய மன்னன் புண்ணிய வேலைகளிலும் பொலன்னறுவையைப் புதுப்பித்தலிலும் தன்காலத்தைக் கழித்தான். சந்திரபானு மீண்டும் பாண்டியர், சோழர், மலாயர் யாவரும் அடங்கிய கூட்டுப்படை ஒன்றுடன் இலங்கைக்கு வந்து இலங்கையின் வடபாகத்தைக் கைப்பற்றினான். பின்னர் **யாப்பகு** என்னும் இடத்தில் கூடாரமடித்துத் தங்கினன். இங்கு அவன் வெற்றி கொள்ளப்பட்டான். **சாவகச்சேரி** (யாவகர்சேரி), **சாவங்கோட்டை** (யாவகர்கோட்டை)—யாழ்ப்பாணத்து நாவற்குழியில் இது உள்ளது—பெருநிலப் பகுதியிலுள்ள **யாவகக்கோட்டை** (யாவகர் கோட்டை) என்பவை இவனின் பின்தொடர்ந்தோர் அமைத்த குடியேற்றங்களைக் குறிப்பனவாய் இருக்கலாம். அனுராதபுரத்திலும் புதுப்பித்தல் வேலைகளை முடிவாக்கிய பின்விசயபாகு பொலன்னறுவைக்குத் தந்தையை அழைத்தனன். இங்கு அவன் இரண்டாம் முறையாக முடிசூட்டிக் கொண்டனன். இங்கு பற்சின்னம் கொண்டுவரப்பட்டது. தகத்தோட்டையில் பராக்கிரமன் தன் ஒன்பதாம் தீக்கைச் சடங்கை முடித்துக்கொண்டு தம்பதெனிக்கு மீண்டனன். இங்கு அவன் தன் முப்பத்தைந்தாம் ஆண்டில் கி.பி. 1269 (அல்லது 1270) இன் முற்பகுதி வரையில் இறந்தான்.






உருவம் 18.—யாப்பகு.

இப்பொழுது விசயபாகுவே தனி மன்னனாய் இருந்தான். ஆனால் இவன் சொற்ப காலத்துள் இவனின் தளபதியால் கொலை செய்யப்பட்டான். இத் தளபதியே பின்னர் முடிதாங்கினான். இது 1270 ஒற்றோபர் திங்களில் நடந்திருக்கலாம். இவனின் தம்பியான **முதலாம் புவனேகபாகு** தப்பியோடினான். அரசு கவர்ந்தோனால் இராசபுத்திர கூலிப்பட்டாளத்தினரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை ; இராசபுத்திரரின் இணக்கத்தை அரசிற்கு உண்மையான உரிமையாளன் பெற்றுக்கொண்டமையால் மற்றவன் கொல்லப்பட்டான். பின்னர் இவ்வரசகுமாரன் 1271 இன் ஆரம்பத்தில் முடிசூடிக்கொண்டான். இவன் தன் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் நிகழ்ந்த பாண்டியர் படையெடுப்பு ஒன்றைத் தடுத்து நிறுத்தினான். இதன் பின்னர் இவன் சில ஆண்டுகள் தம்பதெனியில் வாழ்ந்து பின்னர் யாப்பகுவிற்குச் சென்றான். 1283 இன் முதல் திங்களில் எகித்தின் சுல்தானுக்கு ஓர் இணக்க உடன்பாட்டிற்காக ஒரு தூதை அனுப்பினான். இவன் பதினொரு ஆண்டுகளே ஆண்டவன் ஆதலின் இதன் பின்னர் இவன் சிறிது காலத்துள் இறந்திருக்கலாம். 1275 இல் சித்தோரிலுள்ள பதிலாளுநனை மணந்த "இலங்கை அரசிளங்குமரி" **பதுமினி** என்பாளின் தந்தையான **அமீர்சிங்கி** என்பான் இலங்கைச் சேவையில் அமர்ந்த இராசபுத்திர கூலிப்பட்டாளத்தினருள் ஒருவனாய் இருக்கலாம்.

ஒருகால் பஞ்சம் தோன்றியது எனவும்-இது புவனேகபாகு இறந்தபின் ஏற்பட்டதாய் இருக்கலாம்-பாண்டிய மன்னன் குலசேகரன் (கி. பி. 1268-1308) தன் மந்திரியான ஆரியச் சக்கரவர்த்தியை இலங்கைமீது படை எடுப்பதற்கு அனுப்பினுனெனவும் மகாவமிசம் கூறுகின்றது. இவ்வமைச்சன் யாப்பகுவைக் கைப்பற்றிப் பற்சின்னத்தை எடுத்துச் சென்முன். இவனைப்பற்றி கி. பி. 1305 இற்குரிய பாண்டியன் பொறிப்பொன்று குறிப்பிடுகின்றது. ஆனுல் ஏறக்குறைய அக்காலத்துக்குரிய பதிவேடான தலதா சிறித என்பது இந்நிகழ்ச்சி புகனேகபாகுவின் ஆட்சியில் நடந்ததெனக் கூறுகின்றது. ஆனுல் இது உண்மையில் அவன் ஆட்சியின் இறுதியில் நடந்ததே ஆகும்.

காலவேடுகள் விசயபாகுவின் மகனுன மூன்றும் பராக்கிரமபாகுவே அடுத்து அரசுகட்டில் ஏறியவன் எனக் குறிப்பிடுகின்றன. ஆனுல் அவன் அரசவையில் கி. பி. 1310 மே திங்களில் ஓதப்பெற்ற சரசோதிமாலை எனும் தமிழ்க் கவிதை அவன் முடிசூடிய பின் ஏழாம் ஆண்டில் தொடங்கியதாகும். எனவே இவன் ஆட்சி கி. பி. 1302 அல்லது 1303 இல் தொடங்கியிருக்கலாம். இந்நிகழ்ச்சி இருபது ஆண்டு இடைக் காலத்தைக் குறிப்பிடுகிறது. இக்காலத்தில் இத்தீவு பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாய் இருந்திருக்கலாம். 1292, 1294 ஆகிய இவ்வாண்டுகட்கிடை அமைந்த இக்காலத்திலேயே மாக்கோபோலோ இலங்கைவழி சென்முன். அவன் இந்நாட்டு மன்னனைச் செந்தமேன் எனக் கூறுகின்முன். இப்பெயர் யாரைக் குறிக்கிறதென்று சொல்லமுடியாமல் இருக்கின்றது. 1284 இல் சீனுவில் இருந்து பல், கிண்ணச் சின்னங்களைப் பெறும் பொருட்டு ஒரு தூது அனுப்பப்பட்டது. பற்சின்னத்தைப் பாண்டியனிடம் இருந்து பெறுவதற்கு முன்னர் பராக்கிரமபாகு மிகப்பணிவான முறையில் தானே நேராக ஒரு தூதைப் பாண்டியன் அரசவைக்கு அனுப்பவேண்டி இருந்தது. இவ்வாறு பெறப்பட்ட சின்னத்தை இவன் பொலனறுவையில் வைத்தான். இவனும் இங்கேயே வாழ்ந்தான். இவன் எவ்வளவு ஆண்டுகள் அரசாண்டான் எனத் தெரியவில்லை. தன் மறு உடன்பிறப்பாளனுன புவனேகபாகு அரசினைப் பெறச்சூழ்ச்சி செய்கிமுன் என ஐயுற்று இவன் தன் மயிர்வினைனை அவ்வரசிளங்குமரனைக் குருடாக்குவதன் பொருட்டு அனுப்பினுன். இப்புவனேகபாகு அப்பெயர்கொண்ட ஓரரசனின் மகனுவன். எனினும் இவ்வரசிளங்குமரன் சமர் செய்து அவ்வரசனை வென்முன். வென்று பற்சின்னத்தை எடுத்துக்கொண்டுபோய்த் தன் நகரான குருநாகலில் வைத்தான். பராக்கிரமபாகு, பாண்டியன் அரசுக்குத் தான் ஒரு திறையாக அமையும் உடன்பாட்டினுற் பற்சின்னத்தைப் பெற்முன் எனவும் அவ்வரசினை முகமதியர் 1310 இல் வீழ்த்திய அமையமே இவன் மறு உடன்பிறந்தான் கலகம் செய்தான் எனவும் நாம் ஊகித்துக் கொள்ளலாம்.






நாட்டுப்படம் V.


வத்திமி, இரண்டாம் புவனேகபாகு தன் இரண்டாவது ஆண்டில் இறந்தான் எனக் கூறப்படுகின்றது. இது நாம் பெற்றுக்கொண்ட **மகாவமிசத்தின்** கோவையிலுள்ள ஒரு தவறாகும். அடுத்த ஆட்சிக் காலத்தில் இயற்றப்பெற்ற **தலதா சிறித** என்னும் நூல் அவன் ஒன்பது தீக்கைகள் பெற்றான் எனக் கூறுகின்றது ; எனவே அவன் குறைந்தது ஒன்பது ஆண்டுகள் ஆண்டிருத்தல் வேண்டும்.

அவன் மகனான **நான்காம் பராக்கிரமபாகு** சக ஆண்டு 1247 இலோ கி. பி. 1325/6 இலோ அரசுகட்டில் ஏறினான். அவன் புத்தரின் முற்பிறவி பற்றிய சாதகக் கதைகளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தான். அநேக கோயில்களை, குறிப்பாகக் கேகாலை மாவட்டத்திலுள்ள அளுத்நுவர தேவாலயத்தைக் கட்டினான். அவன் எவ்வளவு ஆண்டுகள் அரசாண்டான் என்பது தெரியவில்லை. **மகாவமிசமும்** அவன் ஆட்சியுடன் முடிவு பெற்றது. இது பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தொடர்ந்து எழுதப்பட்டது.

இவனைப் பின்தொடர்ந்து ஆண்டவர் **மூன்றாம் வன்னி புவனேகபாகு** என்பானும் **சய** (அல்லது **விசயபாகு**) என்பானும் ஆவர். இவர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இறுதியிற் சொன்னவனின் ஆட்சியின் கடைப்பகுதியிலோ இவனைப் பின்தொடர்ந்து ஆண்டானின் முற்பகுதியான 1344 இலோ இலங்கைக்கு **இபன் பட்டுட்டா** என்னும் புகழ் பெற்ற யாதிகன் வந்தான். இவன் தீவின் வடபகுதி, புத்தளத் துறைமுகம் உட்பட, யாழ்ப்பாண அரசனின் கீழ் இருந்ததைக் கண்டான். அக்காலத்துச் சிங்கள மன்னனை **அல்கோனார்** என்றும், அரண்மனையில் நடந்த ஒரு புரட்சியில் அவன் குருடாக்கப்பட்டான் என்றும் அவன் உயிருடன் வாழ அவனுக்குப் பதிலாக அவன் மகன் அரசாண்டான் எனவும் இவன் கூறுகின்றான். அக்காலத்தில் கொழும்பு அபிசீனியப் பட்டாளம் ஒன்றை உடைய ஒரு முகமதிய கடற்கொள்ளைக்காரனின் இருப்பிடமாக விளங்கியது. இந்நகரம் கி. பி. 949 அளவில் இருந்ததெனக் கூறிக்கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது. இதைப்பற்றிச் சீன ஆசிரியர் ஒருவர் 1330 இல் குறிப்பிடுகின்றார். எப்பொழுதும் இது ஓர் அன்னியர் குடியேற்றமாகவே இருந்துள்ளது. கழனியில் உள்ள பொறிப்பொன்று 1344 இலேயே **அழகக்கோனார்** என்னும் அமைச்சனின் மனைவி அவ்விடத்திலுள்ள சித்தி சிறீமேவன் விகாரையைப் புதிப்பிக்க உதவி செய்தனள் என்று கூறுகின்றது. **இபன் பட்டுட்டா** குறிக்கும் **அல்கோனார்** அப்பெயரையே உண்மையில் குறிக்கின்றது. ஆனால் அரசகுடும்பத்தோடு இப்பெயர் கொண்டுள்ள தொடர்பு விளங்காததொன்றாய் இருக்கின்றது. ஆனால் இரண்டாம் பராக்கிரமபாகுவின் அரசி கிரி வமிசத்திற்குரியவள். இவ்வமிசத்திற்கே பெரிய அழகக்கோனாரும் உரியவன். இவ்வழகக்கோனாரே **மூன்றாம் விக்கிரமபாகுவின்** வல்லமை பொருந்திய அமைச்சனாவன்.



இப்பொழுது தலைநகர் **நாலாம் புவனேகபாகுவின்** ஆட்சியில் கம்பளைக்கு மாற்றப்பட்டது. இது ஒருவேளை உள்நாட்டுக் குழப்பங்களால் நடந்திருக்கலாம். புவனேகபாகு கி.பி. 1344/5 இல் அரசுகட்டில் ஏறினான். இவ்வாண்டே ஐந்தாம் பராக்கிரமபாகு அரசெய்திய ஆண்டுமாகும். இவன் அவனின் உடன் பிறந்தானாய் இருக்கலாம். இவ்வாறாக ஒரே காலத்தில் பெரியோனும் சிறியோனுமாக இரு மன்னர்கள் இருந்ததை நாம் காண்கின்றோம். இவ்வொழுங்கு சோழப் பேரசிற் காணப்படுவது ஒன்றாகும். இதை இலங்கையிலும் நாம் பின்னர் காண்கின்றோம். புவனேகபாகுவின் ஆட்சியில்



உருவம் 19.—இலங்காதிலகை விகாரை, கண்டி மாவட்டம்.

நடந்த தலையாய வேலைகள் கண்டிக்கண்மையிலுள்ள கடலாதெனி விகாரையும் இலங்காதிலகை விகாரையும் ஆகும். இவன் குறைந்தது 1353/4 வரை ஆண்டிருக்கலாம். **ஐந்தாம் பராக்கிரமபாகு** கம்பளையில் இருந்து ஆண்டான் எனக் கூறப்படுகின்றது. ஆனால் சந்தேசபாக்களுள் மிகப்பழையவற்றுள் ஒன்றாய **திசரசந் தேசய** அல்லது அன்னத்தூது என்னும் கவிநூல் இவனைக் கேகாலை மாவட்டத்திலுள்ள தெடிகமையில் இருப்போன் என அழைக்கின்றது; புவனேகபாகு கம்பளையில் இருந்தபொழுது இவன் அங்கிருந்திருக்கலாம். இந்நூல் இவ்வகையானவற்றுள் மிக முந்தியதாகும். இவனைப்பற்றி அறிந்த இறுதிக் காலம் 1359 ஆகும். குறைந்தது ஒரு சிறு காலத்திற்காகுதல் இவனோடு இணை அரசனாய் விளங்கியவன் **மூன்றாம் விக்கிரமபாகு** ஆவன் (1357 இல் இருந்து குறைந்தது 1374 வரை). இவன் ஆட்சிக் காலத்திலேயே பெரியோனான

அழகேசுவரன் அல்லது அழகக்கோனார் என்பான் புகழ் எய்தினான். தன்னுடைய நாட்டின் எதிரிகளையும் சமய எதிரிகளையும் எப்பொழுதும் தொலையில் வைத்திருப்பதே நல்லதென்று உணர்ந்த அமைச்சன் புதிய சயவர்த்தனபுரம் அல்லது கோட்டை என்னும் அரணைக் கொழும்பிற்கு அண்மையிற் கட்டினான். யாழ்ப்பாணத்து மன்னனான ஆரியச் சக்கரவர்த்தி இதைக் கடல் வழியாலும் தரை வழியாலும் தாக்கினான். எனினும் தோல்வியுற்றான். இத்தருணத்தில் அழகக்கோனார் கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய இடங்களிலுள்ள பாசறைகளைக் கைப்பற்றினான். ஐந்தாம் புவனேகபாகுவின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்ததென இராசாவலி கூறும் நிகழ்ச்சி இதுவாய் இருக்கும். இந்நூல் இக்காலத்தைப் பற்றிக் கூறும் வரலாறு தெளிவாக இல்லை. பிந்திய இந்தக் காலவேடு அழகக்கோனார் ஆரியச் சக்கரவர்த்தியின் வரி சேர்ப்போனைத் தூக்கிலிட்டதால் இது நிகழ்ந்ததெனக் கூறும். இரு ஒரு கற்பனையாய் இருக்க முடியாது. கொழும்பிற்கு அருகாமையிலுள்ள சதுப்பு நிலங்களில் கோட்டை அமைந்திருந்ததே இடரான ஒரு நிலைக்குச் சிங்களவர் கொண்டு வரப்பட்டனர் என்பதற்கு ஒரு சான்றாகும். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்து அரசு இலங்கையின் கீழ் நாட்டுப் பகுதிகளில் முதன்மை பெற்றிருந்தது என்பதில் ஒருவித ஐயமுமில்லை. எனினும் கோட்டையில் இருந்த ஓர் அரண் கொழும்பு முகமதியர் வயம் இருந்தது. இவ்வாட்சிக்காலத்தைப் புவனேகபாகுவின் ஆட்சிக் காலமெனக் கூறியது இப்போராட்டத்தையும் அவன் கூட்டு ஆட்சிக்காரனான வீரபாகுவின் போர்களையும் தெளிவுறப் பிரித்து அறிய முடியாததாலாகும். வீரபாகுவின் போர்களைப் பற்றி **நிகாயசங்கிரகம்** என்னும் நூலில் விளக்கமின்றிக் கூறப்பட்டுள்ளது. விக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் 1369/70 குருக்கள்மாரைச் சீர்திருத்தும் பணி ஒன்று நடைபெற்றது. இது அடுத்த ஆட்சிக் காலத்தின் பதினைந்தாம் ஆண்டு வரையில் நடைபெற்றது.

**ஐந்தாம் புவனேகபாகு** (கி.பி. 1372/3 இல் இருந்து குறைந்தது 1407/8 வரை) கம்பளையில் இருந்து அரசாண்டான். இவன் பேரளவில் அரசனாய் இருந்தான் என்றே சொல்லல் வேண்டும். கி. பி. 1385/6 இற்குரிய **விசயநகரப் பதிவு** ஒன்று **விருபாட்ச** என்னும் அரசிளங்குமரன் மற்றையோருடன் சிங்களவரையும் வெற்றி கொண்டு தன் தந்தையாரான **அரிகரனுக்கு** மணிகளும் அணிகளும் பரிசாய் அளித்தனன் எனக் கூறுகின்றது. இது யாழ்ப்பாணத்தைக் குறித்ததாய் இருக்கும். ஏனெனில் இது அடுத்த நூற்றாண்டிற் பெருநிலப்பரப்பிலிருந்த பேரரசுக்குத் திறையாய் இருந்தது என்க. பு.பி. 1929 அல்லது கி.பி. 1386/7 புவனேகபாகுவின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் காலம் ஆகும். அவனின் இருபதாம் ஆட்சியாண்டுக் காலத்தில் (கி. பி. 1391/2) அவனின் மைத்துனனான **வீரபாகு** என்னும் யுவராசன் அரசுகட்டில் ஏறினான். எனினும் புவனேகபாகு உண்மையிலில்லாவிட்டாலும் பேரளவிலாகுதல் பதினைந்து ஆண்டுகள் அரசாண்டான் எனப் பதிவேடுகள் நிறுவுகின்றன.



வீரபாகு அரசு எய்துதற்கு முன்னர் உண்மையான அரசாணையை ஏற்று வகித்து வந்தவன் பெரும் அழகக்கோனார் என்பானின் மகனான **குமார அழகேசுவரன்** என்பானே. இவன் 1382/3 இல் இறந்தபின் **வீர அழகேசுவரன்** அதிகாரம் கொண்டனன். இவனுடன் பிறந்தானான **இரண்டாம் வீரபாகு** என்பான் இவனுக்கெதிராகப் போரிட வீர அழகேசுவரன் இந்தியாவிற்கு ஓடினான். **இரண்டாம் வீரபாகு** அக்காலத்தில் களுத்துறை மாவட்டத்திலுள்ள இறைகம்புரத்தில் வாழ்ந்துவந்தான். வீரபாகு தமிழர், சோனகர், மற்றையோர் ஆகியோரின் பகைமைக்கெதிராகப் போரிட வேண்டி நேர்ந்தது. இவன் அறவொழுக்கத்தவனாய் இருந்தான். பு. பி. 1939 (கி. பி. 1396/7) இல் குருமாரைச் சீர்படுத்தும் பொருட்டு இவன் ஒரு பேரவை கூட்டினன். இவன் பின் இவன் இரு மக்களும் ஆண்டனர்போல் தோன்றுகின்றது. இவர்கள் சொற்ப காலத்திற்கே ஆண்டிருக்கலாம். ஏனெனில் இந்தியாவினின்று வீரஅழகேசுவரன் வந்ததும் அவன் நாட்டின் முழு ஆதிக்கத்தையும் கைப்பற்றிப் பன்னீர் ஆண்டுகள் ஆண்டனன். இவன் ஆறாம் விசயபாகு எனத் தவறாக அழைக்கப்பட்டான். சீன ஆசிரியர்களின் கூற்றுக்கிணங்க ஆறாம் பராக்கிரமபாகுவைப்போல் இவனும் ஒரு "சுஒலி" ஆவன். இதனால் சிலர் கருத்தின்படி அவன் ஒரு சோழன் அல்லன்; ஆனால் **சவுளு** அல்லது **சாக்கிய** இனத்தினன் ஆவன். ஏனெனில் இந்த அழகேசுவரர் யாவரும் ஒரு பக்கத்தில் மெகனவரக்கிளையும் மற்றையதில் கனவெசிகிளையும் இணைந்த சிங்கள அரச குலத்தினர் ஆவர். அவப்பேறான முறையில் வீர அழகேசுவரன் சீனத் தூதுக் குழு ஒன்றினைத் தகாத முறையில் நடத்த வேண்டி நேர்ந்தது. இதனால் சீன அரச தூதரான **சின் ஓ** அவனையும் அவன் பெண்டிர் பிள்ளைகளையும் சீனாவிற்குப் பழிவாங்கு முகமாகக் கடத்திச் சென்றனன். இது கி. பி. 1411 இல் நடந்தது. இதன் பின்னர் சீனப் பேரரசர் சிறைப்பட்ட குடும்பத்தினரை நோக்கி அவர்களைப் பின்தொடர்ந்து ஆளவேண்டியவரைத் தேர்ந்தெடுக்குமாறு கூற அவர்கள் **ஏபா** என்பவனைத் தேர்ந்தெடுத்தனர். பின்னர் ஏபாவும் பதவி இழந்த அரசனும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிளங்குமரன் வீரஅழகேசுவரனுக்குப் பின் அரசெய்தியவனும் நாலாம் புவனேகபாகுவின் அமைச்சனான **சேனாலங்காதிகார செனிவிரத்து** என்பானின் பேரனுமான பராக்கிரமபாகு ஏபா அல்லன். இப்பராக்கிரமபாகுவின் பின் தொடர்ந்து அரசாண்டவன் ஆறாம் பராக்கிரமபாகு ஆவான். காலியில் கண்டெடுக்கப்பட்ட கி. பி 1409 தேதி உடைய சீனம், பாரசீகம், தமிழ் ஆகிய மொழிகளில் அமைந்த ஒரு பொறிப்பு **சின் ஓவின்** படைச் செலவினைப் பற்றிக் கூறுகின்றது.

இரண்டாம் பராக்கிரமபாகு தன் ஆட்சிக் காலத்தில் ஆற்றிய சமய, இலக்கியப் பணிகளினாலேயே புகழ் பெற்றான். மாற்றாரிடமிருந்து பழைய இரு தலைநகரங்களையும் அவன் மீட்டனன் எனினும் கடைவடக்கிலிருந்து

மாற்றுரை வெருட்டுவதில் அவன் வெற்றி பெற்றுனில்லை. அம்முயற்சியில் அவன் ஈடுபட்டனனே என்றும் தெரியவில்லை. இக்காலத்திலேயே வன்னியரைப்பற்றி நாம் அறிகின்ருேம். இவர்களிடம் பாதுகாப்பிற்காக அனுராதபுரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிற்காலத்தில் இத்தலைவர்கள் யாழ்ப்பாணத்திற்கும் சிங்கள அரசிற்கும் இடை இருந்த எல்லைப்புறங்களில் உறைந்து இவற்றுள் யாதாயினும் ஒன்றின் குடிமக்களாய் வாழ்ந்து வந்தனர். சில வேளைகளில் இவற்றின் வன்மையை அறிந்து அதற்கேற்ப முழுச் சுதந்திரராகவும் வாழ்ந்தனர். மிக்க நன்முறையில் ஆரம்பமாய இவ்வரசாட்சி இறுதியில் நலிவோடு முடிவடைந்தது. பராக்கிரமபாகு தன் அரசினைத் தன் மக்கள் மருமக்கள் ஆகியோரிடைப் பிரித்து வழங்கி அவர்களை ஒருவரோடு ஒருவர் அமைதியோடு வாழும்படி நன்மனத்தோடு பணித்தனன். இது அவன் செய்த ஒரு பெரும் தவருகும். இவனின் இப்பூட்கையே பிற்காலத்தில் நாட்டில் ஐரோப்பியர் வந்தடைவதற்கு அடிகோலியதெனலாம். நாலாம் விசயபாகு வரி கொடுப்பதைக் கட்டாயப்படுத்த இயலாமற்போனதும் வரிக் குறைவினை நிரப்ப இறைசேரியிலிருந்து எடுத்துதவும் அவன் வழக்கமும் அரசாட்சியின் மெலிவினை எடுத்துக் காட்டின. படையினரிடை நடந்த கலகத்தால் இவன் உயிர் துறந்தான். இது இவன் தன் கூலிப்பட்டாளத்தினருக்கு ஊழியம் கொடுக்க இயலாமையால் நேர்ந்தது எனலாம்.

இப்பருவம் முழுவதும் படிப்படியாக வீழ்ச்சியுற்று வந்தகாலமெனலாம். **இலங்காதிலகை** கோயிலும் **கடலாதெனி** கோயிலுமே குறிப்பிடத்தக்க கட்டிடங்களாகும். இவற்றைப்பற்றி முன்னர் கூறியுள்ளோம். தம்பதெனி, குருநாகல், கம்பளை ஆகிய இடங்களில் கட்டிடங்கள் சிதைந்தோ சிதையாமலோ எஞ்சி நிற்கும் நிலைமையால் இவை பொலனறுவையிலிருந்தும் புறம்பானவையே எனலாம். இரண்டாம் பராக்கிரமபாகு தன் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் நிறுவிய பற்சின்னக் கோயிலும் அவன் ஆட்சி முடியுமுன்னரே திருப்பிக் கட்டப்பட வேண்டியதாயிற்று. நாலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் “ பொன்மசா ” ஆனது ஒரு செப்பு நாணயமாக மாறியதே நாட்டின் வறுமைக்கு ஓர் உறுதியான எடுத்துக்காட்டாகும். இதைப்பற்றி அக்காலத்து நூல்களும் கூறுகின்றன. கம்பளைக்கு அரசிருக்கை மாற்றப்பட்டமை உட்குழப்பங்களால் ஆயது என்பதற்கு அறிகுறிகள் உள்ளன. இபன் பட்டூட்டாவால் எடுத்துரைக்கப்பட்ட அரண்மனைச் சூழ்ச்சியைப்பற்றி முன்னர் குறித்துள்ளோம். குருநாகலைக் கைவிட்டது போரினுல் ஏற்பட்டதென்று வரன்முறை கூறுகின்றது. பதினுலாம் நூற்றுண்டின் இரண்டாம் மூன்றும் காற்பகுதிகளில் யாழ்ப்பாணத்து அரசாதிக்கம் மிகுந்தோங்கியதையும் நாம் கவனித்தோம். ஒரு சிறிது காலத்திற்குச் சிங்கள அரசின் வீழ்ச்சியை ஆறும் பராக்கிரமபாகு தடுத்து நிறுத்தினுன் என்பதை இனி நாம் காண்போம்.



## 5 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பொதுச் சரித்திரத்துக்கு **மகா.** பார்க்க (iv ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் பின் இது நற்பயன் உடையதன்று); **பூசா.,** சிறப்பாக நீண்ட முறை, **அதவனகல்லை விகார—வன்ச.** இவை இரண்டும் இரண்டாம் பராக்கிரமபாகுவுடன் ஒத்த காலத்தின. **நி. ச.** (14 ம் நூற்றுண்டில் ஆக்கப்பட்டது) என்பதுடன் அதன் வழிவந்ததும் அதற்குத் தொடர்ச்சியாய் உள்ளதுமான **சத்த.** பார்க்க. தம்பதெனி பருவத்திற்கு **இ. தொ. x.** பகுதி. i. ப—ள். 37 உம் தொடரும்; பகுதி. ii. ப—ள். 88 உம் தொடரும் பார்க்க. கம்பளைப் பருவத்துக்கு **வே. ஆ. ச. ச., இ. கி. xxxii.** எண். 86, ப. 260.

**2 ஆம் பராக்கிரமபாகு.** பாண்டியர் படை எழுச்சிக்கு **ஆ. க. அ.** பொறிப்புக்கள் எண்கள் 421, 1907 ஆம் ஆண்டு, எண் 356,1906 ஆம் ஆண்டு, 1912 ஆம் ஆண்டு தொகுதி ப. 65 பார்க்க. மாவடுபட்டுன (மாந்தோட்டை) என்பதற்கும் கல்முனை என்பதற்கும் இடையுள்ள யாவகக் கோட்டை என்பதற்கு **கோகில சந்தேசய v.** 236 பார்க்க.

**1 ஆம் புவனேகபாகு :** பாண்டியர் படை உறுத்தல்பற்றி **ஆ. க. அ.** 1916 ஆம் ஆண்டு எண் 698 இல் குறிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள இராசபுத்திரருக்கு தொட்டின் **இராசத்தானத்து ஆண்டுக் குறிப்புக்கள், i.** பக்கம் 276, **இ.தொ. x.** ப. 88 பார்க்க. இவர்களின் தலைவர் தாகுரக எனப்படுவன். இது புகழ்பெற்ற ஒரு இராசபுத்திர பட்டமாகும். எகித்திற்குரிய தூதிற்கு **வே. ஆ. ச. ச., இ. கி. xxviii.** எண் 72. ப. 82 பார்க்க. ஆரியச் சக்கரவர்த்தியைக் குறிக்கும் பொறிப்பு **ஆ. க. அ.** எண் 110, 1903 ஆண்டு.

**3 ஆம் பராக்கிரமபாகு. சரசோதிமாலை** யாழ்ப்பாணத்து, கொக்குவில் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1910, 2 ஆம் பதிப்பு. புவனேகபாகுவின் சூழ்ச்சிக்கு விசயசிங்க **மகா.** ப. 316 பார்க்க. உபமின் **மகா.** பார்க்க. **(இலங்கை பற்றிய புண்ணிய சரித்திர நூல்கள்,** 1833, தொகுதி **i.** ப. 355). உள்நாட்டுச் சண்டைபற்றி **தலதா சிறீதவில்** தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது 4 ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சியில் எழுதப்பட்டது.

**4 ஆம் பராக்கிரமபாகு.** அரசெய்திய நாள் அக்காலத்து **தலதா சிறீதவில்** காணப்படுகின்றது. அளுத்துநுவரை தேவாலயம்பற்றி **இ. தொ.** அந்நூல் ப. 92. இதற்குக் கால்கோள் எடுத்தது, முதலாம் புவனேகபாகு என்று வரன்முறை கூறுகின்றது. (இலவுகே சன்ஞச, **கேகாலை மாவட்டம் பற்றிய அறிக்கை.** ப. 47).

**2 ஆம் புவனேகபாகு.** பிழையான தொகுப்பிற்கு **இ. தொ. x.** பகுதி ii. ப. 91, கைகரின் **சூலவன்ச, xc.,** 63 பார்க்க.

இலங்கைபற்றி இபன் பட்டூட்டாவின் நூல் **வே. ஆ. ச. ச., இ. கி.** 1882 இல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அல்கோனூர் பற்றி அந்நூல் **xxix** எண். 75, ப. 106 இல் பார்க்க. இசிறி ஆண்டு 337 (கி.பி. 949) என்பதைக் கொடுக்கும் கொழும்பிலுள்ள முகமதியர் அடக்க அறைக்கல்லு **வே.ஆ.ச. நடவடிக்கைகள் i.** 545 இல் வெளியிடப்பட்டுள்ளது. **தஓ ஐ சி இலீ** என்னும் சீன நூலுக்கு **வே. ஆ. ச. ச., இ. கி. xxviii.** எண் 73 பார்க்க. இற் சிறீமேவனின் பொறிப்பிற்கு **இ.தொ. i.** ப. 152; **ii.** ப—ள். 149, 182 பார்க்க. கிரிவன்சவிற்கு **பௌத்தன்,** யூலை. 8, 1922 இல் உள்ள டீ.பீ. சயத்திலகவின் பராக்கிரமபாகுவின் நாள் நியமம், பார்க்க.

12 ஆம், 13 ஆம் நூற்றுண்டில் இருந்த சீன, அராபிய வணிகம்பற்றி சோ யுகுஆ எழுதிய நூலின்படி (எப், எதுவும் **இடபிளியூ. இடபிளியூ.** உறெக்கிலும், சென் பீற்றபரோ, 1912) நண்பி, அல்லது மலபார் என்பதின் கீழ் சிலன் இருந்தது. இது சண்—ஒ—ட்சி (சுமத்திராவில் உள்ள பலம்பாங்கு) என்பதற்கு ஓர் ஆண்டுத் திறை அனுப்பியது. முதல் கூற்று மாகனையும் கோளரையும் குறிப்பதாய் இருக்கலாம். இரண்டாம் கூற்று சந்திரபானுவை, இவ்வரசன் யார் என அறிய **வே.ஆ.ச.ச.,இ.கி. xxxii.** எண் 85, ப. 195 பார்க்க.

**5 ஆம் விசயபாகு.** வில்வலை, கோகலை (எண் 1) ஆகிய இடங்களில் உள்ள மரணக் குறிப்புக்கள் இவனுடைய பதினொராம் ஆட்சி ஆண்டைக் குறிக்கின்றன. இவன் ஆட்சியின் ஒரு பகுதியில் ஒத்த ஆட்சிக்காரர் இருந்திருக்கலாம். கேகாலை பொறிப்பு எண் 1 பொறிப்பு எண் 2 இற்கு ஓர் அட்டவணையாகும்.

**5 ஆம் பராக்கிரமபாகு.** அரசெய்திய ஆண்டு அபுகசுதெனை பொறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது (**வே.ஆ.ச.ச.,இ.கி. xxii.** எண் 65, ப. 362).

**4 ஆம் புவனேகபாகு.** இவன் அரசெய்திய தேதி இலங்காதிலகை (**வே.ஆ.ச.ச.,இ.கி. x.** எண் 34, பக்கங்கள் 83 தொடர்) கடலாதெனிப் பொறிப்புக்களில் சக 1266 எனக் கொடுக்கப்பட்டுள்ளது. பு.பி. 1894 என்னும் தேதி சமன் கி.பி. 1351/2 ; ஏனெனில் இவனின் முடிந்த நாலாம் ஆண்டு **நி.ச.** இல் காணப்படுகின்றது. இது வேறு இரண்டு தேதிகளிலும் பிழையாய் உள்ளது (**இ.தொ. ix.** ப. 186).

**3 ஆம் விக்கிரமபாகு.** அரசெய்திய ஆண்டு பார்க்க விகுலவத்தைப் பொறிப்பு **கேகாலை மாவட்டத்து அறிக்கை.** ப. 79 ; அறியப்பட்ட கடைசி ஆண்டிற்கு நியங்கம்பாய பதிவேடு, **வே.ஆ.ச.ச.,இ.கி. xxii.** எண் 65, ப. 343. யாழ்ப்பாணத்தோடு நடந்த போருக்குச் சிறிது பிற்காலத்திய **நி.ச.ஐப்** பின்பற்றியுள்ளேன். மிகத் தற்காலத்திய குழப்பம் நிறைந்த **இரா.** என்பதை விடுத்தே அவ்வாறு செய்துள்ளேன் ; எனினும் இது



அரிய குறிப்புக்கள் கொண்டுள்ளது. **கேகாலை மாவட்டத்து அறிக்கை** ப. 85 இல் முதன்முதலாக வெளியிடப்பட்ட கொடகம பொறிப்பு யாழ்ப்பாணத்தரசன் ஒருவனின் பத்திரம் எனினும் அது 15 ஆம் நூற்றுண்டில் பொறிக்கப்பட்டது எனக் கூறப்படுதலின் 14 ஆம் நூற்றுண்டு நிகழ்ச்சிகளை இது எடுத்துக் கூறல் இயலாது (**வே.ஆ.ச.ச.,இ.கி. xxxii.** எண் 85, பக்கங்கள் 214 தொடர்). **சேது,** இப்பத்திரத்திலேயே அரசுச் சின்னமும் காணப்படுகின்றது (உரு. 22 பார்க்க).

**5 ஆம் புவனேகபாகு.** விரூபாட்ச பொறிப்புக்கு **எபி. இந்தி. iii.** எண் 32 பார்க்க. அரசெய்திய தேதிக்கு பார்க்க **நி.ச.,** முப்பத்துநாலு அல்லது முப்பத்தாறும் ஆண்டிற்கு, **வே.ஆ.ச.ச.,இ.கி. xxii** எண்65,ப. 366. பெரிய அழகக்கோனூரைப் பற்றிக் கடைசிக் குறிப்பு சக 1304 (1382/3), சிங்கள **அத்தனகலுவன்சவில்** உள்ளது. **மயூரசந்தேசயவில்** உள்ள பிபுர ராச என்பான் வீரபாகுவின் உடன் பிறந்தவனும் ஐந்தாம் புவனேக பாகுவின் மைத்துனனுமான வீர அழகேசுவரன் ஆகும்.

**5 ஆம் புவனேகபாகுவினைப்** பின்பற்றி ஆண்டோர்க்கு **சத்த.** ப. 295 பார்க்க. இது ஏறக்குறைய அக்காலத்தெழுந்த நூலாகும். அக்காலத்தில் 6 ஆம் விசயபாகு என்னும் மன்னன் ஒருவன் இருக்கவில்லை என்பதில் ஐயமில்லை. இம்மாருட்டம், **இரா.** வினுடைய குழப்பமான வரலாற்ருல் வந்தது. பிந்திய அழகேசுவரர் அரசகுலமுறையினர் என்பது சகம பொறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது (**வே.ஆ.ச.ச.,இ.கி. xxii.** எண் 65, ப. 364). சீன ஆணைகட்கு அந்நூல் **xxiv.** எண் 68. ப. 74 தொடர், **xxviii.** எண் 73, ப. 32 பார்க்க. மும்மொழிப் பதிவேட்டுக்கு **சுபொலிய சிலனிக்கா viii.** பகுதி **xxx.** 1912. பராக்கிரமபாகு எபா, 4 ஆம் பராக்கிரமபாகு அல்லன் என்பதற்கு நிறுவல் **சத்த.** இல மன்னர் வரிசையில் காணப்படுகின்றது ; ப. 71 ; ஆனால் இங்கு மூன்ரும் வரியிலுள்ள 116 என்பது 115 என இருத்தல் வேண்டும் (**சொலசு** என்பதற்கு **பசலொசு**). V ஆம் நாட்டுப்படத்தில் மகா நாகக் குளம் இடம் தப்பியுள்ளது. இது வளவையின் வலக்கரையில் உள்ளது.

இரண்டாம் பராக்கிரமபாகுவின் பற்சின்னக் கோயிலின் நிறுவுகை, திருத்தம் ஆகியவற்றிற்கு **மகா.** lxxxii. 8 ; lxxxv. 91 பார்க்க. **பூசா.** வையும் பார்க்க. செப்பு நாணயங்களான மசுரன் பற்றிய குறிப்பு சிங்கள மொழியிலுள்ள **உன்மக்க சாதகம்** என்பதில் உள்ளது. ரி.பி. யதவர, என்பார் பெயர்ப்பில் ப. 158, வரி 31 பார்க்க. (இலண்டன் 1898). இதில் பொன் என்பது காசு என இருத்தல் வேண்டும்.

*அதிகாரம் 6*

# கோட்டைக் குலமுறையும் அதன் போத்துக்கேய நேயரும், 1412-1551

**ஆறும் பாராக்கிரமபாகு** (கி. பி. 1412—1467 வரையில்) விசயபாகு மன்னன் என்பான் ஒருவனுக்கும் அவனின் மனைவியான கலிங்கர் இனத்துச் சுநேத்திரதேவிக்கும் பிறந்த ஒரு மகன் எனப் பன்முறையும் கூறப்படுகின்றது. இவன் தந்தை **சயமகாலே** என்னும் பெரும் பதவியை (ப. 11 பார்க்க) ஏற்றிருந்தவன் என்பதில் ஐயமில்லை. வரன்முறை இதைப் பற்றிக் கூறுவது வருமாறு :— விசயபாகு என்பானைச் சீனர் கடத்திக் கொண்டு சென்றபோது பராக்கிரமபாகுவின் தாயும் அவள் புதல்வர்கள் இருவரும் தப்பி ஓடி, பதிலாட்சியாளனாக விடப்பட்ட அழகேசுவரன் என்பான் ஒருவனுக்குப் பயந்து கேகாலை மாவட்டத்திலுள்ள உறுகுலேகமை என்னும் இடத்தில் மறைந்திருந்தார்கள். இறுதியில் மூத்த அரசிளங்குமரன் இவ்வழகேசுவரனைக் கொன்று அரசுகட்டில் ஏறினான். இதுவே கதை. ஒருவேளை வீர அழகேசுவரன் இந்தியாவிலிருந்தும் வர, அரசிற்கு உரிமை கொண்ட தன் சிறார்களுடன் சுநேத்திரதேவி, ஓடி ஒளித்தாள் என்றும், (உண்மையில் இவ்வாறே **தோகுட்டோவின்** வரலாறு கூறுகின்றது.) இவ்வாட்சியாளனே சீனாவில் இருந்தும் வர, அப்பொழுது பதினாறு ஆண்டு வயதினனாய் இருந்த மூத்தவனே இவனைக் கொன்றான் என்றும் ஊகிக்க இடம் இருக்கின்றது. இவ்விளையவனே பிற்காலத்தில் யுவராசன் **மாயதுன்னை பராக்கிரமபாகு** ஆனான்.

ஆறும் பராக்கிரமபாகு அரசெய்திய நாளைப்பற்றியும் பிணக்குள்ளது. சில ஆசிரியர்கள் இது பு. பி. 1955 (கி. பி. 1412/3)இல் நடந்ததெனக் கூறுகின்றனர். எனினும் சில அலுவல் முறைப்பத்திரங்கள் இவன் ஆட்சிக் காலத்தை பு. பி. 1958 (கி. பி. 1415/6)இல் இருந்து கணிக்கின்றன. இம்மன்னன் இறைகம்புரத்தில் மூன்றாண்டுகள் வாழ்ந்து பின்னர் கோட்டைக்குச் சென்று முடிசூடினான் என்று கூறப்படுதலின் இவன் கி.பி. **1412** இல் அரசினைப்பெற்றிருக்கலாம், கி.பி. **1415** இல் அரசுகட்டில் ஏறியிருக்கலாம். இக்காலத்திற்குரிய ஒரு நூல் இவ்வாட்சிக் காலத்தை, பு.பி. 1953 எனக் குறிக்கின்றது. ஆனால் பிறிதொரு பந்தியில் பு.பி. 1958 எனக் குறிக்கின்றது. இந்நூல் பிற்கூறிய ஆண்டினை இலங்கை பௌத்தத்தைத் தழுவியதிலிருந்து 1722 ஆம் ஆண்டுக் காலத்தோடு ஒத்ததாக்குவதால் இத்தேதியைத் திருத்தமானதெனக்கொண்டு 1953 இனை எழுத்துப் பிழையெனக் கொள்ளல் நன்று.

சீனத்தோடு கொண்டிருந்த தொடர்பு தொடர்ந்திருந்தது. 1436,1445 ஆகிய ஆண்டுகளில் திறை கொடுக்கப்பட்டது; இறுதியாக 1459 இல் கொடுக்கப்பட்டது.



பராக்கிரமபாகுவின் சமயப்பணிகளுள் கோட்டையில் பற்சின்னத்திற்காகக் கட்டப்பட்ட கோயிலும் கொழும்பிற்கருகாமையில் தன் தாயார் நினைவின் பொருட்டு எழுப்பிய பெப்பிலியானை விகாரையும் இடம்பெறுகின்றன. இரத்தினபுரிக்கருகாமையில் உள்ள **சமன்** தேவாலயத்தையும் இவன் புதுப்பித்தான். இவ்வாலயம் இரண்டாம் பரக்கிரமபாகுவின் காலத்தில் கட்டப்பட்டதாகும். பெல்மதுலைக்கு அதிக தொலைவில் இல்லாத அரமனைபொலை விகாரைக்கு இவன் மானியங்கள் கொடுத்தான். இவ்விகாரையின் கட்டிடக்கலை சிறப்புடையதாகும்.

இவனுடைய அரசாட்சிக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எவ்வித ஒழுங்கில் நடைபெற்றனவென்று தெளிவாகவில்லை. இக்காலத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சி பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனான **சபுமல் குமாரன்** யாழ்ப்பாணத்தை வென்றதாகும். இவ்வியாழ்ப்பாண அரசாட்சி பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் சுதந்திரமான ஓர் அரசாக வந்ததெனத் தோன்றுகின்றது. இக்குடாநாட்டிலுள்ள இடப்பெயர்கள், மிக்க தொலைவிலில்லாக் காலத்தே அந்நாடு அங்கு வாழ்ந்த சிங்கள மக்கள் ஆட்சியில் இருந்ததென்பதைக் காட்டுகின்றன. உண்மையில் முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிப்பகுதிகளில் இதுவும் ஒன்றாய் இருந்தது. இந்நாட்டை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் கலிங்கத்தை ஆண்ட கங்கக்குலமுறையினரும் இராமேசுவரத்துப் பிராமணரும் கலந்த ஒரு குலமுறையால் வந்தவர் என உரிமை கொண்டாடுவர். இதில் இருந்து நாம் பெறக்கூடிய செய்தி யாவெனில் கலிங்க மாகன் என்பானும் அவனின் உரிமையோரும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆட்சியை ஒருபொழுதும் இழக்கவில்லை என்பதும் யாழ்ப்பாணத்தில் அவர்களின் அரண்கள் **ஊறுத்தோட்ட** (ஊர்காவற்றுறை), **வெலிகம** (வலிகாமம், இது காங்கேசன்துறையாய் இருக்கலாம்) என்பன இருந்தனவென்பதும் **த குயிரோசு** கூறியவாறு, பாண்டிய நாட்டிலுள்ள மிக்க புகழ் வாய்ந்த ஒரு குடும்பத்தினரான ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒருவன் அக்காலத்திலிருந்த அரசனின் மகளை மணந்தனன் என்பதும் ஆகும். 1344 இல் யாழ்ப்பாணத்து அரசன் வட இலங்கையின் பெரும் பகுதியைக் கொண்டிருந்தான். பதினாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவன் ஆணை உச்ச நிலை அடைந்திருந்தது. ஒரு சிறு காலத்துக்கு இலங்கையின் மேலாட்சியும் அவன் கையில் இருந்ததை நாம் கண்டுள்ளோம். அடுத்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இவ்வரசாட்சி பெருநிலக்கண்டத்து அமைந்திருந்த விசயநகரப் பேரரசுக்கு ஒரு திறையாக இருந்தது. இது முந்திய நூற்றாண்டின் பிற்பகுதியிலும் நடந்திருக்கலாம். நூநெசு என்பான் இதைத் திட்டமாகக் கூறுகின்றான். பேரரசின் ஒழுங்கான ஒரு பட்டம் ஈழத்தில் இருந்து வரிகொண்டான் எனக் கூறுகின்றது. அக்காலத்துச் சிங்களப் பாக்களும் யாழ்ப்பாண மக்களை அடிக்கடி கன்னடர் எனக் கூறுகின்றன. வலன்றின் என்பார் கன்னடரின் ஒரு படையெடுப்பைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். கன்னடர் என்பது **விசயநகர்ப்** படையினரையே குறிக்கும். யாழ்ப்பாணத்

தின்மீது படையெடுத்தபொழுது உள்ள நிலையையோ அதன்பின் வந்த விளைவின் நிலையையோ இது புலப்படுத்துகின்றது என்பது தெரியவில்லை. ஆனல் தெளிவாக அறியக்கிடப்பது என்னவெனில், சபுமல் குமாரன் மேற்குக் கடற்கரை ஓரமாகச் சென்று வடபுலத்து அரசாட்சியை வென்றனன் என்பது. வன்னியை அடக்கினமை இந்நிகழ்ச்சிக்கு முன்னர் நடந்திருக்கலாம். இப்படை யெடுப்புடன் தொடர்ந்து தென் இந்தியாவில் உள்ள **அத்திரியம்பேட்டைப்** படையெடுப்பும் நிகழ்ந்தது. **வலன்றின்** என்பாரின் கூற்றின்படி, கறுவா ஏற்றிச் சென்ற ஒரு இலங்கைக் கப்பலை அந்நாட்டவர் பிடித்தமையால் இது ஏற்பட்டதாகும். யாழ்ப்பாணத்தினை வெற்றி கொண்டதைப் பற்றி ஏலவே அரசாட்சியின் முப்பத்தாரும் ஆண்டில் குறிக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 1447/8 அல்லது 1450/1 இல் நடந்திருக்கலாம். தின்னவேலி **அரிகேசரி பராக்கிரம பாண்டியனின்** தென்காசிப் **பொறிப்பொன்று** அவனைப் பற்றி சிங்கை, அனுரை ஆகிய பிற இடங்களிலுள்ள அரசர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்த அரசன் எனக் கூறுகின்றது. இது இப்போர்களைப் பற்றிக் கூறுவதாய் இருக்கலாம். ஏனெனில் யாழ்ப்பாணத்துத் தலைநகர் **சிங்கை**யும் சிங்களர் தலைநகர் **அனுரை**யும் ஆகும் என்க. இது கி. பி. 1449/50 என்பதற்கும் 1453/4 என்பதற்கும் இடையுள்ள ஒரு தேதியைக் கொண்டிருக்கின்றது.



உருவம் 20.—யாழ்ப்பாண நாணயம்.

இராசாவலியின்படி இவ்வரசன் ஐம்பத்திரண்டு ஆண்டுகள் அரசாண்டான் என்றும் அப்பொழுது மலைநாட்டு ஆட்சியாளனான **சோதியன் சிதானே** என்பான் கலகம் செய்தான் என்றும் அறியக்கிடக்கின்றது. இக்கலகக்காரன் பதவியினின்றும் நீக்கப்பட்டுக் கம்பளை அரசிளங்குமாரன் ஒருவன் அவனிடத்தில் அமர்த்தப்பெற்றான். இந்நிகழ்ச்சி அத்திரியம்பேட்டைப் படையெடுப்பிற்கும் யாழ்ப்பாணத்தை வெற்றிகொள்ளு முன்னர் வன்னியை அடக்கிய காலத்துக்கும் இடையிட்ட ஒரு காலத்தில் நடந்ததென வலன்றின் கருதுகின்றார். அரசாட்சிக் காலத்தின் பதினேழாம் ஆண்டுத் தேதியைக் கொண்ட (கி.பி. 1428/9 அல்லது 1431/2) தும்பறையிலுள்ள **மடவலைப் பொறிப்பு** ஒன்றிற்குச் சோதியன் ஒரு சான்றாக இருக்கின்றான்.

பராக்கிரமபாகு தன் மகளின் மகனான வீரபராக்கிரமபாகுவின் சார்பில் அரசு துறந்தான். ஐம்பத்தைந்தோ, ஐம்பத்திரண்டோ ஆண்டுகள் அரசாட்சி செய்தபின் இவன் இறந்தான். 1412, 1415 ஆகிய இவ்வருடங்களில் யாதாயினும் ஒன்றிலிருந்து இவன் அரசாட்சி புரிந்தானெனக் கொள்வதினாலேயே இவ்வாட்சிக்காலம் வேறுபடுகின்றது. இவன் ஆட்சிக் காலம், சிங்கள இலக்கியம் செழிப்புற்று ஓங்கியமையால் சிறப்புடையதாய்



இருக்கின்றது. சிறப்பாக இச்செழுமை, கவிதை இலக்கியத்திலேயே விளங்குகின்றது. இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தின் பின் ஒருபொழுதும் அடையாததும் பின்னர் ஒருபொழுதும் அடையப்பெறாததுமான ஓர் உயர் நிலைக்கு இவன் தன் நாட்டினைக் கொண்டு வந்தான்.

**வீரபராக்கிரமபாகு** அல்லது **சயபாகு** ( ஏறக்குறைய 1467 வரையிலிருந்து ஏறக்குறைய 1472 வரை) என்பான் அரசெய்தினான் என்னும் செய்தி கேட்டுச் **சபுமல் குமாரன்** யாழ்ப்பாணத்தினின்றும் விரைந்தோடிவந்து அவனைக் கொன்றான் என **இராசாவலி** கூறுகின்றது. எனினும் நிலைமையினை நன்கு அறிந்த தோகூட்டோ என்பார் பின்வருமாறு கூறுகின்றார். இவ்வரசன் ஒன்றரை ஆண்டுகள் அரசாண்டபின் மறுத்நதையான மாயதுன்னை பராக்கிரமபாகு இறந்தான். இவனைப் பின்தொடர்ந்து சபுமல் குமாரனின் உடன்பிறந்தானான **அம்புலுகலை** இராசா அரசாண்டான். இவன் கேகாலை மாவட்டத் திலுள்ள அம்புலுகலை என்னும் இடத்தில் இருந்து அரசாண்டான் என்பதால் இப்பெயர் பெற்றான். சில ஆண்டுகள் அரசாட்சி செய்தபின் இவ்வரசன் இறந்துவிட, அரசனின் மறுதாய் அவனின் அறிவுக்குறைவான மகனை அரசுகட்டிலில் அமர்த்தினள். இரண்டு ஆண்டுகள் சென்றபின் தன்னால் அரசினைக் கொண்டு நடத்த முடியாதென்று அறிந்த இவன் யாழ்ப்பாணத்தில் இருந்து சபுமல் குமாரனை வரவழைத்தனள்.


இவ்வரசிளங்குமரன் **ஆறும் புவனேகபாகு** (கி. பி. 1472 வரையிலிருந்து குறைந்தது 1480 வரை) என்னும் பெயருடன் அரசுகட்டில் ஏறினான். இவன் பு. பி. 2015 இல் முடிசூடினான். இலங்கையில் இருந்து குருமார்களைப் பெறுவதற்காகப் பெகுவிலிருந்து ஒரு தூது 1476 இல் இலங்கைக்கு வந்தது. அத்தருணத்தில் பொல்லாத ஒரு கலகம் தோன்றியது. காலவேடுகள் இவ்வரசன் முடிசூடி ஏழு ஆண்டுகள் அரசாண்டான் எனக் கூறுகின்றன. ஆனல் தெடிகமையிலுள்ள பொறிப்பு இவனின் ஒன்பதாம் ஆண்டுத் தேதியைக் கொண்டுள்ளது. இவனைப் பின் தொடர்ந்து அரசாண்டவன் இவன் மகனான **ஏழாம் பண்டித பராக்கிரமபாகு** ஆவன். இவனை இவன் மறுதந்தையான அம்புலுகலை இராசா கொன்றனன். இவன் நாலு ஆண்டுகளுக்கு மேல் அரசாளவில்லை என்று தோகூட்டோ கூறுகின்றார்.

**அம்புலுகலை** இராசா **எட்டாம் வீரபராக்கிரமபாகு** என்னும் பெயரைக் கொண்டனன். இராசாவலி இவன் இருபது ஆண்டுகள் அரசாண்டான் எனக் கூறுகின்றது. ஆனல் இவ்வாட்சிக் காலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இவன் தனி மன்னனாக 1484 இல் இருந்து 1509 வரை உள்ள காலத்திலேயே அரசாண்டிருக்கலாம். இவனுக்கும் பல மக்கள் இருந்தனர். இவர்கள் எல்லோரும் ஒரே காலத்தில் அரசுபுரிந்தனர். ஆதலால் இக்காலத்திற்குரிய காலவரையறைகளைச் செவ்விதில் முடிவாக்க முடியவில்லை.

1505 நவம்பர் 15 ஆம் நாள் **தொம் உலோரன்சோ த அல்மேடா** முதன்முதலாக இலங்கை வந்தனன். இவன் கொழும்பில் வழக்கமான தங்கள் அரச அடையாளத்தைப் பொறித்து வைத்தனன். இது போத்துக்கலின் அரசக் குறிப்புக்கள் பொறித்த ஒரு கல்லாகும். இது அரசிமாளிகைக்கு அருகாமையில் உள்ள கோடன் காவிற்கு எடுத்துச் செல்லும்வரை சுங்கசுற்றகத்தில் இருந்தது. போத்துக்கேயர் இலங்கை வந்தடைந்தபொழுது கொழும்பு மக்கள் அவர்களைக் கண்டு மிகவும் வியந்தனர். கொழும்பு மக்கள் தம் அரசனுக்கு அவரைப்பற்றிப் பின்வருமாறு கூறினர் என இராசாவலி கூறுகின்றது: "எங்கள் கொழும்புத் துறைமுகத்தில் நன்னிறமும் அழகும் உள்ள ஒரு மக்களினத்தார் வந்துளர்; ஓரிடத்தில் ஒருபொழுதும் அவர் ஓய்ந்திலர்; இங்கும் அங்கும் ஓடித்திரிகின்றனர்; **குருதியைக் குடித்துக் கற்றுண்டுகளை அவர் அருந்துகின்றனர்;** ஒரு மீனுக்கோ எலுமிச்சம் பழத்திற்கோ அவர்கள் இரண்டு அல்லது மூன்று வெள்ளி அல்லது பொன் நாணயங்களைக் கொடுக்கின்றனர்; யுகாந்தரக்குன்றில் முழங்கும் இடியிலும் அவர்கள் பீரங்கி கூடிய முழக்கத்தைக் கொண்டுள்ளது; அவர்களின் பீரங்கிக் குண்டுகள் பல கவ்வைகள் பறந்து கருங்கல்லாலான அரண்களையும் நொறுக்கிவிடுகின்றன." போத்துக்கேயத் தூதுவர்கள் அரசவைக்கு ஒரு சுற்றுவழியால் இட்டுச்செல்லப்பட்டனர். கொழும்பிலிருந்து ஆறுகல் தொலைவிலுள்ள கோட்டையை அடைவதற்கு இவர்கள் மூன்று நாள் எடுத்தனர். போத்துக்கேயர் இச்சூழ்ச்சிக்கு எடுபடவில்லை; எனினும் இந்நிகழ்ச்சி சிங்களத்தில் ஒரு பழமொழியாகிவிட்டது. சோனகர் என்று சொல்லப்படும் முகமதியர் இவ்வயலாரின் வருகையால் தம்வணிகத்துறையில் பேரிடர் உற்றனர். எனவே இவர்கள் பல சூழ்ச்சிகள் செய்தனர்; எனினும் தொம் உலோரன்சோ மன்னனைப் போத்துக்கல் பாதுகாக்கும் என உறுதியளித்தான். இக்காவலுக்கு ஈடாகக் கறுவா திறையாகக் கொடுக்கப்படும் என உறுதி கொடுக்கப்பட்டது.

பராக்கிரமபாகுவிற்குத் தன் இனத்தவரால் என்றும் தொல்லைகள் நேர்ந்தன. இக்குலமுறையினர்க்கு உள்நாட்டுக் கலகங்களே தொலையா இடராய் அமைந்து அவர் வீழ்ச்சிக்குக் காரணமாய் இருந்தன. 1508 இல் இறுதித் திங்கள்களில் இவன் மிகவும் நோய்ப்பட்டிருந்தான். **ஒன்பதாம் தரும பராக்கிரமபாகு**வும் அவனின் உடன் பிறந்தானை **ஏழாம் விசயபாகு**வும் தங்கள் அரசாட்சிக் காலத்தை 1509 இலிருந்து தொடங்கி கணிக்கின்றனர். ஆதலால் இவன் தன் மக்களை ஒத்த ஆட்சியாளர் ஆக்கினன் எனத் தோன்றுகின்றது. 1513 இல் இவ்வரசன் இறந்துவிட அரசுரிமையையிட்டு இருமக்களும் பொருதனர். ஆனால் த குயிரோசு என்பார் 1518 இல் அரசன் வெண்தாடி உடைய கிழவனாய் விளங்கினன் என்றும் தன் தந்தையின் நீண்ட வாழ்வினாலும் ஆள்வதற்கு ஏற்ற இயல்பின்மையாலும் பொறுமை இழந்த மகனான விசயபாகு, அவனைப் பதவியிலிருந்தும் நீக்கி





உருவம் 21.—போத்துகேயர் படை இலச்சினை, கொழும்பு.

இறுதியில் அவனை நஞ்சூட்டிக் கொன்றனன் என்றும் கூறுகின்றார். இவன் இறக்கின்றபொழுது எண்பது ஆண்டு அகவை உடையவனாய் இருந்திருக்கலாம்; எனினும் உண்மையில் அவனுடைய அரசாட்சி 1518 வரை சென்றது; 1518 இல் **ஒன்பதாம் பராக்கிரமபாகு** (கி.பி. 1509—குறைந்தது

1528 வரை) மூத்த மன்னனாக அரசை ஏற்றான். இம்மன்னன் சிறப்புடையவன் அல்லன். அதனாலேயே சில காலவேடுகள் அவனைப்பற்றிக் கூறாமல் விட்டன. விசயபாகுவும் அவனைப் பின்தொடர்ந்து வாழ்ந்தோரும் இவன் இருந்தமையை அறவே புறக்கணித்தனர். விசயபாகுவால் கோட்டையில் இருந்து அளிக்கப்பட்ட கொடைகளுள் இப்பொழுது முதலாவதென அறியக்கிடப்பது 1519/20 என்னும் தேதி கொண்டுள்ளது. இவன் இருபதோ இருபத்திரண்டோ ஆண்டுகள் ஆண்டான் என இராசாவலி கூறும். இவன் தன் இறுதிக் காலத்தில் களனியில் வாழ்ந்திருக்கலாம்.

நாம் முன்னர்க் கூறியவாறு 1518 இல் **ஏழாம் விசயபாகு** (கி. பி. 1509–1521) சோனகர்களால் தூண்டப்பெற்று அரசைக் கைப்பற்றி, அப்பொழுது போத்துக்கலுடன் போர் செய்துகொண்டிருந்த மலையாள ஆட்சியாளனான கோழிக்கோட்டு **சமோரினிடம்,** போத்துக்கேயரால் நிறுவப்பெற்ற கோட்டையைத் தாக்குவதற்கு உதவி அளிக்குமாறு ஆட்களை அனுப்பினான். இக்கோட்டையைப் போர்த்துக்கேயர் சொற்ப காலத்திற்கு முன்தான் கட்டினர். நடந்தபோரில் சிங்களர் தோல்வி உற்றனர். அப்போரில் அரசன் மானமிழந்தான். பின்னர் 1521 இல் நடந்த "**விசயபாகுவை அழித்தல்**" என்னும் போரில் தனக்கும் தன் உடன்பிறப்பாளனான **இராசசிங்கன்** என்பானுக்கும் ஒரு பொது மனையால் பிறந்த மக்களால் அரசு கட்டிலையும் உயிரையும் இழந்தனன். இம்மக்களுள் மூத்தோனே **ஏழாம் புவனேகபாகு** (கி. பி. 1521–1550) என்னும் பெயருடன் அரசானுயினான். விசயபாகு என்பான் தன் மக்களின் உரிமையை நீக்கித் தான் எடுத்து வளர்த்த ஓர் அரசிளங்குமரனுக்கு அரசுரிமையை அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தினாலேயே வீழ்ச்சி உற்றான் என வேறு சில குறிப்புக்கள் கூறுகின்றன. 1524 இல் போத்துக்கலில் இருந்து வந்த ஒரு கட்டளைக்கிணங்க போத்துக்கேயர் கட்டிய கோட்டை அழிக்கப்பட்டது. எனினும் போத்துக்கேயர் நலங்களைக் கவனிக்க ஒரு **முகவன்** அங்கு அமர்த்தப்பட்டான்.

1521 இல் நாடு மூன்று உடன்பிறந்தாரிடை பிரிக்கப்பட்டது. **மாயாதுன்னை** சபரகமுவா ஆக அமைந்துள பகுதியை எடுத்துக் கொண்டனன். இவன் தலைநகர் **சீதாவகை** (அவிசாவலை). **இறைகம்பண்டாரன்** காலி, களுத்துறை மாவட்டங்களிலுள்ள வளலவிதி, பத்துன், இறைகம் கோரளைகளைப் பெற்றனன். கடல்துறைமுகப் பகுதிகளைப் **புவனேகபாகு** கொண்டனன். மலைநாட்டு அரசனாக வேறொருவன் விளங்கினன். இவன் இயலும் வேளைகளில் தன் சுதந்திரத்தை நிலைநாட்டினன். மாயாதுன்னை கோட்டை அரசுகட்டிலைக் கைக்கொண்டு தீவு முழுவதும் மேலாட்சி புரிய அவாவினன். இதனால் 1526 இற்குப்பின் உள்ள ஆண்டுகள் முழுவதும் சமோரினின் துணைபெற்ற இவனுக்கும் போத்துக்கேயர் துணைபெற்ற புவனேகபாகுவிற்கும் இடையறுப்போர் நடந்து வந்தது. எனினும் 1539 இல் மாயாதுன்னை அமைதியை நாட வேண்டி நேர்ந்தது. இவ்வமைதி 1547 வரை நிலைத்தது.



புவனேகபாகுவின் மகள், **வீதியபண்டாரன்** என்பான் ஒருவனுக்கு மணம்செய்து கொடுக்கப்பட்டாள். மாயாதுன்னையின் சூழ்ச்சிகளுக்கு எதிராகத் தன் நிலைமையைப் பாதுகாக்க விழைந்த அரசன் தன் மகளின் சிறு குழந்தையான **தருமபாலனின்** பொன்னாலாய வடிவம் ஒன்றினை ஒரு தூதுக்குழுவினரிடம் கொடுத்து அதை 1540 இல் இலிசுபனிற்கு அனுப்பி வைத்தான்; அனுப்பி, கோட்டை அரசாட்சியின் உரிமைக்குரியவன் என அச்சிறு அரசிளங்குமரனைப் போத்துக்கல் மன்னர் நிறுவவேண்டுமென்ற வேண்டுகோளையும் சொல்லி அனுப்பினன். இவ்வரசுரிமை ஏற்பாட்டை அறிந்த மாயாதுன்னை ஆவன செய்யத் தலைப்பட்டான். ஆனால் புவனேகபாகுவின் ஒரு மகன், ஒரு மருமகன் ஆகியோர்களின் உரிமைகளினால் ஒரு சிறிது காலத்துக்கு ஓர் உடன்பாடு ஏற்பட்டது. கண்டி மன்னன் தான் மதம் மாறினன் என்னும் ஒரு போலிக் காரணத்தைக் கூறிக்கொண்டு சீதாவகையிற்கு எதிராகத் துணை அளிக்குமாறு போத்துக்கேயரை நாடினன். 1547 இல் ஒரு படை அங்கு சென்றது. அங்கு படையினர் அரசனின் நேர்மையில் ஐயுற்றதால் கொழும்பிற்கு மீண்டனர். இவர்கள் மாயாதுன்னையால் நன்முறையில் வரவேற்கப்பட்டனர். இது அவர்கட்கு வியப்பை அளித்தது. மீண்டும் இவ்வீர் உடன்பிறப்பாளரும் 1548 இல் போரிட்டனர். இப்பொழுது போர்த்துக்கேயர் மாயாதுன்னையை ஆதரித்தனர். இப்பூட்கை நெடுநாள் நிலைத்திருக்கவில்லை. 1550 இல் கோட்டைச் சேனைகள் சீதாவகையைக் கைப்பற்றின. ஆனால் இது வீணாகவே முடிந்தது. ஏனெனில் அவர்களின் போத்துக்கேய நேயர்கள் கண்டிமீது பயனற்ற ஒரு தாக்குதலைச் செய்தனர். நவம்பர் மாதத்தில் புதிய பதிலரையனான **தொம் அவன்கோந நொரன்கோ** கோவாவிற்குப் போகிற வழியில் திசைமாறிக் காற்றினால் கொண்டு செல்லப்பட்டுக் கொழும்பு வந்து சேர்ந்தனன். இவன் புவனேகபாகுவில் நல்லுறவு கொண்டவனாக இருக்கவில்லை. அவன் நேர்மையில் ஐயங்கொண்டு இலங்கையை விட்டு வெளியேறுமுன் அரசனையும் அவன் உடன்பிறந்தானையும் இலங்கையில் அமைதியைப் பேணுமாறும் கோவாவிற்குத் தூதரை அனுப்புமாறும் பணித்துச் சென்றனன். ஆனால் 1551 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அரசன் களனியில் உள்ள தன் மாளிகையில் இருந்து சாளரம் வழியை வெளிநோக்கிப் பார்க்கும்பொழுது சுடப்பட்டான். இக்குற்றத்தைப் பதிலரையனே செய்தான் என்று குற்றம் சாட்டப்பட்டாலும் மாயாதுன்னையின் ஏவுதலினாலேயே இது நடைபெற்றது என நம்புவதற்கு ஆதாரங்கள் உள. புவனேகபாகு இறந்தமை போத்துக்கேயருக்கு மிக்க இடரை விளைத்தது. ஏனெனில் சில ஆண்டுகளுக்குள்ளாகக் கோட்டை அரசாட்சி தலைநகருடனும் அதைச்சேர் அயலுடனும் அடங்கிவிட்டது. மாயாதுன்னையே உண்மையான மன்னனாக விளங்கினன்.

இவ்வாறாக இலங்கையுடன் போத்துக்கேயர் கொண்ட தொடர்பின் முதல் தோற்றம் முடிந்தது. அவர்களின் முதல் நோக்கம் ஒரு முகவனின் கீழ் ஒரு தொழிற்சாலையையோ வணிகநிலயத்தையோ அமைப்பதாகும்.

கோட்டை அரசனுக்கும் அவன் உடன்பிறந்தானுக்கும் இடைநிகழ்ந்த உள்நாட்டுக் கலகம் முன்னவனை என்றும் போத்துக்கேயர் நட்பினை நாடச் செய்தது. இது போத்துக்கேயர் படையை அடிக்கடி இலங்கையில் நிலவச் செய்தது. இரண்டாவது தோற்றத்தில் கொழும்புக் கோட்டையும் கோட்டையில் தருமபாலனைப் பாதுகாப்பதற்கு நிலைநிறுத்திய தானையரும் அதன் தலைவனும் நம் கவனத்தை ஈர்க்கின்றனர். மாயாதுன்னையினதும் அவன் மகனினதும் பகை புதிய மன்னனை மேன்மேலும் அயலார் துணையை நாடச்செய்தது. மூன்றுவது தோற்றம் சீதாவகை ஆட்சி சிதைவுற்ற பொழுது கோட்டை ஆட்சிக்குரிமை பூண்ட போத்துக்கேயர் போட்டிக்குரிய அந்நகரை இடர் இன்றி இணைத்து நாட்டினை வெற்றிகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டதுடன் தொடங்குகின்றது. இக்காலத்துக்குரிய முக்கிய அலுவலாளர் **வென்றியின் தலைத்தளபதி** ஆவன்.

**தருமபாலனின்** கொடையோடு இணைக்கப்பட்ட பத்திரம் குறிக்கும் அரசியல் பிரிவுகள் இப்பத்திரத்தை நிறுவிய காலமாகிய 1580 இற்கு மிக முந்திய ஒரு காலத்தைக் குறிப்பதாய் இருத்தல் வேண்டும். எனவே அதைப்பற்றிய குறிப்புக்கள் இவ்வதிகாரத்தில் இடம்பெறும். கோட்டை அரசன் ஆட்சி உரிமை கொண்டாடிய அரசுகள் ஆவன சீதாவகை அரசாட்சி, ஏழு கோரளைகள் அரசாட்சி, கண்டி அல்லது மலைநாட்டு அரசாட்சி, யாழ்ப்பாணத்து அரசாட்சி, நாலு கோரளைகளின் அரசாட்சி என்பனவாம். கோட்டை அரசனுக்குத் திறைகொடுக்கக் கட்டுப்பட்ட பல வன்னியர் பதங்களும் இருந்தன. இவையாவன, இருபாணமைகள், யாலே, வெள்ளவாயா, கொசுகமை, வெல்லஸா, பலுகமை, மட்டக்களப்பு, கொட்டியார், திருக்குணமலை, புத்தளம் என்பவையாம். புத்தளமும் யானையும் பல வன்னியர்கள் கையில் இருந்தன. பலுகமையை இருவர் கொண்டிருந்தனர். மற்றை ஒவ்வொன்றையும் ஒவ்வொருவர் கொண்டிருந்தனர். கோட்டையிலேயே மூன்று திசாவைமார் இருந்தனர். ஒருவர் மாத்துறையைக் கண்காணித்தார். ஒருவர் தேனவகையின் மேலும் சபரகமுவாவின் ஆக்கிர அல்லது இரத்தினச் சுரங்கங்கள் மேலும் அதிகாரம் கொண்டிருந்தார். ஒருவர் நுவரகலாவியின் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். இது இப்பொழுது உள்ள வடமத்திய மாகாணத்தின் மேற்குப் பாதியைக் கொண்டு மேற்கூறிய பத்திரத்தின்படி புத்தளத்திலிருந்து மன்னார்வரை சென்றது. பின்னர் கூறப்பட்ட அதிகாரத்தைத் தவிரக் கோட்டையின் நேரான உடைமைகளாக 22½ கோரளைகள் குறிக்கப்பட்டுள்ளன. இப்பகுதி வடமேற்கு மாகாணத்தின் தென்மேற்கு மூலையையும் ஒரு சிறு பகுதி தவிர்ந்த மேல் மாகாணத்துடன் 'வளவை ஆறுவரை பரந்த தென் மாகாணம் சேர்ந்த பரப்பையும் கிலிமலை, பம்பரப்பொட்டுவா ஆகிய பெரும் கிராமங்களுடன் சேர்ந்த கழுகங்கைக்குத் தென்பாகத்திலுள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் பகுதியையும் கொண்டுள்ளது. ஒரு சிறு பகுதியைத் தவிர என்பதில் அப்பகுதி சீதாவகையிற்கு உரிமையாய எவாகம் கோரளையின் அரைப்பகுதியாகும்.



### 6 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பொதுவரலாற்றிற்கு **இரா** பார்க்க. வலன்றினின் **அவுட் அன் நியு ஊசு இந்தியன்.** தொகுதி. v. இல் உள்ள அதன் மாற்றமும் பார்க்க. த கூட்டோ, த பரோசு ஆகியோரிலிருந்து சுருக்கங்கள், தொனுல் பேகுசன் **வே. ஆ. ச. ச., இ. கி. xx.** எண் 60 த. குயிரோசு **இலங்கையைச் சமய முறையில் வென்றதும் அரசமுறையில் வென்றதும்** அரசச்சகம், 1916. பி. ஈ. பீரிசு, **இலங்கை : போத்துக்கேயர் ஊழி**, கொழும்பு, 1913. சுகூகமரும் வொறெற்சும், **இலங்கை**, இலீச்சிக்கு, 1928.

**ஆறும் பராக்கிரமபாகு.** இவன் பிறப்பிற்கு **வே. ஆ. ச. ச., இ. கி. xxxii.** எண் 86, ப-ள். 290, 304 தொடர் பார்க்க. **இராசாவன்சயத்தில்** (கொழும்பு, அரும்பொருளகம்) வீரபாகுவை விசயபாகு என்று சொல்லப்பட்டுள்ளது. இன்னும் பல தேதிகள்பற்றி எழுத்துத் தொகுதியொன்றில் வீரபாகு ஆறும் பராக்கிரமபாகுவின் தந்தை என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும் இவ்விரண்டு நூல்களும் காலத்தாற் பிந்தியவை. புவராசனைப் பற்றிப் **பரவை சந்தேசத்தில்** கூறப்பட்டுள்ளது.

அரசெய்திய தேதிக்கு **வே. ஆ. ச. ச., இ. கி.** அந்நூல் ப-ள். 307-9 தொடர். **எ. சி. iii.** ப-ள். 52,53. சைனுவிற்குக் கொடுத்த திறைக்கு **வே. ஆ. ச. ச., இ. கி. xxiv.** எண் 68, ப. 111. பார்க்க. பெப்பிலியான பொறிப்பு அந்நூல் **vii.** எண் 25, ப. 187 இல் வெளியிடப்பட்டுள்ளது. அதோடு சார்ந்த பத்திரங்கள் பலவும் அரமனைப்பொலைக் கொடையும் எழுத்து வடிவில் உள்ளன. (**வித்தியோதய.** 1. எண் 8 தொடர்.) உள்ளுறைச் சான்றுகளினின்றும் அவை உண்மையானவையாம். சமன் தேவாலயக் கொடை **இ. தொ. ii.** ப. 43 இல் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள சிங்களப் பெயர்களுக்கு **இ. தொ. ii.** ப-ள். 54,167 தொடர் பார்க்க. முதலாம் பராக்கிரமபாகு யாழ் நாட்டினை ஆண்டான், என்பது வெளியிடப்படாத நயினதீவுப் பொறிப்பிலிருந்து அறியக் கிடக்கின்றது. யாழ்ப்பாணத்து அரசர் வழிமுறைக்கு வண எசு. ஞானப்பிரகாசர், **இ. தொ. v.** பகுதி iv. ப-ள். 172 தொடர் பார்க்க. **த. கு.** ப-ள் 37, 38. 1344 எனும் தேதி இபன் பட்டூட்டாவின் வருகையைக் குறிப்பதாகும். விசயநகர மேலாண்மைக்கு **வே. ஆ. ச. ச., இ. கி.** (குறிப்புக்களும் கேள்விகளும்) **xxvi** எண் 70, பகுதி ii ப. 101, செவெலின் நூனெசு, **மறைந்த ஒரு பேரரசு**, இலண்டன் 1900, என்பதும் பார்க்க. தென்காசிப் பொறிப்பிற்குத் **திருவாங்கூர் தொல் பொருளியல் வரிசை, vi.** எண் 11 பார்க்க.

**ஆறும் புவனேகபாகு.** மற்றைப் பத்திரங்களிலிருந்து ஆராயும்பொழுது தேதி பு. பி. 2015 என்பது **புதுகுணலங்கார**ய என்பதிலிருப்பதுபோல் அரசன் அரசுகட்டில் ஏறியதைக் குறிக்குமேயன்றி அவனின் மூன்றும் ஆண்டினையன்று. கலியாணிப்பொறிப்பிற்கும் பார்க்க, **வே. ஆ. ச. ச., இ. கி. xxiii.** எண் 67, ப-ள். 231 தொடர், தெடிகமைப்பதிவேடு, **எ. சி. iii.** எண் 29.

**எட்டாம் பராக்கிரமபாகு.** 1508 இல் அவன் கொண்ட நோயினைப்பற்றி த பரோசு, **ii., iii 1 வே. ஆ. ச. ச., இ. கி. xix.** எண் 59, ப. 366) என்பதிலும், அவன் இறப்பு 1513 இல் நடந்ததென்பதும் அரசனுக்கு த அல்புகேக்கி எழுதிய முடங்கலில் குறிக்கப்பட்டுள்ளது. இம் முடங்கல் **அல்குன்கு டொக்குமென்றேசு,** ப. 297 இல் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வுரையில் அவன் ஆட்சியைப்பற்றிக் கூறியிருப்பது மிகப் பொருத்தமாக உள்ளது, **எ. சி. iii.** ப. 57 பார்க்க. ஆறும் பராக்கிரமபாகுவின் பேரனை வீரபராக்கிரமபாகுவைப் பற்றி வலன்றின்(ப.74) கூறும்பொழுது அம்புலுகலே இராசா அவன் தாயாரின் உடன்பிறந்தானின் மகன் எனக்கூறுகின்றான். **இரா.** ஒரளவிற்கு அம்புகலே இராசாவையும் அவன் சிற்றரசைக் கொண்டிருந்த மாயாதுன்னைப் பராக்கிரமபாகு என்பானையும் பிரித்தறிய முடியாமல் மயங்கியுள்ளது. த கூட்டோ என்பானின் கூற்றிற்கு இணங்கப் பிற்கூறிய இளவரசன் ஆறும் பராக்கிரமபாகுவின் பின்னும் வாழ்ந்தனன்.

**ஒன்பதாம் பராக்கிரமபாகு.** களனிப் பொறிப்பிற்கு **இ.தொ. i.** ப. 155 பார்க்க.

**ஏழாம் விசயபாகு.** அவன் கொடைகளாவன: நாலாம் ஆண்டில் தெய்வந்துறையிலிருந்து, ஒன்பதாம் ஆண்டு உடுகம்பளையிலிருந்து, பதினோராம் ஆண்டு கோட்டையிலிருந்து, உடுகம்பளைச் சன்னசம் ஒரு சூரிய கிரகணத்தின்பொழுது கொடுக்கப்பட்டதாகும். இவ்வகைக் கிரகணங்கள் 1517, 1518 ஆகிய ஆண்டுகளில் குறித்த தேதிகளில் நிகழ்ந்தன. இரண்டாவது இலங்கையில் தென்படவில்லை. எனவே அரசெய்தியது 1509 இலாகும்; தெய்வந்துறைக் கொடையிலுள்ள சக ஆண்டு 1432 என்பது அக்காலத்தில் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாயிருக்கலாம்.

**ஏழாம் புவனேகபாகு. வே. ஆ. ச. ச., இ. கி. xxii.** எண் 65, ப-ள். 267 தொடர் பார்க்க. சுகூகமர், முற்கூறிய நூல்.

மலைநாட்டு மன்னரின் பதிவேடுகள் பற்றிக் **கேகாலே மாவட்டத்து அறிக்கை** ப-ள். 80, 81 பார்க்க. இவை பிழையாக மூன்றும் விக்கிரமபாகுவோடு இணைக்கப்பட்டன; சயவீர பராக்கிரமபாகு, விக்கிரமபாகு என்போரின் மற்றையவை கடலாதெனியில் உள; பு பி. 2085 (கி.பி. 1544) எனும் நாள் கொண்ட செயவீர மகா ஆத்தானத்திற்குரிய ஒன்று கண்டியிலுளது **(எ.சி. iv.** எண்கள் **2,3,4).**

தருமபாலனின் கொடையும் அதோடியைந்த பத்திரங்களும் **த.கு.** ப-ள். 428, 429 இலும் **ஒரியன்றலிசு, iii.** ப-ள். 111, 131, 193



என்பவற்றிலும் கொடுக்கப்பட்டுள்ளன. தெனவகை அதிகாரியம் ஒருவேளை கடையம்பொதவின் தெனவகை பசரட்டை என்பதை ஒக்கும். கோரளைகளின் வரிசையில் அட்டலகம் என்பது அட்டுல்கம் என்பதாயிருக்கலாது. ஏனெனில் இது சீதாவகைக்கு மிக அண்மையில் என்க. எனவே இது "அடகலனு" யிருக்கும். "தரண" என்பது எதரவ என்பதாயிருக்கலாம். இது இப்பொழுது ஊவாவிலுள்ளது. ஒரு காலத்தில் சபரகமுவாவிலிருந்தது.

அதிகாரம் 7

# சீதாவகையினதும் போத்துக்கலினதும் எழுச்சி 1551–1635

இப்பொழுது இளைஞன் தருமபாலனை (1551–1597) அவன் தந்தையான வித்தியாபண்டாரன் கோட்டை அரசுகட்டிலில் ஏற்றினன். அவனின் பேரன் இறந்த செய்தியும் அதைத் தொடர்ந்து அவன் குடிமக்கள் அவனை விட்டு விரைவாக நீங்கிய செய்தியும் கோவாவுக்கு எட்டின; உடனே பதிலரையன் கொழும்பிற்கு விரைந்து வந்தான். இவன் புதிய அரசனுக்குத் துணை செய்வதை விட்டுத் துன்புறுத்தும் நோக்கத்துடனேயே வந்தான். நற்பேறற்ற இவ்வரசனும் அனன் அவையோரும் பலிதத்திலும் கொள்ளையடிக்கப்பட்டனர். அவர்களின் அரிய பொருள்கள் களவாடப்பட்டன. அரண்மனையும் நகரும் முறையாகக் கொள்ளை அடிக்கப்பட்டன. இத்தகைய இழிவான செய்கையைத் தாய் நாட்டு மக்கள் மிகவெறுத்துக் கூறினர். கொள்ளை அடிக்கப்பட்டான் போத்துக்கலின் பாதுகாப்பில் இருந்தமையால் இச்செய்கை இன்னும் மிக இழிவாகவே இருந்தது. இதற்கு ஈடுகொடுக்கப்பட வேண்டும் என்று கட்டளை இடப்பட்டது. எனினும் சட்டம் வழங்குவதில் காலம் தாழ்த்தப்படுவது இயல்பாதலின் உடைமையாளர் களவாடப்பட்ட பொருள்களில் ஒருசிறு பகுதியே பெறக்கூடியவராய் இருந்தனர். பின்னர் பதிலரையன் தருமபாலனுடன் சீதாவகைக்குச் சென்றான். அங்கு இவன் பெரண்டிக்கோயில் என்னும் ஆலயத்தை இடித்தழித்தான். இக்கோயிலின் சிதைந்த பாகங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றன. எனினும் எடுத்த அலுவலை முற்றுப் பெறச் செய்வதற்கு ஏற்ற வாய்ப்பு இருந்தும் மாயாதுன்னையுடன் அவன் ஒரு முடிவிற்கும் வரவில்லை. பின்னர் கோட்டை அழிந்ததும் அவ்வரசாட்சி வீழ்ந்ததும் பெருமளவில் இவனாலேயே நடைபெற்றனவாம். பின்னர் அரசனின் தந்தையைக் கவருமாறு மறைவான கட்டளை பிறப்பித்த பின்னர் கொழும்பைவிட்டு அவன் போயினன். இது 1552 இல் நிறைவேற்றப்பட்டது. ஆனால் வித்தியா பண்டாரன் தன் சிறையிலிருந்து தப்பி ஓடினன். அதன் பின்னர் அவன் போத்துக்கேயரின் பொல்லாப் பகைவன் ஆயினன். முதன்முதலாக இவன் மாயாதுன்னை பக்கம் சார்ந்தனன். இவன் அவனின் மகனை

மறைந்திருந்தான். ஆயினும் விரைவில், களுத்துறை மாவட்டத்தில் இருந்த பெலந்த கோட்டையில் இவன் மாயாதுன்னையின் மகன் **இராசசிங்கன்** என்பானாலும் போத்துக்கேயராலும் தாக்கப்பட்டான். அச்சமயத்தில் இராசசிங்கன் பதினொரு வயதே உடையவனாய் இருந்தான் எனச் சிங்களக் காலவேடுகள் கூறுகின்றன. இவனின் போர்த்திறத்தினால் வந்த புகழ் எங்கும் விரைவில் பரவியது. விரைவில் இவன் போத்துக்கேயருக்கு அச்சம் விளைவிக்கக் கூடியவனாக விளங்கினான். வித்தியாபண்டாரன் மலைநாட்டில் சிறுகாலம் புகலிடம் கொண்டு குருநாகல் மாவட்டத்தில் உள்ள **மூண்ட கொண்டபொலை** என்னும் இடத்திற்கு ஓடினன். இங்கு அவன் தன்னை ஆதரித்தவனைக் கொன்று அவன் சிற்றரசினையும் கவர்ந்தான். இராசசிங்கனாலும் போத்துக்கேயராலும் அங்கிருந்து வெளியகற்றப்பட்ட இவன் யாழ்ப்பாணத்திற்கு ஓடினான். இங்கு நடந்த ஒரு சிறு சச்சரவில் இவன் கொல்லப்பட்டான். இவன் அரும்பொருள் யாவும் அவ்விடத்தரசன் கைவசமாயின. இவற்றுள் புத்தரின் பற்சின்னமும் ஒன்று எனப்போத்துக்கேயருக்கு அறிவிக்கப்பட்டது.

1557 இல் **தருமபாலன்** ஞானநீராட்டுப் பெற்று **யோன்** என்னும் பெயரையும் பூண்டனன். இதன் பயனாய் அவன் குடிகள் பலர் அவனைக் கைவிட்டனர். கோட்டையை முற்றுகையிட்டு இராசசிங்கன் போரைத் தொடர்ந்து நடாத்தினான். 1561 இல் அவன் மிகக் கடுமையாக நடத்திய **முல்லேரியாவை** என்னும் போரில் போத்துக்கேயரை வென்றான். 1563இல் கொழும்பும் கோட்டையும் முற்றுகையிடப்பட்டன. இவை மீட்கப்பட்டன எனினும் 1564 இல் மிக்க ஒழுங்கான முறையில் முற்றுகையிடப்பட்டன. இதனாற் படைக்களத்தோர் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தனர். மீண்டும் முற்றுகை கைவிடப்பட்டது. ஆனால் உண்மையில் போத்துக்கேயர் கோட்டையைக் கைவிட்டுத் தருமபாலனையும் தங்களுடன் கொழும்பிற்குக் கூட்டிச் சென்றனர். இதனால் இராசசிங்கனே உண்மையில் நன்மை அடைந்தனன். போர் தொடர்ந்து நடந்தது. 1579–1580 வரை உள்ள காலத்தில் ஒன்றரை ஆண்டுகள் கொழும்பு முற்றுகையிடப்பட்டது. 1580 வரையில் இராசசிங்கன் கண்டியில் தன் கவனத்தைச் செலுத்தி, அவ்வரச குடும்பத்தினரை வெளியகற்றி அரசாட்சியை இணைத்துக்கொண்டான். பதவி நீக்கப்பட்ட மன்னன் திருக்குணமலைக்கு ஓடினன். அங்கு இவன் குழந்தையாயிருந்த தன் மகள் **தொனா கதறினா** சிறுபருவத்தினளாய் இருக்கும்வரை தன் மருமகனை, தனக்குப்பின் அரசனாய் இருக்குமாறு முறைவகுத்தனன். இதன் பின்னர் சிறு காலத்தால் இவன் வைசூரி கண்டு இறந்தனன். இங்கு குறிப்பிட்ட மருமகனே **தொம்பிலிப்பு** என ஞானநீராட்டுப் பெற்றவன். அரச குடும்பத்தின் பேராதனைக் கிளையின் குலத்தோன்றலான **வீரசுந்தரன்** தன் மன்னனுக்குத் துரோகம் செய்து இராசசிங்கன் பக்கம் சேர்ந்தான். இவன் விரைவில் தன் புதுத்தலைவனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தான். தலைவனும் இவ





உருவம் 22.—போத்துக்கேயரின் இலங்கை நாட்டுப்படம், 1627 வரையில்.

னுக்குத் துரோகம் செய்து கொன்றனன். அப்பொழுது வீரசுந்தரனின் மகன் **கொனப்பு** கொழும்புக்கு ஓடினன். 1581 இல் மாயாதுன்னை இறந்தான். இவன் தன் மகனால் நஞ்சூட்டப்பட்டான் எனக் கூறப்படுகின்றது. இப்பொழுது **இராசசிங்கன்** கொழும்பையும் வடபகுதியையும் தவிர்ந்த இலங்கை முழுவதற்கும் ஆள்பதியாயினன்.

கிறித்துவ மதம் தழுவினோரை மன்னார்த் தீவில் 1544 இல், யாழ்ப்பாணத்து மன்னன் படுகொலை செய்யும்வரை யாழ்ப்பாணத்தரசில் போத்துக்கேயர் கைவைக்கவில்லை. **தொம் கொன்சுதாந்தினோ தி பிறகன்சா** குடாநாட்டின்மீது படையெடுத்துச் சென்று பெருநிலப்பரப்பில் உள்ள நாட்டிற்கு அரசனை ஓடச் செய்யும்வரை இதற்குப் பழிவாங்கப்படவில்லை. இது 1560 இல் நடந்தது. பின்னர், அரசன் தன் கீழ்ப்படிவினை அவர்களுக்குக் கூறி யாழ்ப்பாணம் மீண்டும் சென்றான். அங்கு அவன் அவ்வமயத்தைப் பயன்படுத்திக் கிளர்ந்து எழுந்தனன். இதனால் போத்துக்கேயர் நாட்டைவிட்டு விலகவேண்டி நேர்ந்தது. மன்னார் இவர்கள் கையிலிருந்தும் 1591 வரை இவர்கள் யாழ்ப்பாணத்தை வெற்றிகொள்ள முடியவில்லை. 1560 இல் நடந்த படையெடுப்பிலேயே வீதிய பண்டாரனின் அரும்பொருள்களை இவர்கள் பெறமுடிந்தது. இவற்றுடன் பற்சின்னம் என்று கூறப்பட்டதையும் இவர் பெற்றனர். பெகு மன்னன் இதைப்பெற ஈடாகப் பெருந்தொகை அளிக்க முன்வந்தனன். ஆனால் இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இச்சின்னம் கோவாவிற் பதிலரையானால் எரிக்கப்பட்டது.

**முதலாம் இராசசிங்கன்** (கி.பி. 1581–1593) பலம்பொருந்திய ஒரு படைவீரனாயிருந்தான். எனினும் அவன் தொடர்ந்து காட்டிய பகைமையால் போத்துக்கேயர் அவனை வெறுத்தனர். பௌத்த மதத்தைத் துறந்து இந்து மதத்தைத் தழுவியதால் பௌத்தர்கள் இவனை வெறுத்தனர். இவன் கோட்டையை அழித்தபின் கொழும்பைப் பிடித்துப் போத்துக்கேயரை அறவே வெளியேற்றிவிடச் சிந்தைகொண்டனன். கொழும்புக் கோட்டை 1587 இலிருந்து 1588 வரை முற்றுகையிடப்பட்டது. பிற்கூறிய ஆண்டின் முற்பகுதியில் இது விடுவிக்கப்பட்டது. இத்தருணத்திலேயே போத்துக்கேயர் கரை நாடுகளைச் சூறையாடித் தெய்வந்துறையில் இருந்த புகழ்பெற்ற விட்டுணு கோயிலை அழித்தனர். 1590 இல் மீண்டும் இராசசிங்கன் கொழும்பைப் பிடிக்க முயன்றனன். பின் நடந்த முற்றுகையில் வீரசுந்தரனின் மகனான **கொனப்பு பண்டாரன்** என்பான் மிக்க புகழ்பெறும் வகையில் நடந்து கொண்டனன். இவனைப் போத்துக்கேயர் ஒசுத்திரியாவின் **தொம் யோன்** என அறிவர். தன் தந்தையைக் கொன்ற இராசசிங்கனை இவன் வெறுத்தான். இப்பொழுது கண்டி அரசாட்சியில் ஒரு பிளவினை உண்டாவதற்குத் தன் சேவையைப் போத்துக்கேயருக்கு அளித்தான். இதற்கிணங்க இவன் மலைநாட்டு அரசுகட்டிலுக்கு உரிமை கோரும் ஒருவனையும் தன் மகனையும் ஒரு போத்துக்கேயர் பட்டாளத்துடன் அங்கு இட்டுச் சென்றனன். அப்பொழுது **தொம் பிலிப்பு** முறைமையாக அரசுகட்டிலில் ஏற்றப்பட்டான். இராசசிங்கனின் தாக்குதல்களுக்குக் காப்பாகக் கன்னொருவையில் ஒரு கோட்டையும் கட்டப்பட்டது. ஆனால் இப்புது மன்னன் திடீரென இறந்தனன். இங்கும் நம்பிக்கைக்கேடு நடந்துளது என்று ஐயங்கொள்ள இடமுண்டு. இப்பொழுது கொனப்பு



கன்னொருவையில் போத்துக்கேயரை எதிர்த்துத் தாக்கி வென்று **முதலாம் விமலதருமசூரியன் (கி.பி. 1591–1604)** என்னும் பெயர் பூண்டு தன்னை அரசன் எனப் பிரசித்தம் செய்தனன். 1592 இல் இராசசிங்கன் தன் புதுப் பகைவனைத் தாக்கினன். ஆனால் தோற்கடிக்கப்பட்டான். அவன் போரிலிருந்து திரும்பி வரும்பொழுது மூங்கில் சிம்பொன்று அவன் பாதத்தைத் துளைத்துச் சென்றதால் அவன் குருதி நச்சுத்தன்மை அடைந்து இறந்தான். இது 1593 இன் முற்பகுதியில் நடந்தது. இவன் 1555 இல் பதினொரு வயது உள்ளவனாய் இருந்தான். ஆதலின், இவன் இறக்கும்பொழுது ஐம்பது வயதிற்குட்பட்டவனாய் இருந்தான். இவன் நூற்றாண்டு வாழ்ந்தவன் என்பது ஒரு கட்டுக்கதையே. இராசசிங்கனின் இறப்போடு அவன் இராச்சியம் முடிவுற்றது. இவனின் தனிப்பற்றிற்குரிய தளபதி **மனம்பேரி** தருமபாலன் பக்கம் சார்ந்தனன். இவன் துணையோடு போத்துக்கேயர் விரைவில் சீதாவகை ஆட்சிப்பகுதிகளை இணைத்துக் கொண்டனர். அரசிளங்குமரர்களையும் சிறைப்பிடித்தனர். இவர்களுள் **நிகபிற்றிய பண்டாரன்** என்பவனும் ஒருவன் ; இவன் போத்துக்கலுக்குக் கொண்டு செல்லப்பட்டு 1608 இல் **கொயிம்பிரா**வில் இறந்தான்.

1591 இல் அறிவற்ற முறையில் யாழ்ப்பாண மன்னன் மன்னாரைத் தாக்கினான். இதன் விளைவாக **அந்தரே பட்டடோ** என்பானின் தலைமையில் அமைந்த போத்துக்கேயரினால் இவன் தன் அரசு கட்டிலையும் உயிரையும் இழந்தனன். இவனைப் பின்தொடர்ந்தாண்டான் போத்துக்கேயரால் ஆக்கப்பட்டவனே. இவனை **சிமாவோ பினாவோ** என்பான் ஒருமுறை இறப்பினின்றும் காப்பாற்றினான். இரத்தினபுரிக்கு அண்மையிலுள்ள சமன் தேவாலயத்திலுள்ள சுவர்ப் பொறிப்பு ஒன்றில் இந்நிகழ்ச்சி வரையப்பட்டுள்ளது. 1593 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் ஈர் ஆதிக்கங்களே இருந்தன. **விமலதருமசூரியனின்** கீழ் இருந்த கண்டியர் ஒருபால் ; பேரளவில் தருமபாலனிற்காகப் போரிடும் போத்துக்கேயர் மறுபால். போத்துக்கேயர் சீதாவகையை இலகுவில் கைப்பற்றிக்கொண்டனர். அத்துடன் கோட்டையின் பழம் ஆட்சிப் புலங்களையும் மிக்க எளிதில் திரும்பப் பற்றிக்கொண்டனர். எனவே 1594 இல் மலைநாட்டு அரசாட்சியையும் பிடித்து அரசுகட்டிலில் இராசசிங்கனால் நீக்கப்பட்ட **தொனா கதறினா**வை அமர்த்த எண்ணினர். 'வெற்றியின் முதல் தலைத்தளபதியான' **பீதுரு உலபேசு த சூசா** என்பான் கண்டியுள் நுழைந்து அரசிளங்குமரியை அரசுகட்டிலில் அமர்த்தினான். ஆனால் அவன் இவ்வரசிளங்குமரியைப் புடைசூழப் போர்த்துக்கேயரை அமர்த்தியதால் நாட்டு மக்கள் அவனை வெறுத்தனர். இதல்லாமலும் **மனம்பேரி**யைத் துரோகி என இவர்கள் நினைத்துக் கொன்றனர். அவனுக்குப் படைத்துணைவராய் வந்தோர் அவனைக் கைவிட்டனர். இந்தப் படையெழுச்சி கன்னொருவைக்கு அயலில் சிதறுண்டது. தளபதி கொல்லப்பட்டு விமலதருமசூரியன் கையில் தொனா கதறினா அகப்பட்டாள். இவன் அவளை மணந்து கண்டி அரசுக்

குரிய தன் உரிமையைச் செவ்விதாக்கிக்கொண்டான். 'கண்டியின் மதம் நீங்கியான்' சிறைப்பட்ட போத்துக்கேயரை மிகக் கொடுமையாக நடாத்தி அவருள் ஐம்பது பேரின் உறுப்புக்களைச் சிதைத்து ஐந்து பேருக்கு ஒரு கண்ணுடையவர்களாகக் கொழும்புக்கு அனுப்பினான்.

சிங்களவர் திரண்டு எழுவர் எனப் போத்துக்கேயர் எதிர்பார்த்துக் கொழும்பில் ஒருங்கு திரண்டிருந்தனர். இவ்வெழுச்சி அவர்கள் எதிர்பார்த்தவாறு நடைபெறவில்லை. சீதாவகை ஒன்றே கலகம் செய்தது. இந்நாட்டில் போத்துக்கேயரின் நிலைமையை மீண்டும் நிலை நிறுத்துவதற்கு அனுப்பப்பட்ட **தொம் செரனிமோ த அசிவெடோ** என்பான் 1594 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் இங்கு வந்தடைந்தான். இவன் உடனே கலகக்காரர்களை அடக்குவதற்குக் காலம் தாழ்த்தாது தருமபாலனுடன் புறப்பட்டான். கலகக்காரர்கள் அடக்கப்பட்டனர். மெனிக்கடவரை, உறுவன் வெலை, காலி ஆகிய இடங்களிற் கம்பக்கோட்டைகள் நிறுவப்பட்டன. காலியில் பின்னர்க் கோட்டை கட்டப்பட்ட இடத்திலேயே இக்கோட்டை கட்டப் பட்டது. எனினும் 1595 இல் தருமபாலனின் ஒரு சிங்களக் குடியானவனான **தொமிங்கொச கொரியா** என்பான் விமலதருமசூரியனின் உதவிகொண்டு ஒரு கலகம் செய்தான். பழைய அரசன் சீதாவகையை விட்டோடிப் போத்துக்கேயர் சேனைத் துணையுடன் போரிட்ட வண்ணம் கொழும்புக்கு வரவேண்டி இருந்தது. இப்பொழுது கொழும்பும் காலியுமே தருமபாலன் வசம் இருந்தன. எனினும் புதுப்படைகள் வந்ததும் நிலைமை மாறியது. கொரியா தோற்கடிக்கப்பட்டுச் சிறைபிடிக்கப்பட்டு 1596 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மரணதண்டனை பெற்றான். எனினும் இக்கலகம் 'சீதா வாக்கை மன்னன்' என்று அழைக்கப்பட்ட **சிமாஒ கொரியா** என்பானால் ஒரு குறைந்த அளவில் கொண்டு நடாத்தப்பட்டது.

1597, மே 27 இல் தருமபாலன் இறந்தான். அவன் உடனலம் மாயா துன்னையால் அளிக்கப்பட்ட நஞ்சினால் மிகவும் பாதிக்கப்பட்டது. இவனுக் குப் பிள்ளைகள் இல்லை. 1580, ஒகசு 12 என்னும் தேதிகொண்ட கொடைக் கிணங்க அவன் தன் ஆட்சிப் பகுதிகளையும் இலங்கையின் பரமாண்மையை யும் போத்துக்கேய மன்னனுக்குக் கொடுத்திருந்தான். அதற்கிணங்கப் போத்துக்கலின் **முதலாம் பிலிப்பும்** சிபெயினின் **இரண்டாம் பிலிப்பு**மான மன்னனை இலங்கையின் மன்னனென **தொம் செரனிமோ த அசிவெடோ** என்பான் அறிவித்தான். இப்புதிய மன்னனுக்குப் பற்றுறுதி கூறும் ஆணை கொழும்பில் எடுக்கப்பட்டது. நாட்டை, இலங்கைச் சட்டங்களிற் கியையவோ போத்துக்கேயச் சட்டங்களிற்கியையவோ ஆளவேண்டுமென முடிவு செய்வதற்காக அதன்பின்னர் அரசாட்சியின் வெவ்வேறு பகுதியிலு முள்ள பிரதிநிதிகள் மல்வானைவிற்கு அழைக்கப்பட்டனர். இலங்கையின்



சட்டங்களால் ஆளப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. தளபதியும் அச்சட்டங்களைப் பேணச் சம்மதித்தான். எனினும் கிறித்துவ சமயத்துக்குச் சுதந்திரம் வேண்டும் என்பதை அவன் வற்புறுத்தினான். தங்களுடைய பழக்கவழக்கங்கள் காப்பாற்றப்படின், தாங்கள் போத்துக்கேய மன்னரை ஏற்றுக்கொள்வர் என்று சிங்களர் கூறியதாகச் சிலவேளைகளில் சொல்லப் படும் கொள்கை பிழையானதாகும்.

1599, சனவரி மாதத்தில் மெனிக்கடவரை அரண்படுத்தப்பட்டது. இவ்விடம் போத்துக்கேயரின் முக்கிய படைக்கள மையமாக விளங்கியது. இதுவே படையின் பெருந்தலைவனின் இருப்பிடமாகவும் விளங்கியது. கண்டியோடு நடந்த போர் தொடர்ந்துநடந்தது. இது காலத்துக்குக் காலம் மாறுபட்ட பலன்களையளித்தது. நாட்டின் பலபகுதி களிலும் விமலதருமசூரியனால் தூண்டிவிடப்பட்ட கலகங்கள் போத்துக் கேயரின் இடர்களைப் பெருக்கின. ஒரு முறை அரசன் அமைதியை வேண்டினான். எனினும் கண்டியின் மதம் நீங்கியானை நன்கறிந்த போத் துக்கேயர் அவனை நம்பவில்லை. இருபகுதியினரும் நம்பமுடியாத வன்மை யோடு போரைத் தொடர்ந்து நடாத்தினர். இறுதியில் போத்துக்கேயர் கீழ்நாட்டை அடக்குவதில் வெற்றிபெற்றனர். 1602 இல் **இலசுகரின்மார்** (நாட்டுக் கூலிப்படை) க்குத் தலைஆணையனாய் இருந்த போத்துக்கேயனான **சிமாவோ பினவோ** என்பானைத் தன் பக்கம் திருப்ப அரசன் முயன்றனன். **த அசிவெடோ** என்பானின் ஏவலுக்கிணங்க இச்சூழ்ச்சியில் பினவோ தான் சேர்வதாக நடித்தான். இங்கு இவனின் நோக்கம் கண்டிக்குச் செல்லும் பழைய தெருவைக்கொண்டிருக்கும் கடுகண்ணாவை அடுக்குக்களில், ஒரு பலக்களனாக விளங்கிய பலனையைக் கைப்பற்றுவதேயாகும். ஆனால் ஒரு துரோகியால் இவன் எண்ணங்கள் அரசனுக்கு அறிவிக்கப்பட்டன. 1603 பெப்பிரவரியில் பலனை தாக்கப்பட்டதெனினும் போத்துக்கேயர் தம்முடன் இருந்த நாட்டுப்படைகள் தம்மைக் கைவிட்டதைக் கண்டனர். எனவே இவர்கள் அவ்விடத்தைவிட்டு வெளியேறவேண்டி நேர்ந்தது. இப் பெரும் பின்வாங்குகையைத் தளபதி மிக்க திறமையுடன் நடாத்தினான். எனினும் நாடு முழுதும் கலகம் செய்யும் நேரத்தில் போத்துக்கேயரின் நிலை ஒருபொழுது மிக்க ஆபத்தாக இருந்தது. ஆனால் 1604 இல் அரசன் இறந்ததும் சிறிது நல்ல நிலை நிலவியது.

1602 இல் இடச்சுக்காரனான **யோரிசு சுபில்பேகன்** என்பான் மட்டக் களப்பினை அடைந்து விமலதருமசூரியனுடன் பேச்சுக்கள் நடாத்தினான். அவ்வாண்டிலேயே பின்னர் அத்துறைமுகத்தில் இறங்கி அரசனை வந்து அடுமிறல் பார்த்த **செபல் த வீட்டு** என்பானுக்கு இவன் முன்னோடி யாவன்; இத்தூதினால் ஒன்றும் விளையவில்லை. ஏனெனில் கொடிக் கப்பலுக்குச் செல்லுமாறு விமலதருமசூரியனை இடச்சுக்காரர் வேண்டியும் அவன் அடுமிறல் வீட்டின் நோக்கங்களில் ஐயங்கொண்டிருந்தானதலில்

மறுத்தான். அடுமிறல் குடிவெறி கொண்டிருந்தானாதலின் அரசனை நிந்தித்தான். அதனால் அவன் உடனே கொல்லப்பட்டான். அப்பொழுது அகப்பட்ட இடச்சுக்காரர் யாவரையும் அரசன் வதைத்தனன். இது 1603 யூன் மாதம் நடந்தது. கண்டியருக்கும் இடச்சுக்காரருக்கும் இடையிருந்த உடன்பாட்டின் தொடக்கம் இவ்வளவு அமங்கலமாய் இருந்தது.

விமலதருமசூரியன் கண்டி அரசாட்சியைக் கைப்பற்றியதும் பௌத்த மதத்தைத் தழுவினான். இவன் பற்சின்னத்திற்காக இரு மாடிக் கோயிலொன்றை அமைத்துப் பௌத்த மதத்தில் தான் கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டினான். இப்பற்சின்னத்தை இவன் சபரகமுவாவிலுள்ள குருவிதைக்கு அண்மையில் உள்ள தெல்கமுவாவிலிருந்து கொண்டுவந்தான். கோட்டையில் இருந்து அகற்றப்பட்ட இச்சின்னம் இங்கேயே மறைத்து வைக்கப்பட்டது எனச் சொல்லப்படுகிறது. அங்கு அது ஏன் வைக்கப்பட்டிருந்தது என்பதைப்பற்றி இன்னும் ஆராய்தல் வேண்டும். குருமார்களின் பரம்பரையைப் புதுப்பித்தற் பொருட்டு அரக்கனுக்கு அரசன் ஒரு தூதுக்குழுவை அனுப்பினான். மீண்டும் குருபரம்பரை அற்றுப் போனதாலேயே அரசன் இத்தூதினை அனுப்பினான். பு.பி. 2146 (கி. பி. 1603/4) இல் கண்டிக்கருகாமையிலுள்ள கெதம்பையில் அரசன் ஒரு பெரும் தீக்கைவிழாவை நடாத்தினான்.

1604 இல் விமலதருமசூரியன் இறந்தான். இவன் இறக்கும்பொழுது தன் அரசினைத் தன் முதல் மறுவுடன்பிறப்பாளனான **செனரத்து** (1604–1635) என்னுமொரு மதகுருவிற்கு விட்டுச் சென்றான். இவன் தன் துறவாடைகளை நீக்கி விமலதருமசூரியனின் விதவையான **தோனா கதறினாவை** மணந்தான். சிங்கள நூல்கள் இவன் அரசெய்திய காலத்தை பு. பி. 2147 (கி. பி. 1604) எனவும் பு. பி. 2152 (கி. பி. 1609/10) எனவும் குறிப்பிடுகின்றன. இவன் அரசெய்திய உரிமையை ஊவாவின் மாயாதுன்னை எதிர்த்து வாதாடினான். இந்த உள்நாட்டுக் கலகத்தைத் தமக்கு வாய்ப்பாகக்கொண்டு போத்துக்கேயர் 1611 இல் பலனைக்குச் சென்று கண்டியை எரித்தார்கள். இச்சண்டையின் பின் அமைதி ஏற்பட்டது.

1612, மாச்சு 8 இல் **மாசெலசு த பொசுகோவர்** என்னும் இடச்சுக்காரன் சிங்களத் தலைநகரை அடைந்து நெதலந்து கிழக்கிந்தியக் கம்பனியிலிருந்து பெற்றுத்தருவதாக உதவி உறுதிகூறி மே 11 இல் அரசனோடு ஓர் உடன்பாடு செய்தான். ஆனால் இவன் இலங்கையில் மூன்று ஆண்டுகள் தங்கி நிற்கவேண்டி நேர்ந்தது.

1612 திசெம்பர் திங்களில் **தொம் செரனிமோ த அசிவேடோ** பதிலரையன் ஆகினான். பலனைக்குக் கீழிருந்த எல்லாப் பகுதிகளையும் இவன் இணைத்துக் கொண்டான். இவனின் மிகச்சிறந்த செயல் பெரும் பின்வாங்கலேயாகும். கண்டியோடு இவன் நடாத்திய போரில் இவன் காட்டிய பொல்



லாக் கொடூரமும் போத்துக்கேயர் பகுதிகளில் எழுந்த கலகங்களை அடக்குவதில் காட்டிய கொடூரமும் இவன் பெயருக்குக் களங்கம் அளித்தன. இவன் வேறு இடங்களில் ஆட்சி செலுத்தியபோது இத்தகைய குற்றச்சாட்டு அவன்மேல் சாட்டப்படவில்லை என்றும் விமலதருமசூரியன் செய்த பொல்லாக் கொடுமைகட்கு ஈடாகவே இவன் அவற்றைச் செய்தான் என்றும் அவனைப் பதவியிலிருந்து நீக்குதலே இவன் கனவாக இருந்ததென்றும் **த குயிரோசு** சொல்கின்றார். உண்மையில் இத்தகைய சந்தர்ப்பங்களில் கடுமையான நடவடிக்கைகள் வேண்டற்பாலனவே எனினும் த அசிவெடோவின் செய்கைகள் மன்னிக்க முடியாதவை. இவன் செய்கைகளைப் போத்துக்கல் அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. வேறொரு காரணத்தினால் இவனுக்குச் சிறைத்தண்டனை ஏற்பட்டதெனினும் இலங்கையில் செய்த கொடுஞ் செயல்களுக்காகவே இத்தண்டனை ஏற்பட்டதென்று சிலர் கருதுகின்றனர்.

இவனைப் பின்பற்றியவன் **தொம் பிரான்சிசுகோ த மெனசெசு** என்பானவன். த அசிவெடோ இப்பொழுது நாட்டைவிட்டுப் போனதால் அமைதி ஒப்பந்தத்தின்படி தான் நடக்கவேண்டியதில்லை என்று அரசன் அவ்வொப்பந்தத்தை மீறி நடந்தான். தலைத்தளபதி இதற்குப் பதிலாகக் கண்டி நாட்டினைத் தாக்கினான். ஆனால் திரும்பி வரும்பொழுது பலனையில் இவன் தாக்கப்பட்டான். இங்கிருந்தும் இவன் காப்பாற்றப்பட்டபின் தலைமைத்தளமான மல்வானைக்குச் சென்றான். 1614 மே திங்களில் இவன் இடத்தை **மனுவல் மசுகரனாசு ஓமம்** என்பான் கொண்டான். படையைச் சீர்திருத்தவும் நாட்டுப் படையைச் சீர்திருத்தவும் படையினராலும் மற்றையோராலும் நாட்டு மக்கள் வருத்தப்படாமல் இருக்கவும் கொள்ளையடிக்கப்படாமல் இருக்கவும் ஏற்ற வழிவகைகளை எடுக்குமாறு இவனைப் பதிலரையன் பணித்தனன். இரக்கம் இல்லாது போர் தொடர்ந்து நடத்தப்படல் வேண்டும் என்றும் பதினாறு வயதுக்கு மேற்பட்ட ஓர் ஆண்மகனையும் தப்பவிடக்கூடாதென்றும் மட்டக்களப்பு, திருக்குணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களோடு அரசன் கொண்ட தொடர்புகள் துண்டிக்கப்படல் வேண்டும் என்றும் யாழ்ப்பாணம் போத்துக்கேயரின் ஒருசார் நாடாக்கப்படல் வேண்டும் என்றும் கட்டளை அளிக்கப்பட்டது. 1615 இல் தளபதி மேற்கொண்ட மூன்று படை எழுச்சிகளிலிருந்தும் செனரத்துவின் நலிவினை நாம் ஒருவாறு ஊகிக்கலாம். சனவரியில் போத்துக்கேயர் கம்பளை, மதுரட்டை, பதுளை ஆகிய இடங்களை வெற்றிகொண்டு சபரகமுவா வழியாக மல்வானைக்கு வந்தனர். ஓகசு மாதத்தில் தும்பனை, அரிசுபட்டு, மாத்தளை ஆகிய இடங்கள் கொள்ளை அடிக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் மூன்றாவது போராட்டம் நடந்தது. 1616 இல் தலைத்தளபதியாய் வந்த **நுனோ அல்வாரசு பெரீரா** என்பானும் இக்கொள்கையையே கடைப்பிடித்தான்.

எனினும் இக்காலத்தில் சீதாவகை அரசிளங்குமரன் **நிகபிற்றிய பண்டாரன்** என்பவன் தானேயென்று கூறிக்கொள்ளும் ஒரு போலியுரித்தாளன் தோன்றினன். இதனால் போத்துக்கேயருக்கு ஓர் பெரும் இடருற்றது. இக்கலகம் முதல் எழு கோரளைகளில் தொடங்கி, கண்டி ஆதரவளித்ததும், நாடெங்கும் பரவியது. போத்துக்கேயர் செய்வதறியாது திகைத்தனர். ஆனால் 1617 இல் இப்போலியுரித்தாளனானவன் செனரத்துவின் அரசி ஒருத்தியைத் தன் மனைவியாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதனால் செனரத்தோடு மோதிக் கொண்டனன்; இது போத்துக்கேயருக்கு நல்லதாய் முடிந்தது. இத்தருணத்தில் **பரத்தோ** என்னும் ஒரு சிங்களன், மன்னனுக்கு எதிராகவும் போத்துக்கேயருக்கு எதிராகவும் சபரகமுவாவில் கலகம் மூட்டி அம்மாநிலத்தையும் மாத்துறையையும் கைப்பற்றினன். இவ்வாறாக நாட்டின் தென்மேற்குப் பகுதியில் பெரும்பாகத்தை இவன் கைக்கொண்டனன். தனக்குத் தானே பேரமைத்துக்கொண்ட நிகபிற்றிய பண்டாரன் என்பான் இப்பொழுது போரில் தோற்று ஓடவே யூலை திங்களில் நாலு கோரளைகளும் எழு கோரளைகளும் கீழ்ப்படிந்தன. எனவே செனரத்து அமைதியை வேண்டி நின்றான். ஆனால் போலியுரித்தாளன் போரினின்றும் மறைந்ததும் இவன் துணிவுகொண்டான். 1617, ஒகசு 24 இல் செய்த உடன்படிக்கையின்படி, இவன் திருக்குணமலை, மட்டக்களப்பு, பானமை ஆகியவற்றைப் போத்துக்கல் அரசனுக்கு ஆண்டுக்கு இரு யானை அளிப்பதன்மூலம் பெற்றுக்கொண்டான். இப்பொழுது பரத்தோவைத் தாக்குவதற்குப் போத்துக்கேயர் வாய்ப்புடையோராய் இருந்தனர். இதற்கிடையில் நிகபிற்றியன் எழு கோரளைகளில் மீண்டும் தோன்றினன். ஆனால் ஒரு போரின் பின்னர் போத்துக்கேய ஆணையானால் கொல்லப்பட்டான். பரத்தோவைப்பற்றி ஒருவரும் கவனியாது விட்டனர். ஏனெனில், 1618 இல் **கொன்சுதான்தினே த சா த நொரனா** தளபதியாய் வந்தபொழுது அமைதி ஏற்பட்டதினால் படையினர் யாவரும் கட்டுப்பாடில்லாத ஒரு கும்பலாய் இருக்கக் கண்டனன்.

புதுத்தலைத்தளபதி படையில் ஒழுக்கத்தை நிறுவினன். சபரகமுவாவில் ஒரு கோட்டையைக் கட்டினன். காலியில் **திரு குறுசுவின்** கோட்டைக்குரிய அடிமனையை அமைத்தனன். இது 1625 இல் முடிவாக்கப்பட்டது. இந்தியாவிற்கு ஓடிச் சென்ற மாயாதுன்னை இப்பொழுது திரும்பிவந்து பரத்தோவின் துணைகொண்டு செனரத்துடன் நேரான ஒரு போராட்டத்தில் இறங்கினன். இவனை **த சா** தாக்கினன். இவன் தலைநகரான மத்தேகமையும் எரியூட்டப்பட்டது. இப்பொழுது தளபதி யாழ்ப்பாணத்தை நோக்கினன். பட்டாபோ ஏற்படுத்திய அரசன் 1615 இல் இறந்துவிட அப்பொழுது குழந்தையாயிருந்த மகனுக்காகச் **சங்கிலி** என்பான் அரசாணையைச் செலுத்தி வந்தான். இப்பதிலாட்சியாளன் போத்துக்கேயருடன் கொண்டிருந்த உளப்பாடு இரட்டுறு வகையாயிருந்தது. இவன் நிகபிற்றிய பண்டாரனிற்குப் புகலிடம் அளித்ததன்றியும் மலையாளக் கடற்படை ஒன்றின் துணையையும் பெறுவான் போலிருந்தது. எனவே த சா தன்படை இரு பிளவாகும் அபாயத்தையும் பொருட்படுத்தாது 1619 இல் தன் பெருந்தலைவனான மேயர் **பிலிப்பே த ஒலிவீரா** என்பானை, யாழ்ப்பாணத்தைத் தீர்த்துக்கட்டுவதற்காக அனுப்பினான்; இவ்வரசாட்சி இவனால் அடிமையாக்கப்பட்டது; அந்நாட்டுக் குலமுறையும் அரசுரிமையிலிருந்து நீக்கப்பட்டது. சங்கிலி சிறையாக்கப்பட்டுக் கோவாவிற்கு அனுப்பப்பட்டான். இங்கு இவன் தூக்கிலிடப்பட்டான். அடுத்த ஈராண்டுகளிலும் நாட்டின் மேலாண்மை கொண்டோன் என்னும் உரிமையால் தஞ்சாவூர் நாயக்க மன்னன் இந்நாட்டை மீட்பதற்கு முயன்றனன். எனினும் முயற்சி கைகூடவில்லை. எங்கள் அற்புதநாயகியின் கோட்டை யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டது. யாழ்ப்பாணத்தரசாட்சி 1658 இல் இடச்சுக்காரர் கைப்பற்றும்வரை ஒரு போத்துக்கேயர் மாநிலமாக இருந்தது.



இந்தக் காலத்தில் புதியவோர் ஐரோப்பிய வல்லரசு இலங்கையில் தோற்றம் அளித்தது. **மாசிலசு த பொசுகூவர்** 1615 இல் கண்டியரசினின்றும் சென்றனன். பற்றேவியாவிலிருந்த இடச்சுக்காரரைச் செனரத்துவின் துணைக்கு வருமாறு முயற்சி செய்தபின் இவன் ஒலந்திற்குப் பிரயாணமானான். இங்கு இவன் 1617 இல் கம்பனியுடன் பிணங்கிக் கொண்டு தென்மாக்கிற்குப் போயினன். அந்நாட்டில் கிழக்கிந்தியக் கம்பனி ஒன்று அமைக்கப்பட்டது. **கிறித்தியன்** என்னும் மன்னன் கண்டி நிறையதிகாரியுடன் உடன்படிக்கை ஒன்று செய்தபின், **ஓவெ கியட்டே** என்பானின் தலைமையில் படைப்பிரிவு ஒன்றினை அமைத்து அனுப்பினன். இக்கப்பற் செலவில் த பொசுகூவர் இறந்தனன். தேனியர் இலங்கையை 1620 இல் அடைந்தபொழுது இடச்சுக்காரனைக் கண்டியர்தூதன் என்று நியமித்த பத்திரம் கள்ளமானது என அறிந்தனர்; செனரத்தும் 1618 இன் உடன்படிக்கையை ஒத்துக்கொள்ள மறுத்தனன் என்பதையும் கண்டனர். இவற்றால் தேனியர் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். எனினும் 1620, ஒகசு 22 இல் விந்தனையில் புதியதோர் உடன்படிக்கை செய்யப்பட்டது. இதன்படி திருக்குணமலைப் பகுதியைத் தென்மாக்கருக்கு அரசன் கொடுத்து அதிலொரு கோட்டை அமைக்க ஒப்பும் கொடுத்தனன்; ஆனால் இக்கோட்டை ஒருபொழுதும் கட்டி முடிக்கப்படவில்லை. இப்புதியவர்களைப் போத்துக்கேயர் வெளியகற்றிவிட்டனர். இக்காலத்தில் பரத்தோ கொல்லப்பட்டான். எழு கோரளைகளிலும் கலகத்தை மூட்டிய மாயாதுன்னை மீண்டும் இந்தியாவிற்கு ஓடினன்.


1622 இல் த சாவின் இடத்தில், ஒரு சிறு காலத்திற்கு, **யோர்சு த அல்புகேக்கி** என்பான் அமைந்தான். இவன் களுத்துறையில் ஓர் கோட்டையைக் கட்டினான். அடுத்த ஆண்டில் இவன் அரசாட்சியை மேற்கொண்டான். இவ்வாட்சிக் காலத்தில் கண்டிய வணிகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் திருக்குணமலையிலும் (1624) பின்னர் மட்டக்

களப்பிலும் (1628) கோட்டைகள் கட்டினான். கொழும்பு, காலி (1625) மெனிக்கடவரை (1627) ஆகிய இடங்களிலுள்ள கோட்டைகளையும் புதுப்பித்தான். குடியாட்சியைச் சீர்ப்படுத்தவும் இவன் முயன்றான். போத்துக்கேய அலுவலாளர் கண்டி அரசனுடன் கொண்டிருந்த படைக்கல விற்பனையையும் சொந்த வியாபாரத்தையும் நிற்பாட்டினன். 1626 இல் பிலிப்பு மன்னனின் கட்டளையின்படி போத்துக்கேயரின் பொல்லாப் பகைவரான சோனகரை வெளியகற்றினன். கண்டி அரசவையார் சோனகரிற் பெரும் பகுதியினரை மட்டக்களப்பின் அயலில் குடியிருத்தினர். இன்றும் இங்கு அவரின் மரபினரை நாம் காணலாம்.

அமைதியைப் பேணுமாறு த சாவிற்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. எனினும் கண்டியுடன் உள்ள தொடர்பு அறின், போருக்கு ஆயத்தமாயிருக்குமாறு கட்டளை இருந்தது. 1628 இல் மட்டக்களப்பில் அரண் கட்டியதும், தன்னைச் சூழ அரண் வரிசையொன்று அமைந்திருந்ததைக் கண்ட அரசன் பகைவினைகளை மேற்கொண்டான். சூழ்ந்து அரணமைக்கும் முயற்சியை நிறுத்த இவன் முயன்றான். த ஒலிவீரா இறந்ததும் யாழ்ப்பாணத்திலொரு பிளவு உண்டாதற்பொருட்டுப் படைகளை அனுப்பினான். ஆனால் பகைவரின் படை பிளவுபட்ட அமையத்தைப் பயன்படுத்தி த சா கண்டி நாட்டின் மீது படையெடுத்தான். 1629 இல் தலைத்தளபதி மீண்டும் படையெடுத்துக் கண்டியை எரிப்பதில் வெற்றி பெற்றான். செனரத்து—இங்கு இவன் மகன் இராசசிங்கனென்று சொல்வதுதான் பொருந்தும்—அம்பத்தனையில் போத்துக்கேயரைத் தோல்வியுறச் செய்ததாகக் கூறுகின்றான். எனினும் இது எப்பொழுது நடந்ததென்று சொல்லல் முடியாது. இருபக்கங்களும் களைப்புற்றன. அரசன் அமைதிக்கு மன்றாடினான். தலைமைத்தளபதியை, ஊவாவில் உள்ள அவன் படையோடு சூழ்ந்து பிடிப்பதற்குரிய சூழ்ச்சி உருவாகும் வரைக்குமே அமைதியை இவன் நாடினான் எனத் த குயிரோசு சொல்கின்றனன். இச்சூழ்ச்சியினால், தளபதி அறியாது கொழும்பைப் பிடிக்கவும் அரசன் திட்டமிட்டிருந்தான் என்றும், இச்சூழ்ச்சிக்குத் தொம் தியொடொசியோ என்பானும் போத்துக்கேயர் சேவையில் இருந்த வேறு மூன்று சிங்களத் தலைவர்களும் சேர்ந்திருந்தனர் என்றும் அவன் கூறுகின்றனன். இவ்வமைதிக்கு த சா இணங்குவதற்கிருந்தான். ஆனால் கண்டியை ஒரேயடியாக மட்டமாக்குமாறு பதிலரையரிடமிருந்து இவனுக்குக் கட்டளை வந்தது. எனவே இவன் தன் நன்மதிக்கு மாறாகத் தனக்குக் கிடைத்த கட்டளையை நிறைவேற்றத் துணிந்தனன். இக்காலத்திலேயே இரண்டாம் இராசசிங்கன் தன் தந்தையோடு கூட்டாட்சியாளனாக்கப்பட்டான்; இவன் 1636 இல் இடச்சுக்காரருக்கு எழுதிய கடிதத்தில் தான் அரசெய்தியது ஏழு ஆண்டுகட்கு முன்னர் எனக் குறித்துள்ளான். சூழ்ச்சி இப்பொழுது நிறைவேறுந் தறுவாயில் இருந்தது. இராசசிங்கனின் ஒருவழி உடன்பிறந்தானான **குமாரசிங்கன்** போத்துக்கேயர் புலத்துள் இருமுறை படையெடுத்துச் சென்று ஊவாவுள்



புகுந்து தங்கினான். சூழ்ச்சிக்காரரின் வேண்டுகோளின்படி த சா அரசிளங்குமரனைக் கண்டிக்க முன்னேறிச் சென்றான். பதுளை எரிக்கப்பட்டது. நாட்டுக்கூலிப்பட்டாளத்தினர் படையைக் கைவிட்டு ஓடியதும் போத்துக்கேயப் படையினர் ஒரு சூழ்ச்சி வலையில் அகப்பட்டுக் கீழ் ஊவாவிலுள்ள இரண்டெனிவலையில் அழிக்கப்பட்டனர். தளபதி 1630, ஓகசு 24 இல் உயிரிழந்தான். இத்தோல்வி போத்துக்கேயர் படைக்குப் பேரழிவை அளித்தது. முழுநாடும் அரசன் ஆட்சிக்குட்பட்டது. கொழும்பே முதன்முதலாக முற்றுகையிடப்பட்டது. பின்னர் மூன்று மாதங்களுக்கு இதன்வழி அடைக்கப்பட்டது. 1631 இல், புதிய தலைத்தளபதி **தொம் பிலிப்பு மசுகரனுசைக்** கொன்று கொழும்பைப் பிடிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட புதிய சூழ்ச்சி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வாண்டு ஒற்றோபர் திங்களில் இவனைத் தொடர்ந்து **தொம் யோச்சு த அல்மேடா** தலைமைத் தளபதியாயினன். போத்துக்கேயச் சிறையாளிகளை மீண்டும் பெறுவதற்கு அரசனுடன் உடன்பாடு செய்யுமாறு இவனுக்குக் கட்டளை இடப்பட்டிருந்தது. அரசன் அமைதியை வேண்டுபவன் என்று யாவரும் அறிந்தமையால் போரில்லாமலே போத்துக்கேயர் புலங்களை மீண்டும் பெறலாமென இவன் நம்பி இருந்தனன். ஆனால் இவனின் பேச்சுக்கள் பயனின்றி முடிந்ததும் 1632 சனவரி திங்களில் இவன் படையெடுத்து குருபெபிலி (அன்வெலை)யில் உள்ள பெரும் வேலியரணை அழித்தான். கண்டியர் சேனையில் இருந்த பெரும் துவக்கு வீரனான ஓர் ஆங்கிலேயனும் இங்கு இறந்தாருள் ஒருவனாவன். த சாவிற்கு எதிராகச் சூழ்ச்சி செய்த சிங்களவருள் ஒருவனான **தொம் தியொடொசியோ** இத்தருணத்தில் அரசனோடு பிணக்குக் கொண்டு போத்துக்கேயருடன் ஓர் இணக்கத்துக்கு வந்தனன். இதனால் ஒரு பொதுவான கீழ்ப்படிவு எங்கும் ஏற்பட்டது. த அல்மேடாவிலும் மேலாக தொம் தியொடொசியோவிற்கே அரசன் பயம் கொண்டிருந்தவனாதலின் அவன் அமைதிக்கு மன்றாடினன். எனவே 1633, ஏப்பிரில் 15 இல் கோவாவில் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதற்கிணங்கத் தொனு கதறினாவின் மூன்று மக்களுடைய உரிமைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன ; அசரன் ஆண்டுக்கு ஒரு யானை திறையாகக் கொடுத்தனன். மட்டக்களப்பு போத்துக்கேயர் உடைமை என உறுதியாக்கப்பட்டது. போத்துக்கேயர் தங்கள் சிறையாளிகளைப் பெற்றுக் கொண்டனர். ஆயினும் தொம் தியொடொசியோ போத்துக்கேயரால் தலைவெட்டப்பட்டதும் அரசன் திறையாய் இருப்பதை ஏற்றுக்கொள்ளாது உடன்படிக்கையை உறுதிப்படுத்த மறுத்தனன். புதிய தலைமைத் தளபதியான **தியோகோ த மெல்லோ த கசுரோ (1633–1635, 1636–1638)** போர் செய்ய ஆயத்தம் செய்தனன். 1634 சனவரியில் இறுதி நேரத்தில் அரசன் மனம்மாறி கோவா உடன்படிக்கையின்படி நடக்க ஒத்துக்கொண்டனன். ஒரு சிறு காலத்துக்கு த அல்மேடாவை



உருவம் 23.—போத்துக்கேயரின் இலங்கைத் தங்க நாணயம்.

(1635-1636) மீண்டும் பதவியில் அமர்த்தியதால் த மெல்லோவின் அரசாங்கம் தடைப்பட்டது. த அல்மேடாவின் ஆட்சி, படையினர் வெற்றி முறையில் நடத்திய ஒரு கலகத்தால் குறிப்பிடத்தக்க தொன்ருக இருந்தது.

### 7 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பொது வரலாற்றிற்கு ஆரும் அதிகாரம் பார்க்க. இரிபீரோவின் **பற்றலிதாடே இசிரேறிக்கா த இள தி சிலோ** என்னும் நூலையும் யோவாவா உரொட்டிரிருசு த ச எ மெனெசெசுவின் **இரிபெலியன் த சிலன்** (**வே. ஆ. ச. ச., இ. கி. xi.** எண் 41) என்னும் நூலையும் பார்க்க. கோட்டை, சீதாவகை என்பவற்றைக் கொள்ளையடித்ததைப்பற்றி எசு. பொடெலோ என்பாரின் **தெரூரோ த ரி தி சிலோ**, இலிசுபன், அக்கடமியா இரியல் தசு சையன்சியாசு, 1904, பார்க்க. சமன் தேவாலயச் சுவர்ச் சித்திரத்திற்கு **வே. ஆ. ச. ச., இ., கி. xvi.** எண் 50, ப. 84 பார்க்க. யாழ்ப்பாணத்து அரசன் பற்றிய கதை **த. கு.** ப. 367 என்பது வெளியான பின்னரே அறியவந்தது. (வண. எசு. சி. பெரேரா **இ. தொ. viii** ப—ள் 1 தொடர்).

மல்வானுப் பேரவைக்கு இரிபீரோவின் நூல் 1 அதி 9 பார்க்க. நன்கறிந்த **த. கு.** பற்றுறுதி ஆணை கொழும்பில் வெளியறிவிப்பு ஆகியவற்றை ப. 430 இலும் பேரவை அதன் நோக்கங்கள் ஆகியவைபற்றி ப—ள். 833, 834 இலும் கூறுகின்ருன்.–இவன் 1636 இன் விண்ணப்பத்தையும் கூறுகின்ருன். இது பேரவையைப் பற்றியும் ப. 834 இல் கூறுகின்றது. அரக்கனுக்குப் போன தூது, உபசம்பதா குலவழி ஆகியவற்றிற்கு **இராசவன்சய** (கொழும்பு அரும்பொருளகம் கை.பி.) பார்க்க. செனரத்து அரசெய்தியதுபற்றிய சிங்களவர் தேதிகள் **இராசவன்சயத்திலும்** தம்பளை விகாரை துடபதத்திலும் (உலோரியின் **கசற்றீர்**, 1. ப. 126) காணப்படுகின்றன.

த அசிவெடோவின் பொல்லாச் செயல்களுக்கு **த. கு.** ப—ள். 400, 401, 488 பார்க்க. தென்மாக்கர் படைச் செலவிற்கு ஒவே கிடேயின் நாட் குறிப்பு பார்க்க. இது "**தென்மாக்கர் வரலாறு, பொருளியல் மொழி, நாணவியல் திரட்டு**", யோகான் என்றிச்சு செலகல், கோபனேகன் 1771, என்னும் நூலிலுள்ளது. அம்பத்தின் போர் நடவடிக்கையைப் பற்றி **பறங்கி அத்தனேயில்** கூறப்பட்டுள்ளது. **யோணடா தோ இறீஞே த உவா** என்னும் நூல் அதில் போத்துக்கேயர் வெற்றி கொண்டனர் எனக் கூறுகின்றது.



இராசசிங்கன் ஒத்த ஆட்சியாளன் என்பது புலிக்காட்டு ஆள்வாருக்கு அவன் அனுப்பிய முடங்கலிலிருந்து அறியக் கிடக்கின்றது. (**வே. ஆ. ச. ச., இ. கி. xviii.** எண் 55, ப. 169).

யாழ்ப்பாணத்துப் பிற்கால அரசர்க்கு வண. எச். ஞானப்பிரகாசரின் "**யாழ்ப்பாணத்து அரசர்**", யாழ்ப்பாணம் 1920, பார்க்க.

ஊவாவிற்கு த. சா. வின் பாழ்போன போர்ச் செலவிற்கு **யோணடா தோ இறீஞே த உவா**, கொடிசு 51, iv. 32 இல் காண்க. இது இலிசபன் பிபிளியோதிக்கா த அசுடால்லிலுள்ளது. இவ்வரலாறு நேரில் பார்த்த ஒருவனுல் கொடுக்கப்பட்டுள்ளது.

*அதிகாரம் 8*

## போத்துக்கேயர் ஆணையின் வீழ்ச்சி, 1635–1656

செனரத்து தன் அரசாட்சியைத் தன் மகன் **இராசசிங்கனிற்கும்** தொனுகதறினுவின் மற்றை மக்களான **குமாரசிங்கன், விசயபாலன்** என்பாருக்கும் பகிர்ந்தளித்தனன். இராசசிங்கனுக்கு இப்பொழுது கண்டிமாவட்டமாக விளங்கும் மலைமேல் உள்ள ஐந்து நாடுகளையும் அளித்தான். இவனுக்கு அரசன் பட்டமும் அளிக்கப்பட்டது. குமாரசிங்கன் ஊவாவையும் விசயபாலன் மாத்தளையையும் பெற்றனர். செனரத்து இறப்பதற்கு முன்னரே இராசசிங்கன் குமாரசிங்கனை நஞ்சூட்டிக் கொன்றனன். இது 1635 இல் நடந்தது ; இதன் பின் இளைய அரசிளங்குமரன் II ஆம் இராசசிங்கன் (கி. பி. 1635–1687) என்னும் பட்டத்துடன் தனியரசனுனன். 1634 இன் உடன்படிக்கையைப் புது அரசன் மெய்யாகக் கொண்டு ஒழுகவில்லை. அவன் சிறிது காலத்திற்குள்ளாகவே 1636 இல் இடச்சுக்காரரைத் துணைக்கு அழைத்தனன். அவர் துணைக்கீடாகக் கொட்டியாரிலோ மட்டக்களப்பிலோ கோட்டை கட்டவிடுவதாகவும் உரிய கடற்படைச் செலவைத் தருவதாகவும் அவன் கூறினன். பற்றேவியாவில் இருந்த கிழக்கிந்தியக் கம்பனி அதிகாரிகள் இலங்கைக் கறுவா வணிகத்தில் எலவே நோக்கங்கொண்டிருந்தனர். ஆதலின் இவ்வமயத்தைப் பயன்படுத்தி, கோவாவை வழித்தடை செய்ய வெளி எழுந்த தங்கள் அடுமிறல் அதன் **வெசவோல்** என்பானைக் கோவாவிலிருந்து மீண்டும் வரும் வழியில் இலங்கைக்கு ஏகுமாறு பணித்தனர். இத்தருணத்தில் இராசசிங்கனிடம் தூதர்கள் அனுப்பப்பட்டனர். இவர்கள் அரசவையை 1637 இல் அடைந்தனர். சில பேச்சுக்களின் பின் மூன்று சிங்களருடன் இவர்கள் கோவாவுக்கண்மையில் வெசவோலைச் சேரச் சென்றனர். அப்பொழுது இடச்சுக் கடற்படையினர்க்கும் போத்துக்கேயர் கடற்படையினர்க்குமிடைநடந்த ஒரு போரையும் இவர்கள் கண்ணுற்றனர். இப்போரில், 1638, சனவரி 4 இல் போத்துக்கேயர் படை



உருவம் 24.—கண்டியர் வெள்ளிப் பணமும் இலரினும்.

தோற்றேடியது. அப்பொழுது அடுமிறல் தனக்கு முன்னரே பதில் ஆணையன் **கோசரை** ஒரு சிறு படையுடன் அனுப்பத் துணிந்தனன். இப்படை திருக்குணமலையை எப்பிரில் 3 ஆம் நாள் வந்தடைந்தது.

இப்பொழுது தலைமைத் தளபதி **தியோகோ த மெல்லோ,** இராசசிங்கன் இடச்சுக்காரருடன் நடந்துகொண்ட முறை துரோகமானது என்று கூறி, மிக்க கோபம் கொண்டு அவன் செயலைத் தடுப்பதற்கு மாத்தளை இளவரசனுடன் சூழ்ச்சி செய்தான். இன்னும் அரசனுடன் அவன் கொண்ட சொந்தப் பிணக்கு ஒன்றினுலும் கனன்று, அரசன் நாட்டின்மீது படை எடுத்தனன். கண்டி எரிக்கப்பட்டது. ஆனல் போத்துக்கேயர் துண்டிக்கப்பட்டு 1638, மாச்சு 28 இல் கன்னொருவையில் தளபதியே கொல்லப்பட்டான். வழக்கம்போலவே பரந்த ஓர் கலகம் எங்கும் கிளர்ந்தெழுந்தது. அரசன் போத்துக்கேயர் புலங்கள் யாவையும் அடக்கினன். ஆயினும் கோட்டைகளைத் தாக்கவில்லை. **தொம் அன்ரேனியோ மசுகரனுசு** மே திங்களில் தலைமைத் தளபதியாக (1638–1640) வந்தனன். இவன் ஆண்டு இறுதி வரை வாளாவிருந்தனன். பின்னர் புதுப் படைகள் வந்தடைந்ததும் போத்துக்கல் முடிக்காகக் கீழ் நாடகத்தை வெற்றிகொள்ள முனைந்தான். இதில் இவன் 1639 இன் முற்பகுதியில் வெற்றி பெற்றனன்.

1638, எப்பிரில் 8 இல், மட்டக்களப்பில் **கோசர்** தோன்றிக் கோட்டைமீது தாக்க ஆயத்தம் செய்தனன். மே 10 ஆம் நாள் வெசவோல் இவனுடன் சேர்ந்தான். சிலநாள் பின்னர் இராசசிங்கனும் ஒரு படையுடன் இங்கு தோன்றினன். வெகு காலத்துக்கு முன்னதாக 1617 வரையிலேயே, போத்துக்கல் மன்னன் திருக்குணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களை நல்முறையில் அரண் செய்யவேண்டுமென்று தொடர்ந்தளித்த கட்டளைகளை, இந்நாட்டிலிருந்த அவன் அரசாங்கம் புறக்கணித்தமையால் மட்டக்களப்பிலுள்ள தானையம் மே 18 இல் சரண்புகவேண்டி நேர்ந்தது. இப்பொழுது வெசவோல் அரசனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். இது இருபத்து மூன்றும் நாள் கைச்சாத்திடப்பட்டது. இடச்சுக்காரர் அசனுக்கு அளித்த உதவியின் பொருட்டு இலங்கையின் ஏற்றுமதி வணிகத்தின் தனி உரிமையை உண்மையில் இவ்வுடன்படிக்கை இடச்சுக்காரருக்கு அளித்தது.



இன்னும், அரசன் போரின் செலவு முழுவதையும் ஈடுசெய்ய ஒப்புக்கொண்டதோடு போத்துக்கேயருடன் தொடர்புகொள்ளவில்லை என்றும் ஒப்புக்கொண்டான். இவ்வுடன்படிக்கையின் மூன்றும் கூறில், சிறைப்பிடிக்கப்பட்ட எல்லாப் போத்துக்கேயர் கோட்டைகள் அரசன் அவற்றை அழிக்க விரும்பாவிடின் இடச்சுக்காரர் தானையங்களாக வேண்டுமென்றும் இருந்தது. இக்கூறு பிற்காலத்தில் அளவற்ற தொல்லையை அளித்தது. இவ்வேற்பாடு அரசன் கைச்சாத்திட்ட போத்துக்கேயப் படியில் இருந்தது. ஆயினும் இது இடச்சுப் படியில் இருக்கவில்லை.

சிலகாலம் சென்றபின் கோசரை மட்டக்களப்பில் விட்டு வெசவோல் பற்றேவியாவுக்குச் சென்றனன். 1639, மே 2 இல் திருக்குணமலை அடிபணிந்தது. இடச்சுக்காரர் கோட்டைக்குட் புகுந்த பின்னரே அரசன் படைகள் அங்கு தோன்றின. இதன்பின் அரசன் கொழும்பைக் கைப்பற்ற வேண்டுமென்று விரும்பினன். பற்றேவியாவிலுள்ள கழகத்தினர் இராசசிங்கனின் நேர்மையில் நல்லெண்ணம் கொள்ளாதவராய் இருந்தனர். எனினும் அவன் விருப்பிற்கிசைந்து ஒழுகத் துணிந்தனர். ஆனல் கைக்கொள்ளப்படும் கோட்டைகள் யாவையும் இடச்சுக்காரரே, கொண்டிருத்தல் வேண்டும் என்னும் மிக்க கட்டுப்பாட்டுடைய ஓர் ஒப்பந்தத்தை அரசனுடன் செய்து கொள்ளல் வேண்டுமென எண்ணினர். இந்நோக்கத்துடன் **பிலிப்பு உலுகாசின்** தலைமையில் **கோசரைப்** பதில் அடுமிறலாகக் கொண்ட ஒரு கப்பற்படை அனுப்பப்பட்டது. இது திசெம்பரில் திருக்குணமலையை அடைந்தது. இங்கு அவர்கள், இராசசிங்கன் வேண்டுமென்று தானையத்தைாரைப் பட்டினி போட்டிருந்ததைக் காணவேண்டி இருந்தது. 1640 சனவரி முற்பகுதியில் இப்படை கொழும்பை நோக்கிச் சென்றது. ஆனல் இராசசிங்கன் அங்கு தோன்றுவதற்குத் தவறியதை அவர்கள் அறிந்து, அவ்விடத்தை அணுக இயலாதெனக் கருதி நீர்கொழும்பிற்கு அண்மையிற் படைகளை இறக்கினர். இங்கு, பின்னர் சிங்களர் இவர்களோடு வந்து சேர்ந்தனர். பெப்பிரவரி நாலில் நீர்கொழும்பை இவர்கள் கைப்பற்றி அங்கு படைக்களங்கொண்டனர். இதனல் இராசசிங்கன் மனங்குன்றிக் கோபங்கொண்டவனய் அவ்விடத்தை விட்டு அகன்றனன். எனினும் அரசனைப் புதியதோர் உடன்படிக்கைக்கு இணங்கச் செய்வதில் கோசர் வெற்றி கண்டான். இதற்கிணங்கப் போத்துக்கேயரை நாட்டில் இருந்து முழுமையும் வெளியகற்றிய பின்னர் இடச்சுக்காரர் ஒரே ஒரு கோட்டையைக் கொண்டிருக்க வேண்டுமெனவும், ஆனல் போரின் எல்லாச் செலவுகளும் கொடுக்கப்படும்வரை நீர்கொழும்பு முதலிய எல்லாக் கோட்டைகளையும் அவர்களே கொண்டிருக்க வேண்டுமெனவும், கொழும்பு பிடிபட்டபின்னர் அரசன் அதை ஓர் அரணுக வைத்திருக்க வேண்டுமென்று முடிவு செய்தாலன்றி அழித்துவிடல் வேண்டுமெனவும், அழிக்கப்படாவிடின் இடச்சுக்காரரே அங்கு படைக்களம் கொள்ளல் வேண்டுமெனவும் முடிவாக்கப்பட்டது. இவ்வாண்டில் அரசனின் கடன் 310,790 சுபானிய நாணயங்களாகியது.

கடற்படை இப்பொழுது தெற்கு நோக்கிக் கடல்வழி சென்றது. மாச்சு **13** இல் காலி தாக்கப்பட்டது. இங்கும் போரிற் பங்குபெறச் சிங்களர் காலம் தாழ்த்தியே வந்தனர். அரசன் இடச்சுக்காரரில் இன்னும் மனவமைவு கொள்ளாமலே இருந்தான். நல்லெண்ணத்தை மேலும் உண்டாக்கலாம் என்னும் நம்பிக்கையுடன் கோசர் கண்டிவரை அரசனைப் பின்தொடர்ந்தான். இப்பேச்சுக்களில் பயன் ஒன்றும் கிடைக்கவில்லை. கோசர் வெறுப்புடன் அவ்விடத்தை விட்டு மட்டக்களப்பிற்குச் சென்றனன். போகும் வழியில் இவன் சிங்களவரால் கொலை செய்யப்பட்டான். அரசன் இதற்குத் தன் கவலையைத் தெரிவித்தான் எனினும், இடச்சுக்காரருக்கு அமைவுற்ற ஓர் துணை அளித்துக் கொழும்பை வீழ்த்துவதிலும், இடச்சுக்காரரும் போத்துக்கேயரும் தம்முட் பொருதலையே பெரிதும் விழைந்தனன். இவன் துணையொடு கொழும்பு விழக்கூடியதாயிருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சிங்களருக்கும் போத்துக்கேயருக்குமிடையில் இலங்கையில் இடச்சுக்காரர் இருந்த நிலைமை மகிழ்ச்சிக்குரிய தொன்றன்று.

தலைமைத் தளபதி **தொம் பிலிப்பே மசுகரனுசு (1640–1645)** புதுப் படைகளுடன் இலங்கையை அடைந்து **1640,** நவம்பர் **9** இல் நீர்கொழும்பை மீட்டனன். காலியை முற்றுகை இடுவதற்குப் போதிய வலன் இல்லாதவராய்ப் போத்துக்கேயர் இருந்தாலும், அயற்பக்கத்தில் இவர்கள் பாசறை அமைத்திருந்து அவ்வாண்டின் இறுதிப்பகுதியில் நாலு கோரளைகளையும் ஏழு கோரளைகளையும் பணிவுறச் செய்தனர். இத்தருணத்தில் இராசசிங்கன் சபரகமுவாவைக் கைக்கொண்டிருந்தான். நிகழ்ச்சிகள் இவர்களுக்கு இன்னும் நல்ல முறையில் நடந்தேறின. இது அரசனுக்கும் விசயபாலனுக்கும் கண்டிப்பகுதியில் **1641** இல் மூண்ட உள்நாட்டுப் போரினால் ஏற்பட்டது. இப்போரினால் விசயபாலன் கொழும்புக்குத் தப்பி ஓடவேண்டி நேர்ந்தது. ஆனால் போத்துக்கேயர் இவனை இராசசிங்கனிற்கு எதிரான ஒரு கருவியாக வைத்துப் பயன்படுத்தாமல் கோவாவிற்கு அனுப்பினர். முடியிழந்த புறச்சமய இளவரசர்க்கு, அவர்கள் கிறித்தசமயத்தைத் தழுவினாலன்றிப் பழைய அரசுரிமையை அளித்தல் ஆகாது எனப் போத்துக்கல் மன்னரின் பழைய ஓர் ஆணை இருந்தது. இதற்கிணங்கவே விசயபாலு கோவாவுக்கு அனுப்பப்பட்டான். இவன் இங்கு **1654** இல் இறந்தான். இவனைக் கோவாவிற்கு அனுப்பியது, இவன் **1643** இல் இடச்சுக்காரருடன் கொண்ட சூழ்ச்சியாலும் இருக்கலாம்.

**1642** யூனிலிருந்து காலி மிக்க வன்மையாக வழித்தடை செய்யப்பட்டது. இராசசிங்கன் தன் நேயர்க்கு ஓர் உதவியும் அளித்திலன். இவ்வழித்தடை **1643** பெப்பிரவரி வரை நடந்தது. அப்பொழுது இடச்சுக்காரருக்கும் போத்துக்கலில் மீண்டும் நிலைநாட்டப்பெற்ற அந்நாட்டுக் குலத்தாருள் முதல்வனான **IV** ஆம் யோனுக்குமிடையே ஒழுங்குபடுத்தப்பட்ட அமைதி உடன்படிக்கையின் செய்தி அங்கு எட்டியது.




இவ்வமைதி உடன்படிக்கை பத்து ஆண்டுகட்கு நிலைபெறவேண்டியதென ஆக்கப்பட்டது. போத்துக்கலில் இப்பொழுது பதவிக்கு வந்த குலத்தாரே **1640** திசெம்பரில் சுபானிய ஆதிக்கத்தைத் தகர்த்தவர் ஆவர். இச்செய்தி கிட்டியும் **யான் தைசூன் (1640–1646)** என்பானின் தலைமையில் இருந்த இடச்சுக்காரர் காலியைச் சுற்றியுள்ள நாட்டினை, அதை அவர் வெற்றிகொண்டிருக்கவில்லையெனினும், கோட்டையின் இணைப்புலம் எனக்கூறி அதற்கு உரிமை கொண்டாடினர். இச்செய்தி கோவாவிற்கு எடுத்துரைக்கப்பட்டது. இடச்சுக்காரர் கேள்விகளுக்குப் பதிலரையர் இணங்கமறுக்கவே போர் தொடர்ந்து நடந்தது. அவ்வாண்டின் இறுதிப் பகுதியில் இடச்சுக்காரருக்குப் புதுப்படைகள் வந்து சேர்ந்தன. **1644** சனவரியில் அவர்கள் நீர்கொழும்பை மீட்டனர். கொழும்பையும் கைப்பற்ற முயன்றனர். ஆனால் தோல்வியுற்றனர். பின்னர் அவ்வாண்டிலேயே இடச்சுக்காரர் கொண்டிருந்த கோட்டைகளுக்கே தனி உரிமையாய் இருந்த புலன்கள் யாவையும் கைவிடுமாறு போத்துக்கலில் இருந்து கட்டளை வந்தது. இக்கட்டளை கோவாவில் வெளியிடப்பட்ட நாளில் இடச்சுக்காரர் கைக்கொண்டிருந்த கோட்டைகளுக்கே பொருந்துவதாய் இருந்தது. எட்டு ஆண்டுகளுக்கு நிலைபெறக்கூடிய ஒரு சிறு அமைதி உடன்படிக்கை **1644,** நவம்பர் **10** இல் கைச்சாத்திடப்பட்டது. அடுத்த சனவரி **10** இல் விபரங்களை விரிவாக்கும் உடன்படிக்கை கொழும்பில் முடிவாக்கப்பட்டது. இவ்வாறாக **1643** இல் போர் முடிந்திருந்தால் போத்துக்கேயர் எவ்வளவை இழந்திருப்பார்களோ அதனிலும் கூடியதாகப் போத்துக்கேயர் இப்பொழுது இழந்தனர் ; ஏனெனில் இப்பொழுது நீர்கொழும்புக்கு அருகாமையில் உள்ள ஏழு கோரளைகளையும் பென்தோட்டை ஆற்றில் மாத்துறை திசாவணி என்னும் மாநிலம் முழுவதையும் இடச்சுக்காரர் பெற்றிருந்தனர் என்க. இப்பொழுதுள்ள மேற்கு மாநிலத்துக்கும் தெற்கு மாநிலத்துக்கும் இடை உள்ள எல்லை இவ்வுடன்படிக்கையில் இருந்து உண்டாயதெனலாம்.

கிழக்கிந்தியக் குழும்பினர் தங்கள் பகைவனில் இருந்தும் இராசசிங்கனிடமிருந்தே அதிக துன்ப முற்றனர். ஆயினும் இராசசிங்கன் ஈர் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே தன் ஆட்சிப் பகுதிகள் பிரிக்கப்பட்டதை உணர்ந்து மிக்க கோபங்கொண்டனன். மலைநாட்டவரிடமிருந்து தம்மைத் தாம் காப்பாற்றுவதற்காக **1645,** மாச்சு **9** இல் இவர்கள் ஏற்படுத்திய ஒருவர்க்கொருவர் உதவும் காப்பு உடன்படிக்கை இன்னும் அவனைக் கனன்று எழச் செய்தது. இடச்சுக்காரர் இவனைச் சாந்தப்படுத்த முயன்றனர். ஆனால் அவன், ஏழு கோரளைகளிலிருந்தும் அவர்கள் படைகளைப் பின்வாங்கி நீர்கொழும்புக்குப் போகுமாறு கேட்டனன். இராச்சியங்களின் சூறையாட்டினைப் பொறுக்கமுடியாது மே திங்களில் **தைசூன்** போர் தொடுத்தான். ஆனால் அதிகம் வெற்றி பெறவில்லை. இவனுடைய செயலைப் பற்றேவிய அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இவனைப் பின்

தொடர்ந்து **யோன் மாற்சுயீகர் (1646–1650)** என்பான் 1646 இல் நாடாள வானாய் வந்தான். படைகளை நீர் கொழும்பிற்கு மீட்டுச் செல்லுமாறு **வான் தர்சுதெல்** என்பான் அனுப்பப்பட்டான். ஆனால் நற்பேறற்ற முறையில், போத்துக்கேயரின் கடட இணக்கத்தோடு முன்னேறிவந்த அரசன் படைகளை இவன் எதிருறவேண்டி வந்தது. மதிகுறைந்த முறையில், இவன் ஒரு சமரினைத் தூண்ட அங்கு நிகழ்ந்த போரில் இவனும் இவன் ஆட்களுட் பெரும்பாலாரும் உயிர்துறந்தனர். ஏழு கோரளைகளில் இருந்த இடச்சுத்தானையத்தார் சரண்புகவே அவர்கள் கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கோசரின் உடன்படிக்கையையும் சென்ற ஆண்டிலே அவ்விடத்தை இடச்சுக்காரரே கொண்டிருத்தல் வேண்டுமெனத் தான் விரும்பியதாகக் கூறியதையும் நோக்காது நீர்கொழும்புத் தானையம் அழிக்கப்படல் வேண்டுமென அரசன் கேட்டனன். மாற்சுயீகர் இதற்கு மிக்க உறுதியான ஒரு மனநிலையைக் கொண்டு இராசசிங்கனிற்கு வேண்டியது போரோ அமைதியோவெனக் கேட்டனன். சிறையாளிகள் யாவரும் தன்னிடம் சேர்க்கப்பட்டால் அன்றி அமைதி இயலாததொன்று என்று அவன் கூறினான். 1647 இல் அரசனுக்கு ஒரு தூதன் அனுப்பப்பட்டான். பயன் ஒன்றும் கிட்டிலது. இதற்கிடையில் போத்துக்கேயர் இராசசிங்கனுடன் பேச்சு நடத்திக்கொண்டிருந்தனர். தாம் போத்துக்கேயருடன் போர்புரிந்தால் அரசுத் தளபதியின் பேரில் கைப்பற்றும் கோட்டைகளை அரசன் பேரிலில்லாமல் அரசுத் தளபதியின் பேரிலேயே கொண்டிருப்பரென மாற்சுயீகர் கூறிய எச்சரிக்கையையும் உட்கொளாது இராசசிங்கன், போத்துக்கேயருடன் உடன்பாடு கொண்டான். இதற்கிடையில் இடச்சுக்காரர் கறுவா சேர்க்காமல் இருக்க வேண்டுமென்பதற்காக, பிற்றிகல் கோரளையிலிருந்தும், அரசன் ஆட்களை வெளியகற்றியிருந்தான். ஆயினும் 1649 இல் மீண்டும் தன்னுடைய மனதை மாற்றி இரண்டு ஆண்டுகட்கு முன் தன்னிடம் அனுப்பப்பட்ட தூதனை விடுதலை செய்து புதிய ஓர் உடன்பாட்டினைப் பேசி முடித்தான். இவ்வுடன்படிக்கை 1638 இல் செய்த உடன்படிக்கை போன்றே இருந்தது. ஆனால் கறுவா வணிகத் தனியுரிமை இனிக் கம்பனிக்குக் கிடையாது என்னும் ஒரு கூறு புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தது. இவ்வுடன்படிக்கை வெசவோனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையைப் போன்றே இருந்தது ; ஆனால், இடச்சுப்படியில் மூன்றும் கூறில் இல்லாத சொற்கள் முறையாகச் சேர்க்கப்பட்டன. 1650 இல் மாற்சுயீகரைப் பின் தொடர்ந்து **வான் கிற்றென்செயின் (1650–1653)** என்பான் பதவிக்கு வந்தனன். இடச்சுக்காரர் இராசசிங்கனின் நேர்மையில் நம்பிக்கை கொள்ளவில்லை. அரசனும் இடச்சுக்காரர் ஆட்சியில் இருந்த பகுதிகளில் திசாவை மாரைத் (மாநில ஆள்வார்) தான் அமர்த்த வேண்டுமென்று உரிமை கோரியதும், இடச்சுக்காரர் நிலை மேலும் இடருடையதாய் இருந்தது. 1650 இலேயே இராசசிங்கன் இடச்சுக்காரர் உடன்படிக்கையை மீறினர் என்று சாட்டுக் கூறினான். இவ்வாறாக இருநேயர்களுக்குமிடையே இருந்த தொடர்பு





உருவம் 25.—யாழ்ப்பாணத்து வானோக்கு, 1656 வரையில்.

1652 வரை பகைமை நிறைந்த நிலையில் இருந்து வந்தது. 1652 இல் போத்துக்கேயருடன் போர் தொடங்கியது.

1645 இல் பிலிப்பே மசுகரனாசைப் பின்தொடர்ந்து தலைமைத் தளபதியான **மனுவல் மசுகரனுசு ஓமம்,** கொழும்பில் தன் படைகளை ஒரு மைய

மாக்க விரைந்து களுத்துறையைக் கைவிட்டனன். உடனே இடச்சுக்காரர் இவ்விடத்தைக் கைப்பற்றினர். பட்டாளத்தினரோ தம்மைத் தம் தளபதி இடச்சுக்காரருக்குக் காட்டிக்கொடுத்துவிடுவன் என ஐயுற்றதால் மெனிக்கட வரையில் கலகம் செய்தனர். இப்படையினர், அரசன் படைகள் துரத்திவர, **கஸ்பார் பிகிரா** என்பானின் தலைமையில் கொழும்பு நோக்கிச் சென்று தலைமைத் தளபதியைப் பதவியிலிருந்து அகற்றிக் காப்பில் வைத்தனர். உண்மையான அதிகாரத்தைக் கொண்டிருந்த பிகிரா ஆற்றல் மிக்கவனாய் இருந்தான். நீர்கொழும்புப் பக்கம் நோக்கி இவன் 1653, சனவரி 8 இல் இடச்சுக்காரரைத் தாக்கினான்; பின் களுத்துறை மாவட்டத்தில் உள்ள அங்குறுவாத்தோட்டையில் அவர்களை வெற்றிகொண்டான். இதன்பின்னர் அரந்தரையில் தன் படைகளை நிறுத்தி நாலு கோரளைகளில் அரசனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். ஓமத்தைப் பின்தொடர்ந்து பதவி ஏற்பதற்காக மே 10 இல் **பிராங்கிஸ்கோ த மெல்லோ த கஸ்ரோ** (1653–1655) என்பான் வந்து சேர்ந்தான். இவன் ஓமத்தை விடுதலை செய்தான். இவன் கலகம் செய்தோர்க்கு நாட்டிலிருந்து மன்னிப்புக் கொண்டுவந்தனன். ஆனால் கலகக்காரரோ தீவிலுள்ள போர்த்துக்கேயர் உடைமைகளைத் தாம் காப்பாற்றினர் என்று கூறி அம்மன்னிப்பை ஏற்க மறுத்தனர். போரும் பொதுவாகப் போத்துக்கேயருக்கு உவப்பான வழியில் தொடர்ந்து நடந்தது. 1653 யூலை தொடங்கி 1654 மாச்சு வரை தொடர்ந்து நடந்த வழித்தடையின்பின் களுத்துறை இவர்கள் கைக்கு வந்தது. ஆனால் இடச்சுக்காரரோ புதுப்படைகளை எதிர்பார்த்து இருந்தனர். இவை, ஒருவாறு 1655 செற்றெம்பரில் நிலப்படை கடற்படை இயக்குநர் நாயகமான **செராட்டு அல்பு** என்பான் தலைமையில் வந்தடைந்தன. போத்துக்கேயரின் நாட்கள் முடிவுறும் காலமும் கிட்டியது. ஒற்ரோபர் 14 இல் களுத்துறை சரண்புகுந்தது. உடனே இடச்சுக்காரர் கொழும்பைச் சுற்றி வளைத்தனர். கொழும்புத் தானையம் பட்டினியால் தவிக்கவேண்டி நேர்ந்தது. போதுக்கேயரும் மிக்க மனவுறுதியோடு எதிர்த்து நின்றனர். முற்றுகையும் ஆறு திங்கள் இருபத்தேழு நாட்களுக்குத் தொடர்ந்து நடந்தது. இதற்கிடையில் எப்பிரில் 10 இல் அல்பு கொல்லப்பட்டான். நிலைபொறுக்க முடியாது **அன்ரோனியோ த சூசா கூட்டிஞோ** (1655–56) 1656, மே 12 இல் நாடாள்வானான **வான் தர் மெய்டன்** (1653–1662) இடம் அடிபணியவேண்டி நேர்ந்தது. 1656 இன் முற்பகுதியிலேயே இராசசிங்கன் தலைகாட்டினான். போர் நடக்கும் இடத்திற்கு அண்மையில் இராசசிங்கனை வைத்துக் கொள்ளாமல் இருக்க இடச்சுக்காரர் பெரிதும் விரைந்தனர். அவனும் அவன் படையும் அங்கிருந்தமையால் முற்றுகை யாதாயினும் பயன் அடைந்ததாகச் சொல்லமுடியாது. பொறுக்கலாற்ற இடர்களுக்கு எதிராகக் கொழும்பினைப் போத்துக்கேயர் காத்தெதிர் நின்றதே இலங்கையில் போத்துக்கேயர் செய்த செயற்கருஞ் செயலாகும்.



## போத்துக்கேயர் ஆட்சிமுறை, 1597-1656

இலங்கையில் இருந்த போத்துக்கேயர் அரசாங்கம் கோவாவில் இருந்த பதிலரையர்க்குக் கீழ்படிந்திருந்தது. இவ்வரசாங்கத்தின் தலைமை, தலைமைத் தளபதியில் இருந்தது. இவன் இல்லம் மல்வானையில் இருந்தது. இவனை நாட்டு மக்கள் உயர்மிகு மல்வானை மன்னர் என்று அழைத்தனர். இவனுக்குத் துணையாய் வாரிப்பொறுப்பாய் இருந்த **வெடோர் த பசென்டா** என்னும் ஒருவரும் நீதிபதி ஆன **ஔவிதோர் (Ouvidor)** என்பாரும் இருந்தனர். **சென் உலோரென்சுவின்** நகர் என்னும் கொழும்பு, நகராண்மைக் குழு ஒன்றினால் ஆளப்பட்டு வந்தது.

நாடு நான்கு திசாவணிகளாகப் (மாநிலங்களாக) பிரிக்கப்பட்டு இருந்தது. ஒவ்வொன்றும் ஒரு திசாவை (ஆள்வார்) என்பானின் தலைமையில் இருந்தது. இவர்கள் சொந்த நாட்டரசர் கீழ் இருந்து பெற்ற அதிகாரத்திலும் போத்துக்கேயர் காலத்தில் கூடிய அதிகாரம் பெற்றிருந்தனர். இந்த நான்கு மாநிலங்களும் பின்வருமாறு: மாத்துறை; இது இப்பொழுதுள்ள தென்மாநிலம் முழுவதும், கொலன கோரளை, களுத்துறை மாவட்டம், சப்பிரகமுவா கோரளை என்பவற்றைக் கொண்டிருந்தது. நான்கு கோரளைகள்; கேகாலை மாவட்டத்தின் வடபகுதி, சியனக் கோரளை ஆப்பிற்றிகம் கோரளை என்பவை இதில் அடங்கும். ஏழு கோரளைகள் அல்லது அளுற்குரு கோரளை; வடமேன்மாநிலம் பெயர் அளவில் வடமத்திய மாநிலத்தின் பெரும் பகுதி என்பவை இதில் அடங்கும். சபரகமுவா; மூன்று கோரளைகள், கேகாலை மாவட்டத்தில் புலற்கம் கோரளை, எவாகம் கோரளை, கொலன்ன கோரளை தவிர்ந்த இரத்தினபுரி மாவட்டம் என்பவை இதில் அடங்கும். இவ்வாறாக இத்திசாவணிகள் கோட்டையில் இருந்தே தொடங்கின. 1640 இல் நீர்கொழும்பு திசாவை என்பது ஒன்று தோன்றுகின்றது. திசாவணிகளின் பகுதி கோரளை எனப்படும். கோரளைகளுக்குத் தலைமை கொண்டவர் அதிகார் என்போர். அதிகார் என்பவனே பின்னர் கோரளை விதானை அல்லது கோராளை எனப்பட்டான். கோரளைகளின் பகுதிகள் பற்றுக்கள் எனப்படும். இவை அதுக்கோராளை என்பார் தலைமையில் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் கிராமத் தலைவராகக் காரியக்காரணனே என்பான் இருந்தான். அரசர் கிராமங்கள், வாழ்வு முழுவதற்காகவும் கொடுக்கப்பட்ட கிராமங்கள், அரசன் வேண்டிய பொழுது கொடுக்கப்பட்ட கிராமங்கள், பல சந்ததிகளுக்கெனக் கொடுக்கப்பட்ட கிராமங்கள் ஆகியவற்றில் விதானைமார் என்போர் இக்காரியக்காரணனைக் களை மேற்பார்வை பார்த்தனர். இவ்வாறாகக் கிராமங்களைப் போத்துக்கேயர்க்கும் மற்றையோர்க்கும் கொடுக்கும் வழக்கம் இருந்தது. நிலம் முழுவதுமோ அதிற் பெரும்பாகமோ சேவை ஆட்சிமுறையில் கொள்ளப்பட்டிருந்தது. இச்சேவை பெரும்பாலும் போர்ச்சேவையாக இருந்தது.

காசாக வரும் வருவாய் மிகக் குறைவாய் இருந்தது. அரசர்க்குரிய தனி உரிமைகள் வருமாறு:

கறுவா. இது முதலாம் இராசசிங்கனின் தலைமையில் சலாகம மக்களால சேர்க்கப்பட்டது. இவர்கள் மகாபத்த தலைவனின் கீழ் ஒன்று சேர்க்கப் பட்டனர்.


பாக்கும் மிளகும். மக்கள் இவற்றைக் குறித்த ஒரு விலைக்கு அரசாங கத்துக்கு விற்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர்.

நன்மணிகள். சபரகமுவாவில்.

யானைகள். இவை இந்தியாவில் விற்கப்பட்டன. இறுதியாக முத்துக்குளிப்பு.


திசாவைமார் நாட்டு மக்கள் மீது குடிக்குழு ஆட்சி, நீதி ஆட்சி, படை ஆட்சி யாவும் கொண்டிருந்தனர். தலைமைத் தளபதியின் **பனகாமார்** (பண்ணேகா அல்லது பசனுயக) அல்லது **செயலாளர்** என்போரைக் கொண்ட ஒரு குழு இவரிடம் வரும் அலுவலைத் தீர்ப்பதற்கு உதவியது. ஒவ்வோர் ஆண்டும் நாட்டில் அசைசு எனப்படும் மன்றுகள் பணியாற்றின. இவை மராள அல்லது இறப்புவரி என்பதைச் சேகரிக் கும் நோக்கத்துடனேயே கூட்டப்பட்டன. ஒவ்வொரு திசாவணிக்கும் ஒரு மரல்வீரோவைப் **பண்டிகேரானே** என்பான் நியமிப்பான். இப்பண்டிகேரானே ஆரம்பத்தில், சட்டங்களை விளக்கும் இருமொழிபெயர்த்துரைப்போருடன் தன் மாநிலத்திற்குச் சென்றுவரும் ஒரு இறைசேரி அலுவலாளனாய் இருந்திருக்கலாம். இவனுடன் வேறு ஒரு செயலாளரும் ஓர் ஊராண்மைக் காரரும் கூடச் செல்வர். இந்நாட்டு அரசர் ஆட்சியில் சேவைக்காணி நிலத்திற் குரியவன் ஒருவன் இறந்தால் உரிமைக்குரிய ஆண் சந்ததியில்லாவிட்டால் உடைமை முழுவதும் முடியைச் சாரும். இருப்பின், இறந்தானின் அசைவுப் பொருட்களின் மூன்றிலொரு பகுதிக்குச் சமனுன பணம் கொடுத்து அவ்வுடை மைக்கு உரித்துக்கொள்ளலாம். போத்துக்கேயர் இவ்வகை வீதத்தை முந்திய வகையிலும் எடுத்துக்கொள்வர். சிறித்துவர் இவ்விறுப்பினின்றும் விலக்கப்பட்டனர். இப்பருவொவ மன்றுகள் இறந்தோர் உடைமைகளை மட்டு மன்றிக் கடன், களவு, கொலை ஆகியவைபோன்ற குடிக்குழு அலுவல்களையும் குற்ற அலுவல்களையும் தீர்த்துவைத்தன. அறுபது நாட்களுக்குள் கொலை செய்தோன் பிடிக்கப்படுவானுகில் தளபதியோ திசாவையோ அவனுக்கு உடனே மரணதண்டனை விதிப்பர். ஆனல் அக்காலம் கழிந்தபின் அவ்வாறு செய்வதற்கு அவர்க்கு அதிகாரம் கிடையாது. அதன்பின் குற்றவாளி பருவமன்றுகளில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையைக் குறைத்துக் கொள்ளலாம். குறைந்த சாதியில் உள்ளான் ஒருவன் உயர் சாதியான் ஒருவனைக் கொல்லின் இத்தகைய பேறு அவனுக் குக் கிடையாது. ஒழுங்கற்ற மணங்கள் போன்ற சாதிக்கேள்விகளும் பருவ மன்றின் தீர்ப்புக்கு வந்தன. கொதி எண்ணெய், பழுக்கக் காய்ச்சிய இரும்பு





உருவம் 26.—கொழும்பின் வாளுெக்கு, 1656 வரையில்.

ஆகியவையும் தண்டனைக்குப் பயன்படுத்தப்பட்டன. மன்பழி, கள்ள நாணயமாக்கல், ஊராண்மைக்காரன் அல்லது நீதிவானைக் கொல்லல் ஆகியவற்றைத் தவிர்ந்த மற்றைக் குற்றங்களைப் புரிந்தவர்க்குக் காவி யில் ஒரு காவலிடம் இருந்தது. இக்காலத்துக்குரிய குற்ற நீதி முறையைப் பத்தாம் நூற்றுண்டில் நிலவியதுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.



உருவம் 27.—கொழும்பு நாட்டுப்படம், 1656 வரையில்.

போர் அலுவல்களில் போர்க்களத் தலைமை மேயரே[1] தலைமைத் தளபதிக்குக் கீழ் உள்ள முக்கிய போத்துக்கேய அலுவலர் இவரின் தலைமை அலுவலகம் மெனிக்கடவரையில் இருந்தது. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகியவையே முக்கிய கோட்டைகளாகும். போத்துக்கேயர் படையினர் **கசடோமார்** (மணம் முடித்தோர்), **சொல்தாடோமார்** ஆகி

[1] Captain Major of the Field



யோரைக் கொண்டிருந்தது. கசடோமார் அவசரகால நேரங்களிலேயே அழைக்கப்படுவர். சொல்தாடோமார் அமைதிக்காலங்களில் கட்டுப்பாடு அறவே ஒழிந்தவராய் விடுகாலிகளைப் போலவே இருப்பர். இதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில், ஒரு காலத்தில் இலங்கையில் பட்டாளச் சேவை செய்ய மறுத்தோர் சிறைபோகவேண்டிய நிலை இருந்தது எனக. நாட்டுக் கூலிப் படையினர் (இலசுகரின்மார்) **திசாவைகளின்** கீழ் இருந்தனர். இவர்கள் யாவர்க்கும் முதல் தலைவனய் விளங்கியவன் விக்கிரமசிங்கன் என்னும் அலுவலன். விக்கிரமசிங்கன் என்பது பழங்காலத்துச் செனவிரத்து என்பதை ஒக்கும். கோட்டை மன்னர் ஆட்சியில் அரசகுடும்பத்தினரைத் தவிர்ந்த மற்றையோருள் அவன் ஒருவனே பல்லக்கு உபயோகிக்கக்கூடிய பேறு பெற்றிருந்தான். இலசுகரின்மார் ஒரு முறையில் பதினைந்து நாட்கள் சேவை செய்வர். வாள்கள், வில்லுகள், அம்புகள் ஈட்டிகள் இவர்கள் ஆயுதங்களாக இருந்தன. இப்படையினர் பயன்படுத்துவதற்கு உரிய துவக்குகள் சிஞ்சல் எனப்படும் ஒருவகையினவாம். இவை தூக்கக் கூடிய இலகுவான சுடுகருவிகள் ஆகும். இவை பெரிய கைத் துவக்குகளைப்போன்று முன்னுக்குத் தாங்குவதன் பொருட்டு இரு கால்களை உள்ளனவாய் இருக்கும். இவை நாலிலிருந்து பன்னிரண்டு அவுன்சுவரை எடையுள்ள குண்டுகளை எறியக்கூடியனவாய் இருக்கும். இவற்றைத் துவக்கன் இருந்த இருப்பில் சுடுவான். போரில் போத்துக்கேயர் யானைகளைப் பயன்படுத்தியவர் போலத் தோன்றவில்லை. எனினும் கொழும்பை முற்றுகையிடும்பொழுது முதலாம் இராசசிங்கன் இவற்றைப் பயன்படுத்தினன். தும்பிக்கையில் வாள்கள், கத்திகள் கட்டப்பட்ட யானைகள் சிங்களர் படையின் முன்னணியை முன்னிட்டுச் செல்வது வழக்கம்.

யாழ்ப்பாணம் புறம்பான ஓர் ஆட்சி முறையின்கீழ் இருந்ததெனினும் தலைமைத் தளபதியின் கீழே இருந்தது. இங்கு முக்கிய அலுவலராய் விளங்கியோர் ஆட்சியின் தலைமை மேயர்[1] **பாற்றர் (Factor), ஒளவிதோர்** ஆகியோராவர். மன்னார் தலைவன் ஒருவனின் கீழ் இருந்தது. யாழ்ப்பாணம் வெல்லப்பட்டபொழுது இவன் சிறப்பு பெரிதும் குன்றியது.

திருச்சபை அலுவல்களில் இத்தீவானது கொச்சித் திருச்சபையின் ஒரு பகுதியாக விளங்கியது. கொச்சிக் கண்காணியார் ஒரு விக்கார் செனரல் என்பாரின் துணைகொண்டு ஆட்சிபுரிந்தார். முதலாவது சமயத்தூதர்கள் **பிரான்சிசுகன்மாரே** ஆயினும் 1600 இற்குப் பின் சிறிது காலத்துள் **இயேசுசுற்றுவர், தொமினிக்கன்மார், ஒகத்தினியன்மார்** ஆகியோர் தனிப்பட்ட குருமாருடன் வந்தடைந்தனர். 1591 இல் தருமபாலன் பிரான்சிசுகன்மாருக்குக் கோயில் கிராமங்களை அளித்தான். ஆனால் குடிச்சேவை அதிகாரிகள் அவற்றைப் பறித்துக் கொண்டனர். குருமாரின் முயற்சிகளுக்கு இக்குடிச்சேவை அதிகாரிகள் காட்டிய பற்றின்மையும் எதிர்ப்பும் அவர்கட்கு வருத்தத்தைக் கொடுத்தன. துறவோர் அகங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பிரான்சிசுகன்

[1] Captain Major of the Kingdom

கல்விக் கோட்டங்களில் சமயம், நல்லொழுக்கம், ஓதல், எழுத்து, கணிதம், பாட்டு, இலற்றின் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அக்காலத்தில் கோயிற்பற்றுப் பாடசாலைகளும் இருந்தன. இவற்றுள் யாழ்ப்பாணத்தில் பிரான்சிசுகர் இருபத்தைந்து பாடசாலைகளையும் இயேசூற்றுவர் பன்னிரண்டை யும் வைத்து நடத்தினர். இயேசூற்றுவர் உயர் கல்விக்காகக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கல்லூரிகள் நடாத்தி வந்தனர். பல்வகைப்பட்ட கல்வியும் பணமின்றி அளிக்கப்பட்டது.

போத்துக்கேயரின் ஒழுங்கற்ற செயல்களைப்பற்றி எராளமாக எழுதி வெளியிடப்பட்டுள்ளது. எனவே மேலும் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. ஊழலும் களவும் ஆட்சிப்பகுதியில் எல்லா அலுவலகங்களிலும் நிலவின. 1597 இல் மல்வானையில் கூடிய கூட்டத்தில் சிங்களவர் தங்கள் சட்டங்களுக்கியைய வாழ இயைவு கொண்டனர். இச்சட்டங்கள் ஒருபொழு தும் கோவைப்படுத்தப்படவில்லை. மக்களை வருத்திய கொடுங்கோன்மை யும் இன்னும், பேரவாக்கொண்ட போத்துக்கேயர் நாட்டுப் பழக்க வழக்கங்கள் அளிக்கும் ஒரு கூட்டுப் பண்பினை நோக்காது, உள்நாட்டு அரசாங்க முறையை மேலெழுந்த வழி ஒரே போக்கில் கடைப்பிடித்தமையால் ஏற்பட்டவையாகும். எடுத்துக்காட்டாகப் பின்வரும் செயலைக் கூறலாம்: பாக்கு வணிகம் கடைசிக் கண்டிமன்னரின் தனியுரிமையாக இருந்தது. பத்தாம் நூற்றாண்டில் கிராமங்களில் பழமரங்கள் வெட்டும் பழக்கமும் இருந்தது. ஆனால் இவ்வீர் உரிமைகளையும் புதிய முதல்வர்கள் நாட்டு மக்களை வறுமையில் ஆழ்த்தும் அளவிற்குக் கடைப்பிடித்தனர். பழைய அரசாங்கத்தில் தலைவர்கள் அரசனுக்கு நல்ல பயங்கொண்டிருந்தனர். இவன் வலிமைமிக்க ஆட்சியாளனாய் இருந்ததால் தன்னைத் தவிர்ந்த வேறு கொடுங்கோலனைப் பொறுக்கமாட்டான். போத்துக்கேயர் ஆட்சியில் ஒவ் வொரு கிராமத்தின் தலைவனும், ஏன் ஒவ்வொரு தலைமைக்காரனுமே, இதற்கு முன் மக்களால் ஒருபொழுதும் பொறுத்திருக்க முடியா அதி காரங்களைக் கைக்கொண்டனன். பலகாலும் ஒரு கிராமத்தவனின் பொல் லாப் பகைவர் அவன் நாட்டு மக்களாகவே இருப்பர் என்பதை நாம் மறத்தல் ஆகாது. விதானைமார் போத்துக்கேயக் கிராமத் தலைவனைப் போலவே கெட்டவராய் இருந்தனர். 1636 இல் உண்மையாகவே சிங்கள முதலியார் மார், ஆராச்சிமார், ஆகியோர் நலத்திற்குப் பதிலாக, இலசுகரின்மார் போத்துக்கேயர் நலங்கருதித் தொழுதனர். இத்தொழுகை 1815 இல் கண்டி மக்கள் இவ்வாறு வேண்டிக்கொண்டதை நினைப்பூட்டுகின்றது.


அமைதியான காலங்களிற் படையில் ஒழுங்கு அறவே ஒழிந்தது; படை அதிகாரிகள் படையினரின் சம்பளத்தைக் களவாடினர்; இச்செயல்கள் படையினரை ஆறலை கள்வராக்கின. தொடர்ந்து போர்கள் நடந்தமையால் ஒழியாப் போர்ச்சேவை மக்களை என்றும் துன்புறுத்தி வந்தது. இதனால், த அசிவெடோவிற்கு 4000 இலசுகரின்மாரை



அளித்த மாத்துறைத் திசாவணி போத்துக்கேயர் ஆட்சிக் காலத்தின் முடிவில், 1500 பேரையே அளிக்கக் கூடியதாக இருந்தது. கோயில்களை அழித்ததனால் மக்களின் வெறுப்பு இன்னும் கூடியது. இத்தகைய நடவடிக்கை, நாட்டின் நிலை குலைந்திருந்த நேரத்தில் மிக்க அறிவற்ற செயலாக இருந்தது. எனினும் முன்னேசுவரத்துக் கோபுரத்தை எரித்தது போன்ற சில அலுவல்கள் கிறித்துவக் கோயில்களை எரித்ததற்குப் பழி தீர்ப்பதற்காகவே செய்யப்பட்டனவென்று நாம் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

அப்பொழுதிருந்த நிலைமையைப்பற்றி நாம் இங்கு இன்னுமொரு வியஎத் தைக் குறிப்பிடல் வேண்டும். நாம் ஒரு த அசிவெடோவிற்கு எதிராக ஒரு த சா இனை ஒத்துவைத்து நோக்கல் வேண்டும். குருமார் மாட்சிமை தங்கிய மன்னர்க்கும் இறைவனுக்கும் சேவை செய்வதில் ஆர்வம் கொண் டிருந்தனர். எனினும் மக்களை வருத்தினோர்க்கு மாறாக மக்கள் பக்கமே சார்ந்திருந்தனர். யப்பானில் நடந்தவாறுபோல், போத்துக்கேயர் காலத் தில் மதம் மாறிய மக்கள், குருமார் இல்லாதிருந்த காலத்தும் இடச்சுக்கா ரர் ஓயாது துன்புறுத்திய காலத்தும், கிறித்துவ மதத்தில் தளரா நம்பிக்கை கொண்டு ஒழுகினர் என்னும் உண்மை அவர்களின் ஒழுக்கத்திற்கு நற் சான்று பகர்கின்றது; அறவே பழுதுற்ற ஒரு நாட்டினத்தாரிடை இத்தகைய பண்பாடு தோன்றியிராது. இன்னொரு வகையில் மிளகாய், புகையிலை, பிறநாட்டுப் பழமரங்கள் ஆகியவற்றை நாட்டில் புகுத்திய பெருமை போத் துக்கேயருக்கு உண்டு. ஒரு சில நூற்றுவர் அயன மண்டலக் காலநிலை நாடுகளில் போர்செய்து, அளவிற் பெரிய ஒரு நாட்டினை அடிபணியச் செய்த உறுதியையும் தாளாமையையும் நோக்கினால் நாம் அவற்றைக் கண்டு வியப்புறாமல் இருத்தல் இயலாது. போத்துக்கேயர் இந்தியா நோக்கி வந்திராவிடின் இலங்கையின் வரலாறு எவ்வகையதாய் இருக்கு மென நாம் கற்பனை செய்தல் சுவை உடையதாய் இருக்கும். விசயநகரப் பேரரசு அது வீழ்வதன் முன்னரே வீழ்ந்திருக்கலாம். அதனால் தென்னிந் தியாவும் ஒருவேளை இலங்கையும் முகமதியர் ஆட்சிக்கு உட்பட்டிருக்க லாம்.

போத்துக்கேய நூலாசிரியர்கள் சிங்களர் பொய்யினைப்பற்றிப் பல கூறு வதை நாம் கேட்டுளோம். எனினும் I ஆம் இராசசிங்கன் இறந்தபின் போத்துக்கேயர் கீழ் நாட்டினை அடிமைப்படுத்திய காலத்திற்கு முன் இச்சாட்டு வெளிவந்ததாகத் தெரியவில்லை. இக்காலத்தில் போத்துக்கேயர் ஆட்சியில் அகப்பட்ட மக்கள் இயற்கையாகவே, உள்நாட்டுக் குலமுறையினர் பக்கம் பரிவு காட்டினர். இவர்களோ போத்துக்கேயர் பக்கம் பற்றுடைய வராய் இருந்தால் கண்டியர் ஒறுத்தனர்; கண்டியர் பக்கம் பற்றுடையவ ராய் இருந்தால் போத்துக்கேயர் வருத்தினர். இக்குற்றம் கண்டி அரசைப் பொறுத்த அளவில் மிக்க உண்மையாய் இருந்தது.




நாட்டுப்படம் VI.



ஏனெனில் இவ்வரசன் சொல்லில் நம்பிக்கை கொள்ள முடியாமல் இருந்தது. இவ்விடத்தில், வன்மையிற் குறைந்த அரசுக்குத் துரோகமே புகலிடம் என்பதை நாம் குறிப்பிடலாம். அமைதிக்காகப் பெரும் அளவில் பொறுமை காட்டிய இடச்சுக்காரரோடு கண்டியர் நடந்துகொண்ட முறையில் இவ்வியல்பு தெளிவாகப் புலப்படுகின்றது. இன்னும் 1803 இல் பிரித்தானியப் படைகளை வதைத்தபொழுது இவ்வியல்பின் மிக இழிந்த நிலையை நாம் காண்கின்றோம்.

த குயிரோசு என்பான் கூற்றின்படி கண்டி அரசானது ஊவா, மாத்தளை, கம்பளை, மட்டக்களப்பு, பானமை, கொட்டியார் ஆகிய சிற்றுட்சிகளையும், ஒரு காலத்தில் திருக்குணமலையையும் கொண்டிருந்தது. இவற்றில் பிந்திய நான்கையும் வன்னியர் ஆண்டனர். இன்னும் அரிசுபற்று, பன்சியபற்று அல்லது தும்பனற, உடுநுவரை, யற்றிநுவரை ஆகியவற்றையும் இது கொண்டிருந்தது. இவை தலைநகர்க்கு அயலில் இருந்தன. இன்னும் விதானைமார் ஆட்சியில் இருந்த விந்தனை, வெல்லசா, பதுரட்டை ஆகிய இடங்களையும் இது கொண்டிருந்தது.

### 8 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பொதுச் சரித்திரத்திற்கு **இரா. த. கு.** பார்க்க. **வே. ஆ. ச. ச., இ. கி. xviii.** எண் 55 இல் வெளியிடப்பட்ட இராசசிங்கனின் கடிதங்கள் பார்க்க. இன்னும் பலுடியசு **பெசுக்கிரிவிங்கு வான் எற்று மட்டிகே ஐலந்து சிலோன்** பார்க்க. "பென்னேத்தே வரலாறு". (**வே. ஆ. ச. ச., இ. கி. xi.** எண் 38). இடபிளியு. வான் கீர், இலேயிடன் 1895 இல் எழுதிய இலங்கை பற்றிய நூலையும் பார்க்க.

செனரத்தின் இறப்புப் பற்றிய தேதி பல சிங்களக் கவிதைகளிலும் கூறப்பட்டுள்ளது. வெவ்வேறு மாதங்கள் கொடுக்கப்பட்டனவெனினும் எல்லோரும் சக ஆண்டு 1557 இல் என்பதில் ஒத்திருக்கின்றனர். **யோணடா தோ இறீனே த உவா,** 1635 இல் அவன் இறக்கும் பொழுது அவன் வயது 58 என்று கூறுகிறது. இந்நூல் சிங்களர் அறிந்தவருள் செனரத்துவே சிறந்த தலைவன், சிறந்த அரசன், சிறந்த மனிதன் எனக் கூறுகின்றது. செனரத்து கற்றோனாய், கொடையாளியாய், ஏழைகட்கு இரங்குபவனாய், வீரமுடையவனாய் விளங்கினான். புலக்காட்டு ஆள்வாருக்கு விசயபாலன் எழுதிய கடிதம் 1643, சனவரி 22 இல் கிடைத்தது. இதற்கு **தாகு பதிவேடு** 1643, 1644 (கொலோனியன் அலுவலகம் பார்க்க). 1645, மாச்சு 9 இல் செய்யப்பட்ட உடன்படிக்கை மலைநாட்டினரிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகச் செய்யப்பட்டதாகும். இவர்கள் கிராமத்தவரை வெளியோட்டிவிட்டுக் கறுவாத் தோட்டங்களை அழித்தனர். கண்டி, அரசனோடு ஒரு தொடர்பும் கொள்ளக்கூடாதெனத் தடைசெய்யப்பட்டது. (**ஒக்கோமசு.**)

சென் உலோரன் சின் நகர்க்கு தருமபாலனின் கொடை பார்க்க. (**ஒறியன் றலிசு, iii.** ப. 196). மாத்துறை, எழு கோரளே, நான்கு கோரளே, சபரகமுவா ஆகிய மாநிலங்கள் பற்றிய விபரங்கள் **த. கு.** ப-ள். 25-36 இல் கொடுக்கப் பட்டுள்ளன. இவன் கண்டி அரசைப் பற்றியும் மற்றைச் சிற்றரட்சிகள் பற்றியும் பல செய்திகளேப் பற்றியும் கூறுகின்றன் ; ப-ள் 45-56. நீர்கொழும்புத் திசாவையைப்பற்றி **த. கு.** குறிப்பிடுகிறன். ப. 705. ஆட்சி முறைபற்றி **இறபீரோ** விபரித்துள்ளான். **த. கு.** வும் கூறியுள்ளான். நூல் vi அதைப்பற்றி 1636 இன் விண்ணப்பம் நல்லொளி தருகின்றது. (**த. கு.** ப-ள் 834 தொடர்). கண்டியின் பாக்கு பற்றிய தனி உரிமை பற்றி **ஆணையாளர் பீடத்தின் முடங்கல்கள்** குறிப்பிடுகின்றன ; தொகுதி 521, 1816, யூன் 9, யூலே 24 ; 1821, சனவரி 7, 8. இலங்கையில் முகமதியர் ஆட்சி உண்டோ என்பது பற்றி **இறெமெற்றிடோசு பத்திரங்கள்** i. 57 பார்க்க.

*அதிகாரம் 9*

## இடச்சுக்காரர் வெற்றி, 1656–1796

கொழும்பு அடிபணிதற்குரிய நிபந்தனைகள் இடச்சுக்காரருக்கும் இராசசிங்கனிற்கும் பகைமையை உடனே விளைத்தன. கொழும்பைத் தன்னிடம் அழித்துவிடும்பொருட்டு விட்டுவிடுவதாக, **அல்பு** என்பான் கூறினன் என்று அரசன் சொன்னன். ஆனல் இடச்சுக்காரரோ இத்தகைய சிறப்பு வாய்ந்த ஓரிடத்தை அரசனுக்குக் கொடுத்துவிடும் எண்ணம் உடையவராக இருக்கவில்லை. இன்னும் இப்போராட்டத்திற்குரிய செலவுகளை அரசன் கொடாமலிருக்கின்றபோது அந்நகரை அரசனுக்குக் கொடுக்க எவ்வாறு ஒருப்படுவர். இப்பொழுதுள்ள சுவர்களை இடித்து, நகரின் சிறிய ஒரு பகுதி அரண் செய்யப்படுவதையே உடன்பாட்டின் ஒரு பகுதியென அல்பு கருதினர் என்று இவர்கள் அரசனுக்குப் பதில் கூறினர். உண்மையில் அவ்வாறே கொழும்பை அவர் அரண் செய்தனர். இப்பொழுது இராசசிங்கன், வடபகுதியையும் கடற்கரைகளிலிருந்த சில கிராமங்களோடிணைந்த அரண்களையும் தவிர இலங்கை முழுவதற்கும் தலைவனுக இருந்தான். எனவே இவன் இடச்சுக்காரரைப் பட்டினிபோடுவதில் ஈடுபட்டான். கீழ்நாட்டினைச் சூறை அடித்து மக்களை அந்நாட்டினின்றும் வெளியோட்டினன். சிறு போர்கள் நேரலுற்றன. இறுதியில், இருக்கும் நிலைமையைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் இடச்சுக்காரர் 1656 நவம்பர் திங்களில் கொழும்பின் அயலிலிருந்து அரசனை வெருட்டி ஓட்டினர். கீழ்நாட்டின் மக்கள் ஒருவரும் குடியில்லாமல் அறவே ஒழிந்த காரணத்தால் சில ஆண்டுகளின்பின் குழும்பினர் அன்வெலே, அங்கருவத் தோட்டை கடற்கரை, ஆகியவற்றிற்கிடையிருந்த நிலத்தில் தஞ்சாவூர் அடிமைகளையும் கொழும்புக் குடிமக்களையும் குடியிருத்தி அப்பகுதியில் பயிரிடல் வேண்டும் என முடிவு செய்தனர்.



1657 ஆம் ஆண்டு கோவாவை முற்றுகையிடுவதில் கழிந்தது. எனவே 1658 இலேயே தூத்துக்குடியும் மன்னரும் இடச்சுக்காரர் கைக்கு வந்தன. மூன்று திங்கள் தொடர்ந்து நடந்த முற்றுகையின்பின் 1658, யூன் 24 இல் யாழ்ப்பாணம் சரண்புகுந்தது ; அதனல் இலங்கையினின்றும் போத்துக்கேயர் அறவே வெளியகற்றப்பட்டனர். அதன் பின்னரே மேற்கூறிய கைக்கோள்கள் முற்றுப்பெறலாயின. யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்ட பொழுது இடச்சுக்காரர் தாம் கைப்பற்றிய சிறையாளரைத் தேவையற்ற முறையில் மிக்க கொடுமைக்குள்ளாக்கினர்.

**வான் தர் மெய்தனைப்** பின்பற்றி **மூத்தோன் இறிக்குலோவு வான் கோயன்** என்பான் பதவிக்கு வந்தனன். இவன், இடைக்கிடை சில காலப் பகுதிகளைத் தவிர, 1660 இலிருந்து 1675 வரையுள்ள காலத்தில் ஆண்டான். கண்டி அரசவையுடன் கொண்டிருந்த தொடர்பு பகைமை வழியே சென்றுகொண்டிருந்தது. ஆனல் 1664 இல் இராசசிங்கனிற்கு எதிராகக் கலகமொன்று மூண்டது. அரசன் அங்குரங்கேதாவிற்கு ஓடிப்போயினன். அங்கிருந்து துணைதருமாறு இடச்சுக்காரருக்கு எழுதினன். இவர்களின் உதவி 1665 இல் பதினைந்து மாவட்டங்களை இணைப்பதில் முடிந்தது. இதனல் கம்பனியின் எல்லை நாலு கோரளேகள், சபரகமுவா ஆகிய இடங்களிலே போத்துக்கேயர் கொண்டிருந்த எல்லையோடு ஒத்ததாய் இருந்தது. எழு கோரளேகள் சிங்களவரிடம் விடப்பட்டன. அவ்வமையத்தில் இடச்சுக்காரர் திருக்குணமலையையும் மட்டக்களப்பையும் கைக்கொண்டனர் ; கல்பிற்றியாவை 1667 இலும் கொட்டியாரை 1668 இலும் கொண்டனர். இராசசிங்கனும் ஒவ்வொருகால் தன் பகைமையைக் காட்டி வந்தனன். இடச்சுக்காரரோ அரசனின் அமைவினை எவ்வழியாலும் பெறல் முடியாதென்று கண்டு கொட்டியார், மட்டக்களப்பு, கல்பிற்றியா ஆகிய துறைமுகங்களைக் கண்டியர் தொடர்பு கொள்ளாதபடி தடைசெய்தனர். இதனல் கண்டியர் வணிகம் நடைபெறமுடியாமற் போய்விட்டது ; 1671 இல் அரசன் மீண்டும் தன் குடிமக்களுடன் பகைகொள்ள வேண்டி நேரிட்டது.

இக்காலத்தில் பிரெஞ்சுக்காரர் இராசசிங்கனுடன் பேச்சு நடத்தித் திருக்குணமலையைத் தம் இருப்பிடமாகக் கொண்டனர். 1672 இல் இவர்களை இடச்சுக்காரர் வெளியகற்றிவிட்டனர். பிரெஞ்சுக்காரரின் அரசதூதன் மன்னனுக்கு நோதக்க புரிந்தபடியால், இறக்கும், வரை உள்நாட்டிற் சிறையில் வைக்கப்பட்டான். 1675 வரை அமைதி தொடர்ந்து நிலவியது. அவ்வாண்டில் கலகமொன்று கிளர்ந்து எழுந்தது. அதே நேரத்தில் கண்டியரும் ஒருங்கு திரண்டு படையெடுத்தனர். இவ்வாண்டில் நாடாள்வானின் மகனை **இளேயோன் இறிக்குலோவு வான் கோயன்** (1675–1679) என்பான் பதவிக்கு வந்தான். 1677 இல் பற்றேவியாவில் இருந்த அதிகாரிகள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் இடச்சுக்காரர் கைக்கொண்ட மாவட்டங்களை இராசசிங்கனுக்குக் கொடுக்குமாறு பணித்தனர். ஆனல் அரசனே அப்பகுதிகளை இணைத்துக்கொள்ள ஒரு

முயற்சியும் எடுக்கவில்லை. **உலோரன்சு பில்** (1679-1692) என்பான் அரசாளுகையை மேற்கொள்ளும் வரை இடையீடிட்ட பகைவினைகள் அரசனுக்கும் இடச்சுக்காரருக்கும் இடையில் நடைபெற்றுவந்தன. உலோரன்சு பில் அரசவையினரிடமிருந்து நன்மதிப்பைப் பெற்றான். ஆயினும் துறைமுகங்களைத் தடைசெய்ததையிட்டு இராசசிங்கன் இன்னும் மிக்க கோபங் கொண்டிருந்தான். எனவே 1684 இல் எல்லோரும் வியப்புறும் வண்ணம் பொருது பெரியதொரு நிலப்பரப்பையும் அம்பாந்தோட்டையிலுள்ள விலைமதிப்புள்ள உப்புத் தளங்களையும் கைப்பற்றினன். ஆயினும் இவையாவும் அவனுக்குக் கொடுக்கப்படல் வேண்டுமென்று கட்டளை இடப்பட்ட மாவட்டங்களில் அடங்கியவையேயாம். நிலையான ஓர் அமைதியைப் பெறக் கும்பினர் எடுத்த முயற்சிகள் இன்னும் பயனற்றவையாகவே இருந்தன. இத்தருணத்தில் கிழவரசன் 1687, நவம்பர் 25 இல் இறந்தான்.

காலஞ்சென்ற திரு **தொனால் பேகுசன்** அவர்கள் இடச்சுக்காரரொடு இராசசிங்கன் தொடர்பு கொண்டிருந்த முடங்கல்களைப் பதிப்பித்துள்ளார். அவற்றாலும் **உரபெட்டு நொட்சு** என்னும் ஆங்கிலேயனால் எழுதப்பட்ட **கண்டி அரசின் வரலாற்றினாலும்** இராசசிங்கனைப்பற்றி நாம் நன்கு அறியக்கூடியதாய் இருக்கின்றது. இவ்வாங்கிலேயன் 1659 இலிருந்து 1679 வரை தன் தோழர்களுடன் நாட்டில் மறித்து வைக்கப்பட்டான். இராசசிங்கன் வன்மை மிகுந்த அரசனாய் விளங்கினான். தன் உடன்பிறந்தான் ஒருவனை நஞ்சூட்டிக் கொன்றும் மற்றையவனை நாட்டிலிருந்து வெளியோட்டியும் தன் தந்தையார் நாட்டினைப் பெரும் கேடான முறையில் பிரித்த தவற்றினை நீக்கி, தன் ஆட்சிப் பகுதிகள் யாவையும் ஒன்று சேர்த்தனன். கொடுங்கோலனாயும் எண்ணியவாங்கு நடப்பவனாயும், ஐயுறும் இயல்புடையவன் எனினும் தொலை நோக்கும் இயல்புடையவனாயும் அவன் இருந்தான். அவன் தன் அதிகாரிகளை அரசவையில் பிணைகளாய் வைத்திருந்தான். அரசியல் அலுவல்களில் தனக்கு நன்மை பயக்குமெனின் தன் குடிமக்களின் நிலங்களை அழித்து அவரை விரட்டி ஓட்டுவதில் அவன் இரக்கமற்றவனாய் இருந்தான். வஞ்சனையிலும் கபடத்திலும் அவன் தேர்ந்தவனாய் இருந்தான். ஆயினும் தந்திரத்தில் இடச்சுக்காரர் தனக்கு ஒப்பானவர் என்பதை அவன் கண்டான்; நிலையில் திரியும் இத்தகைய ஒரு கூட்டாளியுடன் வேறுவிதத்தில் நடந்துகொள்வது இயலாதென இடச்சுக்காரரும் கண்டனர். போத்துக்கேயருடன் இவன் நன்கு பழகி இருந்தான். இவனைப் பின்தொடர்ந்த அரசர்களோ தாமே உலகில் பேரரசர்கள் என்றும் தம் சிறிய அரசே உலகத்தின் மையமென்றும் எண்ணி இருந்தனர்; இவனோ அவர்களினும் பரந்த நோக்குடையவனாய் இருந்தான். அவனுக்குப் பல்வேறு நாட்டினத்தாரின் சட்டத்தைப் பற்றி ஓர் அறிவும் கிடையாது. எனவே அரசதூதர்களை மறியல் வைப்பதும் சிறையில் வைப்பதும் அவன் வழக்கமாய் இருந்தன. எவ்வாறு இடச்சுக்காரர் அனுப்பிய



சிங்கம் முதலிய வேறு விலங்குகளை வியப்பிற்குரிய பொருள்கள் என்று கருதினானோ அவ்வாறே தன் கையில் அகப்பட்ட நற்பேறற்ற ஐரோப்பியரையும் வியப்பிற்குரிய பொருள்கள் எனக்கருதினான். இத்தகைய மனப்பாங்கினாலேயே இவன் அரச தூதர்களையும் சிறையில் வைத்தனன். படைத் திறனில் சீதாவகை இராசசிங்கனுக்கு, இவன் ஈடுசொல்ல முடியாது. அவனையே இவன் பாவித்தொழுக விரும்பினான். இவன் படைஞர் குறும்போருக்கே சிறப்புடையோராய் இருந்தனர். வெளி அரங்கத்தில் போர் புரியவோ முற்றுகை இடவோ இவர்கள் தகுதியற்றவர்களாய் விளங்கினர். கொழும்பில் இப்படையினர் இருந்தது இடச்சுக்காரருக்கு இடரை அளித்தது. **மிளகாயைக் கொடுத்து இஞ்சியைக் கொண்டேன்** என்னும் சிங்களப் பழமொழி பயனில்லாத ஒரு பண்டமாற்றினைச் சுட்டுவதொன்றாகும். இராசசிங்கன் பற்றுறுதியுள்ள ஒல்லாந்தரைக் கொண்டு போத்துக்கேயரை அகற்றியதற்கு இப்பழமொழி ஓர் எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டது. இவ்வாறு முன்னிருந்ததிலும் வலிமை மிக்க பிறிதொரு வல்லரசை அவன் வரவழைத்ததினால் அவன் அரசாட்சி தனித்து ஒதுக்கப்பட்டது. இதனால் இவன் நாடு முற்போக்கான இயல்புகளினின்றும் விலகி நிற்கவேண்டி இருந்தது.

இராசசிங்கனின் மகன் **இரண்டாம் விமலதருமசூரியன்** (1687-1707) புதிய அரசனானான். இவன் நாட்டில் அமைதி வேண்டுமெனின் துறைமுகங்களில் சுதந்திரமும் 1665 இல் இடச்சுக்காரர் கைப்பற்றிய மாவட்டங்களை மீண்டும் கண்டியொடு இணைத்தலும் வேண்டுமென்று கூறினன். இப்பகுதிகள் 1688 இல் இடச்சுக்காரரால் கொடுக்கப்பட்டன. இதனால் கும்பின் (கம்பனியின்) எல்லைகள் மேன்மாகாணம், தென்மாகாணம் ஆகியவற்றிற்கு இப்பொழுது இருக்கும் உள்நாட்டு எல்லைகளாக இருந்தன. 'அரசனுக்காகக் கரையோரங்களைப் பாதுகாப்போர்' என்னும் இடச்சுக்காரரின் நிலை எக்கச் சக்கமாய் இருந்தது. ஏனெனில் 1658 இல் இராசசிங்கன் அத்தகைய ஒப்பந்தம் யாதாயினும் இருந்ததோ என்று மறுத்தான். இதனால் தாம் கொண்டிருந்த மாவட்டங்களிலுள்ள மக்களைக் கட்டி ஆள்வதில் இடச்சுக்காரர் அவலப்பட்டனர். இன்னும் அரசன் ஆள்புலத்திலேயே பெரும்பாலும் கறுவா சேர்க்கவேண்டியிருந்ததால் இவர்கள் என்றும் அரசனுக்குக் கடப்பாடுடையவர்களாய் இருந்தனர். இக்காலத்திலேயே தருமபாலனின் கொடையைப் பற்றி இடச்சுக்காரர் அறிந்தனர். எனவே உடன்படிக்கை, போர்ச்செலவுகளைக் கட்டி மீளும் ஈடு ஆகியவற்றால் உரிமை கொள்வதிலும், ஐரோப்பியரை வென்று அவர் தம் உரிமையைத் தாம் கொண்ட முறைமையால் கரை நாட்டு மாநிலங்களுக்குத் தம் உரிமையைக் காட்ட முடிவெய்தனர் கம்பனியினர்.

இடச்சுக்காரர் அரசவையோர்க்குத் தம் இணக்கக் கூறுகளைக் கூறினர். அவற்றுள் ஒன்று அரசனின் கடனை அறுத்து விடுவதற்கு, ஈடாக, தங்கள் பழைய ஆள்புலங்களும் துறைமுகங்களும் அவர்களுக்குக் கொடுக்கப் படல் வேண்டுமென்று கூறியது. ஆனால் அவர்கள் கூற்றுக்கள் ஏற்கப்பட வில்லை. இது இவ்வாறு நடந்தும் இரு கட்சியினர்க்கும் இடையில் இருந்த உறவு பில் அரசாட்சியின் எஞ்சிய காலத்திலும் **வான்றி** (1692–1697) என்பானின் அரசாட்சிக் காலத்திலும் ஓர் அளவிற்கு ஒற்றுமையாய் இருந்தது.


1701 இல் **கெறிற்று த ஈறே** (1697–1702) என்பான் அரசாட்சியில் கண்டியர் தம் எல்லைப்புறங்களை மறித்துவிட்டனர். தங்களுக்கென விடப்பட்ட புத்தளம், கொட்டியார் ஆகிய துறைமுகங்களுடன் வியாபாரம் நடத்து தலை ஊக்குவிப்பதற்காகவே இவர்கள் இவ்வாறு செய்தனர். இவர்களின் இவ்வேற்பாடு மிக்க பலனை அளித்தது. இதனால் புத்தளம் பாக்கு வியா பாரத்திற்கு முக்கிய இடமாக விளங்கியது. இதனால் குழும்பினர் பாக்கு வியாபாரத்தை இழக்கவேண்டி நேர்ந்தது. எல்லைகள் மீண்டும் 1703 இல் திறக்கப்பட்டன. வியாபார முறையினால் அரசன்மீது தம் ஆதிக்கத்தைக் காட்டுவதே குழும்பினரின் கொள்கையாகவிருந்தது. 1703 இல் சோழ மண்டலம், மலபார், மதுரைக்கடற்கரை ஆகியவற்றில் இருந்த குழும்பு அலுவலாளர்க்குக் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகியவை தவிர்ந்த மற்றை இடங்கட்குக் கடவுச்சீட்டுகள் அளிக்கக்கூடாதென ஆணை கொடுக்கப்பட்டது. 1707 நவம்பரில் உண்மையாகவே துறைமுகங்கள் மூடப்பட்டன. இந்த நடவடிக்கையினால் அரசவையோடு பகைமை ஏற்பட்டது. அரசவையும் உள்நாட்டுடன் இடச்சுக்காரர் கொண்ட வியாபாரத்தைத் தடைசெய்யும் வழியால் அடிக்கடி பழிவாங்கி வந்தது. யாழ்ப்பாணத்து வழக்கமான சட்டங்களைக் (தேசவழமையை) கோப்பதற்குப் பொறுப்பாய் இருந்தவன் ஆள்வான்[1] **சைமன்சு** (1702–1706) என்பானே ஆவன்.

இக்காலத்தில் பௌத்த குருமார்களின் நிலையில் அவசியமான சீர்திருத் தம் வேண்டியிருந்தது. கோயில் நிலங்கள் மரபுரிமை வழியாக வரத் தொடங்கின. பு.பி. 2240 (கி.பி. 1697/8) இல் குருமார்களைப் பெறுவதன் பொருட்டு அரசன் அரக்கனுக்கு ஒரு தூதினை அனுப்பினான். இவன் பற்சின்னத்தின் பொருட்டுக் கண்டியில் மூன்று மாடிக்கோயில் ஒன்றையும் நிறுவினான். இவன் 1707, யூன் 4 இல் இறந்தான். இவனைப் பின் தொடர்ந்து ஆண்டவன் **நரேந்திரசிங்கன்** (1707–1739). இவனே சிங்களக் குலமுறையில் வந்த இறுதியரசன். இவன் அரசாட்சிக் காலத்தில், 1731 இல், கண்டி மகாதேவாலயம் நிறுவப்பட்டது.

[1] Governor



ஆள்வான் **உறும்பு** (1716–1723) என்பானின் காலத்தில் கரைநாட்டில் இருந்த சோனகர் புத்தளத்துக்கு வடக்கே ஒரு துறைமுகத்தை நிறுவ முயன்றனர். ஆனால் இடச்சுக்காரர் கையில் இருந்த கல்பிற்றியா இவ் விடத்தில் இருந்து வெளிச்செல்வதைத் தடை செய்யக்கூடியதாய் இருந்தது. எனவே சோனகரின் திட்டம் சிதைவுற்றது. 1723 இல் கறுவா உரிப்போர் ஒருங்குதிரண்டு தங்கள் தலைமைக்காரர்க்கு எதிராகக் கிளர்ச்சி செய்து எழுந்தனர். ஆனால் இவர்களை அரசாங்கம் அடக்கிவிட்டது. தண்டனை யாக அவர்கள் இதுவரை பெற்றிருந்த பேறுகளை அவர்கள் இழக்கவேண்டி நேர்ந்தது. ஆள்வான் **வியுசு** (1726–1729) என்பான் தன் கொடுங் கோன்மைக்குப் பேர் பெற்றவனாய் இருந்தான். இவன் மக்களை வதை செய்தல், மனிதத்தன்மையற்ற முறையில் தண்டித்தல் ஆகிய நடவடிக்



உருவம் 28.—மாத்தறை, 1717.

கைகளை மேற்கொண்டு ஒழுகினான். இதனால் மக்களிடை பெரும் பயம் நிலவியது. இச்செய்தி பற்றேவியாவுக்கு எட்டியது. இவன் சிறையாக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுத் தலைவெட்டப்பட்டான். மக்கள் துயரினை ஆய்வதன் பொருட்டு "பிற்றறு" என்பான் அனுப்பப்பட்டான். இவன் ஆட்சியில் (1732–1734) கலகம் ஒன்று நேர்ந்தது. **வான் தொம்பேக்கு** (1734–1736) என்பான் ஆட்சியில் பல மாவட்டங்களின் மக்களும் கறுவா உரிப்போரும் வெளிப்படையாகவே கலகம் செய்தனர்.

மக்களின் குற்றச்சாட்டுக்களோ பொதுவாகப் பல. தம் மக்களைப் பள்ளிக் கனுப்பாத பெற்றோர்க்குத் தண்டம் அளிக்கப்பட்டது. பருவகாலங்களிற் காடழித்து விதைவிதைத்த சேனைகளின் பயிர்ச் செய்கையினைத் தலைமைக் காரர் ஒழுங்கற்ற முறையில் தம் தனியுரிமையாக்கினர். இன்னும் கறுவாச்

செய்கையின் பொருட்டு இப்பயிர்ச் செய்கை தடைசெய்யவும் பட்டது. இணக்கம் பெற்றுப் பயிர் செய்யப்பட்ட தோட்டங்களில் குழும்பினர்க்குப் பங்கொன்று இருந்தது. இப்பங்கு மதிக்கப்பட்ட ஒரு விலைக்குப் பயிர் செய்வோனுக்கு விற்கப்படும். பங்கு முன்னர் மூன்றில் ஒன்றாக இருந்தது. இப்பொழுது அரைப்பங்காக உயர்த்தப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக சில தோட்டங்களில் விதிக்கப்படும் ஒரு வரியான "வடுபத்தை" என்பதற்கு எதிர்ப்புக் கூறப்பட்டது. கறுவாப்பட்டை உரிப்போர் தலைமைக்காரரால் தாங்கள் துன்பப்படுத்தப்படுகின்றார்கள் எனவும் வரியோ கொடுக்க முடியாத சுமை எனவும் முறையிட்டனர். வடுபத்தை என்ற வரியும் கறுவா உரிப்போர் மேல் விதித்த மேலதிகமான வரிகளும் நீக்கப்பட்டன; திசாவைக்கு நேரே விண்ணப்பம் செய்து உத்தரவுச் சீட்டுப் பெற்றுச் சேனைகளைத் துப்பரவாக்குதற்கு அனுமதியும் கொடுக்கப்பட்டது. ஆனால் இவ்வுத்தரவுகள் காலம் தாழ்த்திவந்தன. கலகமோ அதற்கு முன்னரே எழுந்தது. இதைக் கண்டி அரசவை ஊக்கிநின்றது. இறுதியில் கண்டியர் நேராகவே இக்கலகத்தில் சேர்ந்தனர். சேர்ந்து சியனே, ஆப்பிற்றிகம், அளுற்குரு கோரளைகளைப் பிடித்தனர். இறுதியில் 1736 இல் முறைமையான போர் தொடரப்பட்டது. **வான் இமோவு** (1736-1739) என்பான் ஆள்வானாக வரவும் அரசவையோர் மிக்க பலமான ஒருவனுடன் தாம் காரியம் நடாத்த வேண்டி இருக்கின்றது என்பதை அறிந்தனர். எனவே நாட்டில் கலகங்கள் குறைந்து அமைதி ஏற்பட்டது. எனினும் நாட்டில் தொல்லைகள் நிலைத்து நின்றன. 1737 முடியும்வரை உள்நாட்டில் அமைதி நிலவவே இல்லை. 1707 இல் துறைமுகங்களை மூடியமையாலேயே அமைதியின்மை நிலவியதென்று புதிய ஆள்வான் கண்டான். எனவே அவன் அரசனுடன் நல்லுறவை நிலைநாட்ட முயன்றனன்.

1739, மே 13 இல் அரசன் இறந்தான். இவனைப் பின்தொடர்ந்து அரசாண்டவன் அரசியின் சகோதரனாவன். இவன் மதுரை நாயக்கர் குலமுறையில் உள்ளவன். இவன் **சிறீ விசய இராசசிங்கன்** (1739—1747) என்ற பெயரில் அரசுகட்டில் ஏறினான். அரசவையின் பகைமை, சிறப்பாகத் திராவிடக் கூற்றின் பகைமை, தொடர்ந்து இருந்தது. 1740 இல் அரசன் வேண்டுகோளின்படி சீயம், பெகு, தென்னசரிம் ஆகிய பல இடங்களுக்குத் தூதரை அனுப்பி, பழம் மரபுப் பௌத்த குருமாரைப் பெறுவதற்கு ஒரு கப்பல் அளிக்கப்பட்டது. எனினும் அரசவையின் பலத்த தடைகளினால் அவ்வாண்டில் தாய்நாட்டிற்குக் கறுவா ஏற்றுமதி செய்ய முடியவில்லை. ஒருவேளை இந்நடவடிக்கை அரசதூதுக் குழுவின் கப்பல் கடலில் அமிழ்ந்ததால் ஏற்பட்டதாய் இருக்கலாம். அடுத்த ஆண்டில் இடச்சு ஆள்புலத்தில் பலதாக்குதல்கள் நடைபெற்றன. இத்தாக்குதல்களினால், கண்டியர், ஒரு பாடசாலையையும் ஒரு கிறித்துவக் கோயிலையும் கட்டுவதைத் தடைசெய்யும் அளவிற்கு நடவடிக்கை எடுத்தனர். இந்நடவடிக்கை புதுக் குல முறையினர் கையாண்ட, கிறித்துவத்திற் கெதிரான குரோதங்களுக்கு



முதல் அறிகுறியாய் இருந்தது. இவ்வாறாகக் கிறித்துவ சமயத்துக்கு மாறான உணர்ச்சிகள், கண்டியர் நாட்டிலே வெளிப்படையாகக் கிறித்துவரைத் துன்புறுத்தும் அளவிற்கு வளர்ந்தன. இத்தகைய எல்லாச் சினமூட்டும் செயல்களுக்கும் குழும்பினர் பணிவாக ஒதுங்கி இருந்தனர். அரசவையோடு எவ்வித பகையும் இன்றி இருத்தல் வேண்டுமென பற்றேவியாவில் இருந்து வந்த உறுதியான கட்டளைகளுக்கு இணங்கியே அவர் அப்படி இருந்தனர். ஆனால் எவ்வளவுக்கெவ்வளவு இடச்சுக்காரர் பொறுமையாய் இருந்தனரோ அவ்வளவுக்கவ்வளவு கண்டியர் பொல்லாத்தனம் காட்டினர். 1741 இல் இறுதியில் சீயத்திற்குப் புதிய ஓர் அரசதூது அனுப்பப்பட்டது. 1742 இல் அரக்கனுக்கும் சீயத்திற்கும், குழும்பினரே தம் அலுவலாளரைக் கொண்டு தம் முடங்கல்களை அனுப்பி, விடைகளையும் பெற்றுக்கொண்டு வரவேண்டுமென அரசன் கேட்டுக்கொண்டான். குழும்பினர் ஓர் அளவிற்கு இவ்வேண்டுகோளை நிறைவேற்றினர். எனினும் 1743 இல் கண்டி அரசு சியனக் கோரளையில் ஒன்பது கிராமங்களைக் கைப்பற்றிப் புதியதொரு அடாச் செயலைச் செய்தது. இடச்சுக்காரரின் எதிர்ப்புரைகள் சிறிது பலன் அளித்தன. ஆனால் 1745 இல் கண்டியர் மீண்டும் இடச்சு ஆள்புலங்கள் மீது படை எடுத்துச் சென்றனர். சென்றவர் பெகுவிற்குத் தூதுக்குழு ஒன்றினை அனுப்புவதற்குக் கப்பல் ஒன்றைக் கேட்கும் அளவு துணிந்தனர். இறுதியில் இடைச்சுக்காரர் இனிமேலும் விட்டுக்கொடுக்கக் கூடாதென்று முடிவுசெய்து கண்டியர் வேண்டுகோளை மறுத்தனர். இதனால் மீண்டும் படையெடுப்பு நிகழ்ந்தது. இறுதியில் கண்டி அரசு சியனக் கோரளையில் இன்னும் ஏழு கிராமங்களுக்கு உரிமை கொண்டது. இவ்வுத்திகள் பயனளிக்காமல் போகவே, கண்டியர் கொள்ளையடித்தலைக் குறைத்து, கப்பலொன்றை அளிக்குமாறு மீண்டும் ஒரு முறை வேண்டினர். இவ்வேண்டுகோளுக்கு ஆள்வான் **வான் கொலனெசி** (1743—1751) என்பான் இசைந்தனன். இவனே **உவூல்பென்தால்** கோயிலைக் கட்டினவன். அரச தூதுக்குழு 1747 இல் சீயத்திற்குச் சென்றது. இவர்கள் குருமார்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இவர்கள் அந்நாட்டை விட்டு இலங்கைக்குப் புறப்படும்பொழுது ஓகசு 11 இல் அரசன் இறந்தான் என்னும் செய்தி அவர்கட்கு எட்டியது (ஓகசு 11 என்பது புதிய முறையில் அமைந்ததாகும்).

இவ்வரசனைப் பின் தொடர்ந்து அரசாண்டவன் **கீர்த்தி சிறீ** (1747-1782) என்பான் ஆவன். இவன் அரசனின் மைத்துனன். இவன் பௌத்த சமயத்தில் ஆர்வம் கொண்டவனாய் விளங்கினான். 1750 இல் தன் முன்னோனின் செயலைத் தான் ஏற்றுக்கொண்டதைக் குறிப்பதற்காகச் சீயத்திற்கு ஒரு குறிப்பு அனுப்பினன். குருமார் இலங்கைக்கு 1753 இல் வந்து சேர்ந்தனர். இவர்கள் இன்றும் அழியாத ஒரு மரபு முறையை இங்கு நிலைநாட்டினர். இவ்வாறு நிலை நாட்டப்பெற்ற சீயம் பகுதியினர் பழைய கோயில்களிற் பெரும்பாலனவற்றிற்கும் அவற்றின் உடைமை

களுக்கும் தலைமை பூண்டவராய் விளங்குகின்றனர். நரேந்திரசிங்கனுக்குப்பின் பௌத்த சமய மறுமலர்ச்சியில் உயர்ந்த பங்கெடுத்து உழைத்த **வெலிவித சரணங்கார** என்பார், இக்குருமார் குழுவிற்குத் தலைவர் (சங்கராச) ஆக்கப்பட்டார். இவர் 1778 இல் இறந்தார். இப்பௌத்த மறுமலர்ச்சி ஒரு பால் இன்னாசெய்தலோடு இணைந்திருந்தது. இடச்சுக்காரரால் துன்புறுத்தித் தடைவிதிக்கப்பட்ட கத்தோலிக்கர் கண்டி நாட்டில் ஒரு புகலிடம் கண்டனர். இங்கு சிங்களமன்னர் இவர்களைப் பாதுகாக்காவிட்டாலும் இவர்கட்கு இணக்கம் காட்டி வாழ விட்டனர். கிறித்துவ சமயமும் வணக்கத்துக்குரிய **பிதா யோசே வாசு** என்னும் பெரியார் ஒருவரின் உழைப்பினால் புத்துணர்ச்சி பெற்று வளர்ந்தோங்கியது. இவர் கோவாவிற்கண்மையில் இருந்து வந்த ஒரு பிராமணர். இவர் இலங்கைக்கு 1687 இல் வந்து, 1711 இல் இறக்கும்வரை ஓயாது உழைத்தார். ஆனால் மதுரைக் குலமுறையில் இருந்து வந்த மன்னர்கள் புதிய ஓர் ஆர்வினால் உந்தப்பட்டு நின்றனர். 1743 இல் சிறீ விசய இராசசிங்கன் கிறித்துவ ஆலயங்களை அழித்துத் துன்புறுத்தும் முறை ஒன்றைத் தொடக்கிவைத்தனன். இதைக் கீர்த்தி சிறீ தொடர்ந்து ஆற்றிவந்தனன். நாட்டிற்கு நேர்ந்த சில கேடுகள், தான் துன்புறுத்தல் முறையைக் கொண்டமையால் நேர்ந்தவையே என அவன் கருதியதாலே, இத்துன்புறுத்தல் ஒருவாறு ஓய்ந்தது. கீர்த்தி சிறீ பற்சின்னக் கோயிலுக்குள் இப்போதிருக்கும் உட்கோயிலைக் கட்டுவித்தனன். **மகாவமிசத்தில்** நான்காம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இருந்து தன் ஆட்சிக்காலம்வரை உள்ள வரலாற்றினையும் எழுதுவித்தனன்.

கண்டி அரசு இன்னும் தொல்லை தருவதொன்றாகவே விளங்கியது ; 1753 இல் யானை வியாபாரத்தில் தானும் பங்குபற்ற வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை அது விடுத்தது. இக்கோரிக்கையை அவர்கள் பன்முறை விடுத்தும் இடச்சுக்காரர் அதற்கிணங்கவில்லை. குழும்பினர் தாம் துய்த்து வந்த பழைய பேறுகள் நிலையாய் இருத்தல் வேண்டுமென்று சொல்லி அரசன் வேண்டுகோளை ஏற்க மறுத்தனர்.

1760 இல் மிக்க வன்மைபொருந்தியதும் ஆற்றொணாத்தன்மை உடையதுமான கிளர்ச்சி ஒன்று குழும்பினரின் மாநிலங்கள் முழுவதிலும் பொங்கி எழுந்தது, முன்னிருந்தவாறே கிளர்ச்சியின் காரணங்கள் பயிர்ச்செய்கையோடு சார்ந்தவையாய் இருந்தன. அன்றியும் மக்களின் மனக்கொதிப்பைக் கண்டி அரசவையும் தூண்டிவிட்டது. நெல்வயல்களில் இருந்து அரசாங்கத்துக்குரிய இறைகளைச் சேர்ப்பதில் குத்தகைக்காரர் கடைப்பிடித்த முறைகளைக் கண்டு மக்கள் மனம் நொந்தனர். ஆனால் கலகத்துக்கு முக்கியமான காரணமாய் அமைந்தது கறுவா வளர்க்கும் பகுதிகளில் பயிர் வளர்த்த நிலங்களைக் குழும்பிற்கென ஆள்வான் **சுறூடர்** (1757-1762) பற்றிக்கொண்ட கொள்கையே ஆகும். சில ஆண்டுகளாக நாடுகளை அழித்துத் தென்னந் தோட்டங்களை அமைத்தல் எங்கும் பெருவழக்காய் இருந்தது.




இச்செய்கை அரசாங்கத்துக்குள்ள தனி உரிமையை அழிக்கவே அரசாங்கம் 1758 இல் ஆட்சிக்காரரின் உடைமைகளைப் பற்றிக்கொள்ள முயன்றது. இப்பொழுது, தேவைப்பட்ட காணிகளை, ஆள்வானின் கொடைகளினால் ஆட்சி கொண்டிருந்தவர்க்கும், குழும்பினரின் இசைவின்றிப் பயிர் செய்த காணிகட்கு ஈடு செய்தோர்க்கும், வேறிடங்களில் காணி கொடுத்து ஈடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் இசைவு பெற்றோ, பெறாமலோ பயிர் வைத்த நிலங்களுக்கு ஈடாகப் பணம் கொடாதவர்க்கு ஒன்றுங் கொடுக்கப்பட மாட்டாது என்றும் முடிவு செய்யப்பட்டது. இக்கைப்பற்றுதலை உடனே செய்யக்கூடாது என்றும் முடிவாக்கப்பட்டது. புதிதாகக் கொடுத்த நிலங்களில் வைத்த பயிர்கள் நாலு ஆண்டுகள் கழித்துப் பலன் அளிக்கக்கூடிய தறுவாயில், பயிர் செய்தோர் பழைய காணிகளிலேயே பயிர் செய்தல் வேண்டும், வேண்டிய மரங்களை அங்கு வெட்டிக்கொள்ளலாம் என்றும் முடிவாக்கப்பட்டது. வழக்கம்போலவே கறுவா உரிப்போர் தொல்லை கொடுப்பதற்கு இதைப் பயன்படுத்தினர். அரசனைக் கொல்வதற்கு நடந்த ஒரு சூழ்ச்சியினால் இடச்சுக்காரருக்கு ஒரு சிறு கால அமைதி ஏற்பட்டது. இச்சூழ்ச்சி பயனளிக்கவில்லை. 1761 இல் கண்டியர் கீழ் நாடு மீது படை எடுத்துப் பெரிதும் இடர் இன்றி மாத்துறை, அன்வெலை, கோட்டைகளைக் கைப்பற்றினர். அத்துடன் அப்பொழுதே எல்லைப் புறத்தில் இருந்த மாவட்டங்களையும் கைக்கொண்டனர். இடச்சுக்காரர் பழிக்குப்பழி வாங்குவதற்காகக் கண்டியர் ஆள்புலத்துள் புகுந்தனர். ஆனால் இவர்களைக் கண்டியர் பின்வாங்கச் செய்தனர். எனினும் அரசன் துணையொன்று வேண்டும் என்பதை உணர்ந்தான். எனவே சென்னையில் உள்ள ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியினருடன் பேச்சுக்கள் நடத்தினான். இதனால் 1762 இல் **பிபிசு** என்பான் இலங்கைக்குத் தூது வந்தனன். இத்தூதினால் பலன் ஒன்றும் பிறக்கவில்லை. இவ்வாண்டில் **வான் எக்கு** (1762–1765) என்பான் ஆள்வானாக வந்தான். இவன் இடச்சுக்காரருக்குப் புதியதோர் உற்சாகத்தை அளித்தனன். இவனாலேயே மாத்துறையில் உள்ள **வெள்ளிக் கோட்டை** (Star Fort) கட்டப்பட்டது. சிலாபமும், புத்தளமும் பிடிக்கப்பட்டன. 1763 இல் உள்நாட்டுக்குப் படை ஒன்று அனுப்பப்பட்டது. எனினும் கண்டியரின் குறும்போர் முறையினால் படையெடுப்பு பயன் அளித்திலது. ஆனால் 1765 இன் முற்பகுதியில் அரசன் நாடுமீது புதியதொரு படையெடுப்பு நிகழ்ந்தது. ஒரு படைக்கு வான் எக்கு தலைமை பூண்டு கொழும்பிலிருந்து எழு கோரளைகள், கலகெதரக்கணவாய் ஆகியவற்றிற்கூடாகச் சென்றான். ஒரு படை புத்தளத்தில் இருந்து தாவடி போயது. பெப்பிரவரி 16 இல் கட்டுகாத்தோட்டையை இவர்கள் அடைந்தனர். அரசன் இப்பொழுது தாராளமான ஈவுகள் அளிக்க முன் வந்தனன். அவன் கம்பனியினருக்குச் சபரகமுவா, மூன்று கோரளைகள், நான்கு கோரளைகள், எழு கோரளைகள் ஆகியவற்றோடு தீவின் முழுக் கரைநாட்டின் இறைமையையும் அளிக்க முன் வந்தனன். ஆனால் கம்பனிக்கு அடிபணிந்த ஓர் அரசனாக முடியை

ஏற்றுக்கொள்ளும் வண்ணம், அரசனைக் கேட்குமாறு, வான் எக்கு அப்போ திருந்த நிலைமையில் தூண்டப்பட்டனன் எனப் பின்னர் இடச்சு ஆள்வானுக வந்த **வான் அங்கிள் பீக்கால்** அறியக்கிடக்கின்றது. இதற்குக் கீர்த்தி சிறீ மறுத்தனன். மறுத்து அவன் தலைநகரைக் கைவிட்டு அகன்றனன். இடச்சுக்காரர் இதைப் பெப்பிரவரி 19 இல் கைக்கொண்டனர். இவர்கள் ஆற்றல் அங்குராங்கேதா, குண்டசாலை ஆகியவற்றைத் தாக்கியதிலும் குறும்போரிலும் வீணே கழிந்தது. மாச்சு 4 இல் வான் எக்கு கண்டியை விட்டு நீங்கிக் கொழும்பு சென்றனன். சேர்ந்து ஆறு நாட்களின் பின் ஏப்பிரில் முதலாம் நாள் அவன் இறந்தனன். கண்டியில் விடப்பட்ட தானையத்திற்குப் போதிய பொருள்கள் கொடுக்கப்படவில்லை. படைவீரரிடை நோய் குடிகொண்டது. கோபம் மிகக்கொண்டிருந்த கண்டியர் இவர்களை முற்றுகை இட்டனர். எனினும் இத்தானையோர் அழிவொன்றுமின்றி அங் கிருந்து தப்பி வெளியேறினர். ஓகசு திங்களில் வான் எக்கினைப் பின் தொடர்ந்து **பல்கு** என்பான் ஆள்வானுக வந்தான். இவன் அரசவை யோருடன் இணக்கம் பேசத் தொடங்கினன். தம் வயலில் விதை விதைக்க முடியாமலிருந்த கண்டியரோ பட்டினி கிடக்க வேண்டிய நிலை எய்தினர். இந்நிலையில் புதிய ஆள்வான் மூன்று, நாலு, ஏழு கோரளைகளைக் கொள்ளை அடித்தும் விந்தனை, மாத்தளை ஆகிய இடங்கள்மீது படை எடுத்துச் சென்றும் கண்டியரை இன்னும் உறுத்தினன். சிறியதொரு தந்திரத்தால் பல்கு ஓரளவு வெற்றிபெற்றான். இறுதியில் 1766, பெப்பிர வரி 14 இல் ஏற்பட்ட உடன்படிக்கையினுல் அமைதி தோன்றியது. இவ்வுடன்படிக்கையினுக்குக் குழும்பினர் அப்பொழுது கொண்டிருந்த ஆள்புலங்கள் மீது அன்றியும் கரைநாடகத்துள்ள மாவட்டங்கள்மீதும் கம்பனியினருக்கு முழு இறைமை அளிக்கப்பட்டது. இப்பொழுது கண்டியர் வெளி உலகினின்றும் அறவே பிரிக்கப்பட்டு நின்றனர். 1772 இல் மன்னன், முத்துக்குளிப்பில் ஒரு பங்கு தருமாறு பல கோரிக்கைகள் விடுத்தனன். இன்னும் 1776 இல் கரையின் ஒரு பகுதியைத் தனக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்றும் பிறிதொரு கோரிக்கை விடுத்தனன்.

பெரிய பிரித்தனுக்கும் கலகம் செய்த அமெரிக்கக் குடியேற்ற நாடு களுக்கும் இடையே நடந்த போரில் ஒல்லாந்தும் ஈடுபடவேண்டி நேர்ந்தது. இதனுல் 1781 இல் நாகபட்டணம் வீழ்ச்சியுறவேண்டி நேர்ந்தது. இக்காலத்திலேயே தூத்துக்குடியில் இருந்த கம்பனியாரின் அக்கசாலை கொழும்பிற்கு மாற்றப்பட்டது. 1782 சனவரி திங்கள் முற்பகுதியில் பிரித் தானிய அடுமிறல் ஆன **சேர் எட்டுவேட்டு இயூசு** என்பான் திருக்குணமலையைக் கைப்பற்றினன். **பொயிட்டு** என்பான் கண்டிக்கு அரசதூதனுக வந்தான். ஆனல் சனவரி இரண்டாம் நாள் கீர்த்தி சிறீ இறந்தான். இரண்டு மாதத்துக்கு முன், இவன் தன் குதிரை யில் இருந்து விழுந்த காயங்களினுல் இறக்கவேண்டி நேர்ந்தது. அரசனின் உடன்பிறந்தானுன **இராசாதி இராசசிங்கன்** (1782–1798) என் பான் அத்தூதன் மூன்றும் சோச்சு மன்னனிடமிருந்து ஆணை பெற்று வர






உருவம் 29.—கண்டித் தூதுக்குழுவினை ஆள்வான் பல்கு வரவேற்றல், 1772.

வில்லையென்று கூறி அவனோடு தொடர்பு கொள்ள மறுத்தனன். அடுமிறல் இயூசு திருக்குணமலையில் ஒரு தானையத்தை நிறுவியிருந்தான். இவன் பெப்பிரவரி 17 இல் கடலில் **சபிரன்** தலைமையில் அமைந்த பிரெஞ்சுக்காரருடன் போர்புரிந்தான். இதில் ஒரு முடிவும் ஏற்படவில்லை. மீண்டும் ஏப்பிரில் 12 இல் திருக்குணமலையை அடுத்துப் போர் புரிந்தான். மீண்டும் யூலை 4 இல் ஒரு போர் நடந்தது. இதன் பின்னர் இரு கடற்படையினரும் தம் கலங்களைப் புதுப்பித்தனர். ஒகசு 25 இல் சபிரன் திருக்குணமலையில் மீண்டும் தோன்றினன். சிறிது நேரத்துள் கோட்டை சரணடைந்தது. இதன்பின் சில நாட்களில் இயூசு அங்குவந்து சேர்ந்தான். 1784 இல் நிறைவேறிய பரிசு அமைதியின் பின் பிரஞ்சுக் காரர் திருக்குணமலையைக் கம்பனிக்குக் கொடுத்தனர்.

1785, பெப்பிரவரி 5 இல் பல்கு இறந்துவிட **வான் த கிராவு** ஆள்வானானான். கண்டியோடு புதிய ஆள்வான் கொண்டிருந்த தொடர்பு நல்வகையில் இருக்கவில்லை. 1791 இல் எல்லை மாவட்டங்களில் இருந்த நாட்டுக் கூலிப்பட்டாளங்களைச் சேர்ப்பதற்கு அரசன் தன் திசாவைகளை அனுப்பினான். எனவே இடச்சுக்காரர் தம் எல்லைப்புறத்துத் தானையங்களை அரண்படுத்தினர். வழக்கத்துக்கு மாறான நடமாட்டங்கள்பற்றி அவர்கள் வினவியபொழுது அரசன் அதற்குப் பதிலாகக் கரைநாடகத்தைத் தனக்குத் திருப்பித் தருமாறு கேட்டனன். இதற்கு இடச்சுக்காரர் இணங்கவில்லை. அவன் படையை மீட்டுக் கொள்ளுமாறு இடச்சுக்காரர் அரசனைக் கேட்டுக் கொண்டனர். இது நடந்தபின் இடச்சுக்காரர் தங்கள் படைகளை மீட்டுக் கொண்டனர். இதற்குச் சில காலத்தின்பின், அதிகார் பிலமத்தலாவை கொடுத்த ஓர் உளவினால், இடச்சுக்காரருக்கு எதிராகப் பிரஞ்சுக்காரரின் உதவி வேண்டி அரசன் எழுதிய ஓர் கடிதத்தை அரசாங்கத்தார் இடைமறித்து எடுத்துக்கொண்டனர். இப்பிலமத்தலாவையே பிற்காலத்தில் பிரிட்டிசாருடன் நன்கு பயின்றவன். 1766 இல் செய்த உடன்படிக்கைக்கு மாறாக, கண்டி நாட்டில் கறுவா உரிப்பதற்கு உத்தரவு எடுப்பதற்கு விண்ணப்பிக்குமாறு கம்பனியை அரசவையார் கேட்டுக்கொண்டனர். இக்கேள்விக்கு இடச்சுக்காரர் மறுக்கவே திசாவைகள் தங்கள் கூலிப் பட்டாளங்களின் தலைமையைத் தாமே மேற்கொண்டனர். இக்காலத்தில் கம்பனியின் பட்டாளங்கள் சீதாவகையில் பாடிகொண்டிருந்தன. மே திங்களில் கறுவா சேர்ப்பதைக் கட்டாயப்படுத்துவதற்கு ஆள்வான் அங்கு சென்றனன். இந்நடவடிக்கை வெற்றியளித்தது. சபரகமுவா ஒன்றிலேயே கறுவா உரிப்போர்க்குத் துணையாக ஒரு பட்டாளம் அனுப்பவேண்டி நேர்ந்தது. பிரான்சின் தோல்வியினாலும் உப்பு அருமையாய்ப்போனதினாலும் அரசன் எல்லைப்புற வழிகளை மீண்டும் திறந்தனன். 1792 இல் அச்சுறுத்தும் இரு முடங்கல்களை இவன் அனுப்பினதினால் பகைவினைகள் தொடங்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கையை இடச்சுக்காரர் இழக்கும்வரை அமைதி நீடித்தது.



எப்பொழுதும் கம்பனியினர் பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளித்து வந்தனர். **1720** இல் கோப்பிச் செய்கையினும் **1753** இல் மிளகுச் செய்கையினும் இவர்கள் அக்கறை செலுத்தினர். கறுவா எங்கும் காடுபோல் வளர்ந்தது. இடச்சுக்காரர் கறுவாவின் பெரும் பகுதியை மன்னன் நாட்டிலிருந்து பெற வேண்டி இருந்தது. 1766 இல் செய்துகொண்ட உடன்படிக்கை ஏற்படும் வரை கறுவா சேர்ப்பதற்குரிய இணக்கத்தை ஆண்டுதோறும் ஒரு தூது அனுப்பி இவர்கள் பெற்றுவந்தனர். இவ்விணக்கத்தைப் பெறுவதற்கு மிகவும் இழிவான சடங்குமுறை ஒன்றும் நடந்தேற வேண்டி இருந்தது. கறுவா உரிப்போர் கண்டியரோடு தொடர்பு கொள்ளும் காலம் எல்லாம் தொல்லைகள் ஏற்பட்டே வந்தன. ஆனால் 1769 இலேயே கறுவாவை மருதானையிற் பயிர் செய்வதற்குப் பல்கு முயன்றான். இச்செய்கை வெற்றி பெற்றது. ஆயினும் அரசனிடம் இருந்து பெற்றுக்கொள்ளாமலே கம்பனி தன் தேவையை நிரப்புவதற்கு 1793 வரை முயற்சி எடுக்கவில்லை. நெற்பயிர்ச் செய்கையையும் அரசாங்கத்தார் கவனியாதிருக்கவில்லை. 1767 இல் கொழும்பின் வடக்கிலிருந்த பழைய முத்துராசவெல வயல்களைப் புதுப்பிக்க அரசினர் முயன்றனர். இவ்வயல்கள் கால்வாய் ஒன்றினாற் கொண்டு வரப்பட்ட உப்புத் தண்ணீராற் பழுதாயின. இக்கால்வாயை நீர்கொழும்பிற்கும் கோட்டைக்கும் இடையில் ஒரு சிங்கள மன்னன் கட்டினான் என த குயிரோசு கூறுகின்றான். இதைக்கட்டிய மன்னன் VIII **ஆம் பராக்கிரமபாகுவாய்** இருக்கலாம். இடச்சுக்காரரோ இதைக் கட்டியவர் போத்துக்கேயர் என்றும் நீர்கொழும்புக் கடனீரேரியிலிருந்து ஒரு சிறு தூரத்துக்கே இது வெட்டப்பட்டதென்றும் கூறுகின்றனர். இடச்சுக்காரரும் நெதலந்தில் தாம் கொண்டிருந்த பழக்கவழக்கங்களை இங்கும் புகுத்தினர். நீர்கொழும்புக்கும் களுத்துறைக்கும் இடையமைந்த நாட்டின் குறுக்கும் மறுக்குஞ் செல்லும் அளவற்ற கால்வாய்களும், கோட்டைகளும், உரோமன் இடச்சுச் சட்டமுமே இலங்கையில் இவர்களின் ஆட்சிக்குரிய தலையாய சின்னங்களாகும். 1789 இல் நடந்த குடிமதிப் பொன்றினால் கம்பனியின் ஆள்புலத்தில் இருந்த மக்களின் தொகை 817,000 என அறியக்கிடக்கின்றது. ஆயினும் கம்பனியின் வளம் குன்றியே வந்தது. ஐரோப்பியப் போர்கட்குப் பெரும் படை நிலையங்களும் பெருஞ் செலவில் அமைத்த **வட்டம்பேக்கு, இலச்சம்பேக்கு, த மீயூறன்** போன்ற பல்லிடத்துக் கூலிப்பட்டாளங்களும் இன்றியமையாதனவாய் இருந்தன. இன்னும் குழும்பின் நிதி நிலையுமோ மிக்க இக்கட்டான நிலையில் இருந்தது. நாட்டு நாணயம் செப்பு நாணயத்தளவிலேயே தங்கி இருந்தது. பொன்னும் வெள்ளியும் இல்லாதிருந்த



உருவம் 30.—இடச்சுச் சுதாய்வர், 1783.

தால் இந்நாணயம் நியம நாணயமாகியது. அமெரிக்கப் போரின்பின் தாட்பண வழக்கமும் பழக்கத்துக்கு வந்தது. இன்னும் கம்பனியின் பணியாளரும் சோர்வுற்றவராயினர்; பதினேழாம் நூற்றாண்டில் இருந்த தம் முன்னோர் காட்டிய ஆற்றலை இவர் கொண்டிருக்கவில்லை.

1794, சனவரி 10 இல் வான் அங்கிள் பீக்கிளைப் பின்தொடர்ந்து **வான் த கிராபு** பதவி ஏற்றான். அவ்வாண்டு திசெம்பரில் பிரெஞ்சுப் புரட்சிக்காரர் நெதலந்துள் புகுந்து பற்றேவியக் குடியரசை நிறுவினர். மரபு வழி அரசாண்டு வந்த **இசுற்றுற்றுகோலர்** (Stadtholder) இங்கிலாந்துக்கு ஓடிச் சென்று **கியூவில்** புகலிடம் கொண்டார்.

## இடச்சுக் கம்பனி (குழும்பு)

ஐக்கிய கீழ் இந்தியக் கம்பனி 1602 இல் இணைக்கப்பட்டது. ஒரு காலத்தில் இந்நிறுவனத்தைக் கண்டு பல நாட்டவரும் வியந்தனர். அதை ஒரு படிவமாக அவர் போற்றினர். கம்பனியின் பங்குக்காரர் அமித்தடாம், சீலந்து, தெல்பு, உரோட்டடாம், ஊன், எங்குயிசன் ஆகியவற்றில் சபைகள் (மன்றங்கள் எனவும்படும்) அமைத்து கம்பனியின் “பதினெழுவர்” எனப்படும் இயக்குநர்களை நியமித்தனர். இவர்கள் முறையே அரசு நாயகத்தின்பொருட்டு நாடாள்வார் நாயகத்தையும் இந்தியக் கழகத்தினரையும் நியமனஞ் செய்வர். இன்னும் கீழை நாட்டில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட கம்பனிப் பணியாளர் நியமனங்களையும் இவர் உறுதியாக்கினர். 1748 இலிருந்து பற்றேவியக் குடியரசு நிறுவும்வரை இசுற்றுற்றுகோலர், இவர் தலைமை இயக்குநராகவும் இந்தியாவின் நாடாள்வார் தலைமை நாயகமாகவும் இருந்தார். இவ்வியல்பிலே இவர் பதினெழுவர் கூட்டங்கட்குத் தலைமை வகித்தார்.

கீழை நாட்டுக் கம்பனியினரின் ஆலைகள் உடைமைகள் ஆகியவற்றைப் பாலிக்கும் பொறுப்பு நாடாள்வார் நாயகத்திலும் அவர் கழகத்திலும் தங்கி இருந்தது. பணிச்சேவை அரசியல், படையியல், கடற்படை ஆகிய கிளைகளாக வகுக்கப்பட்டிருந்தது. அரசியற் கிளையை நாம் குடிச்சேவை என்று சொல்லலாம். ஆனால் இக்கிளையில் உள்ள வெவ்வேறு படிகளாவன “ ஒப்பகூப்மன் ” (மூத்த வணிகன்), “ கூப்மன் ” (வணிகன்), “ ஒண்டகூப்மன் ” (இளையவணிகன்), “ புக் ஊடர் ” (ஏடு வைத்திருப்போன்), உதவி “புக் ஊடர்”, இளைய “உதவிபுக் ஊடர்”, “த பென்” எழுதுநர் கொண்டிருந்த “ஆன்குவிக்கெலின்” அல்லது “சொல்டாற்” என்பன. படைமுறையில் சேர்ந்தவர் மேசர், கப்டின் “கப்டின் லெப்டெனன்” (தலைனுன் பதிலன்), லெப்டெனன் (பதிலன்), “என்சைன்”, சாசன்” “கோபோரல்”பிரை வேற்றுப் “கப்பிற்றன் ட சி” (கடல் தலையன்), “லெட்டெனன் ட சி”, மற்றா (கடலோடி) என்போராவர். “இக்குவிப்பகிமீசுதர்” எங்கள் “மாசர் அடெண்டன்” என்பாரோடு ஒப்பர். “அம்பக்சிலீடன்” அல்லது கம்மியர் என்போர் பலரிருந்தனர். திருச்சபை அலுவல் பதவிகள் “பிரடிக்கான்”பதவி, “கிராங்கு பெசோக்கர்” (நோயாளியைச் சென்று பார்ப்போர்) பதவி என்பனவாம்.




இலங்கையின் அரசாட்சிக்குப் பொறுப்பாயிருந்தோர் தீவின் நாடாள்வாரும், இயக்குநருமானவரும், அரசியற் கழகமுமாம். தீவின் இயக்குநர் என்றும் இந்தியக் கழகத்தின் ஒருறுப்பினராயிருப்பர். அரசியற் கழகத்தில் வாரி கட்டாளர்[1], கொழும்பு திசாவை, தலைமைப் படையலுவலர், பிசுகால் (பொது வழக்குத் தொடருநர்), தலைமைக் காரியாலயத்து முக்கிய அலுவலகங்களின் தலைவர்களாய வேறு ஐவர் இருந்தனர். இவ்வலுவலகங்கள் ஆவனஅரசியற் செயலாளர் தலைமையிலிருந்த செயலகம், வணிகவகம்[2], சம்பளவகம்[3], பண்டசாலை என்பனவாம். கணக்குப் பரிசோதனை அலுவலகத்துத் தலைவர்க்குக் கழகத்தில் இடமிருக்கவில்லை.

இடச்சுக்காரரின் ஆள்புலங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி எனப் பகுக்கப்பட்டிருந்தன. கொழும்பின் ஆட்சியெல்லை வடக்கே கல்பிற்றியாவிலிருந்து தெற்கே பெந்தோட்டையாறுவரை பரந்திருந்தது. இது ஒரு திசாவையின் கீழ் இருந்தது. கல்பிற்றியா, நீர்கொழும்பு, களுத்துறை ஆகிய இடங்களில் ஒப்பகூவுகள்[4] (வாரியலுவலர்) இருந்தனர். “ மகாபத்த ” அல்லது கறுவா அலுவலகம் என்பதன் தலைவர் திசாவைக்குக் கீழடங்கியிருந்தார். இவர் பிற்காலங்களில் தம் பணியுடன் இதையும் ஆற்றினர். யாழ்ப்பாணமும் காலியும் அரசிருக்கையிலிருந்து தொலைவிலிருந்தனவாதலின் இவற்றை ஆணையாளன் ஒருவன் ஒரு கழகத்தின் துணையுடன் ஆண்டு வந்தான். யாழ்ப்பாணத்திலும் ஒரு திசாவை இருந்தார். மன்னார், திருக்குணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் வாரியலுவலர் இருந்தனர். காலியில் மாத்துறைத் திசாவையே அங்குள்ள கழகத்தின் மூத்த உறுப்பினராயிருந்தார். காலி கோரளையை மேற்பார்வையாளன் ஒருவன் ஆண்டனன். இவன் மகாபத்தையின் தலைனுயும் இருந்தான். இவர்கள் எல்லோரும் இடச்சுக்காரரே.

பழைய அரசரிடமிருந்து போத்துக்கேயர் பெற்றுக்கொண்ட அரசியல் முறையையே இடச்சுக்காரரும் கைக்கொண்டு ஒழுகினர். முகாந்திரம்மார், ஆராச்சிகள் ஆகியோர் துணைகொண்டு முதலியார் இலசுகரின்மார்மீது ஆணைசெலுத்தினர். மற்றை மக்கட்குக் கோராளை பொறுப்பாயிருந்தார். இவ்விரு தலைமைக்காரர்களுக்கும் இருந்த பிணக்குக்கள் காரணமாக நாடாள்வான் பல்கு என்பான் இவ்விரு பதவிகளாய முதலியார் பதவி, கோராளை பதவி என்பவற்றை இணைத்து இம்முறையைச் சிறிது மாற்றி வைத்தனன். காணி நிலங்களுட் பெரும்பகுதி சேவை ஆட்சி முறைமையிற் கொள்ளப்பட்டிருந்தது. தலைமைக்காரருக்குச் சம்பளம் நிலக்கொடையாலேயே கொடுக்கப்பட்டது. இவர்கள் பதவியிலிருக்கும் வரைக்கே அவற்றைத் துய்க்கலாம். பதவிகளின் எண்ணிக்கையையும் ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்பட்ட

[1] Controller of Revenue
[2] Negolie Kantoor
[3] Zoldij Kantoor
[4] Opperhoofds

காணி நிலங்களையும் **வான் கொலனெசி** குறைத்து விட்டான். சோனகரும் செட்டிகளும் பிறநாட்டார் எனக் கருதப்பட்டமையால் **ஊழியம்** செய்ய



உருவம் 31.—கொழும்பு நாட்டுப்படம், 1785.

வேண்டியவராயினர். ஆனால் இவ்வூழியத்தைக் காசுக்கொடையால் **நீக்கிக்** கொள்ளலாம். தீவுக்கூட்டத்திலிருந்து இடச்சுக்காரரால் தருவிக்கப்பட்ட மலாய்க்காரர் படைச்சேவைக்குக் கட்டுப்பட்டிருந்தனர்.




கொழும்பில் **இராட்டு வான் யசிறிற்றி** என்பது முக்கிய மன்றாக விளங்கியது. அரசியல் கழகத்திலிருந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் அவர்க்குத் தலைமை வகித்த வாரி ஆட்சியாளரையும் இது கொண்டிருந்தது. குற்ற விசாரணைகள் இதன் தனி உரிமையாய் இருந்தன. கொழும்பில் ஐரோப்பியருக்கும் நாட்டவர்க்கும் இடையேற்படும் குடியுரிமை வழக்குகளில் முதல் நீதி ஆணையினையும் இது பெற்றிருந்தது. இது மேன்முறையீட்டுக்குரிய மன்றாகவும் விளங்கியது. **இலாண்ரிராட்டு**[1] என்பது நாட்டவர்களிடை இருந்த காணிபற்றிய வழக்குகளை ஆய்ந்தது. இம் மன்றில் அரசியல் சேவையிலுள்ள சில உறுப்பினரும் நாட்டுத்தலைவர்களும் திசாவையும் இருந்தனர். இக்குழுவிற்குத் திசாவை தலைமை வகித்தார். **சிவில் இராட்டு** அல்லது சிறு வழக்கு மன்று, **120** இருக்குவெள்ளிகளிலும் மதிப்பிற் குறைந்த குடியுரிமை வழக்குகளை ஆய்ந்தது. இது நாட்டவர், ஐரோப்பியர் யாவர்மீதும் நீதியாணை செலுத்தியது. இத்தகை இராட்டு வான் யசிறிற்றிகள் யாழ்ப்பாணத்திலும் காலியிலும் ஆணையாளரின் கீழ் நடைபெற்றன. இலாண்ரிராட்டுக்களும் இங்கு இருந்தன. மற்றைச்சிற்றிடங்களிலும் இலாண்ரிராட்டுக்கள் இருந்தன. மேன்முறையீடுகள் யாழ்ப்பாணம், காலி ஆகியவற்றிலுள்ள இராட்டு வான் யசிறிற்றிகளிலிருந்தும் குடியுரிமை, குற்ற அலுவல்கள் பற்றிய வழக்குக்கள் பற்றைச் சிறுமன்றங்களிலிருந்தும் கொழும்பிலுள்ள இராட்டு வான் யசிறிற்றிற்கு வந்தன. சில வகைகளில் விண்ணப்பங்கள் பற்றேவியாவிலுள்ள இராட்டு வான் யசிறிற்றிற்குச் சென்றன.

இடச்சுத் திருந்திய திருச்சபை குடிக்குழுவிலமைந்த வகுப்புக்களையே கொண்டிருந்தது. கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் (கேக்கிருடடு திருச்சபைமன்று) நிறுவப்பட்டது. இதன் பணியாளர்களாகக் கடமை ஆற்றியோர் ஐரோப்பிய கிராங்குபிசோக்கர், நாட்டுச் சமயாசான், பாடசாலை ஆசிரியர் ஆகியோர். நாட்டுப் போதகர்மார் கொழும்புக் கல்விக் கோட்டத்தில் பயிற்சி பெற்றவராவர். கிராங்குபிசோக்கர்மார் மருத்தகங்களுக்குச் சென்று அனைவர்கட்குக் கல்வி பயிற்றினர். இவர்கள் பௌத்தம், போப்புமதம் ஆகியவற்றை அடக்குவதில் பெரிதும் பயன்படுத்தப்பட்டனர். கல்வி பெரும்பாலும் இவர்கள் ஆதிக்கத்திலேயே இருந்தது. நாட்டுப்பக்கங்களிலுள்ள பாடசாலைகள் பெரும்பாலும் வழிபாடு, வினாவிடை ஆகியவற்றைப் படிப்பித்ததோடு நாட்டு மொழியை எழுதவும் ஓதவும் கற்பித்தன. ஒவ்வொரு பாடசாலைக்கும் இரண்டிலிருந்து நான்கு ஆசிரியர் இருந்தனர். பத்துப் பாடசாலைக்கொரு சமயாசான் இருந்தான். இவற்றைக் கல்வியாணைக்குழு[2] ஒன்று மேற்பார்வையிட்டது. கொழும்பிலுள்ள இக்குழுவில் திசாவை, அவ்விடத்துக் குருமார், அரசியற் சேவையிலுள்ள 3 அல்லது 4 உறுப்பினர் ஆகியோர் அடங்கியிருந்தனர். இவர்கள் யாவரையும் நாடாள்வான் நியமித்தனன். இத்தகைய குழுக்கள் யாழ்ப்பாணத்திலும் காலியி

[1] Landraad

[2] Scholarchal Commission




நாட்டுப்படம் VII



லும் இருந்தன. இப்பீடங்கள் ஆண்டுதோறும் பாடசாலைகளைச் சென்று பார்த்ததல்லாமலும் நாட்டு மக்கள் மணவினையையும் கண்காணித்தன. இவை மணவினை உத்தரவுச் சீட்டுக்களும் அளித்தன. பாடசாலை ஆசிரியர்களை ஆய்ந்து அமர்த்தின. இவ்வாறே தோம்பு உடையோரையும் (பதிவாளர்) அமர்த்தின. **1788** இல் கல்பிற்றியாவிற்கும் பெந்தோட்டைக்கும் இடையில் ஐம்பத்தைந்து பாடசாலைகள் இருந்தன.

ஐரோப்பியர்க்கென ஆரம்ப இடச்சுப் பாடசாலைகள் பதினேழு இருந்தன. இவை அனுதை, கோயிற்பற்று, தனி என வகுக்கப்பட்டிருந்தன. முதலிரண்டு வகைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்று நடாத்தியது. உயர் கல்வி கொழும்புக் கல்விக்கோட்டத்திலேயே நடைபெற்றது. இக்கோட்டம் கல்வி ஆணைக்குழுவின் ஆட்சியில் முற்றாக இருக்கவில்லைப்போல் தோன்றுகிறது. இது **1708** இல் புலனுகியது. உயர்கல்வி இடச்சு மொழியிலே அளிக்கப்பட்டது. சிறிது காலத்தின் பின் கிரேக்கம், எபிரேயம் ஆகியவை கல்விவிதானத்தில் சேர்க்கப்பட்டன. குருமார், பாடசாலை ஆசிரியர், சமயாசான் ஆகியோரின் கல்விக்கெனவே இந்நிறுவனம் அமைந்திருந்தது. புதிய ஏற்பாடு முழுவதையும் பழைய ஏற்பாட்டின் பெரும்பகுதியையும் நாட்டு மொழியில் பெயர்த்த பொறுப்பு இதற்கே உரியது. **1747** இல் கொழும்பில் புதிய கல்விக்கோட்டம் என்னும் பெயரிய பாடசாலை ஒன்று நாட்டவர்க்காகத் துவக்கப்பட்டது. ஆனால் இது நீடித்திருக்கவில்லை. **1690** இல் தொடங்கிய யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம் **1723** இல் கலைக்கப்பட்டது.

### 9 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பொதுவரலாற்றிற்கு அடுத்துவரும் நூல்கள் பார்க்க ; **பெனுேத்தே இசுற்றறி,** பலுடியசு, என்பதையும் ; வலன்றினின் **ஒளட் என் நியு ஊசு இந்தியன்,** தொகுதி v. ; **இடச்சுத் தொல்லேடுகள் பற்றிய அறிக்கை** ஆர். சி. அந்தோனிசு, கொழும்பு, 1907. **இந்திய கழகம், நாடாள்வார் நாயகம் ஆகியோரிடமிருந்து கட்டளைகள், 1656-1665,** சோபியா பீற்றேசு, கொழும்பு, 1908 ; பல்வேறு இடச்சு ஆள்வார், ஆணையோர்மார் ஆகியோரின் **"நினைவுக் குறிப்புக்கள்,** அரசச்சகம், கொழும்பு ; பி. இ. பீரிசு, **இலங்கையும் ஒல்லந்தரும், 1918.**

நாட்டின் ஒரு பகுதியில் மக்களைக் குடியேற்ற முடிவு செய்ததைப் பற்றி **கட்டளைகள்,** ப-ள். 17,18 பார்க்க. எந்தலை தொழுநோய் விடுதி 1685 இல் தொடங்கினது என்பது வான் கியர் **அளித்தது** ஆகும். அந்தோனிசு என்பான், கட்டிடத்தைக் கட்டி முடித்தவர், ஆள்வான் பெக்கர், **1708,** என்கின்றான்.

மகா தேவாலயத்திற்குக் கால்கோள் எடுத்த நாள் ஒரு சிங்களப் பாவில் உள்ளது.

வான் தொம்பேக்கின் காலத்துக் கவலைகட்கு பற்றேவியாவிற்கு வான் இமோவு அனுப்பிய மறை முடங்கல்கள், (ஒகசு 7, செற்றெம்பர் 26,

1736) பார்க்க. (**தொல்லேடு.** டி 49). வடுபத்தவிற்கு எச். பெக்கரின் **“ நினைவுக் குறிப்பு ”** ப. 25, **வான் இமொவின் நினைவுக் குறிப்பு,** ப.46 பார்க்க ; சேனைகள் பற்றி பெக்கரின் **நினைவுக் குறிப்பு** ப. 42 பார்க்க ; **இ. வா. ப. நி.** உம் பார்க்க.

சிறீ விசயனின் இறப்பிற்கும் கீர்த்தி சிறீ அரசெய்தியதற்கும் முடி சூடியதற்கும் **இ. தொ.** ii. ப. 156 பார்க்க. குருமாரைப் பெறுவதற்காக மேற்கொண்ட 1750 இன் தூதிற்கு அரசன் கீர்த்தி சிறீயின் சியத்தூது என்பதை **வே. ஆ. ச. ச., இ. கி.** xviii. எண் 54 பார்க்க.

கத்தோலிக்கரைத் துன்புறுத்தியதற்கு **“ விடா தோ வெனரவெல் பத்திரே யோசப்பு வாசு,** இலிசுபன், 1747 பார்க்க.

சுறூடரின் பூட்கைக்கு 1758, ஓகசு 4 இன் கழகத்துத் தீர்மானம் பார்க்க. (**கொழும்புத் தொல்லேடுகள்,** தொகுதி டி 113).

அரசனைக் கொலைசெய்ய நடந்த சூழ்ச்சிக்கு “ மொலதந்தைக் கலகம் ” **இ. தொ.** ii. ப. 272 பார்க்க.

வான் எக்கின் படைச்செலவிற்கு **வே. ஆ. ச. ச., இ. கி.** xvi. எண் 50 பார்க்க. உடன்படிக்கைக்கு அந்நூலையும் **இடச்சுப் பதிவேடுகள் பற்றிய அறிக்கை** ப. 133 உம் பார்க்க. கண்டித்தானையத்திலிருந்து வெளியேறியதற்கு மேயர்கள் பிராங்கினு, இடபோ ஆகியோரின் கடிதங்கள் 1765, செற்றெம்பர் 10 இல் கிடைக்கப்பெற்று, செற்றெம்பர் 12 இல் நடந்தேறிய கழகத்து மறைத்தீர்மானத்தில் குறிக்கப்பட்டுள்ளது (**தொல்லேடுகள்,** டி 248).

1782 இல் நடந்த திருக்குணமலைப் படை நடவடிக்கைகட்கு **இலங்கை இலக்கியப் பதிவேடு, 1889,** தொகுதி iv. ப-ள். 125 தொடர் பார்க்க. வான் த கிராபிற்கும் அரசவைக்கும் உள்ள தொடர்பிற்குக் **கொழும்புத் தொல்லேடு,** தொகுதிகள் டி 259(1792, ஓகசு 14), டி 261 அடங்கலும் பார்க்க.

பராக்கிரமபாகுவின் கால்வாய்க்கு **த.கு.** ப. 20 பார்க்க ; இடச்சுக்காரர் கணிப்பிற்கு 1767, யூன் 3 இன் இடச்சுக்காரரின் கழகத்துத் தீர்மானம் பார்க்க (டி 139). 1698 இல் இலங்கையின் தென்பாகத்தில் நெற்பயிர்ச் செய்கையை இடச்சுக்காரர் மிக வளம்பெறச் செய்ததனால் மக்கள் தம் நாள் உணவிற்குக் குரக்கனைவிட்டு அரிசியுணவை மேற்கொண்டனர். இதிலிருந்து இடச்சுக்காரர் வேளாண்மையில் எடுத்துக்கொண்ட கவற்சி தெளிவாகும். இவர்களின் இவ்வேளாண்மைக் கவற்சி தென்னைப் பயிர்ச் செய்கையிலும் புலப்படுகின்றது.

1693 இன் இறுதிநாள் எடு எனும் இடச்சுக்காரரின் முதல் **தோம்பு** 1622 இல் முடிவுற்ற முதல் ஏடான போத்துக்கேயர் ஏட்டை முழுவதும் பின்பற்றி அமைந்துள்ளது. கம்பனியினர் 1740 இல் இரண்டாவதொரு தோம்பைத் தொடங்கினர். ஆனால் 1796 இல் இது வலியிழந்து போயிற்று ; இதைப் பிரிட்டிசார் மீண்டும் அமைவு படுத்தவில்லை. தோட்டங்களின் பதிவு மீண்டும் 1746 இல் தொடங்கப்பட்டது.



கம்பனியின் அமைப்பிற்கு **இடச்சுப் பதிவேடுகள் பற்றிய அறிக்கை,** ப-ள். 6 தொடர், 125 தொடர் பார்க்க. படையமைப்பிற்கு **வே. ஆ. ச.ச., இ.கி.** x. எண் 37 பார்க்க. திருச்சபைக்கும் பள்ளிக்கோட்டங்கட்கும், அந்நூல் i. (2) பார்க்க. பண்டனசிதர், கொழும்பு, மன்னார் ஆகிய இடங்களைப் பிடித்தற்கு உதவினர் ; படைச்சேவைக்காக யாவகர்கட்கு மூத்தோன் இரிக் கிளோவு வான் கோயனசு உவூல்பென்தாலில் (நொசா செஞோரா த கௌடலுபே) நிலங் கொடுத்தான் (கழகத்துத் தீர்மானங்கள், செற்றெம்பர் 8, 1660). நீதிமுறைமைக்கு “ கிளகோனின் நாட்குறிப்பு பற்றிய உரைகள் ” **இலங்கை இலக்கியப் பதிவேடு,** vi. 1891/2, ப-ள். 43–50 பார்க்க. தேவமொழிகள் (Gospels) சிங்களத்தில் 1739 இலும் தமிழில் 1743 இலும் மொழிபெயர்க்கப்பட்டன. புதிய ஏற்பாடு சிங்களத்தில் 1771-1780 இலும் தமிழில் 1759 இலும் மொழிபெயர்க்கப்பட்டன ; பென்ருற்றூசு தமிழில் 1790 இல் மொழிபெயர்க்கப்பட்டது.

### *அதிகாரம் 10*

## பிரிட்டிசார் பாலனம், 1796–1805

இடச்சுக் குடியேற்ற நாடுகள் பிரெஞ்சுக் குடியரசுக்காரர் கையில் வீழ்ந்துவிடுமென்று ஓரிஞ்சு இளவரசன் அஞ்சினான். எனவே கியூவிலிருந்தவாறு அக்குடியிருப்புக்களுக்கு, பாதுகாப்பின் பொருட்டு, பிரிட்டிசுப் படைகளையும் கப்பல்களையும் நாட்டுள் புகவிடுமாறு பணித்தனன். இப்படைகளையோ கப்பல் படைகளையோ உட்புகவிடாமல் தடுத்தால் வன்மை காட்டுமாறு பிரிட்டிசுப் படையதிகாரிகட்கும் கட்டளை இடப்பட்டிருந்தது. இதற்கிணங்க 1795 யூலை திங்களில் சென்சோச்சு கோட்டையின் ஆள்வானன பிரபு **ஒபாட்டு,** ஆள்வான் **வான் அங்கிள் பீக்கு** என்பானை அழைத்து அவன் கீழ் இருந்த குடியேற்ற நாட்டைப் பிரிட்டிசார் ஆட்சியில் விடுமாறு கேட்டான். அப்பொழுது, பொது அமைதி ஏற்பட்டபின் நாடு இடச்சுக்காரருக்குத் திருப்பி அளிக்கப்படுமென்றும் நாட்டைக் கொடாது எதிர்த்தால் வன்மை காட்டவேண்டி நேரிடும் என்றும் ஒபாட்டு கூறினான். இங்கிருந்த இடச்சு அரசாங்கம், நெதலந்தின் பழைய யாப்பினைப் புரட்டினார் பிரெஞ்சுக்காரரே என்பதை உணர்ந்து, **இசுற்ருற்றுகோலருக்குப்** பணிய முடிவு செய்தனர். ஆனால் பிரிட்டிசார் பகைவினைகள் மேற்கொளின் கொழும்பு, காலி, திருக்குணமலை ஆகிய இடங்களில் தம்மை எதிர்காக்க நினைத்தனர். இடச்சுக்காரர் கழகம் பிரிட்டிசார் நெருங்கிய, உள்ளார்ந்த நேயர் என பிரபு ஒபாட்டுவுடன் ஒப்புக் கொண்டது. இன்னும் 800 ஐரோப்பிய படைவீரர்களை ஏற்றுக்கொள்ளவும் ஒத்துக்கொண்டது. ஆனால் அவர்கட்குச் சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையில் தாம் இல்லை என்பதையும் கூறியது. ஆனால் இடச்சுக் குடியிருப்புக்களைப் பிரித்தானிய அரசர் காவலில் விடுவதற்குத் தாம் இணங்கவில்லை என்றும் இவ்வழியை ஏற்குமாறு ஓரிஞ்சு இளவரசர் முடங்கல் கூறவில்லை என்றும் கழகம் கூறியது.

கழகத்தின் உரைகளைப் பிரபு ஒபாட்டு ஏற்றுக்கொண்டார். பிரிட்டிசுப் படை திருக்குணமலையை வந்தடைந்தது. ஆனால் அவ்விடத்து ஆணையாளனால் இடர்கள் நேர்ந்தன. எனவே பிரிட்டிசு அலுவலாளர் தமக்குரிய கட்டளைகளுக்கிணங்கக் கோட்டைகளைத் தம்மிடம் கொடுக்குமாறு கோரினர். இது ஓகசு இரண்டில் நடந்தது. இவர்கள் கோரிக்கை மறுக்கப்பட்டது. ஆயினும் எதிர்ப்பின்றிப் பிரிட்டிசார் தரை சேர்ந்தனர். ஆனால் அப்பொழுது அவர்கள் மேற்கொண்டு வேறு ஒன்றும் செய்யவில்லை. இதற்கிடையில் கொழும்பிலிருந்த இடச்சுக்காரர் தாயகத்தில் நடந்த புரட்சி பிரஞ்சுக்காரர்களால் மட்டும் தனியே நடத்தப்படவில்லை என்றும் நாட்டினத்தாருள் பெரும் பகுதியினர் இதில் பங்கெடுத்தனர் எனவும் அறிந்தனர். எனவே இவர்கள் பற்றேவியாக் குடியரசை ஏற்றுக்கொண்டு பிரிட்டிசாருடன் உள்ள தொடர்பினை அறுத்து இறுதிவரைக்கும் எல்லாக் கோட்டைகளையும் எதிர்காக்க முடிவு செய்தனர். இம்முடிவினை இவர்கள் பிரிட்டிசாருக்கு 1795, ஓகசு 15 ஆம் தேதி குறித்த முடங்கல் ஒன்றினால் அறிவித்தனர். இப்பொழுது பிரிட்டிசார் திருக்குணமலையில் செயலில் இறங்கினர். இவ்விடத்தில் இருந்த கோட்டைகள் ஓகசு 28, 31 ஆகிய நாட்களில் **கேணல் சுதுவாட்டு** என்பவரால் நடத்திய துவக்குத் தாக்குதல்களின் பின் சரணடைந்தன. செற்றெம்பர் 18 இல் மட்டக்களப்பு வீழ்ந்தது. பத்து நாட்களின் பின் எதிர்ப்பொன்றுமின்றி யாழ்ப்பாணம் வீழ்ந்தது.

திருக்குணமலையில் இருந்து **உரபெட்டு அன்றூசு** என்பான் கண்டிக்கு அரசதூதனாக அனுப்பப்பட்டான் ; இவன் சென்னைக் குடிக்குழுச் சேவையில் உள்ளவன். இவன் மீகத்தென்னை திசாவையின் தலைமையில் அமைந்த ஒரு கண்டிக் குழுவுடன் இந்தியா திரும்பிவந்தான். 1796 பெப்பிரவரி திங்களில் சென்னையில் உடன்படிக்கை ஒன்று முடிவாக்கப்பட்டது. இதற்கிணங்க இலங்கைக் கடற்கரையிலே உப்பும் மீனும் பெறுவதன் பொருட்டு ஓரிடத்தை அரசன் கொண்டிருக்கலாம் என்றும் சுங்கமும் ஆய்வுமின்றிப் பத்துக் கலங்களை அரசன் வைத்துக்கொள்ளலாம் என்றும் விதிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கைக்கு அரசன் கையொப்பத்தைப் பெறுவதற்காக அன்றூசு கண்டிக்கு வந்தனன். ஆனால் அரசவையோ இடச்சுக்காரரிடமிருந்து பெறுவதற்கு முயன்றும் பெறமுடியாதிருந்த பேறுகளை அளித்த இவ்வேற்பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. இழந்த இவ்வாய்ப்பு மீண்டு ஒரு பொழுதும் கிடைத்திலது.

**கவுண் த மோரன்** என்பான் 1795, மாச்சு 30 இல் நியூசற்றலில் கையெழுத்திடப்பட்ட தற்காலிக உடன்பாட்டில், தன் ஆணைக்குட்பட்ட பட்டாளங்களைப் பிரித்தனின் சேவைக்கு மாற்றுவதற்கு ஒழுங்குபடுத்தி இருந்தான். இப்பட்டாளங்களுள் ஐந்து கூட்டங்கள் கொழும்பில் இருந்தன. இடச்சுக்காரர் சேவையிலிருந்து இப்படையினரை நீக்கியது உண்மையில் ஒற்றோபர் 13 இலேயே நடந்தது. யாழ்ப்பாணம் வீழ்ந்தபின் சென்னை



அரசாட்சியார் மீண்டும் தங்கள் பழைய நிபந்தனைகளுக்கு இணங்குமாறு கேட்டனர். ஆனால் இடச்சுக்காரர் இவற்றை ஏற்க மறுத்துக் கொழும்பில் தம்படைகளை ஒன்று திரட்டித் தலைநகரை இறுதிவரைக்கும் எதிர்காக்க முடிவு செய்தனர். பிரித்தானியப் படைகள் நீர்கொழும்புவரை இலங்கைக் கரைவழி கடலோடின. இங்கு நீர்கொழும்புவரை நிலவழியாகவும் அவர்கள் முன்னேறினர். பெப்பிரவரி 8 ஆம் 9 ஆம் நாட்களில் எதிர்ப்பின்றி அவர்கள் **கழனியாறு**வரை வந்தனர். நீர்கொழும்பிற்கும் கழனிக்குமிடையே இவ்வாறு வந்தவர்களை எதிர்ப்பதற்கு இடச்சுக்காரர் ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. கண்டியரும் முன்னேறி வந்ததினாலேயே இவர்கள் இவ்வாறு செய்தனர் எனச் சொல்லப்படுகின்றது. இவர்கள் ஆங்கிலரைக் கழனியாற்றில் எதிர்ப்பதற்கு நினைத்தனர். ஆனால் மீண்டும் இவர்கள் பாலத்துறைக்குப் பின்வாங்கினர். பிரிட்டிசார் ஆற்றினைப் பெப்பிரவரி 11 இல் கடந்தனர். இவர்களைப் பிரெஞ்சு இலெற்றினென் கேணல் ஆன **இரேமன்** என்பான் மறுநாள் தாக்கினன். ஆனால் மறுநாள் இவர்கள் புறக்கோட்டையைக் கைப்பற்றினர். இவ்விரேமன் கடைசியாக இலச்சம்பேக்குப் பட்டாளத்தில் இருந்தவன். ஆற்றடியில் ஆங்கிலேயரை இடச்சுக்காரர் எதிர்க்காமல் விட்டது, ஆங்கிலேயர் கடலில் ஆதிக்கம் கொண்டிருந்தபடியால், பிற்பக்கத்தில் படைகளை இறக்கிவிடுவர் என்பதனாலேயாம்.

ஒற்றோபர் திங்களில் இறுதிவரை போர்புரிய வேண்டுமென முடிவு செய்த இடச்சு அரசாங்கத்திடம் 845 ஐரோப்பியரும் 772 மலாய்க்காரரும் ஆக 1617 படைஞரே இருந்தனர். ஆங்கிலேயரோ 2700 ஐரோப்பியரைக் கொண்ட 5500 படைவீரரைக் கொண்டிருந்தனர். இன்னும் கடலாணையும் அவர்க்கு இருந்தது. இடச்சுக்காரரோ நெதலந்து, பற்றேவியா ஆகிய இடங்களிலிருந்து துணைவருமென்றும் பிரெஞ்சுப் பட்டாளம் ஒன்று வந்து சேருமென்றும் எதிர்பார்த்திருந்தனர். இன்னும் மைசூரிலுள்ள **திப்பு சுலுதான்** தங்கள் பொருட்டு ஆங்கிலேயர் கவனத்தைத் தன் பக்கம் ஈர்ப்பான் எனவும் இவர்கள் நம்பி இருந்தனர். ஆரம்பத்திலேயே எதிர்த்தல் வீணானதென்று அவர்கள் உணர்ந்திருத்தல் வேண்டும். ஒருவரைத் தவிர்ந்த எல்லா மேல் அலுவலாளரும் கழகத்தோரும் அடிபணிவை ஆதரித்தனர். இதனால் சொந்த உடைமைகளையும் பொதுச் சேவையாளர்களின் இளைப்பாற்றுச் சம்பளங்களையும் பாதுகாத்துக்கொள்ளலாம் என அவர் கருதினர். இதற்கேற்பப் பிரித்தானியர் கோட்டையை அடிபணியக் கேட்டபொழுது இணக்கப் பேச்சுக்கள் தொடங்கின. 1796, பெப்பிரவரி 15 இல் கொழும்பு சரணடைந்தது. அமைதி தோன்றியபின் இலங்கையைப் பிரிட்டிசார் இடச்சுக்காரரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கடப்பாட்டினை உடன்படிக்கைக் கூறுகள் விதிக்கவில்லை. எனினும் அவ்வாறு அவர் செய்வரென எதிர்பார்க்கப்பட்டது. இடச்சு ஆள்வானான **வான் அங்கிள் பீக்கு** எதிர்க்கத் தவறியதற்காகவும் மன்பழிக்காகவும் குற்றஞ்சாட்டப்பட்டான். 1656 இல் தம்மிலும் அளவுகடந்த எதிரிகளுடன் அரிய போரிட்ட போத்துக்கேயருடன்

ஒப்பிட்டுப் பார்க்கும்போது அங்கிள் பீக்கு எதிர்க்கத் தவறியது அவனுக்கு எதிராகவுள்ள குற்றத்தைப் பலப்படுத்தியது. எனினும் நிலை பொறுக்க முடியாத அளவுக்கு வரும்வரை எதிர்க்க வேண்டும் என்று இவர்கள் எண்ணியிருந்தனர் என்பதைப் பத்திரங்கள் உறுதிப்படுத்துகின்றன. தானையோரிடை யக்கோபினக் கொள்கை நிரம்பி இருந்ததென்று சொல்லப் படுகின்றது. ஆனால், அதனாற்றான் அவர்கள் சரணடைந்தனர் என்று கொள்ளக் கூடியதாய் இல்லை.

இலங்கையின் கரைசார்ந்த மாநிலங்கள் இப்பொழுது பிரிட்டிசார் உடைமைகள் ஆயின. இத்தீவில் முதன் முதல் வாழ்ந்த ஆங்கிலேயன் **பிராங்கி சுகன்** பாதிரியான **அன்றூசு** என்பானென அறியக்கிடக்கின்றது. இவன் வடக்கில் தொண்டாற்றி அங்கு 1627 இலோ 1628 இலோ இந்துக்கள் கையால் மாண்டான் என அறியக் கிடக்கின்றது. மற்றையவன் கண்டியர் சேவையில் பெரும் துவக்கு வீரனாக விளங்கி 1632 இல் பெரும் வேலியரண் என்னும் போரில் இறந்தவன் ஆவன். **இரால்பு பிச்சு** என்பான் 1589 இன் முதற் கூற்றில் இலங்கையை அடைந்தனன்; 1592 இல் **சேமிசு இலங்கசுதரும்** இலங்கையை அடைந்தான். ஆனால் நன்கு புகழ்பெற்ற ஆங்கிலேயன் **உரபெட்டு நொட்சு** என்பானேயாவன். இவன் **ஆன்** என்னும் கப்பலின் தலைவனான தன் தந்தையுடனும் அக்கப்பல் கலவருடனும் 1659 இல் கண்டியரால் சிறைப்படுத்தப்பட்டான். இருபது ஆண்டுகள் சிறையில் வாழ்ந்தபின் 1679 இல் இவன் ஒரு தோழனுடன் தப்பியோடினான். இவன் நாட்டின் உட்பகுதியைப் பற்றி முழுமையும் செவ்விதுமான குறிப்பொன்றினை எமக்கு அளித்துள்ளான்.

பிரித்தானியருடைய குடியிருப்புக்கள் சென்னை அரசிருக்கையுடன் இணைக்கப்பட்டுப் படைத்துறை ஆள்வார்கள் துணைகொண்டு கிழக்கிந்தியக் கம்பனியாரால் பாலிக்கப்பட்டு வந்தன. முதல் ஆள்வான் **கேணல் சுதுவாட்டு** என்பானவன். இவனே பிற்காலத்தில் மேயர் செனரல் ஆனவன். இவனைப் பின்தொடர்ந்து வந்தவர்கள் மேயர் செனரல் **டபிள்யு. இ. தொயில்** என்பானும் **பிரிகேடியர் செனரல் த மேறன்** என்பானுமாவன். இவருள் தொயில் என்பான் 1797, சனவரி 1 ஆம் தேதியில் இருந்து சில மாதங்களே ஆண்டான். இவர்கள் குடித்துறை, படைத்துறை இரண்டினும் ஆணை செலுத்தினர். 1795 ஆம் ஆண்டின் இறுதியில் **உரபெட்டு அன்றூசு** என்பான் வாரிக்கண்காணியன் ஆகவும் பதியாள்வானாகவும் அமர்த்தப்பட்டான். இவனின்கீழ் கொலெற்றர்[1] மாரும் சென்னைக் கீழலுவலரும் இருந்தனர். மன்றுகளின் தலைவர் கொலை, கொடுங்குற்றங்கள் ஆகியவற்றைக் கவனித்தனர். மற்றை அலுவல்கள் கொலெற்றர்கள் தீர்ப்புக்கு வந்தன. சென்னைப் பரிபாலனம் வீழ்ச்சியுறும் வகையில் இருந்தது. இதற்கு முக்கிய காரணங்கள் : (1) அயல் நாட்டுச் சென்னைக்காரரால் நாட்டு மக்கள் அடக்கப்பட்டது ; நாட்டில் வருவாய்களைக் கைப்பற்றலாம் என்னும் எண்ணத்துடன்

[1]Collector



இவர்களைத் தொடர்ந்து பல தமிழர் வந்தது; (2) 1796, செற்றெம்பர் ஒன்றிலிருந்து ஒவ்வொரு தென்னை மரத்துக்கும் ஒரு வெள்ளிப்பணம் ஆண்டிற்கு ஒரு முறை விதித்தது—இது சில காலங்களில் அதன் விளைவிலும் கூடியதாய் இருந்தது; (3) பழைய வழக்கத்தில் இருந்த சேவை ஆட்சி முறையில் நிலங்கொள்வதை நீக்கி நெல்விளைவின் பத்தில் ஒரு பகுதியை வரியாக விதித்தது; (4) நீதிவான், குத்தகைக்காரன் ஆகியோர் இருவரதும் அதிகாரத்தை இணைத்தது. வாரி ஈட்டிமுனையிலேயே சேர்க்கப்படவேண்டி இருந்தது என்று சொல்லப்பட்டது. இம்மாற்றங்களையும் மற்றையவற்றையும் ஆய்வதற்காக 1797 யூன் திங்களில் **த மேறன்** தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் செயலாற்றத் தொடங்குமுன் நாட்டில் பொல்லாக் கலகம் ஒன்று பொங்கி எழுந்தது. இது அடுத்த ஆண்டின் முற்பகுதியிலேயே முடிவிற்கு வந்தது. இக்குழு சென்னையரை நாட்டில் இருந்து வெளி அகற்றவும் பொல்லாவரியினை நீக்கவும் சேவை ஆட்சிமுறையை மீள நாட்டவும் நாட்டுத்தலையோர் அதிகாரத்தைப் பேணவும் எடுத்துரைத்தது. இன்னும் நேர்மையும் கண்ணியமானதுமான ஒரு பரிபாலனத்தை நிறுவுமாறும் அறிவுரைத்தது.

1798, ஒற்ரோபர் 12 இல் **கௌரவ பிரடெரிக்கு நோது** அரசாட்சியை மேற்கொண்டான். அவனே முதலாம் ஆள்வானும் தலைமை ஆணையனு[1]மாவன். இவனை அரசர் நியமித்தார். எனினும், ஆட்சி கம்பனியினரின் அலுவலாகவிருந்தது. இம்மாற்றம் இலங்கையை அரசனின் சொந்த அதிகாரத்தில் கொண்டுவரவேண்டுமென்ற முடிவினால் ஏற்பட்டதாகும். இம்முடிவும் இடச்சுக்காரருடன் ஒரு ஏற்பாட்டுக்கு வரக் காலம் தாழ்த்தியதால் உண்டானதாகும். நோதின் அரசாட்சிப் பருவம் பல சோதனைகளைக் கண்டது. முதலாவதாக ஆள்வானுக்கு ஒரு கழகமும் துணைபுரியவில்லை. அவனே இறைசேரியாளனும் குற்ற நீதியாணைக்குரிய உச்சமன்றின் முதல்வனும் குடியுரிமை வழக்குக்களில் மேன்முறையீட்டுக்குரிய பெருமன்று, கீழ்மன்றுகளின் முதல்வனும் இருந்தான். 1800 இலும் 1801 இலும் குறைந்த குற்றச் செயல்களுக்கும் சிறு குடியுரிமை வழக்குக்களுக்கும் பிசுக்கால் மன்று நிறுவப்பட்டது. இம்மன்றில் மூன்று உறுப்பினர் இருந்தனர். குடியுரிமை வழக்குகளுக்கென, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகியவற்றிற்கு வெளியே உள்ள பகுதிகளில் இலானிராட்டுக்கள் திருத்தியமைக்கப்பட்டன. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய நகர்களில் குடியுரிமை மன்றுகள் நிறுவப்பட்டன. 1801, எப்பிரில் 18 ஆம் நாளின் ஆவணத்தின்படி கொழும்பு மாவட்டத்தில் குற்றநீதியாணை கொண்டிருந்த பழைய உச்சமன்று, கொழும்பு குடியுரிமை மன்று ஆகியவற்றின் இடத்தில் மேன்மன்று ஒன்று நிறுவப்பட்டது. இது ஆரம்பத்தில் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் தன் ஆணையைக் கொண்டிருந்தது. உயர்மேன்முறையீட்டு மன்று நாடாள்வார், தலைமை நீதியரசர்,

[1]Commander in Chief

துணை நீதியரசர், அரசாங்கச் செயலாளர் ஆகியோரைக் கொண்டிருந்தது. அவ்வாண்டிலேயே, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்த இலானிராட்டுக்கள் நீக்கப்பட்டுக் குடியுரிமை மன்றுகள் நிறுவப்பட்டன. இதைப் பின்பற்றி 1802 இல், எஞ்சியிருந்த இலானிராட்டுக்கள் குடியுரிமை மன்றுகளோடு இணைக்கப்பட்டன. அவற்றுட் சில ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு மாநில மன்றுகளாக்கப்பட்டன. பிசுக்காலின் மன்று இப்பொழுது அமைதி நீதியரசர்களின் மன்று எனப்பட்டது. அமைதி நீதியரசர்களுள் ஒருவர் தினமும் பணியாற்றினர். இவர் அமர் நீதிவான் எனப்பட்டார். 1810 இல், 1801 இல் நிறுவப்பட்ட உச்சமன்றின் நீதியாணை பிரிட்டிசுக் குடியிருப்புகள் யாவற்றிற்கும் பொருந்தக்கூடியதாக விரிவாக்கப்பட்டது. கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே செயலாற்றிய பழைய குற்றமுறை நீதியாணைக்குரிய உச்சமன்று மறைந்தது. நிறைவேற்று அரசாங்கத்தில் ஆரம்பத்தில் கொலெற்றர்மார் அல்லது திசாவைமார் என்போர் அமைந்திருந்தனர். ஆனால் 1801 அளவில் இவர்கள் நீக்கப்பட்டனர். முந்திய சேவைக்குப் பதிலாக இவர்கள் வரிவணிகப்பீடமொன்றில் சேவை புரிந்தனர். இவர்களினிடத்தில் பல ஒப்பந்தமில்லா வாரிவணிகமுகவர் அமர்த்தப்பட்டனர். அமியன்சு உடன்படிக்கையின் படி இலங்கை ஆட்சி பிரிட்டிசாருக்கென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1802, சனவரி ஒன்றில் இலங்கையிலுள்ள அவர்கள் குடியேற்றங்கள் முடிக்குரிய ஒரு குடியேற்ற நாடாக அமைந்தன. இக்குடியேற்ற நாடு ஒரு கழகத்தையும் ஒரு குடிச்சேவையையும் கொண்டிருந்தது. மாட்சிமையுடையானின் இலங்கைக்குரிய கழகம் தலைமை நீதிபதி, தலைமை ஆணையன், தலைமைச் செயலாளன் ஆகியோரைக் கொண்டிருந்தது. இக்குடிச்சேவை இன்றும் நிலைபெற்றுள்ளது. இக்குடிச்சேவையே முடியின் கீழ் ஈழநாட்டிலுள்ள சேவைகள் எல்லாவற்றிலும் பழைமையானது. இக்குடியேற்ற நாட்டின் யாப்பு 1833 வரை எல்லாவகையிலும் இந்நிலையிலேயே இருந்து வந்தது.

படைத்துறை நாடாள்வார்கள் கல்வியில் அதிகம் கவனம் செலுத்தவில்லை. எனினும் நோதோ கல்வியை மீண்டும் போற்றினர். இவர் இடச்சுக்காரரைப் பின்பற்றிக் கல்வியை அமைத்தனர். 1801 இல் 170 பாடசாலைகள் இருந்தன. பாடசாலை ஆசிரியர்கள் உறுதிவரையுநராயும் பதிவாளராயும் கடமை ஆற்றினர். இன்னும் கொழும்பில் ஒரு கல்விக் கழகமும் இருந்தது. இதனுடன் மூன்று துவக்கப் பள்ளிகளும் இருந்தன.

வடபகுதியில் சேவைக்காணி ஆட்சிமுறை மீண்டும் கைக்கொள்ளப்பட்டது. இது ஆய்வுக்குழுவினரின் விதப்புரையால் கைக்கொள்ளப்பட்டதாகும். ஆனால் 1800 இல் இம்முறையைத் தலைமைக்காரர் பழுதான முறையில் நடத்தி வந்தனர் ஆதலாலும் ஆற்றிய சேவைக்கு அந்நிலங்கள் போதிய வருவாயைத் தராமையாலும் அம்முறைமையை நீக்குதல் நல்லதென்று நாடாள்வான் முடிவு செய்தான். இன்னும் இம்முறைமையை நீக்குவதால் பயிர்ச்செய்கையும் வணிகமும் வளரும் என்றும் நாட்டின் வருவாய் உயரும் என்றும் அவன் கருதினான். எனவே இதற்கு மாற்றாக மக்கள் விரும்பி எடுக்கக்கூடிய இன்னொரு முறையை அவன் விதித்தான்; இப்புதுமுறை வெற்றிபெறவில்லை. 1802, மே 1 இல் பழைய முறை நீக்கப்பட்டு விளைவின் ஒரு பகுதியாக இறுக்கப்படும் ஒரு வரி அதற்கீடாக விதிக்கப்பட்டது. உடற்சேவை கட்டாயமாக்கப்பட்டது; ஆனால் அதற்கு ஊதியம் கொடுக்கப்பட்டது.



நாட்டின் முக்கிய வாரிவருவாய்கள்: முத்துக்குளிப்பு, கறுவா, சாராயம் ஆகியவற்றில் தனி உரிமை, பாக்கு, உப்பு, புகையிலை ஆகியவற்றில் தீர்வை, சோனகர் செய்யவேண்டிய உடற் சேவைக்கு ஈடாகவுள்ள ஊழியவரி என்பனவாம். சாராயம் முக்கியமாக இந்தியாவில் விற்கப்பட்டது. சோனகரின் ஊழியவரி சென்னை அரசாட்சியாரால் நீக்கப்பட்டது. ஆனால் 1802 இல் அரசுச் செயலாளரால் மீண்டும் விதிக்கப்பட்டது. 1800 இல் நகைகள்மீது இறுப்பு ஒன்று விதிக்கப்பட்டது. இதை மகிழ்ச்சி வரி என்று மக்கள் பட்டம் சூட்டினர். இதனால் சில தொல்லைகளும் ஏற்பட்டன. இவை கண்டியர் சூழ்ச்சியால் நேர்ந்தனவாகும்.

இப்பொழுது நாம் நோதின் அயல்நாட்டுக் கொள்கை பற்றி ஆராய்வோம், இதனால் அவனைப்பற்றி நாம் நல்லெண்ணம் கொள்ள முடியாது. 1798, யூலை 26 இல் **இராசாதி இராசசிங்கன்** இறந்தான். இவனைத் தொடர்ந்து அரசாள்வதற்குப் **பிலமத்தலாவை** என்னும் முதல் அதிகார் ஆனவன் அரசனுக்கு உறவினனான ஓர் இளைஞனை, **சிறீ விக்கிரம இராசசிங்கன் (1798—1815)** என்னும் பட்டப் பெயருடன் அரசுகட்டிலில் அமர்த்தினான்.

பட்டத்தரசிகளுள் ஒருத்தியின் உடன் பிறந்தானான **முத்துசாமி** என்பான் எதிர்க்கட்சியினருள் ஒருவனாய் இருந்தமையால் இவன் பிரிட்டிசார் பகுதிக்கு ஓடி ஒளித்து யாழ்ப்பாணத்தில் புகலிடம் கொண்டனன். 1799 பெப்பிரவரியில் அவிசாவலையில் பிலமத்தலாவை, நோதினைச் செவ்வி கண்டனன். தன்னுடைய சூழ்ச்சிகளை விரிவாக்கமுன் நாடாள்வானின் உள்ளத்தை அறிவதே அச்செவ்வியின் நோக்கமாய் இருந்தது. திசெம்பரில் நடந்த இரண்டாம் செவ்வியில், அரசனைக் கொலைசெய்து தான் அரசுகட்டிலில் அமர்வதற்குத் துணைசெய்ய வேண்டுமென்றும், இத்துணைக்கு ஈடாக ஆங்கிலரைத் தான் நாட்டின் தலைவர்களாக்குவான் என்றும், பிலமத்தலாவை நேர்முகமாகவே நாடாள்வானைக் கேட்டனன். அதிகாரின் இவ்வேண்டுகோள்களை நாடாள்வான் ஏற்றிலன். தன்னுடன் அமைதிகொண்டொழுகும் ஓர் அரசனுக்குச் சதி செய்யும் அமைச்சனுடன் உள்ள தொடர்புகள் யாவையும் நாடாள்வான் அப்பொழுதே அறுத்திருத்தல் வேண்டும். உள் நாட்டிலேயே பிலமத்தலாவை கொண்டிருந்த

செல்வாக்கினைப்பற்றி நாடாள்வானுக்குத் தவறான முறையில் செய்தி எட்டியிருந்தது. மக்கள் வெறுத்த அயல் நாட்டுப் பொம்மை அரசனைக் கொண்டு, உண்மையில் ஆட்சி புரிந்தவன் அதிகார் எனவே ஆள்வான் நோது தெளிவாக நம்பினன். 1800 சனவரியில் அதிகாருக்கும் அரசாங்கத்துப் பதில் செயலாளனான **பொயிட்டு**க்கும் இடையில் ஒரு கூட்டம் நடந்தது. அப்பொழுது அமைச்சரின் ஆணை நிலைபெறுவதை நாடாள்வான் விரும்புகின்றான் எனவும் அரசன் தன்னையும் தன் நாட்டினையும் பிரித்தானியர் காப்பில் ஒப்படைத்துத் தலை நாட்டில் ஒரு தானையத்தை நிறுவ இணங்குவனெனில், அதிகாரின் ஆணையை அவன் மேலும் நிலைக்கச் செய்வன் எனவும் அறிவிக்கப்பட்டது. அரசனின் மெய்க்கொரு தீங்கு வரக்கூடாதென்றும் அவன் பெருமை பாதுகாக்கப்படல் வேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. மேலும் தூதுக்குழு ஒன்று நிறுவல் பற்றியும் ஆராயப்பட்டது. மீண்டும் அரசனின் பதவிநீக்கம் பற்றியும் அதிகார் தூண்டினன். இதற்கு நோது மறுத்துவிட்டனன். தான் ஏற்றுக்கொண்ட அரசன் தனக்கோர் தீங்கும் செய்யாதிருக்க அவனுக்கு எதிராக ஒன்றும் செய்ய நோது விரும்பவில்லை. அரசன் தன் அவையுடன் பிரித்தானியர் ஆள்புலத்துக்கு வரவேண்டுமென்றும், அவனின் பிரதியாளனாக அதிகார் கண்டியில் இருந்து ஆளவேண்டுமென்றும் நாடாள்வான் கூறினன். போதிய படையினர் துணைவர ஒத்துக்கொண்டாலே, ஒரு தூதினை அங்கு அனுப்புவதற்குத் தான் இணங்குவன் எனவும் நாடாள்வான் கூறினன். இத்தூதிற்கு இடந்தரல் வேண்டுமென்று அவன் அழுத்தியது அதிகாரின் சூதுகளை நீக்குவதற்கே ஆகும். இதுகாறும் நடந்தவற்றால் கீழை நாட்டு அரசியல் சூழ்ச்சியில் அதிகார் தன்னிலும் மிக்கான் என்பதை அவன் அறிந்து கொண்டனன். பெப்பிரவரி 1 இல் அதிகாருக்கும் பொயிட்டிற்கும் நடந்த செவ்வியில் அரசனை ஒரு விதத்தாலும் கொல்வதில்லை என்று தன் முடிவினை அதிகார் உறுதிப்படுத்தினன். தூதோடு துணைவரும் படையினர் கண்டியைக் கைக்கொள்வரென அதிகார் எதிர்பார்த்திருந்தான் என்பது நன்கு புலப்படுகின்றது. ஆனால் மாச்சு 4 அளவில் அத்துணைப் பெரிய படையினரைத் தலைநகரில் புக அரசன் ஒவ்வான் என அதிகார் நன்கு அறிந்து கொண்டனன் எனவே இரு பகுதியினரையும் போரிடச் செய்வதற்கு, கண்டியரின் எவ்விதச் செய்கைகள் நாடாள்வானால் மீச்செயல் எனக் கருதப்படும் என உசாவினன். அவ்வாறு பகைவினை நேரின், அவனே தூண்டியவன் எனக் கருதப்படும் என்று தெளிவாக அவனுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மாச்சு 12 இல் தளபதி **மத்தவலின்** தலைமையில் தூதொன்று புறப்பட்டது. கண்டியைப் பிடிபபதே அதன் நோக்கமெனில் ஆரம்பத்திலேயே அது தோல்வியுற்றதெனலாம். ஏனெனில் உறுவன்வெலையில் துணைப்படையின் பெரும் பகுதி நிறுத்தப்பட்டது என்க. சிறீ விக்கிரமன் உடன்படிக்கைக்கு இணங்கவில்லை. முக்கியமாக அரசு கட்டிலின் பாதுகாப்பிற்குத் தேவையெனக் கருதிய விடத்து, கண்டிக்குப் படையினரை அனுப்புதற்கு நாடாள்வான் கொண்ட உரிமை பற்றிய கூறுகளை அரசன் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு எதிரான கோரிக்கைகளை அரசவை எடுத்துரைத்தது. அவற்றுள் ஒன்று 1796 இல் அறிவின்றி ஏற்றுக்கொள்ளாது விலக்கிய பத்துக் கப்பல்கள் பற்றிய உரிமையாகும். அரசன் பிரிட்டிசாரின் ஆள் புலத்தில் வாழவேண்டுமென்ற யோசனை கூறப்பட்டதாகத் தெரியவில்லை. மீண்டும் கண்டியர், அதிகாரின் பகைவருள் ஒருவனான **இலவுகே** தலைமையோன் மூலமாக, கடற்கரைப் பகுதியில் ஒரு நிலையத்தை நிறுவ முயன்றனர். இம் முயற்சியும் பயனளிக்கவில்லை.



1802 பெப்பிரவரியில் கண்டியிலிருந்து இரண்டாம் **அதிகார் மீகத்தன்னை**யின் தலைமையில் தூதொன்று கொழும்பு வந்து சேர்ந்தது. மூன்று சிறு தீவுகளை விடல் வேண்டுமென்றும் பத்துக் கப்பல்களுக்கு உரிமை வேண்டுமென்றும் அத்தூது கோரியது. அத்தூதன் அரசனைப் பதவி நீக்கும் பிலமத்தலாவையின் ஏற்பாட்டை மீண்டும் மறைவாகக் கூறினன். ஆனால் நோது அவர்கள் கூற்றிற்குச் செவி படுக்கவில்லை. முதலாம் அதிகாருக்கும் செவ்வி கொடுக்க நாடாள்வான் மறுத்து விட்டனன. அதிகார் நேர்மையானவன் என்று, நாடாள்வான் உணரும் வழி அவன் நடந்தாலன்றி செவ்வி கிடையாதென்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. எனவே அதிகார் பிரிட்டிசாருக்கும் அரசனுக்கும் இடையில் பகைமை விளைக்க முடிவு செய்தனன். ஏப்பிரிலில் பிரிட்டிசுக் குடிகளான, புத்தளத்தில் உள்ள நாற்பதோ ஐம்பதோ சோனகர், அதிகாரின் தூண்டுதலினால் வன்முறையால் பறிக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டுக் கொள்ளை அடிக்கப்பட்டனர். இவர்க்கு அதிகாரின் முகவனே பாக்குக்களை விற்றவன் ஆவன். இந்நடவடிக்கைக்காக இழப்பீடு செய்ய வேண்டுமென அரசவைக்குப் பன் முறையும் அறிக்கை கொடுக்கப்பட்டது. ஆனால் 1803 வரை செயலின்றிக் காலம் பன்முறையும் தாழ்த்தப்பட்டது. 1803 இல் படைத்துணை கொண்டு இழப்பீட்டினைப் பெறுவதற்கும் இத்தகைய தீச் செயல்கள் மீண்டும் நடவாதிருப்பதற்குப் பாதுகாப்பொன்றினை நிறுவுவதற்கும் ஆள்வான் முடிவு செய்தனன். அரசனுக்கும் அதிகாருக்கும் இது பற்றி முறையான அறிக்கை கொடுக்கப்பட்டது. இணக்கத்திற்குரிய கட்டுரைகளும் எடுத்துச் சொல்லபபட்டன. எனினும் இவை பலன் ஒன்றும் அளிக்கவில்லை.

1803, சனவரி 31 இல் பிரிட்டிசார் படைகள் கொழும்பிலிருந்து **தளபதி மத்தவல்** தலைமையிலும், திருக்குணமலையிலிருந்து **இலெற்றினென் கேணல் பார்பத்து** என்பானின் தலைமையிலும் வெளிக்கிளர்ந்து பெப்பிரவரி 21 இல் கண்டியைக் கைப்பற்றின. அரசு கட்டிலுக்கு உரிமை கொண்டாடிப் பின் பிரிட்டிசார் ஆள்புலத்துக்கு (1798) ஓடிய **இளவரசன் முத்துசாமியை** அரசாட்சியின் வடக்கெல்லையிலும் கிழக்கெல்லையிலும் இருந்தமக்கள் நன்முறையில் வரவேற்றனர் என்பதைப் **பார்பத்துக்** கண்டனன். எனவே தலைநகருக்கு

இப்போலியுரித்தாளன் கொண்டுவரப்பட்டு மாச்சு 8 இல் இவனுக்கு முடி சூட்டப்பட்டது. பின்னர் இவன் நாடாள்வானுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனன். இந்த இணக்கத்தினுல் ஏழு கோரளைகள், தும்பனையில் உள்ள கிரிகாகமைக் கோட்டை, கலகெதரைக் கோட்டை (இவை இப்பொழுது உள்ள குருநாகல்,—கண்டி தெருவினும் திருக்குணமலைக்குள்ள தெருவினுமுள்ளன) ஆகியவை பிரிட்டிசாருக்குக் கொடுக்கப்படல் வேண்டும் என ஏற்பாடாகியது. இலங்கை அரசாங்கத்தின் இசைவு இன்றி மற்றை அரசுகளுடன் புதிய அரசன் ஒருவித தொடர்பும் கொள்ளலாகாது. பிரிட்டிசுப் படையினரை இவன் தன் துணைக்கு அழைப்பின் அவர்க்குரிய பணம் கொடுத்தல் வேண்டும். இறுதியில் இருந்த அரசனுக்கு இளைப்பாறற் சம்பளம் கொடுத்தல் வேண்டும். தேவையானபொழுது ஒரு பிரிட்டிசு அமைச்சர் அரசவையில் உறைதல் வேண்டும். முடிவாக எல்லைப்புறத்துச் சுங்க வரிகள் நீக்கப்பட்டு உள்நாட்டிற்கும் கரைசார் மாநிலங்களுக்குமிடையில் கட்டற்ற வணிகம் நிலவச் செய்தல் வேண்டும். சுருக்கமாகச் சொல்லின் கண்டி அரசாட்சியை ஒரு பிரிட்டிசுப் புரப்பகம் ஆக ஆக்குவதே இவ்வுடன்பாட்டின் நோக்கமாக விருந்தது. ஆனுல் கண்டிக்கு அயலில் உள்ள புலத்தில் முத்துசாமிக்கு ஆதரவில்லாதிருந்தது. சிறீ விக்கிரமனே இன்னும் அகப்படாது ஒளித்திருந்தான். பிலமத்தலாவையின் தூண்டுதலின் பேரில் பிரிட்டிசார் இவனைத் தேடி அங்குரங்கேதாவிற்கு வீணே சென்றனர். மாச்சு 28 ஆம் நாள் மத்தவல், முத்துசாமி, இரண்டாம் அதிகார் ஆகியோர் கூடிக்கலந்து ஆலோசித்தனர். அப்பொழுது சிறீ விக்கிரமனை அரசாங்கத்திடம் ஒப்படைத்தல் வேண்டுமென்றும், முத்துசாமி யாழ்ப்பாணத்தில் தன் அரசவையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்றும் பிலமத்தலாவைக்கு மேல் ஆணை அளிக்கப்படல் வேண்டுமென்றும், இவன் முத்துசாமிக்கு ஆண்டுக்கு ஒரு கொடைப்பணம் கொடுத்தல் வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. உடன்படிக்கையில் (இப்பொழுது உள்ள மாத்தளை நகரில் உள்ள) மத்தவல் கோட்டையும் அதைச் சூழ்ந்த மாவட்டமும் கிரிகாகமையின் இடத்தில் மாற்றப்பட்டன. இவ்வுடன்படிக்கை சிறீ விக்கிரமனை பிரிட்டிசாரிடம் கொடுத்தவுடன் செயல் முறைக்கு வர வேண்டியது. ஆனுல் இதற்கிடையில் பகைவினை உடனே ஓய்தல் வேண்டும்.

எப்பிரில் 1 இல் கண்டியிலிருந்து தளபதி மத்தவல் புறப்பட்டான். புறப்படும்பொழுது இவன் பார்பத்தின் கீழ் ஒரு தானையை விட்டுச் சென்றனன். நோயினுல் இவர்களிற் பலர் இறந்தனர். இத்தானையின் காப்பு அதிகாரியின் நல்லெண்ணத்திலேயே தங்கி இருந்தது. நோது எண்ணியவாறு இவன் அதிகாரம் அவ்வளவு வல்லமை உடையதாய் இருக்கவில்லை. தலைவர்கள் பகைவினைகளைத் தொடர்ந்து நடாத்திவந்தனர். மே 5 இல் தம்பதெனியில் பிலமத்தலாவையை நோது சந்தித்தான். அங்கு மாச்சு 28 இல் முடிந்த உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டது. தம்பதெனி புதிதாகக் கொடுக்கப்பட்ட ஏழு கோரளைகளில் இருந்தது. இச்



செவ்வியின் பின்னர் நாடாள்வானை அதிகார் கவர எண்ணியிருந்தான் என்றும் ஆனுல் நல்லமையத்தில் கண்டியிலிருந்து பார்பத்து வந்ததினுல் ஆள்வான் காப்பாற்றப்பட்டான் என்றும் பின்னர் தெரியவந்தது. இவ் வலுவலன் மே 21 இல் இறந்தான். எனவே கண்டித் தானையத்தின் தலைமையை **மேயர் தேவி** என்பான் தாங்கினுன். இவன் ஆற்றலும் உழைப்பும் அவ்வமையத்திற்கு ஏற்றனவாய் இருக்கவில்லை. மீண்டும் அதிகார் மத்தவலைக் கண்டிக்கு வருமாறு கேட்டனன். இவன் அவ்வாறே மே 23 இல் செய்தனன். ஆனுல் அமைச்சன் அங்கு வரவில்லை. மத்தவல் நோயுற்றதால் யூன் 11 இல் தலைநகரை விட்டு நீங்கினுன். இதுவே இவன் இறுதிச் செயலாய் இருந்தது. எனவே தானையத்தோர் தம்



உருவம் 32.—தளபதி மத்தவலும் பிலமத்தலாவையும் சந்தித்தல்.

1. தளபதி மத்தவல். 2. பிலமத்தலாவை. 3. மொழிபெயர்த்துரை முதலியார்.

விதியைத் தாமே அனுபவிக்க வேண்டியிருந்தது. இவர் வழித்தடை செய்யப்பட்டனர். ஐரோப்பியரோ ஒரு நாளிற்கறுவராக இறந்தனர். 700 மலாயர்களில் 450 மலாயர் படையை விட்டோடினர். யூன் 24 இல் கண்டியர் தானையத்தைத் தாக்கினர். ஆனுல் துரத்தப்பட்டனர். இவ்வமையத்தில் தேவியின் அலுவலர் மீண்டும் தொடர்ந்து எதிர்த்தல் இயலாதென்று கூறவே தானை சரண் அடைந்தது. உடனலம் உடையோர் தங்கள் படைக்கலங்களுடன் முத்துசாமியோடு திருக்குணமலைக்குப் போவதெனவும், அதிகார், நோயும் காயமும் உற்றோரை அவர்களை வெளிக்கொண்டு போகும்வரை பரிகரிக்க வேண்டுமென்றும் கூறும் ஒரு கட்டுமையின் பேரிலேயே அவர்கள் அடிபணிந்தனர். அவப்பேறுன முறையில் அவ்வமையத்தில் மகாவலிகங்கை பெருக்கெடுத்திருந்தது. இதனுல் படையினர் யாவரும் அரசனின் கண்ணேட்டத்திலேயே தங்கியிருக்க வேண்டி நேர்ந்தது.

எனவே அவன் முத்துசாமியை ஒப்படைக்க வேண்டுமென்று கோரினன். இதற்கு ஆங்கிலர் இணங்கி அற்பத்தனமான முறையில் அவனைக் கை விட்டனர். இவன் உடனே கொல்லப்பட்டான். அதன்பின் படைக்கலன் இல்லாது படைஞர் கண்டிக்குப் போகவேண்டுமென்று அரசன் பணித்தனன். படைஞர் தம் கலங்களைக் கைவிட்டதும் யூன் 26 ஆம் நாள் ஒரு பொதுப் படுகொலை நடைபெற்றது. இது கண்டியின் சுற்றுப்புறத்திலுள்ள **தேவியின் மரத்தடியில்** நடைபெற்றது. நோயுற்றோரும் காயமுற்றோரும் எலவே கொல்லப்பட்டனர். இத்தகைய மிக இழிந்த செய்கைகளுள் **நூருடீன்** எனப்படும் மலாய் அலுவலனும் அவன் உடன் பிறப்பாளனும் பிரிட்டிசார் சேவையைக் கைவிட மறுத்தபொழுது, அங்குரங்கேதாவில் அவர் கொல்லப் பட்ட நிகழ்ச்சி ஒன்றே ஒரு நல்ல கூறாக அமைந்தது. மத்தவல் கோட்டையி லிருந்த **தலைஞன் மாட்சு** இப்படுகொலையைக் கேள்வியுற்றுத் திருக்குண மலைக்குப் பின்வாங்கினன். தம்பதெனியில் உள்ள தளம் கொழும்பி லிருந்து உதவி வரும்வரை இரண்டாம் அதிகாரை எதிர்த்து நிலைநின்றது. அறவே தீவினை அஞ்சாதவன் பிலமத்தலாவை என நாடாள்வான் நன் கறிந்தும், அவனில் நல்ல நம்பிக்கைகொண்டு, பழுதுற எண்ணி மேற் கொண்ட நோதின் படை எழுச்சி பொல்லா அழிவிலேயே முடிந்தது. பல்லோர் மாண்டனர். பிணிதீரகங்கள் யாவிலும் நோயாளிகள் நிரம்பி இருந்தனர். இப்போராட்டத்தில் பற்றிக்கொண்ட நோயினால் பல்லோர் மடிந்தனர். அரசன் வெற்றி உற்றான். ஆனால் இப்படுகொலை கண்டியரின் நிலைபேற்றுக்கு அழிவைத் தருவதாய் இருந்தது.

யூலை கடைப் பகுதியில் கண்டியர் எல்லைப் பகுதிகளைத் தாக்கி வந்தனர். ஒகசு, செற்றெம்பர் மாதங்களில் பல திக்குகளிலும் இருந்து பிரித்தானிய ஆணிலங்கள்மீது படையெடுத்து வந்தனர். வரும்பொழுது நாட்டவர் பலரைத் தங்களுடன் சேருமாறு தூண்டிவந்தனர். இவர்கள் கொழும்பிலிருந்து பதினாலோ பதினைந்தோ மைல் அளவுக்குள் வந்து ஒகசு 21 இல் அன்வெலையில் இருந்த சிறு அரணைக் கைப்பற்றினர். சிறுது காலத்துள் இவ்வரண் மீட்கப்பட்டுக் கண்டியர் சீதாவகை யிற்குத் துரத்தப்பட்டனர். எனினும் கண்டி அரசவையோர்க்கு இயல்பாய் அமைந்த புறவுலகு பற்றிய அறியாமையினால், சில ஆறு இருத்தல் துவக்குகளுடன் கொழும்பைக் கைப்பற்றலாமென அரசன் நம்பியிருந்தனன். எனவே அரசன் செற்றெம்பர் திங்கள் முற் பகுதியில் அன்வெலையில் இருந்த அரணைத் தாக்கினன். இது நோயாளிகளால் காக்கப்பட்டிருந்தது. ஆனால் செற்றெம்பர் 6 இல் இவன் அறவே முறியடிக்கப்பட்டான். எனவே புறமுதுகிட்டோடித் தன் ஆட்சிப் பகுதியின் பாதுகாப்பான இடத்துக்கு வரும்வரை ஓரிடமும் தங் காமல் ஓடினான். இவ்வாறு ஓடிப்போனவனை அவப்பேறான முறையில் முன்னோடி முந்தினான் **இலவுகே** என்பான். இவ்வாறு இவன் தன் மடத் துணிவினால் உயிரை இழக்க நேர்ந்தது. கண்டியர் சேவையில்



சேரும்படி நெருக்கப்பட்டுச் சேர்ந்திருந்த 150 வங்காள இலசுகரின் மாரும் சென்னை இலசுகரின்மாரும் கண்டியர் சேவையைக் கைவிட இவ்வமையத்தைப் பயன்படுத்தியதால் பிரித்தானியர் அவர்களை மீட்டுக்கொண்டனர். இதன் பிறகு புதுப்படைகள் வந்து சேரும்வரை அரசன் ஆள்புலத்தில் ஆங்காங்கு அவ்வப்போது புகுந்து, இயன்ற அளவில் அதை அழிக்கும் அளவிலேயே பகைவினைகள் இருந்தன. 1804 பெப்பிரவரியில் **தளபதி உவெமிசு** என்பான் மத்தவலைப் பின்பற்றினான். பகைவனின் நாட்டிற்கு அளப்பெரும் அழிவும் கேடும் விளைக்கும் நோக்கமாக எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒருமுகத் தாக்குதல் மேற்கொள்ள வேண்டுமென்று முடிவாக்கப்பட்டது. இதன் பொருட்டு செற்றெம்பர் 28, 29 ஆம் நாட்களில் படைகள் கண்டியில் கூடவேண்டு மென்றும் முடிவு செய்யப்பட்டது. எனினும் இப்படை எழுச்சித் திட்டம் கைவிடப்பட்டது. ஆயினும் அளித்த கட்டளைகளில் தெளிவின்மை காரண மாக மட்டக்களப்பிலிருந்து **தலைவன் யோன்சன்** புறப்பட்டுக் கண்டியைக் கைப்பற்றினான். ஆயினும் தனக்குத் துணை இல்லை என அறிந்ததும் எண்பத்து இரண்டு ஐரோப்பியரையும் 202 சிப்பாய்களையும் கொண்ட ஒரு படையுடனேயே போரிட்டவாறு திருக்குணமலை சென்றனன். இவர்களுள் இறந்தோரும் காயமுற்றோருமாக 71 பேரை அவன் இழந்தனன். எஞ்சிய வருள் நோயிலிருந்தும் பிழைத்தவர் சிலரே. இடையீடிட்ட போர் 1805 பெப்பிரவரி வரை தொடர்ந்து நடந்தது. இக்காலத்தில் பிரிட்டிசு ஆள் புலத்தில் படைச் சட்டம் செயல் முறையில் இருந்தது. இக்காலத்தின் பின்னர் கண்டியர் பரந்த ஒரு படையெடுப்பைக் கைக்கொண்டனர். இவர்கள் ஒரே ஒரு வெற்றியே அடைந்தனர். கடுவலையில் இருந்த சிறு எல்லைப் புறக்கோட்டையைத் திடுக்கிடும் முறையில் தாக்கி வெற்றி கொண்டதே அவ்வெற்றியாகும். இதன்பின் பிரிட்டிசாருக்கு ஏராளமான புதுப்படைகள் வந்து சேர்ந்தன. அரசனும் பெரியம்மை நோயுற்றான். கண்டியர் பெரும் சோர்வுற்றதினால் பகைவினைகள் மறைமுகமாக நிறுத்திவைக்கப்பட்டன.

நோதினுடைய தடுமாறும் வன்மையற்ற கொள்கையைப்பற்றி நாம் ஒன்றும் கூறல் முடியாது; அவனுக்கு ஒரு கொள்கை இருந்ததோ என்பதும் ஒரு கேள்வி. இவன் கொள்கை வெற்றி பெற்றாலும் அதை ஏற்புடையதென்று சொல்லல் முடியாது. இந்தியாவில் பிரிட்டிசு அரசாங்கத்தை ஒரு மேலாண்மை நிலைக்கு உயர்த்திவிட வேண்டுமென்று **உவெலசிலி** கொண்ட கொள்கையையே இவன் கொண்டிருந்தான். இதற்காக எத்தகைய வழிகளைக் கைக்கொள்ளல் வேண்டும் என்பதைப்பற்றி அவன் கவற்சி காட்டினதாகத் தெரியவில்லை. அரசனின் அதிகாரத்தைப்பற்றியோ கண்டியர் நாட்டில் பிலமத்தலாவை கொண்டிருந்த நிலையைப்பற்றியோ இவன் ஒன்றும் அறிந்திலன். ஆயினும் அதிகாரின் குணவியல்பு பற்றி இவன் நன்கு அறிந்திருந்தான். எனினும் அவ்வமைச்சனில் நம்பிக்கை கொண்டு 1803 இல் படைச் செலவை மேற்கொண்டு வெற்றி பெறலாமென

இவன் எண்ணினன். தொடக்கத்திலேயே அதிகாரின் சூழ்ச்சிகளுக்கு இணங்க அறவே மறுத்தலே கடைப்பிடிக்க வேண்டிய நேரிய ஒரு கொள்கையாகும். பிலமத்தலாவையின் கொள்கையோ நீள்காலம் மாறுவியல்புடையதாய் இருந்தது. பிறநாட்டுக் குலமுறையை அகற்றித் தன்னை முதன்மையில் வைத்தலே அவன் கொள்கை ஆகும். ஆயினும் மற்றைத் தலைவர்களின் பெருமையை நீக்கிக்கொள்ள அவனால் முடியவில்லை. அரசனும பிலமத்தலாவை எண்ணியிருந்ததிலும் கூடிய ஆற்றலைக் காட்டினன். தான் அரசு கட்டிலைப் பெற்றதும் பிரிட்டிசு அரசாங்கமும் எறிந்துவிடக் கூடிய ஒரு கருவியே என அவன் கருதினன். எனினும் 1803 இல் நடந்த படுகொலைக்கு அவன் காரணனாய் இருந்தான் என்று தோன்றவில்லை. அது அரசனின் செயலே.



உருவம் 35.—பிரிட்டிசுச் சதூய்வர், 1801.

### 10 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

ஓரிஞ்சு இளவரசனின் முடங்கல் **இடச்சுத் தொல்லேட்டறிக்கை**, ப. 138 இல் கொடுக்கப்பட்டுள்ளது. பெப்பிரவரி இரண்டாம் தேதி கொண்ட கடற்படை, நிலப்படை ஆணையர்க்குக் கட்டளை அளிக்கும் அறிவுறுத்தல்கள் இலங்கையை எட்டவில்லை.

உவெலசிலி கையெழுத்துப் படிகளிலிருந்து சுருக்கங்கள் **இலங்கைக் கல்வித்துறைப் பதிவேடு**, ii. ப-ள். 124 தொடர் ஆகியவற்றில் காணலாம்; **இலங்கை விவரக் குறிப்பு**, யேமிசு கோடினர், 1807 ; **இந்தியா, இலங்கை ஆகியவற்றில் யாத்திரை**, பிரபு வலன்றிய, 1809 ; **கண்டிப் படையெடுப்பிற்குப் போந்த ஒரு பட்டாளத்தின் செயல் பற்றிய கதை**, 1804, மேயர் யோன்சன், 1810. **இலங்கையின் கம, வணிக, வாரி அலுவல்பற்றிய குறிப்பு**, எ. பேட்டோலசி, 1817 ; **இலங்கையின் உள்நாடு பற்றிய கணிப்பு**, யோன் தேவி, 1821 ; **இலங்கையில் பதினோராண்டுகள்**, மேயர் போபசு, 1840 ; **இலங்கை**, எச். மாசல், 1846 ; **இலங்கை**, சேர் யேமிசு எமேசன் தெனன், 1859 ; **இலங்கைக் கரைசேர் மாநில வரலாறுபற்றித் தொகுக்கப்பட்ட தாள்கள், 1795—1805**, எல். யே. பி. தேணர், 1923 ; மகா அதிகார் பிலமத்தலாவை ; அவனின் அரசியல் சூழ்ச்சிகள் 1798—1803, எல். யே. பி. தேணர், இ. தொ. iii. ப. 219.



அதிகாரம் 11

# பிரிட்டிசார் பாலனம், 1805-1833

1805, யூலை 19 இல் **சேர் தோமசு மேதிலந்து** (1805-1812) நோதைப் பின்பற்றி ஆள்வானானன். கண்டி அரசவையுடன் ஒரு தொடர்பும் இவர்கள் கொண்டிருக்கவில்லை. ஆயினும் இரு பகுதியாரும் மீச்செலவைக் கைக்கொள்ளவும் இல்லை. தன் தலைவர்களின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென்ற கொள்கைக்கிணங்க 1808 இல் அரசன் ஏழு கோரளைகளையும் இரு மாநிலங்களாகப் பிரித்து அவ்விரண்டிற்கும் **எகலேப்பொலை**யையும் **மொலிகொடை**யையும் அதிபர்களாக அமர்த்தினன். இப்புதிய ஏற்பாட்டினால் மக்கள் அமைவின்மை கொண்டனர். எல்லாச் சேவைகளும் இரண்டு மடங்காக்கப்பட்டதினால் இவ்வமைவின்மை கலகத்தைத் தோற்றியது. இவ்வெழுச்சியைப் பிலமத்தலாவையும் அவன் மருமகன் **இரத்துவத்தை**யும் அடக்கிவிட்டனர். முதல் அதிகாரின் வெற்றி, அரசனின் பொறாமையையும் கரவையும் கிளப்பிவிட்டது. எனவே முதலதிகார் அவமதிக்கப்பட்டான். இதனால் இவன் தன் அரசனைக் கொலைசெய்யச் சூழ்ச்சி செய்தான். ஆனால் வேளைக்கு முந்திய ஒரு எழுச்சியினால் இச்சூழ்ச்சி வெளிப்படவும் அரசன் அவனுக்கு இறப்புத் தண்டனை அளித்தனன். 1811 இல் பிலமத்தலாவை தலை வெட்டப்பட்டான். பிலமத்தலாவையைப் பின்பற்றி **எகலப்பொலை** முதல் அதிகார் ஆயினன்.

உண்ணாட்டு அலுவல்களில் **மேதிலந்து** தனக்குமுன் இருந்தவரின் நிலக் கொள்கையை மாற்றி அமைத்தனன். சேவை நிலங்களைக் கொண்டிருந்தோர் முன்னாளில் அளித்த சேவைக்குப் பதிலாக அமைக்கப்பட்ட கூலிப் பட்டாளத்தினரின் செலவு, அந்நிலங்களினால் பெற்ற வருவாயினும் கூடியதாய் இருந்தது. இதனால் அரசாங்கத்துக்குரிய இழப்புப் பெரிதாய் இருந்தது. வரி இறுப்பது மக்கட்குத் துன்பத்தை அளித்தது. இதனாற் பயிர்ச் செய்கை குன்றியது. மக்களோ பெற்ற புதிய விடுதலையைப் பயனற்ற வழியில் கழித்தனர். இதனால் குற்றம் மிகுந்தது. சுருங்கச் சொல்லின் நோதின் கொள்கை காலத்துக்கு முந்தியதாய் இருந்தது. எனவே பழைய முறைமை மீண்டும் நிலைநாட்டப்பட்டது. கொழும்பு, கொழும்பு மாவட்டம் ஆகியவை தவிர்ந்த பிற இடங்களில் ஐரோப்பியருக்கு நிலங் கொடுத்தல் தடைசெய்யப்பட்டது. 1811 இன் நீதிமுறை ஆணவத்தின் பெயரால் எல்லாப் பிரிட்டிசுக் குடிகளுக்கும் நடுவர் முறை உசாவலுரிமை அளிக்கப்பட்டது. மாநில மன்றுகளும் நீக்கப்பட்டு இலானிராட்டுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இந்நடவடிக்கை அடுத்த ஆண்டில் மீண்டும் மாற்றப்பட்டது. இடச்சுக்காரரால் கத்தோலிக்கர் மீது விதித்த கட்டுப்பாடுகள் 1806 இல் நீக்கப்பட்டன. இவ்வாண்டிலேயே முதன் முதலாகப் பொலிசு விதானைமார் அமர்த்தப்பட்டனர். பொலிசு விதானைகள் என்போர் பொலிசுக்

கடமைகள் ஆற்றும் விதானைமார் ஆவர். மேயர் தேவி தப்பி ஓடுவதில் மேதிலந்து காட்டிய கவற்சியின்மை அவனுக்கு நல்ல பெயரை அளிக்கவில்லை.

**சேர் உரபெட்டு பிரவுன்றிக்கு (1812-1820)** 1812, மாச்சு 11 இல் அரசாங்கத்தின் பொறுப்பை மேற்கொண்டான். இவ்வாண்டில் முதலாவது தாவரவியற் பூங்காவை நிறுவியதைத் தவிர்ந்து பிரிட்டிசார் ஆள்புலத்தில் சிறப்பாக வேறொன்றும் நடைபெறவில்லை. பிரவுன்றிக்கின் ஆட்சி முழுவதும் கண்டியர் பிரச்சினையோடு கழிந்தது.

1814 இல் அரசன் தன் தலையோர்மாரை மாவட்டங்களுக்கு அனுப்பினன். அவர்களுள் எகலப்பொலை அதிகார் சபரகமுவாவிற்கு அதிகாராகப் போயினன். இவனைப்பற்றி அரசன் கரவு கொண்டிருந்தனன். இவன் ஆட்சியைப் பற்றிப் பல முறையீடுகள் அரசனுக்கு எட்டின. அரசன் எகலப்பொலையைக் கண்டிக்கு வருமாறு பணித்தனன். தன் தலைவனின் குணவியல்பை அறிந்து அவன் போக மறுத்துக் கலகம் செய்தனன். மொலிகொடை அவன் பதவிகள் யாவற்றையும் ஏற்றுக் கலகத்தை அடக்கினன். மே திங்களில் எகலப்பொலை பாதுகாப்பின் பொருட்டு பிரிட்டிசார் ஆள்புலத்துக்கு ஓடிப்போயினன். தனக்குத் தீங்கு இழைத்தோனைத் தண்டிக்க முடியாத காரணத்தால் அரசன் தன் பொல்லாக் குணத்தை அடக்க முடியாதவனாய் எகலப்பொலையின் மனைவி, சிறு குழந்தைகள், உறவினர் யாவரையும், படுகொலை செய்தனன். கொடுமைகள் பலவற்றைக் கண்ணால் கண்டு பழகிய கண்டியரே கண்டு பதைத்திடும் முறையில் படுகொலை செய்தனன். இத்துடன் அரசன் அமைவு கொள்ளாது 1808 இல் எழு கோரளைகளில் நடந்த கலகங்களைப் பற்றியும் ஆய்ந்தனன்.

ஆனால் அரசனுக்குரிய காலமும் வந்துவிட்டது. பிரிட்டிசு அரசாங்கத்தினர், அரசனின் தலையோர்கள் அரசன் மீது கொண்டிருந்த வெறுப்பை உணர்ந்து, **மொலிகொடையையும்** தங்கள் பால் ஈர்க்க முயன்றனர். நவம்பர் திங்களில் பிரிட்டிசுக் குடிகளான பத்து வணிகர் மூன்று கோரளைகளில் கொள்ளை அடிககப்பட்டு ஒற்றர் எனக் குற்றம் சாட்டப்பட்டனர். பின்னர் அவர்கள் உறுப்பறுக்கப்பட்டனர். அவ்விடத்திலேயே எழுவர் இறக்க, எஞ்சியோர் கொழும்பிற்கனுப்பப்பட்டனர். இப்பொல்லாச் செயல் ஒரு மீச்செலவெனக் கருதப்பட்டுப் போருக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன. சென்னையில் இருந்து இங்கு வந்திருந்த படையினர் மீண்டும் இந்தியாவிற்கழைக்கப்பட்டதாற் போர் எழுகை ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் 1815 முற்பகுதியில் படையினர் போருக்கு எழுந்தனர்.



கொழும்பு, காலி, திருக்குணமலை ஆகிய இடங்களிலிருந்த அரண்களினின்றும் இவ்விரண்டு பிரிவுகளும் மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து ஒவ்வொரு பிரிவும் சென்றன. சனவரி 10 இல் கண்டியர் சீதாவகை ஆற்றைக் கடந்து பிரிட்டிசார் ஆள்புலத்துள் எகலப்பொலையின் ஆட்களைக் கலைத்துச் சென்றனர். இங்கு அவர்கள் ஒரு வீட்டைக் கொழுத்தினர். இதுவே முதல் நடந்த பகைவினை. அன்றே போர் தொடுக்கப்பட்டது. பத்துப் பிரிட்டிசுக் குடிமக்கட்கு இழைத்த கொடுவினை, ஒரு விதத்திலும் தணியா அரசனின் பகை, அமைவின்றி இடர் சூழ்ந்திருந்த நிலையை முடிவாக்குதற்கு அரசாங்கத்தோடு யாதாயினும் ஓர் உடன்பாட்டுக்குவர அரசன் இணங்காமலிருந்தமை ஆகிய காரணங்களுக்காகவே போர் என ஆங்கிலர் கூறினர். பிரிட்டிசார் குடியிருப்புக்களில் நிலையான அமைதியை நாட்டுதலும், பிரிட்டிசார் புகழை நிறுவுதலும், கண்டியரை வருத்துவோரிடமிருந்து மீட்பதும், மலபார் ஆளுகையை நீக்குவதும் பகைவினைகளின் நோக்கங்களாய் இருந்தன. தலையோர்கள் தங்கள் பெரு நிலங்களில் தொடர்ந்து இருக்கலாமென ஆள்வான் அவர்கட்கு உறுதி கூறினன். பிரவுன்றிக்கு துணைவரச் சென்ற படைப் பிரிவு மூன்று கோரளைகள், நாலு கோரளைகள் ஆகியவற்றிற் கூடாகச் சென்றது. இதற்கு எதிர்ப்பொன்றும் இருக்கவில்லை. மொலிகொடை எதிர்ப்பதுபோல் நடிக்க ஒழுங்குபடுத்தி இருந்தான். ஆனால் விரைவில் தன் மாநிலமாகிய நாலு கோரளைகளையும் ஆள்வானுக்குக் கையளித்தனன். பிரிட்டிசார் பெப்பிரவரி 14 இல் கண்டியைக் கைப்பற்றினர். நாலு நாட்களுக்குப் பின் எகலப்பொலையின் ஆட்கள் அரசனைச் சிறைப்பிடித்தனர்.

அரசன் கொழும்பிற்கு அனுப்பப்பட்டான். பின்னர் அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டான். அங்கிவன் 1832, சனவரி 30 இல் இறந்தான். அப்பொழுது அவனின் அகவை ஐம்பத்திரண்டு ஆகும். அவன் ஒரே மகன் மகப்பேறின்றி 1843 இல் இறந்தான். தீவினை அஞ்சாப் பிலமத்தலாவையால் தன் இளம் வயதிலேயே அரசனாக்கப்பட்ட இம்மன்னன் சிறிது காலத்துக்கு அதிகார் கண்கள் துணையின்றி ஒன்றையும் கண்டானில்லை. விரைவில் தன்னைக் கொல்ல அல்லாவிடினும், அரசுகட்டிலிலிருந்து தன்னை நீக்குவதற்குச் சூழ்ச்சிகள் நடைபெறுவதை அவன் அறிந்தான். இவ்விடரினின்றும் தன்னைக் காப்பாற்றுவதில் அவன் வெற்றி கண்டானெனினும் சூழ்ச்சி செய்யும் தலைவர்கள் பலர் தன்னைச் சூழ்ந்திருந்ததைக் கண்டு இடையறாப் பயமும் ஐயமும் கொண்டவனாய் அவன் விளங்கினான். இரவில் இரு யாமங்களுக்கு ஒரே அறையில் அவன் துயின்றதில்லை. இதனாற்போலும் கள் குடிக்கும் பழக்கத்தை அவன் மேற்கொண்டான். இதனால் அவன் குருதிவெறி பிடித்த கொடுங்கோலனாகினன் அவன் தண்டனைகள் வழக்கத்தில் உள்ளவைக்கு மாறாக இருந்தன அவன் பௌத்த குருமாரையும் தலை வெட்டினன். அவன் செய்த பணி **கண்டிக் குளம், எண்கோணம்,** மற்றைக் கட்டிடங்கள் ஆகியவற்றை நிறுவியதாகும்.



உருவம் 34.—சிறீ விக்கிரம இராசசிங்கன், கண்டி அரசன், 1798–1815.



இவையாவும் 1803 இன் பின் கட்டப்பட்டவை. அக்காலத்தில் அவன் தலையோர்கள் நடுக்கீழ்த்தர வகுப்பார்களை வருத்தி வந்ததை அவன் தடை செய்து அவ்வகுப்பார்களின் உரிமையைக் காக்க முன்வந்தான் என்பது இங்கு குறிப்பிடவேண்டிய தொன்றாகும். அவன் தன் தலையோர்களின் ஆற்றலைக் குறைப்பதைக் கருத்தில் கொண்டிருந்தான். இவ்வாறு செய்வதில் ஆற்றல் மிகுந்த பல குடும்பத்தினரின் வெறுப்பினை அவன் தேடிக்கொள்ள நேர்ந்தது. அவனைத் தொலைக்க வேண்டுமென்னும் அவர்களின் ஆவல் அவனளவில் நில்லாமல் அவன் மனைவரைக்கும் சென்றது. இத்தலையோர்களிற் பலர் அவன் மனைக்கோ கடப்பாடுடையவர்களாய் விளங்கினர். இவர்களை அவன் புறக்கணித்திராவிடில் 1815 இல் நடந்த படைச் செலவும் வெற்றியடையாது போயிருக்கலாம். நிலைமை இவ்வாறு இருந்தமையாலேயே கண்டியர் மாநிலம் பற்றிய ஏற்பாட்டின் அலுவல் முறை வெளியறிக்கை பின்வருமாறு கூறுகின்றது. “ தலையோர் அழைப்பு வழிச்செலுத்த மக்களின் ஆர்வம் வரவேற்க மாட்சிமைதங்கிய பிரித்தானிய மன்னரின் படைகள் கண்டியர் ஆள்புலத்துள் புகுந்து தலைநகரை ஊடறுத்தன. உண்மாநிலத்தரசன் அவர் கைப்பட்டனன் ; அரசும் மாட்சிமை உடையான் பதிலர் வயமாயது ”.

கண்டியர் வேண்டுகோட்கு ஆள்வான் இசைந்தனன் ; 1815, மாச்சு 2 இல் மேன்மை தங்கியோன் நாடாள்வான் ஒரு பாலும் மக்களுக்குப் பதிலாக விளங்கும் தலையோர் ஒரு பாலுமாகக் கண்டியில் மாநாடு ஒன்று கூடியது. இதில் அரசன் பதவி நீக்கம் செய்யப்பட்டு அவன் குலமுறையாரும் அரசுரிமையில் நின்றும் நீக்கப்பட்டனர். தலையோர்க்கு அவர் உரிமைகளும் பேறுகளும் தொடர்ந்து நிலைபெறுமென்றும் உறுதி அளிக்கப்பட்டது. பௌத்த மதம் போற்றப்படல் வேண்டுமென்றும் முடிவாக்கப்பட்டது. கண்டி மாநிலத் தாட்சி ஆணையாளர் பீடமொன்றிற்கு[1] அளிக்கப்பட்டது. இப்பீடத்தில் பதியாள்வானுனை யோன் தி ஒயிலி நீதிமுறை ஆணையாளர், வாரி ஆணையாளர், படையாள், அலுவலர் ஆகியோர் உறுப்பினராய் இருந்தனர். இவருள், இவ் யோன் தி ஒயிலி இங்கு செய்த, சேவைக்காகப் பின்னர் பரனற்றுப் பட்டம் பெற்றான். இவனும் அதிகாரிகளும் முக்கிய தலையோரும் சேர்ந்து நீதிப் பெருமன்றாய் அமைந்தனர். இப்பெருமன்றின் பின்னர் ஆள்வாரே மேல் விண்ணப்பத்தை ஆராய உரியவர். நாட்டு ஆட்சி முறைமை பாதுகாக்கப்பட்டது. எனினும் ஊவா, சபரகமுவா, மூன்று கோரளைகள் ஆகியவற்றில் இருந்த ஆட்சிமுகவர் மேற்பார்வைக்குக் கீழேயே முறைமை அமைந்திருந்தது. மொலிகொடை முதலதிகாரகத் தொடர்ந்துதான். பணியாற்றினன். எகலப்பொலை அரசுகட்டில் ஏறலாமென நம்பி இருந் எனவே பதவி ஏற்க மறுத்தனன்.

[1] Board of Commissioners

ஆயினும் புதிய பாலனம் புறநாட்டினதாய் இருந்ததால் மக்கள் அதை உவக்கவில்லை. தலைமுறை தலைமுறையாய் ஊழலுக்குப் பழக்கமாக வந்தவர்கள் இவர்கள் ; பேறு, சாதி என்பவை கணிக்கப்படாது நடுநிலை முறை வழங்கிய இயல்பு இவர்க்கொரு பொல்லாத் தீங்கென விளங்கியது. பழைய முறைமை தவறிலா வழியில் நிலைநாட்டப்பட்டு வந்தாலும் தலையோர் நடைமுறையில் அரசாள் முகவர்க்கும், ஒவ்வொரு படை அலுவலர்க்கும் கீழ்ப்படிவுடையவர்களாய் இருந்தமையால் இந்நிலைமையால் மிகவும் பாதிக்கப்பட்டனர். தனி ஒரு மனிதன் என்ற முறையில் பிரிட்டிசாரை மக்கள் வெறுக்கவில்லை. ஆயினும் அவர்கட்கிடை ஒத்துணர்விருக்கவில்லை. சிறப்பாக, சமயம் பற்றிய விடத்து ஒத்துணர்வு அறவே, காணப்படவில்லை. கண்டியரைக் கொடுங்கோலன் ஒருவனிடம் இருந்து காப்பாற்றிய அப்புற நாட்டவன், தான் வந்த வழியே போதல் வேண்டும் என்பதே மக்களின் பேரவாவாய் இருந்தது. 1815 ஆம் ஆண்டிலேயே மாநாட்டு இணக்கத்தை நேர்மையுடன் தலையோர் கைச்சாத்திடவில்லை என்ற கருத்து நிலவியது. சிறப்பாக அரசு கட்டிலைத் தனக்தப் பெறமுயன்று அதிலே தவறியதால் எகலப்பொலை மிகவும் மனம் குன்றி இருந்தான். இவ்வுண்மையிலேயே புதிய ஆட்சிக்கு ஒரு காப்பு இருந்தது. சிறிது காலத்திற்கேனும் தலையோர் எகலப்பொலையினும் பிரிட்டிசாரை விரும்பினர். தம்மை ஒத்தான் ஒருவன் அரசாணை கொண்டு விளங்குவதை அவர்கள் ஏற்க விரும்பவில்லை. வழக்கமாக அவர்களிடை விளங்கும் பொறாமை, அழுக்காறு யாவும் படை வலிமை கொண்டு பிரிட்டிசாரை வெளி அகற்றுவதற்கு நன் முறையிற் சூழ்ச்சி செய்ய முடியாமல் தடுத்து விட்டன. உண்மையான கிளர்ச்சி வந்தபொழுது அது தற்செயலான காரணங்களால் ஏற்பட்டதேயாகும்.

வெல்லசாவில் கலகம் முதல் தோன்றியது. அவ்விடத்துச் சோனகர்கள் புறம்பான அவரினத்துத் தலைமைக்காரன் ஒருவனின் தலைமையில் இருந்தனர். அம்மாவட்டத்துச் சிங்களரோ மனவமைதி இழந்து இருந்தனர். 1817 செற்றெம்பரில் காட்டில் புத்தியல்புடைய குரு ஒருவர் தோன்றினார். பதுளையில் இருந்த துணைப்பதியாள்வானான **உவில்சன்** அக்குருவைச் சிறை செய்யுமாறு சோனகர் குழாம் ஒன்றை அனுப்பினன். சிறைப் பிடிப்புக்கு எதிர்ப்புக் காட்டப்பட்டது. நாட்டு மக்கள் ஆட்சி ஆணைக்கு " மாறு கொண்டிருப்பதை " உவில்சன் கண்டான். அக்குருவோ அரசகுலத்தொருவன் என நடித்தான். உவில்சன் செற்றெம்பர் 16 இல் கொல்லப்பட்டான். இக்கலகம் ஊவா, வலப்பனை ஆகிய இடங்களுக்கும் பரவியது. இவ்வியக்கத்தை அடக்க அனுப்பப்பட்ட ஊவா திசாவையான கெப்பிற்றிப்பொலை கலகச்காரருடன் சேர்ந்தான். மக்களின் ஒத்த உணர்ச்சி நன்கமைந்த இயக்கம்போல் செயலாற்றியதால் இக்கலகத் தீ எங்கும் பரவியது. இதனால் 1818, பெப்ரவரி 21 இல்



கண்டியர் மாநிலங்கள் படைச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. அடுத்த திங்களில் சபரகமுவாவின் கீழ்ப்பகுதி, மூன்று கோரளைகள், நான்கு கோரளைகள், கண்டிக் கருகாமையிலுள்ள இரு சிறு பிரிவுகள் ஆகிய பகுதிகளே பிரிட்டிசு ஆட்சியில் பற்றுறுதி கொண்டிருந்தன. மொலிகொடையைத் தவிர்ந்த மதிப்புக்குரிய தலையோருட் சிலர் சிறையில் இருந்தனர் ; மற்றையோர் கலகம் செய்தனர். எகலப்பொலையும் அவ்வாறே. இவன் மாச்சு 3 இல் சிறையாக்கப்பட்டான். நிலைமை பொல்லாததொன்றாய் இருந்தது. அதனால் ஒருபொழுது உண்ணாட்டில் இருந்து பின்வாங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டன என்று கூறப்பட்டது. இந்நிலைமை மொலிகொடையின் பற்றுதியாலேயே சீர்ப்படுத்தப்பட்டது. இவன் கண்டிக்குரிய வீதியைத் தடை நீக்கித் திறந்து வைத்திருந்தான். இவன் எகலப்பொலையின் பகைவனாய் இருந்தமையால் பிரிட்டிசார் ஆட்சியே தன் காப்பெனக் கருதினன். மே, யூன், யூலை திங்கள்களில் போரின் முடிவு ஐயத்தில் இருந்தது. ஆனால் அடுத்த இரு திங்கள்களிலும் பறந்தோடும் தலையோரைக் கலைத்துச் செல்லும் நிலையிலேயே படையினர் இருந்தனர். ஓகசு கடைசியில் **மடுகலை** போலியுரித்தாளன் பக்கம் சேர்ந்து அவனின் இரண்டாம் அதிகார் பதவியை ஏற்றனன். ஆனால் விரைவில் அவ்வுரித்தாளன், **உவில்பாவே** எனும் பெயரிய ஒரு முன்னைநாட் குரு என அவன் கண்டனன். எனவே அவன் அக்கபடனையும் கெப்பிற்றிப்பொலையையும் சிறையாக்கினன். உவில்பாவேயின் உண்மைப்பாடு வெளியாக்கப்பட்டதும் அவன் விடுதலை ஆக்கப்பட்டான். இவன் பிரிட்டிசார் கைக்கும் தப்பி எங்கோ ஓடி மறைந்தனன். இவனை 1829 வரை பிரிட்டிசார் பிடிக்கவில்லை. தொடர்ந்து எதிர்ப்புக் காட்டுவதால்பஞ்சத்தைத் தவிரத் தாம் வேறொன்றும் பெறமுடியாதென்பதை மக்கள் உணரத் தொடங்கவும், பகைவினைகள் ஓய்ந்தன. ஒற்ரோபர் 30 இல் கெப்பிற்றிப்பொலை சிறையாக்கப்பட்டான். நவம்பர் 1 இல் மடுகலை சிறையாக்கப்பட்டான். கலகம் இப்பொழுது வீழ்ந்தது. இரு கலகத் தலைவர்களும் நவம்பர் 26 இல் தலைவெட்டப்பட்டனர். 1825 இல் மொரிசுத்தீவுக்கு அனுப்பும்வரை எகலப்பொலை கொழும்பில் இருந்தான் ; அங்கு இவன் தன் ஐம்பத்தாறும் வயதளவில், 1829 ஏப்பிரிலில், இறந்தான்.

கலகத்தை அடக்கு முகத்தால் நாட்டிற் பேரழிவு ஏற்பட்டது. சிறப்பாக ஊவாவில் இது காணப்பட்டது. பிரிட்டிசார் பக்கத்தில் படையினருள் இறந்தோர் ஏறக்குறைய 25 சத வீதமாய் இருந்தனர். பெரும்பாலும் இறந்தோர் நோயினாலேயே இறந்தனர். இதனால் விளைந்த முக்கிய அரசியல் விளைவு உண்ணாட்டுப்பகுதியில் அரசாட்சி மாறியதேயாகும். 1815 ஆம் ஆண்டு மாநாட்டு இணக்கம் கண்டியரால் வேண்டுமென்றே அழிக்கப்பட்டது. பழைய முறைமையைக் கைக்கொண்டு ஆள்வது கடினமானது என்பதைச் செயல் முறையில் கண்ட அரசாட்சியார் அதற்கேற்பப் பழைய காணியாட்சி முறையை நீக்கினர். இதனாற் பல இடங்களில் தெருக்கள்,

8——J. N. R 23294 (1/60)

பாலங்கள் கட்டும் வேலைகளில் மட்டும் உடற்சேவை செய்யும் முறையை வைத்திருந்தனர். இவர்களிடத்தில் நெல் விளைவின் பகுதியில் ஒரு வரியை அது விதித்தது. இன்னும் இவர்கள் நாட்டின் ஆட்சியைப் பிரிட்டிசு அலுவலர் கையில் ஒப்படைத்தனர். கோயில்கள் முன் நடைபெற்றவாறே தொடர்ந்து நடைபெற்றன. தலைமைக் குருமாரையும் குடிக்குழுத் தலைமைக்காரரையும் அமர்த்தல், முடியின் பொறுப்பில் இருந்தது. வருங்காலத்தில் வேண்டிய மாற்றங்களைச் செய்யும் உரிமையையும் அரசாங்கம் தனக்கே உள்ளதெனக் கொண்டது. 1819, பெப்பிரவரி 12 இல் கண்டிய மாநிலங்களில் படைச் சட்டம் நீக்கப்பட்டது. தொடர்ந்து வந்த காலத்தில், 1820, 1823, 1824 ஆகிய ஆண்டுகளில் சிறு குழப்பங்கள் நடந்தன; மற்றைக் காலத்தில் அமைதி கலையாது நிலைபெற்றது.

1820, பெப்பிரவரி 1 தொடக்கம் **சேர் எட்டுவேட்டு பாண்சு** பதில் ஆள்வான் என்ற முறையில் அரசாட்சியை நடாத்தி வந்தான். அடுத்த ஆண்டில் குருநாகலிலிருந்து கண்டிக்குள்ள தெரு முடிவாக்கப்பட்டது. 1822, பெப்பிரவரி 2 இல் பதில் தளபதி சேர் எட்டுவேட்டு பசற்று ஆள்வான் ஆனான். இவன் ஆட்சிக் காலத்தில், 1823, ஒற்ரோபர் 26 இல் மூத்தோன் மொலிகொடை இறந்தான். அடுத்த ஆண்டு சனவரி 18 இல் சேர் எட்டுவேட்டு பாண்சு பதவியேற்றுப் போக்குவரத்துக்களை நிறுவும் தன் கொள்கையைத் தொடர்ந்து ஆற்றி வந்தான். கொழும்பிலிருந்து கண்டிக்கு இப்பொழுதுள்ள தெரு 1825 இல் முடிவாக்கப்பட்டது. கண்டியிலிருந்து வடக்கே உள்ள தெரு 1831 இல் மாத்தளையை அடைந்து, தம்பளையை 1832 இல் அடைந்து, 1833 இல் திருக்குணாமலை மாவட்ட எல்லை வரை சென்றது. பதில் ஆள்வானான சேர் யோன் தி ஒயிலி 1824, மே 25 இல் இறந்தான். இவன் சிங்களம் கற்றறிந்தோனாய் விளங்கினான். கண்டியர் அலுவல்கள் பற்றிப் பரந்த ஆழ்ந்த அறிவுடையவனாய் அவன் இருந்தமையால் அவனைப் பின் தொடர்ந்து கடமையாற்றக்கூடிய அவனோடொத்தவனைக் காண இயலாததாய் இருந்தது. எனவே அவன் பதவியில் பின்பு ஒருவரும் அமர்த்தப்படவில்லை. பாண்சின் ஆட்சிக் காலத்திலேயே கோப்பிச் செய்கை உண்ணாட்டிற் புகுத்தப்பட்டது. 1831, ஒற்ரோபர் 23 இல் **சேர் உரபெட்டு டபிள்யு. ஒட்டன்** (1831–1837) என்பான் இவனைப் பின் தொடர்ந்து பதவி ஏற்றான். 1829 தொடங்கி **மேயர் கோல்புறூக்கு** என்பானின் தலைமையில் உசாவுக் குழு ஒன்று நாட்டின் பாலனம்பற்றி ஆய்ந்து கொண்டிருந்தது. இதன் உழைப்பின் பயனாகக் கழகஞ்சார் வேந்தனின் பணிக்கை ஒன்று தோன்றியது. இது 1833, செற்றெம்பர் 28 இல் வெளியிடப்பட்டது. இதற்கேற்பக் கட்டாய ஊழியம் நீக்கப்பட்டது. பழைய ஆட்சிக் கழகம் கலைக்கப்பட்டு அதன் இடத்தில் நிறைவேற்று சபை, சட்ட சபை என்பவை நிறுவப்பட்டன. உண்ணாட்டுப் பகுதியைப் புறம்பாகப் பாலனம் செய்யும் வழக்கம் கைவிடப்பட்டது. கண்டியர் மாவட்டங்கள் கரைசார்ந்த பழைய பிரிட்டிசுக் குடியிருப்புக்களுடன் இணைக்கப்பட்டன. இவ்வாறு இணைத்தாய புதிய



மாநிலம் ஒவ்வொன்றும் ஓர் அரசாங்க முகவர் தலைமையில் இருந்தது. கறுவா வணிகத் தனி உரிமை, சாவகம், சீனம் ஆகிய இடங்களிலிருந்து ஏற்பட்ட போட்டியினால் பயன் அற்றதாய்ப் போய்விடவே அதுவும் கைவிடப்பட்டது. 1833, ஒகசு 31 ஆம் நாள் வெளியிடப்பட்ட ஒரு நீதி ஆவணத்திற்கேற்பப் புதிய உச்சநீதி மன்றொன்று நிறுவப்பட்டது. அதன் பின்னர், சிறு காலத்துள் மாவட்ட மன்றுகள் நிறுவப்பட்டன. கண்டியர் மாநிலங்களைக் கரைசார் மாநிலங்களுடன் இணைத்ததும், திசாவைகளின்கீழ் இருந்த மாநிலங்களுக்குப் பதிலாக இரட்டேமகாத்துமயாமார் தலைமையில் சிறு பகுதிகளை உருவாக்கியதும், கட்டாயச் சேவை, விழாக்களில் கட்டாய முகமளிப்பு ஆகியவற்றை நீக்கியதும் தலையோர்க்கு வெறுப்பை அளித்தன. எனவே, 1834 இல் அரசாட்சிக்கெதிராக, இளையோன் மொலிகொடையைத் தலைமையாகக்கொண்டு ஒரு கலகம் நடந்தது. 1835 இல் இச்சூழ்ச்சிக்காரர் உச்சமன்றில் உசாவப்பட்டனர். ஆனால் விடுதலையாக்கப்பட்டனர். ஆயினும் மொலிகொடை பதவி நீக்கம் செய்யப்பட்டான். அவன் பதவி **மகா வலத்தனைக்குச்** சென்றது. இவனே பழைய அதிகார் வழிவந்தோருள் இறுதியானவன்.

உண்ணாட்டுக்குப் புறம்பாய் அமைந்த பாலனம் இறுதியாய் மறைந்தது. எனவே 1815 இல் நிலவிய கண்டியர் ஆட்சி முறையை நாம் இப்பொழுது சீர்தூக்கி ஆராய்வோம். அரசனே முழு முதல்வனாய் இருந்தான். நாட்டு வழக்கும் படுகொலைப் பயமுமே அவன் வல்லாண்மையைக் கட்டுப்படுத்தின. அரசுக்கு உரியவன் யாவன் என ஓர் ஐயம் நிகழும் இடத்துச் செயலளவில் புதிய மன்னனைத் தேரும் உரிமை முக்கிய அமைச்சர்களிடமே இருந்தது. இவர்கள் தேர்வினை மக்கள் முறைமைப்படுத்துவதற்காக உறுதிப்படுத்துவர். ஆனால் நடைமுறையில் தந்தையைப் பின்பற்றி மகனே அரசு கட்டில் ஏறினன். ஈர் அதிகார்களுமே அரசின் தலைமை அலுவலர் ஆவர். இவருள் முதல்வன், உயர் பத்திரங்களில் பழைய செனிவிரத்து அல்லது தலைமை ஆணையன் என்னும் பட்டத்தினால் சிற்சில வேளைகளில் குறிக்கப்படுவன். இவர்களே அரசமைச்சர். இவர்கள் முழு அரசாட்சி மேலும் பொது மேற்பார்வை கொண்டிருந்தனர். அவர்கட்குரிய ஊதியம் குறைவாய் இருந்தது. எனவே தங்கள் பதவிகளுடன் தங்கள் தகுதியை நிலைநாட்டுவதன் பொருட்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களையும் இவர்கள் கொண்டிருந்தனர். நீண்ட காலமாக ஓர் அமைச்சனே இருந்தான். இவனே "**விக்கிரமசிங்கன்**" ஆகவிருக்கலாம். இரண்டாம் இராசசிங்கனே இரண்டாவது அமைச்சன் பதவியை ஆக்கினான் என்றும் கண்டிக் கடைசி மன்னன் மூன்றாவதை ஆக்கினான் என்றும் அறியக்கிடக்கின்றது. இவர்களின் கீழ் நாலு கோரளைகள், ஏழு கோரளைகள், ஊவா, மாத்தளை ஆகிய மாநிலங்களின் திசாவைமாரும் (ஆள்வார்), எட்டுச் சிறு திசாவைமாரும் இருந்தனர். இவர்களின் எண்ணிக்கை மாறுபடுவதொன்றாய் இருந்தது. வழக்கமாக இவர்கள் தலைநகரில்

வாழ்ந்தனர். தங்கள் மாநிலங்களுக்குப் போகும்பொழுது இவர்கள் தம் குடும்பத்தினரைப் பிணையாகக் கண்டியில் விட்டுச் செல்வர். தலைநகரைச் சுற்றியுள்ள சிறு மாவட்டங்களை **இரட்டேமகாத்துமயாமார்** ஆண்டு வந்தனர். இவர்கள் திசாவைமார்களிலும் பதங் குறைந்தவராய் இருந்தனர். இப்பதவிகளை விட அரண்மனையோடு சேர்ந்தவையாய், **இலேகம்** எனப்படும் செயலாளன் ஒருவன் தலைமையில் பணியாற்றிய பல அலுவலகங்களும் இருந்தன. ஒரு காலத்தில் இவற்றுள் பல படைத்துறை இயல்பு கொண்டிருந்தன. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதி அளவில் இவை தூதுவர் குழாங்கள் அளவிலேயே இருந்தன. நாடு முழுவதும், சில மக்கள் காணி நிலம் கொண்ட ஆட்சி முறைமையால் படைச்சேவை புரியும் கடப்பாடுடையராய் இருந்தனர். இவர்கள் இப்பணியினை ஒரு முறையில் பதினைந்து நாட்காலத்துக்குப் புரிந்தனர். இவர்கள் தாமே தம் படைக்கலன் உணவு, காவக்கூடிய உறையுள் ஆகியவற்றைக்கொண்டு செல்வர். பின்னர் இவர்கள் காலம் முடிந்ததும் பிறர் இவர்களிடத்தை எடுப்பர். ஆனால் படைப்பலனின் உயிர் நாடியாய் விளங்கியது நிலையான ஒரு சிறு படையாகும். பெரும்பாலும் இப்படையினர் மலாய்க்காரரே. இவர்கள் காணி நிலத்திற்குப் பதிலாகச் சம்பளம் பெற்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மற்றைப் படைக்கலங்களின் இடத்தைப் பெரும்பாலும் சிறு துவக்குகள் எடுத்துக் கொண்டன. இச்சிறு துவக்குகளுக்குத் துணையாகச் சிறு பீரங்கிகளும் இருந்தன. வழக்கமாகக் குறும்போர் உத்தியே கையாளப்பட்டது. பகைவர் நாட்டுள் வர விடப்படுவர்; அவர்கள்திரும்பிப் போகும்பொழுது இடைவிடாது துன்புறுத்தப்படுவர். இயலுமானால் ஒரு மறைவில் அவர்கள் வீழ்த்தப்பட்டுத் துவக்கு, காட்டு மறைவில் இருந்து சுடப்படும் பீரங்கி ஆகியவற்றால் தாக்கப்படுவர்; இக்காட்டிற்கூடாகக் குறுகிய வழிபோன்ற தெரு ஒன்று இருக்கும். அரசன், அவன் குடும்பத்தினர் ஆகியோர் வாழ்வின்பொருட்டுப் புறம்பாக விடப்பட்ட அரச கிராமங்கள், பண்டசாலைத் தலையோரின் மேற்பார்வையில் இருந்தன. இப்பண்டசாலைத் தலையோர் **கபடநிலாமை** எனப்படுவர். எல்லாத் தலையோரும் அரசன் விரும்பிய அளவிலேயே பதவி கொண்டிருந்தனர்.

நீதி பரிபாலனம் தலையோர், தலைமைக்காரர் ஆகியோர்பால் இருந்தது. இவர்கட்குச் சிறு தண்டமும் குற்றமும் அளிக்கும் அதிகாரம் இருந்தது. அரசனுக்கே வாழ்வு, இறப்பு அளிக்கும் ஆணை இருந்தது. முக்கிய தலையோரைக்கொண்ட பெருமன்று அதிகார்மார் அளிக்கக்கூடிய தண்டனையையே அளிக்கக்கூடும். முக்கிய அலுவல்கள் யாவும் அரசன் முடிவிற்கு விடப்பட்டன. மாவட்டத்து உட்பகுதிகளில் மக்கள் அமைவுபெற்ற மன்றுகள் நிலை பெற்றிருந்தன. இவை மிகப் பழங்காலத்தில் தோன்றி நிலை பெறுவனவாய் இருக்கலாம். எங்கும் கிராமச் சங்கங்கள் (கம்சபே) இருந்தன. தலைமைக்காரன் ஒருவன் இச்சங்கத்துக்குத் தலைமை தாங்கினால் அன்றி அதனால் தண்டம் விதிக்கமுடியாது. முகமளித்த ஒவ்வோர் உறுப்



பினரும் இவ்வாறு அறவாக்கிய பணத்தில் ஒரு சிறு பகுதியையேனும் பெறுவர். திசாவைமார் மன்றுகளில் பெரும் ஊழல் நிலவியது. ஒரு வழக்கில் முடிவென்பதொன்று கிடையாது. கையூட்டு ஒன்றினால் வழக்கு மீளவும் எடுபடல்கூடும். கடைசி மன்னன் தலையோரின் அதிகாரத்தைக் குறைக்கும் பொருட்டுப் பழைய சங்கங்கள் மீண்டும் தொழிற்படுவதை ஊக்கினான் எனச் சொல்லப்படுகின்றது. ஆனால் இந்நிறுவனங்கள் பல இடங்களில் அழிந்தோ, பயனற்றோ போய்விட்டன. எனவே இவனுடைய நடவடிக்கை காலம் தாழ்த்தியே வந்தது. துன்புறுத்தல் எங்கும் பெரு வழக்காய் இருந்தது.

எல்லா நிலங்களும் சேவை ஆட்சி முறையில் இருந்தன. அரசனின் வாரி பெரும்பாலும் அரச கிராமங்களில் இருந்தே வந்தது. படைச் சேவைக்காக அளிக்கப்பட்ட நிலங்களையும் குறித்த சாதியார் அவர் தம் சாதிக்கொத்த பணிகளைச் செய்வதற்காகவும் ஒதுக்கப்பட்ட நிலங்களையும் தவிர்ந்த மற்றை நிலங்கள் உடையோரிடமிருந்து அரசன் அரிசி பெற்றனன். இவ்வாறு இவன் பெற்ற அரிசி பெரும் அளவினது என்று சொல்லல் முடியாது. "மராள" அல்லது இறப்பு வரி என்பதைப்பற்றி மூன்றாம் அதிகாரத்தில் ஆராய்ந்துள்ளோம். பிறிதொரு வழியால் வந்த வாரி, தலையோரை அமர்த்தும்பொழுது அவர் அளித்த பரிசிலாகும். இது தேகம் எனப்படும். அரசன் இப்பரிசில்களைப் புத்தாண்டிலும் பெறுவன். இப்புத்தாண்டு விழாவில் ஓராண்டுக்குக் கடமை ஆற்றிய சிறு தலைமைக்காரர் யாவரும் தலையோர்க்குப் பரிசில் வழங்க அவர்களும் பயன் பெற்றனர். இம்முறைமை இப்பொழுதும் கண்டியர் கோயில்களில் வழக்கிலுள்ளது.

சமயத்திலும் அரசனின் ஆற்றல் செல்வாக்குடையதாய் இருந்தது. தலைமைக் குருமாரை அரசனே அமர்த்தினன். தீக்கைக்குரியோரும் அவன் இசைவினைப் பெறவேண்டி இருந்தது. பற்சின்னக் கோயிலின் தலைமையும் முக்கிய கோயில்களின் தலைமையும் அதிகார்மாருக்கும் மற்றையோருக்கும் அவர் தம் பெருமையை நிலைநாட்டும் சாதனங்களாக விளங்குமாறு அவனால் அளிக்கப்பட்டன. ஆனால், ஒருபொழுதேனும் பரந்து கிடந்த கோயில் உடைமைகள் அரசனின் மேற்பார்வையினின்றும் தப்பி நின்றனவல்ல. பற்சின்னத்திற்கும் கடவுளர்க்கும் உரிய உடைமைகளைப் பாலிப்பதில் அவற்றிற்கும் அரசின் மற்றை அலுவலகங்களுக்கும் வித்தியாசம் காட்டப்படவில்லை.

இப்பொழுது நாம் இவ்வரலாற்றுச் சுருக்கத்தின் முடிவு எல்லைக்கு வந்துள்ளோம். 1833ஆம் ஆண்டை நாம் அப்பொழுது அமைவு படுத்தப்பட்ட யாப்பிலிருந்து ஒரு கால எல்லையாக எடுத்துள்ளோம். ஏனெனில் இப்பொழுது உள்ள அரசாட்சிமுறை படிப்படியாக இவ்வாண்டிலிருந்தே வளர்ந்தது என்க. இனிப் பிரிட்டிசு முடியின்கீழ்

எவ்வாறு இலங்கை ஒற்றுமைப்பட்டது என்பதைக் காட்டல் வேண்டும். பதின்மூன்றும் நூற்றுண்டின் முதற் பகுதிக்குப் பின்னர் தோன்றிய முதல் ஒற்றுமை பிரிட்டிசார் ஆட்சியிலேயே தோன்றியது. இயலுமளவில் நாம் ஆதி காரணங்களை ஆராயப் புகுந்தால் கோட்டை அரச குலமுறையினர்க் கிடையே இருந்த பகையே இதற்கு முதற் காரணம் எனலாம். போத்துக் கேயர் இலங்கைக்கு வந்து அவர்களின் வழக்கம்போல் கோட்டை மன்ன னைப் போர்த்துக்கலிற்குத் திறை கொடுப்போன் ஆக்கினர். ஆனால் தாய் நாட்டிலிருந்து வந்த ஆணையின் பேரில் அவர் தம் அரண் குலைக்கப் பட்டது. மன்னனின் வேண்டுகோளுக்கிணங்கியே போத்துக்கேயர் அவன் காப்பிற்காக மாயதுன்னைக்கு எதிராக இலங்கை அலுவல்களிற் பங்கு பற்றினர். இதன் பின்னர் நாட்டினுள்ள நிலைமையினால் வாய்க்கக்கூடிய பலாபலன்களை அவர் அறிந்தனர். இதன் விளைவாகத் தருமபாலனின் கொடை தோன்றியது. போத்துக்கல் மன்னன் கோட்டை முடியைத் தாங்கியதும் இலங்கையின் மேலாண்மையைக் கொண்டதும் நாட்டரசாட்சி யாரை உள் நாட்டில் தஞ்சம் புகச் செய்தன. இந்நிலைமை, இராசசிங்கனின் அழைப்பிற்கிணங்க இடச்சுக்காரர் வந்த பொழுதோ பின்னர் கரைசார் மாநிலங்களை வென்ற பொழுதோ மாறவில்லை. ஆனால் கரைப்பகுதியை இப்பொழுது வல்லமைமிக்க ஓர் அரசு ஆட்சி கொண்டிருந்தது என்பதி லேயே ஒரு வேறுபாடிருந்தது. கண்டி அரசவை உடன்படிக்கைக்குரிய கடப்பாட்டை ஒருபொழுதும் போற்றியதில்லை. அது, எப்பொழுதும் மலைப் பகுதிகளுக்குக் கீழ் இருந்த செல்வம் மிக்க பகுதிகளுக்கு இடர் விளைக்கவும் அவை மேல் படை எடுக்கவும் கூடிய நிலைமையில் இருந்தது ; இன்னும், எப்பொழுதும் இடச்சுக்காரரோ, பிரிட்டிசாரோ கொண்டிருந்த நாட்டில் பற்றின்மையை விளக்கும் முதற் காரணமாகவும் மையமாகவும் அது விளங் கியது. இந்நிலைமை நாகரிகமான ஓர் அரசாட்சியாரால் பொறுக்கக் கூடிய தொன்றன்று ; எனவே அதற்குரிய பலன் கிடைத்தது ; உண்ணாட்டி லிருந்த நம்பமுடியாதவனும் அமைவில்லாதவனுமான அயலான் அழிந் தான். குறைவும் நிறைவும் இருபக்கங்களிலும் இருந்தன. ஆனால் பரந்த வரலாற்றின் சுருக்கம் இப்பொழுது நாம் கூறியவாறே இருக்கும்.

### 11 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

பத்தாம் அதிகாரத்தில் உள்ளவாறு பேட்டோலசி, தேவி, போபசு, மாசல், தெனன், திரு யோன் த ஒயிலியின் நாட்குறிப்பு, 1810—1815, வே. ஆ. ச ச., இ. கி. XXV. எண் 69, இல் உள்ளவாறு. த ஒயிலி கூறியவாறுள்ள கண்டியன் அரசாட்சியின் யாப்புப்பற்றி **கேகாலை மாவட்டத்து அறிக்கை**, ப. 107 பார்க்க. கண்டியர் படை அலுவல்கள்பற்றி மேயர் யோன்சன், முற்கூறிய நூல், பார்க்க.



*அதிகாரம் 12*

## தொல்பொருளியல்

**ஏ. எம். ஒகாது எழுதியது**

இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய காலத்தைப்பற்றி அறிய ஏதுவாய் விளங்குவன குவாட்சு, சேட்டு ஆகிய பாறைக் கற்களாலாய கரடுமுரடான துணைக் கலங்களாகும். இதுவரை காணப்பட்ட இக்கலங்கள் ஒருவகையின வாகும். முக்கோண வடிவுடன் கூர்களுடையனவாயமைந்த இவை தட்டைத் தன்மையிலேயே வேறுபட்டுள்ளன. இவை வியத்தகு முறையில் முதற் கற்காலத்துக்குரிய கற்களைப்போல் இருக்கின்றன. ஆனால் சேட்டுத் துணைக் கலங்கள் மனிதனால் உபயோகிக்கப்பட்டன என்பதில் ஐயமில்லை ; ஏனெனில் மனிதனாலேயே கொண்டு வந்திருக்கக்கூடிய இடங்களிலேயே இவை காணப்பட்டன என்பதனால் என்க. ஐரோப்பாவிற் கண்ட மிகப் பழைய பழங்கற்காலக் கைத்தொழில்களிலும் இலங்கையின் கற்கைத் தொழில் கலைமுறையில் முன்னேற்றமில்லாதது என்பது தெளிவாக உள்ளது. இக்கருவிகளை யார் எக்காலத்திற் பயன்படுத்தினர் என நாம் துணிதல் இயலாது.

முதற் கற்காலத்திலிருந்து நாம் நேரே இரும்புக் காலத்திற்குப் பாய்ந்து விடுகிறோம். இலங்கையில் எப்பொழுது இரும்பு தோன்றியது என நாம் அறியோம்.

**தந்திரிமலையில்** குகை ஓவியங்கள் காணப்பட்டன ; இவை இந்தியக்கலை யுடன் தொடர்பு உடையனவல்ல.

இக்கல் துணைக்கலன்களையும் குகை ஓவியங்களையும் தவிர்த்து நாம் நோக்கினால் இலங்கைத் தொல்பொருளியல் பௌத்தத்துடன் ஆரம்ப மாவதைக் காணலாம். அதற்கு முந்திய காலத்தில் செங்கட்டியை மக்கள் அறிந்திருந்தனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை பௌத்த காலத் திற்கு முந்தியவை என்று உறுதியுடன் கூறக்கூடிய சிதைவு ஒன்றும் காணப்படவில்லை. மிகப் பிந்திய காலம்வரை நிலையான பொருள் கொண்டு மனங்கொண்ட மாளிகைகள் கட்டுவதற்கு உந்திய ஒரே ஊக்கு மதத்தின் புகழ் பரப்ப எழுநததொன்றேயாம்.

ஆதியில் உட்குழிந்த கட்டிடங்களை அமைக்கச் செங்கல் அறவே பயன் படுத்தப்படவில்லையென்று தெரிகிறது. இவ்வியளத்தில் உறுதியாய் ஒன்றும் கூறல் முடியாது. ஏனெனில் இக்காலத்தில் நிறுவப்பட்ட எந்தச் செங்கற் சுவரும் சுண்ணம்புக்கல்லை இல்லாமையால் நிலைநின்றிராது. செங்கற்கள் தூபிகள் கட்டுவதில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. இத்தூபியை இலங்கையர் தாகபை என்பர். இவை சின்னங்கள்கொண்ட

திருமனைகளாகும். இவை அரைச்கோள வடிவினவான கெட்டியான திணிவுகளாகும். முற்காலத்தில், இறந்தோர் மேல் எழுப்பிய சிறு கட்டிடங்களின் சிதைவு குவிந்து கிடந்த உருவைக் கண்டு, மக்கள் இத்தாகபை களைக் கட்டினர் என்று **பேகுசன்** நல்ல நியாயத்துடன் நிறுவியுள்ளார். மன்னன் ஒருவனால் முதன்முதல் எழுப்பப்பட்ட தூபி அனுராதபுரத்தில் உள்ள தூபாராமையாகும். அதன் உட்பகுதி களிமண்ணாயிருந்தது. வெளிப்பகுதியே செங்கல்லால் மூடப்பட்டிருந்தது. இது சாதாரணமான அளவு கொண்டிருந்தது. உறுதியான செங்கற்களாலாய மாபெரும் தூபிகளைக் கட்டும் வழக்கை உண்டாக்கியவன் துட்டகாமனியாவன். இவனைப் பின் தொடர்ந்து கட்டியவர் வட்டகாமனியும் மகாசேனனும் ஆவர். பின்பு (அனுராதபுரத்தில்) பெரிய கட்டிடங்கள் கட்டும் வழக்கம் பராக்கிரமபாகுவின் ஆட்சிவரை கைவிடப்பட்டது. இவன் பெருங் கட்டிடங்களில் பெருவிருப்புடையவனாயிருந்தான். நாம் அறியக் கிடப்பவற்றுள் மிகப் பெரிய, ஆனால் மிக நிலையில்லாத் தூபியை இவன் கட்டினான். இது **தமிழ மகாசாயா** ஆகும் ; இது இப்பொழுது உருவற்ற குவியலாய்க் கிடக்கின்றது. இவ்விரு காலத்திற்கும் இடையுள்ள காலத்தில் பரற்கல்லை உள்ளமைத்து செங்கல்லால் மூடித் தூபிகள் கட்டப்பட்டுவந்தன.

பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை செங்கல்லையோ, கல்லையோ உபயோகிக்கும்பொழுதெல்லாம், சிங்களவர் கட்டும்விதம் மேற்கூறிய ஒரே வகையினதாயிருந்தது. ஏனெனில் இத்தகைய கட்டிடங்கள் யாவும் தாங்கு சுவர்கொண்ட தூபியாயோ சுவருடைய மண்ணால், அல்லது பரலாலாய சதுரத் தூண் பீடங்களாயோ இருந்தன.

எப்பொழுது முதன்முதலாகச் சிங்களவர் சுண்ணும்பு உபயோகிக்கக் கற்றுக் கொண்டனர் என்று தெரியவில்லை. இது **சீகிரியா**வில் ஆறும் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பளிங்கனைய ஒரு சாந்து காணப்படுகின்றது. ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை இது பெருவழக்காய்ப் பயன்படுத்தப்படவில்லை. இலங்கையில் சுண்ணும்பு குறைவாய் இருந்தாலும் போக்குவரத்துத் துறைவகை, கடற்கரையில் இருந்து சிப்பிகளையோ முருகைக்கல் சுண்ணும்பையோ பெயர்த்துச் செல்வதற்கு வாய்ப்பளியாததாலும் இது இவ்வாறு நேர்ந்திருக்கலாம். பொலனறுவை மன்னர் சுண்ணும்பினைப் பெரும் பயன்படுத்தினர். இது ஒருவேளை மகாவலி கங்கை இலகுவான மலிந்த நீர்வழி அளித்ததால் இருக்கலாம். எனவே அவர்களால், முழுவதும் திண்ணிய செங்கல் வளைகூரைகளால் மூடப்பட்ட, முழுவதும் செங்கல்லாலாய கோயில்கள் நிறுவ முடிந்தது. இவ்வழியான பணி இலங்காதிலகையில் முடிவு கண்டது. இதன் கவான் இப்பொழுது காணப்படுகின்றது ; ஆனால் அதன் அடிப்படை என்றும் அறியப்படாத ஒன்றாய் இருந்தமையால் கூரைகள் வேறு வழியின்றிச் சிறிது காலத்தால் வீழ்ந்தன. களிமண் சாந்து சிறு கட்டிடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.



பதினாலாம் நூற்றாண்டளவினதாய மிகப்பிந்திய எல்லையிலும், கண்டிய இலங்காதிலகையில், களிமண்சாந்து பயன்பட்டிருப்பதை நான் காண்கிறோம் ; இது அவ்வூழியின் மிகச் சிறந்த கட்டிடமாகும்.

கட்டிடக்கலையிலே, கல் எந்நாளில் தோன்றியது என்பதை உறுதியாகக் கூறல் முடியாது. ஆனால் இது கிறித்துவ ஊழிக்குமுன்னர் தோன்றியதாகத் தெரியவில்லை. இது முதன்முதலாகக் களிமண் சுவர்கட்கு அடித்தளமாக அமைந்த கல்வரிசை வடிவை எடுக்கின்றது. மூன்றாம் நூற்றாண்டுக் காலத்தில் மண்ணாலாய சதுர மேடைகளைச் சுற்றிப் பரற் கற்களாலாய குட்டையான சுவர்கள் கட்டப்பட்டன. இவை பின்னர் உயரம் கூடக்கூட, ஒன்றுடன் ஒன்று இணையக்கூடியவையாய் ஒழுங்கற்ற வடிவினவாய் வெட்டப்பட்ட கற்கள், இப்பரற்கற்களின் இடத்தை எடுத்தன. அடுத்த ஊழியில் செவ்வக வடிவில் வெட்டப்பெற்ற செவ்விய அழுத்தமான கற்கள் பயன்படுத்தப்பட்டன. முதன்முதல் இக்கோயில்கள் மிகச் சிறியனவாய் இருந்தன. ஒவ்வொரு பக்கத்து ஒவ்வோர் உறுப்பும் பெரியதோர் கற்றுண்டாகவே இருந்தது. அடுத்த ஆண்டில் மேடைகளின் அளவுகள் கூடின ; எளிய அணிமடிப்புக்கள் புகுத்தப்பட்டன. மரத் தூண்களினிடத்தில் கற்றூண்கள் நிறுவப்பட்டன. போதிகைகள் மரத்தால் ஆகியவையாய் இருந்தன. பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலும் இவ்வழக்கு இருந்தது. கண்டியிலுள்ள பற்சின்னக் கோயிலிலிருந்து இதை நாம் அறியலாம். ஆயினும் பன்னிரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குச் சிறிது முந்திய காலத்திலும் கல்லாலான போதிகைகள் புது வழக்காய் இருந்தன. இப்பொழுது நாம் எட்டாம் நூற்றாண்டுவரை வந்துள்ளோம். ஒன்பதாம் அல்லது பத்தாம் நூற்றாண்டளவில் கல்வேலை மிக உச்சமான சிறப்பு நிலையை அடைந்தது. அது வேலைவளம் உடையதாய் இருந்தது. ஆனால் கவின் பெற்றிருந்தது. வேலையில் ஒரு பொலிவு இருந்தது. ஆனால் இது காலப்போக்கில் நலிவுற்று இறுதியில் முழுதும் அழிந்துபோயது.

இக்காலம்வரை, உட்குழிவான கட்டிடத்தின் பொதுவகை, இப்பொழுது நாம் எடுத்துக்கூறியவாறு ஒரு பீடத்தில் மேல்நிற்கும் சதுர, அல்லது நீள்சதுர மனையாயிருந்தது. இக்கட்டிடங்கள்பற்றிய ஒரு கருத்தை இப்பொழுதுள்ள பற்சின்னக் கோயிலிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளலாம்; இது இவ்வகையினவின் ஒரு வழித்தோன்றலாகும். மேல் அமைப்பு முழுவதும் மரத்துண்டுகளும் ஓடுகளுமாக இருந்தமையாலேயே, அனுராதபுரத்திலும் மற்றை இடத்திலும் பீடங்களைத் தவிர வேறொன்றையும் நாம் இப்பொழுது காணமுடியாமல் இருக்கின்றது என்பதை உடனே அறிந்து கொள்ளலாம். இக்கட்டிடங்களுள் சில, வாழ்பதிகள், மண்ணகங்கள், பண்டசாலைகள் ஆகியவற்றோடு இணைந்த திருமனைகளாய் இருந்தன. எட்டாவது நூற்றாண்டு வரை வழக்கத்தில் இருந்த திருமனைகள் பெரிய ஒரு தனிக்கற்றுண்டாலாய பாலம் ஒன்றால் இணைக்கப்பெற்ற இரு மேடைகளைக் கொண்டி

ருந்தன; இம்மேடைகள் உண்மைத்திருமனையும் பறையடிக்கும் மண்டபமுமேயாகும். சுத்த சதுரக் கற்கள் காலத்தில், இதை ஆறும் நூற்றாண்டு காலம் எனலாம். துறவோர் குடியிருப்புக்கள் குன்றுகளின் அடித்தளத்தோடு அமைந்த தளம் பதித்த அகல் பாதையில் அமைந்திருக்கும்; இவ்வகல்பாதை முக்கிய தூபி அல்லது கோயிலுக்கு இட்டுச் செல்வதாயிருக்கும். மற்றைக் கட்டிடங்கட்கு இட்டுச் செல்லும் வழிகள் இவ்வகல் பாதையின் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் செல்லும். இத்தகைய குடியிருப்புக்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாய் விளங்குபவையைக் குருநாகலுக்கு அண்மையிலுள்ள அரங்காலையிலும் அபரணைக்கு அண்மையிலுள்ள இரிதிகலையிலும் காணலாம். எளிய சித்திர வேலைகள் வழக்கிற்குவந்ததும் துணைக் கட்டிடங்கள் தலைமைக் கட்டிடத்தைச் சுற்றி மட்டமான நிலத்திற் கட்டப்பட்டன. ஒன்பதாம் நூற்றாண்டிலோ பத்தாம் நூற்றாண்டிலோ இரட்டை மேடை மறைந்திருக்கலாம்.

நாம் முற்கண்டவாறு, பன்னிரண்டாம், பதின்மூன்றும் நூற்றாண்டுகள் செங்கல் வேலை ஊழிகளாக இருந்தன; கல் பின்னிடத்தை எடுத்துக் கொண்டது. தொடர்ந்துவந்த ஊழிகள் தொல்லை நிறைந்தனவாக இருந்தமையால் பெருவேலைகட்கு வாய்ப்பு இல்லாமற்போயிற்று. யாப்பகுவிலும் கடலாதெனியிலும் கல்வேலை செய்ய நன் முயற்சிகள் எடுக்கப்பட்டன. கண்டிக்கு அண்மையிலுள்ள இலங்காதிலகைச் செங்கல்லுக் கோயிலைப்பற்றி முன்னர்க் குறித்துள்ளோம்.

முழுவதும் கல்லாலாய கட்டிடங்கள் இந்துசமயக் கோயில்களேயாம். ஆதிபல்லவப் பருவ (ஏழாம்–எட்டாம் நூற்றாண்டு) வேலையை மாத்தளைக் கண்மையிலுள்ள நாளந்தைக் கெடிகையிலும் சோழப்பணியைப் (பத்தாம்-பதினொராம்) பொலனறுவையிலுள்ள இரண்டாம் சிவன்கோயிலிலும், பாண்டியன் பாணியை (பன்னிரண்டு-பதினாலு வரை) முதலாம் சிவன் கோயிலிலும் விசயநகரப் பாணியைக் கடலாதெனியிலும் காணலாம். மதுரைப் பாணியைக் கொழும்பிலும் பிற இடங்களிலுமுள்ள இக்காலத்திய பல கட்டிடங்களிலும் காணலாம்.

இயற்கைக் குகைக் கோயில்கள் பலவுள. ஆனால் குடைந்தெடுக்கப்பட்டவை அருமையே; இதுவரை நான்கே அறியப்பட்டன. இதற்கு மூன்று காரணங்கள் உள; இந்நாட்டில் காணப்படும் ஒரே பாறையான நைசுப் பாறையின் கடினம்; இயற்கையில் அமைந்த அளவற்ற பாறைக் காப்பிடங்கள்; சிங்களக் கோயில்களின் சிற்றுருவம்; இவையே அவை. குடைந்தெடுக்கப்பட்ட குகைகளும் சிற்றளவினவே. அவை ஒன்று, அல்லது இரண்டு சிலைக்கும் வணங்குவோருக்குமே இடங்கொடுக்கக் கூடியவையாயிருந்தன.



கல்லின் கடினவியல்பே, இலங்கையில் சிற்பவேலை குறைவாய் இருந்ததற்குப் பெருங்காரணமாய் இருந்தது. ஆதி இந்தியக் கலைமுறையினை அமராவதியிலிருந்து கொண்டுவந்த இரு துண்டுகள் எடுத்துக் கூறுகின்றன. எனவே அவை இலங்கைக்குரியனவல்ல. கொழும்பு அரும்பொருளகத்திலும் அமராவதிப்பாணியில் உண்ணாட்டில் செய்யப்பட்ட ஒரு சிற்பம் உளது (எண் 46A). சில செதுக்கல் சித்திரங்களும் காணப்படுகின்றன; இவை குத்த பருவத்து ஆரம்பகாலத்துக்கு (நாலாம் நூற்றாண்டு) உரியன வாயிருக்கலாம். குறிப்பாகச் சொல்லின் ஈசுருமுனியிலுள்ள ஆணும் பெண்ணுமியைந்த ஓர் இணைப்பை எடுத்துக்காட்டலாம். இங்கு குறிப்பிடும் தேதிகள் முழுவதும் இந்தியக் கலைவளர்ச்சியோடு ஒப்பிட்டுக் குறிக்கப்பட்டனவே என்று அறிந்துகொள்ளல் வேண்டும். ஏனெனில் இவற்றை வேறு விதத்திற் குறிக்கப் புறச்சான்றுகள் இங்கில்லை. புடைப்பிலாச் சிற்பங்கள் ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுவரை தோன்றவில்லை; அக்காலத்தில் இந்தியக் கலை ஒரே படிவ வடிவினதாய் அமைந்துவிட்டதாதலின் ஆதிபருவத்திருந்த உள்ளொளியை இலங்கைக் கலைஞர்கள் அறவே அறியாதிருந்தனர். ஆயினும், அக்காலத்தில் கல் செதுக்குவோர் அனுராதபுரத்திலுள்ள மணிமாளிகை எனப்படுவதில் உள்ள திங்கட் கல்லினைப் போன்ற பல அரிய வேலைப்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். இத்திங்கட் கல், கலைமுறைச் செம்மையில் இலங்கையிலே ஒப்பற்றதாகும். பொலனறுவைக் காலத்தில் மாபெரும் சிற்பங்கள் செய்வதில் ஓர் ஆர்வம் தோன்றியது. இது இற்றைவரை தொடர்ந்து நிலைநிற்கின்றது. இருக்கும், நிற்கும், சாய்ந்திருக்கும் பெரிய புத்தர்சிலைகள் செங்கல்லால் ஆக்கப்பட்டுச் சாந்து பூசப்பெற்றுள்ளன. சிலவேளைகளில் இவை பாறைகளில் குடைந்தெடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகப் பொலனறுவையிலுள்ள கல்விகாரையிலும், கலாவாவியிலும், தந்திரிமலையிலும் இவற்றைக் காணலாம். ஆயினும் உயர்ந்த கலைச்செல்வங்கள் என இவற்றை நாம் மதிப்பிடல் முடியாது. இதற்குப் புறநடையாயுள்ளது பெரிய பராக்கிரமபாகு சிலை எனப்படும் பொலனறுவையில், பொற்குல் விகாரையில் உள்ள சிலையாகும். இது ஒரு தனி வகுப்பில் உள்ளது. இதன் பெருமையும் கலையும் கண்டாரைக் கவரும் தன்மையன. முகமோ கற்பனை புனைந்தியற்றுக் கவினைக் காட்டுகின்றது. இதனால் இது ஓர் உருவச் சிற்பமெனக் கருத இடம் கொடுக்கின்றது. அவ்வாறாயின் இந்தியக் கலையில் இது ஒரு தனிச்சிறப்புடையது. ஏனெனில் இந்தியக் கலை **குசான்** மன்னர் செல்வாக்கிலேயே உருவரைவில் கவர்ச்சி கொண்டது என்க. இக்காலத்துக் கற் செதுக்கல் முந்திய காலத்தில் உள்ளதினும் வனப்பிற் குன்றியதாய் இருக்கின்றது; இதில் புதிய சிந்தனைகளை நாம் காணமுடியாது. ஆனால் வேறொரு வகையில், செங்கல் வேலையின் பெரு மலர்ச்சியோடு காரைப்பூச்சு வேலையும் நல்ல வளர்ச்சி அடைந்தது. கலைஞர் என்றும் இயக்கத்தை விரும்புவர். காரைப்

பூச்சு வேலைகளாலாய சிறு கூளியர் வியத்தகு முறையில் உயிர்ப்புடையவ ராய் அமைந்துளர். இயக்கத்தைக்காட்ட எழுந்த இந்நசை மற்றை ஊழியில் பொல்லா மிகைப்படுத்தலுக்குக் காலாகியது. இதை யாப்பகுவிலும் மற்றை இடங்களிலும் நாம் காணலாம். கூத்தர்களின் உறுப்பசைவுகளை எடுத்துக் காட்டுவதில் கலைஞர் உறுப்பியலையும் மாறுபடுத்திக் காட்டினர். பொலனறுவையில் இருந்துவந்து கொழும்பு அரும்பொருளகத்தில் (எண் 105) இப்பொழுது ஒரு சிறு கூத்தர் அணியோவம் கிடக்கின்றது. இஃது மற்றை வகைகளினும் குழகு உடையதெனினும் மிகைப்பாட்டினால் உருக் குலைந்துள்ளது. கண்டியர் காலத்தில் கோடுகள் குழகமின்றி வரையப் பட்டுள்ளன. நேர் கோடுகள், எளிய வளைவுகள் ஆகியவற்றின் அழகினைக் காணமுடியாக் கலைஞன், தன் வேலைப்பாட்டின மனத்தை வாளா உறுத்தும் அலைபுரள் வரைவுகளால் அணிசெய முயன்றுளன்.

எல்லாக் கட்டிடங்கள் மேலும் சாந்து பூசப்பட்டுள்ளது. பொலனறுவைப் பருவத்தில் இவைமேல் ஓவியம் தீட்டப்பட்டது என அறியக்கிடக்கிறது. பழங் காலத்துக் கட்டிடங்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டன என்பதில் ஐயமில்லை.

எனினும், இப்பொழுது காணப்படும் சிங்களத் தீட்டல் ஓவியங்கட்கு எடுத் துக் காட்டாயுள்ளன வெகு சிலவே. இப்பொழுது அறியக்கிடப்பவற்றுள் மிகப் பழமையானவை சீகிரியாவில் உள்ளனவே (6 ஆம் நூற்றாண்டு). இவ்வோவியங்கள் மஞ்சுலாம் அணங்குகளின் வடிவங்களே. இவை தனித் தனி உருவுகளால் அமைந்தமையால் ஒரு பொருளைக் கூறுவனபோல் தோன்றவில்லை. கண்டிக்கு அண்மையிலுள்ள இந்தக்கலையில் உள்ள சுவரோவம் 7 ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டதெனத் துறைபோகினோர் கூறுகின்றார்கள். இது மருட்டலைக் குறிக்கின்றது. பொலனறுவையில் உள்ள வடபுலக் கோயிலின் சுவர்களிற் பலதிறப்பட்ட பிறப்புக்கதைகள் படமாக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

அகழ்ந்தெடுத்த பொருள்கள் இலங்கைக் கைப்பணிகளைப்பற்றி நற்சான்று கூறுவனவாய் இல்லை. அவற்றில் காணப்பட்டன பெரும்பாலும் மிக மனங்கவரா இயல்புடையனவாய் உள்ளன. இன்று வரையும் குயவேலை பொல்லாததாய் இருக்கின்றது. இன்றும் பளிக்கிடுதல் அறிந்தாரில்லை. திரிகையும் பெருவழக்கில் இல்லை.

சிங்களவர் இயன்முறையில் வேளாண்மக்களே. அவர்களின் பெருவினை யாண்மையும் அவ்வழியிலேயே உள்ளது. அவர் கட்டிடங்களினும் குறைந்த அளவிலேயே அவர் குளங்களைப்பற்றி நாம் கேள்விப்படுகின்றோம். எனினும் அவை தலைசிறந்த வினைத்திறன் உடையனவே. இவர்களின் நீர்த்தேக்கங்கள் குளங்கள், வாவிகள் எனப்பட்டன. மின்னேரியாக் குளம் நிரம்பியபொழுது 4560 எக்கர் பரப்பு உடையதாய் இருக்கும். இது யாவற்றினும் பெரியதன்றெனினும் பெரியவற்றுள் ஒன்றாகும். குளத்தொடு குளத்தை இணைக்கும் வாய்க்கால்கள் இக்காலத்து எந்



திரிகளும் வியப்புற நின்றன. துறைபோகினார் ஒருவர், பழையவற்றினும் மேம்படுவனவற்றை அமைத்தல் இயலாததாகும் எனக் கூறுகின்றார். ஆனால் அவப்பேறான முறையில் நீர்ப்பாய்ச்சலின் வரலாறு தொடர்ந் தறியக்கூடியதொன்றாயில்லை. ஏனெனில் ஒரு குளத்தைக்கட்டிய நாளினை நாம் அறிவோமெனினும் அது இடைவிடாது புதுப்பிக்கப்பட்டு வந்தது என்றும் நாம் கொள்ளக்கூடியதாய் இருக்கிறது. குளங்களின் அமைப்பில் திருத்தங்கள் இருப்பின் அவற்றைத் தொடர்ந்து அறிவதற்குத் துறை போய அறிவுவேண்டும். நாலிலிருந்து ஆறும் நூற்றாண்டுவரை குளங் கட்டும் பேர் ஊழியாக விருந்தது. மகாசேனன் மின்னேரியைக் கட்டினன். இவனை இப்பொழுது மக்கள் மின்னேரித் தெய்வம் என்று வணங்குகின்ற னர். கலாவேவா தாதுசேனனின் வேலையாகும். கிரித்தலையும் கந்தளாயும் இரண்டாம் அக்கபோதியின் வேலைகளாம். இக்குளங்கள் யாவும் ஒரு வழித்தோன்றல்போல் ஒப்புமைகொண்டுள்ளன. பாரிய ஆனால் இயை பளவால் சிறிய அணைக்கட்டுக்களால் இவை கொள்ளப்பட்டிருக்கின்றன.

சிங்களவரின் வேலைப்பாட்டின் பொதுப்பண்பு எளிமையும் பருமையிற் சிறுமையுமாம். எனினும் இவர் சிறப்பாற்றல் கொண்டு சிலவேளைகளில் மாபெரும் சிலைகள், மாபெரும் தூபிகள், மிகப்பரந்த நீர்ப்பாய்ச்சல்கள் ஆகியவற்றையும் செய்து முடித்தனர்.

### 12 ஆம் அதிகாரத்திற்குரிய ஆணைகள்

இலங்கைத் தொல்பொருள் பற்றிய பொது அளவைகளை **இலங்கை, விஞ்ஞான சஞ்சிகையில்** ஆண்டுதோறும் வெளியிடப்படும் தொல்பொரு ளியல் சுருக்கங்களில் காணலாம். குறிப்பான சிதைவுகள் பற்றி விரிவான ஒத்துக்கள் **இலங்கைத் தொல்பொருளியல் அளவை நினைவுக் குறிப்புக்களில்** வெளியிடப்பட்டுள்ளன. தொல்பொருளியலளவை ஆண்டு அறிக்கைகளில் பல உருவப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆதி குகை ஓவியங்களுக்குச் **"சிதில்"** உடைய தந்திரிமலை காண்க. **வே. ஆ. ச. ச., இ. கி.** தொகுதி xxii.

பாக்கரின் **தொல்லிலங்கை** பல செய்திகளால் நிரம்பியது. ஆனால் இதை எச்சரிக்கையுடன் பயன்படுத்தல் வேண்டும்.

நாணயவாக்கம்பற்றிய நியம நூல் கொடிறின்றனின், **இலங்கை நாணய மும் காசுகளும்** என்பதாகும்.

பொறிப்புக்கள் **எபிகிராபியா சிலனிக்காவில்** வெளியிடப்பட்டுள்ளன.

(விசய நகரப்பாணி கடலாதெனி விகாரையால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எச். டபிள்யு. சி.)

# 1833 இன் பின் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள்

1835 மொலிகொடை அதிகாரும் மற்றைக் கண்டியரும் பொல்லா மன் பழிக்கு உசாவப்பட்டு விடுதலை பெறல்.

1844 பொலிசு மன்றுகள் நிறுவப்படல். அடிமை முறை நீக்கம்.

1845 வேண்டுகோள் மன்றுகள்[1] நிறுவப்படல். வடமேல் மாகாணம் ஆக்கப்படல்.

1848 மாத்தளைக் கலகம். மாத்தளை, குருநாகல் மாவட்டங்களில் கண்டியர் கிளர்ந்தெழுதல்.

1853 பௌத்த திருச்சபை அலுவல்களின் பாலனத்திலிருந்து அரசாங்கம் முடிவாக விலகிக் கொள்ளல்.

1858 முதல் தந்திக்கம்பி நிறுவப்படல். இரும்புப் பாதையைத் தொடக்கி வைத்தல்.

1867 கண்டியிலிருந்து கொழும்பிற்கு இருப்புப் பாதை. பத்து ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்படுதல்.

1869 பொதுக் கற்பனை அலுவலகம் நிறுவப்படல்.

1872 தேளிங்கு நாணயத்தின் இடத்தில் உரூபாய் நியம நாணயமா யமைந்த நூற்றின் முறை நாணய வழக்கு புகுத்தப்படல்.

1873 இலங்கைத் துவாளித்துவக்குப் பட்டாளம் கலைக்கப்படல். வடமத்திய மாகாணம் ஆக்கப்படல்.

1875 உவேல்சு இளவரசன் (VII ஆம் எட்டுவேட்டு மன்னன்) கொழும்பு அலைமுறிக்கு கால் கொள்ளல்.

1877 கொழும்பு அரும்பொருளகம் திறக்கப்படல்.

1881 இங்கிலாந்துத் திருச்சபைக்கும் பிரசுபிற்றீரியர்க்கும் அரசாங்கம் அளித்து வந்த ஆதரவை நிறுத்தல்; இலங்கைத் தொண்டர் படை ஆரம்பம்.

1882 உவேல்சு இளவரசர்களான அல்பேட்டு விற்றர், சோச்சு ஆகியோரின் வருகை.

[1]Court of Request.





1883 கோப்பிப் பயிர்ச் செய்கை 1827 இல் ஆரம்பிக்கப்பட்டது; இதன் விளைவு நோயினால் குன்றியது; மூன்றிலொரு பங்காகியது. இத் தொழிலின் இடத்தை சிங்கோனா கொண்டது; இறுதியில் அப் பத்தாண்டின் முடிவில் தேயிலை இடங்கொண்டது. இவ்வாண்டில் வணிக முறையில் இரப்பர் முதன்முதலாகப் பயிரிடப்பட்டது.

1885 இப்பொழுதுள்ள அரசினர் தாள் நாணயத்தின் ஆரம்பம்.

1886 ஊவா மாகாணம் அமைக்கப்பட்டது.

1889 சபரகமுவா மாகாணம் அமைக்கப்படல்; இது ஒன்பதாவது மாகாண மாகியது.

1892 நெல்வரி நீக்கம்.

1896 மாத்துறை வரை கடற்கரை இருப்புப்பாதை முடிவாக்கப்பட்டது.

1900 புறம்பான ஒரு தனி நீர்ப்பாய்ச்சல் அலுவலகம் அமைக்கப்படல். இலங்கைப் பட்டாளம் தென்னாபிரிக்காவுக்குப் போதல். இலங்கை யில் போயர்ச் சிறையாளிகள்.

1901 கோண்வால், யோக்கு ஆகியவற்றின் இறைமகன் (ஐந்தாம் சோச்சு மன்னன்) வருகை.

1903 களனிப்பள்ளத்தாக்கு இருப்புப் பாதை திறக்கப்படல்.

1905 கொழும்புடன் யாழ்ப்பாணம் இருப்புப் பாதையால் இணைக்கப்படல்.

1910 தேர்தல் முறையைப் புகுத்திச் சபையைச் சீர்திருத்துவதற்கு ஆணை அளிக்கப்பட்டது.

1911 இலங்கையின் வணிகத்தில் இரப்பர் ஒரு முக்கியமான பண்டம்.

1914 முதலாம் உலகப் போரின் ஆரம்பம். இலங்கைப் படையடுக்கு ஒன்று சேவைக்கு அனுப்பப்படல்.

1916 சிலாபத்திற்கு இருப்புப் பாதை திறக்கப்படல்.

1919 ஒபநாயகாவிற்கு இருப்புப் பாதை திறக்கப்படல்.

1920 யாப்புச் சீர்திருத்தங்கள்.

1921 பல்கலைக் கழகக் கல்லூரி நிறுவுதல். யூனில் சீர்திருத்தியமைக்கப் பட்ட சட்ட சபையின் முதற் கூட்டம்.

1922 வேத்தியல் மாட்சிமை தங்கிய உவேல்சு இளவரசர் (VIII ஆம் எட்டுவேட்டு மன்னர்) இலங்கைக்கு வருதல்.

1923 புதிய தொழிற் சட்டங்களைச் சட்ட சபை ஆக்கல்.

1926 புத்தளத்திற்கு இருப்புப் பாதை அமைத்தல்.

1926 திருக்குணமலைக்கு இருப்புப் பாதை அமைத்தல் ; சீர்திருத்தச் சிறப்புக் குழு (தொனமூர் வேள்-தலைவர்).

1928 யூலை—தொனமூர் சீர்திருத்த முறையைச் சட்டசபை ஏற்றல்.

1930 புதிய சட்டசபையகம் திறக்கப்படல்.

1931 பழைய சட்டசபையினிடத்தில் புதிய அரசாங்கசபை நிறுவப்படல்.

1932 வருமானவரி விதிப்பு.

1934 தேயிலை, இரப்பர் கட்டுப்பாட்டுக் கட்டளைச் சட்டங்கள் வரிக்கப்படல்.

1935 இங்கிலாந்தில் முதல் இலங்கை வணிக ஆணையாளர் நியமனம்.

1936 இலங்கை அரசாங்க இருப்புப் பாதை பற்றி ஆய ஓர் ஆணைக்குழு.

1939–1945. 1939 செற்றெம்பரில் இரண்டாம் உலகப்போர் மூளல். 1941 திசெம்பரில் பிரிட்டிசு, அமெரிக்க உடைமை நாடுகளை யப்பானியர் தாக்கல். இலங்கை முக்கியமானவொரு கப்பல், தரை, வான் படைத்தளம். கொழும்பிலும் திருக்குணமலையிலும் வான்வழித் தாக்கல், 1942.

1942 பல்கலைக் கல்லூரியினிடத்தில் இலங்கைப் பல்கலைக்கழகம் அமைதல்.

1944 யாப்புச் சீர்திருத்தம்பற்றி ஆணைக்குழு (சோல்பரி பிரபு தலைவர்).

1945 யப்பானியர் கட்டுமையில்லா அடிபணிதற்குரிய உடன்படிக்கையில் கைச்சாத்திடல் (செற்றெம்பர் 2). இலங்கைக்கு பிரிட்டிசுப் படியுருவில் அமைந்த தன்னாட்சியை ஆணைக்குழு எடுத்துரைத்தல். முன்னீடுகளை அரசுக் கழகம் ஏற்றுக்கொள்ளல்.

1946 புதிய யாப்பை அடக்கும் அரசவைக் கட்டளை. (மே 15). அரசாங்க சபையினிடத்தில் இருகூடப் பாராளுமன்றம் (மூதவை, படியோர் சபை) அமைத்தல்.